
கல்கி
KALKI
5-11-1961
30
காசு

அன்னையின் அன்புலகிலே...
பொன்னான பொருள்களையன்றி
வேறுண்டோ ?

ஆதரவுக்கு ஆதரவான
அன்னைக்கு ஆதரவு:
டால்டா



ஆதரவே உருவான மகராசி...அன்பைப் பொழியும் முகராசி
...அருமையான பொருள்களைத் தருவதே அவள் கைராசி!
கறி கூட்டு முதல் கறிவடாம் வரையில் எதனிலும் இனிமை
...கருத்துள்ள தாய்க் குலத்திற்குக் கைகொடுக்கும் டால்டா
வனஸ்பதியின் பேருதவி! தரத்திலுயர்ந்த தாவர எண்
ணெய்களாலான, தூய டால்டா ...வளரும் வயதினருக்கு
வேண்டிய வைட்டமின்கள் அடங்கிய வனஸ்பதி...அறு
சுவைச் சமையலுக்கு உறுதுணையான டால்டா...நம்ம
வர்க்கே உரிமை யன்றோ ..



டால்டா வனஸ்பதி: அறுசுவைச் சமையலுக்கு உறுதுணை

DL. 70A:X52 TM

இந்துஸ்தான் லீவர் தயாரி



பனகல் பார்க் நல்லி

பனகல் பார்க் நல்லி
பனகல் பார்க் நல்லி
பனகல் பார்க் நல்லி
பனகல் பார்க் நல்லி
பனகல் பார்க் நல்லி



தீபாவளி ஸ்பெஷல் ரகங்கள்

பாலும் பழமும் - கட்டம்
தேன் நிலவு - புட்டா

இத்துடன் மணிபுரி சேலைகளும் கிடைக்கும்

நல்லி சின்னசாமி செட்டி

தியாகராயநகர் - சென்னை -17

போன் : 88115

5-11-61 ஞாயிற்றுக்கிழமை அன்றும் விற்பனை உண்டு.

சேவைக்கும் பாதுகாப்பிற்கும்

PANDYAN INSURANCE COMPANY LIMITED

பாண்டியன் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட

நெருப்பு - கப்பல் - விபத்து

ஆஸ்திகள் : ரூ. 1 கோடிக்கு மேல்

தலைமைக் காரியாலயம் பாண்டியன் பில்டிங், மதுரை

கிளைகள் : பம்பாய், கல்கத்தா, டெல்லி, சென்னை, நாகபுரி, ஷோலாப்பூர்
ஆமதாபாத், லூதியானா, கோயமுத்தூர், கொச்சி

2



தீபாவளி முதல்
நாடெங்கும்
சிவாஜி கணேசன் அளிக்கும் பத்மினி பிக்சர்ஸ்
கப்பலோட்டிய
தமிழன்
தயாரிப்பு · டைரக்ஷன்
பி. ஆர். பந்துலு
அமரகவி பாரதியார்
எஸ்.டி. சுந்தரம்
ஜி. ராமநாதன்
ஏ.கே. சேகர்
சென்னை: பாரகன் · கிரௌன் · சயானி

பிலவ, ஐப்பசி 20 — கல்கி — நவம்பர் 5, 1961

பொருளடக்கம்

''கல்கி''யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.



சிகரெட்டின் விலை எவ்வளவுக்கெவ்வளவு அதிகமோ அவ்வளவுக்கவ்வளவு தரமும் உயர்வு என்ற கருத்து பற்பலரிடம் உண்டு. இது எப்போதுமேயோ, எல்லா விஷயங்களிலுமேயோ உண்மையாகிவிடுவதில்லை. ஏனென்றால், அத்தகைய விலையில் மிகப் பெரும் பங்கு பற்பலவான வரிகளுக்கே போய்ச் சேருகின்றன.

புகையிலையின் வரலாறு... 10



பனாமா


ஒரு நல்ல சிகரெட்—
இறுதிவரை இன்பமூட்டுவது

பம்பாய்—57

பாரதத்தில் இத்தகைய தேசிய ஸ்தாபனங்களில் மிகப் பெரியது

GT 710 TM

Greens' Advtg



மலர் 21 | தமிழ்த்திரு நாடுதன்னைப் — பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார் | இதழ் 14

ஆஸ்திகம் கலந்த ஆட்சி வேண்டும்

ராஜாஜி

உலகமெல்லாம் ஆண்ட பிரிட்டிஷ் மக்களின் பிரதம மந்திரி மேதாவி மாக்மிலன் சமீபத்தில் தம்முடைய கட்சி மகாநாட்டில் செய்த பிரசங்கத்தில் எடுத்துச் சொன்னார். "உலகம் இரண்டு பிளவுகளாகப் பிரிந்து நிற்கிறது. ஒன்றில் ஆண்டவன் உண்டு என்று வாழ்க்கை நடைபெறுகிறது. மற்றொன்றில் நாஸ்திக கம்யூனிஸம் மக்களை ஆட்டுகிறது. இந்த இரண்டுக்கும் நடைபெற்று வரும் சண்டை வெகு காலம் நடக்கும். முடிவில் ஆண்டவனை நம்பி நடத்தும் வாழ்க்கைதான் வெற்றி பெறும்'' என்று.

நம் நாட்டிலும் இந்தப் பூசல் நடைபெற்று வருகிறது. கம்யூனிஸ நாஸ்திகத்தை ஏற்றுக் கொண்டு கம்யூனிஸ சமுதாய முறையே லாபகரமான முறை என்று நம்பும் காங்கிரஸ் கட்சி ராஜாங்க பலத்தை ஆக்கிரமித்துக்கொண்டு மக்கள் அனைவரையும் மாக்களாக எண்ணி, தான் வகுத்ததே வாய்க்கால் என்று நாட்டில் சர்வாதிகார அகங்கார ஆட்சி நடத்தி வருகிறது.

இந்த ஆட்சிக்கு வேர் நாஸ்திகம். அவர்களுடைய கணக்கிலும் திட்டங்களிலும் ஆண்டவன் இல்லை. கடனும், வரியும், விலைவாசிகளும் தரும் பணமே அவர்களுடைய ஈசுவரன்.

வேரிலிருந்து முளைத்து வளர்ந்த மரமும் அதன் பூவும் பழமும் வேரின் குணத்துக்கு வேறுபடாது. மூலத்தைப் பொருத்துத்தான் இருக்கும் பயனும். நாஸ்திக வேரிலிருந்து நீதியும் நியாயமும் உண்டாகா. நீதியைப் புறக்கணித்துச் சட்டசபையில் சட்டங்கள் செய்யப்படுகின்றன. நியாயத்தைப் புறக்கணித்து நிர்வாகம் நடைபெறுகிறது. துவேஷம், பொறாமை, லோபம் இந்த அடிப்படையில் சர்வாதிகாரம் நடைபெறுகிறது.

"சம்பாதித்த சொத்துக்கு உரிமையும் காப்பும் தருவது அரசாங்கத்தின் கடமை. அந்தச் சொத்து விருத்தியாவதும் குடும்பத்தில் பரம்பரையாக அனுபவிப்பதுமே சமூக க்ஷேமகர சம்பிரதாயம். இது இல்லையேல் நாட்டில் அராஜகம்தான் ஆட்சி புரியும். நாகரிகமே அழிந்து போகும்'' என்றார் புகழ் பெற்ற அரசியல் மேதாவி பர்க் (Edmund Burke). "சிலருடைய சொத்தைப் பறித்துப் பெரும்பாலோருக்கு அதைப் பங்கு செய்து தந்தால், ஆள் ஒருவனுக்கு மிக அற்பச் சொத்தும் கிடைக்காது. ஆயினும் இந்த உண்மைக் கணக்கு மக்கள் மூளையில் ஏறுவதில்லை. பொறாமையும் ஆசையும் புத்தியைக் குழப்பி விடுகின்றன. சொத்தைப் பறிக்கும் காரியத்தில் ஈடுபடும் அரசாங்கத்துக்கு, பறித்த சொத்தைப் பகிர்ந்து கொடுக்கும் உத்தேசம் கிடையாது. இதை மக்கள் அறியமாட்டார்கள்'' என்றெல்லாம் விளக்கி மேதாவி பர்க், வெகு காலத்துக்கு முன்னமேயே சொன்னது தற்போது நடைபெறும் நில உச்சவரம்பு முதலிய அராஜக சட்டங்களைப் பற்றியே சொன்னாரோ என்று தோன்றுகிறது!

உச்சவரம்பு நிலத்துக்கு மாத்திரமல்ல, மற்றச் சொத்துக்களுக்கும் வரும் என்ற எச்சரிக்கையும் விளம்பரமாய்விட்டது. ஆயினும் எச்சரிக்கையைக் கவனிப்பாரில்லை. ஆடுகள் பலிபீடத்துக்கு மாலையணிந்து செல்லுவதுபோல் கொள்ளை முறைக்கு ஆதரவு சேர்த்துத் தரப் பணக்காரர்கள் உதவுகிறார்கள். வரம்புகளும் வரவரத் தாழ்ந்துகொண்டே போகும். அரசாங்கத்தின் கடன் சுமை ஏற ஏற வரிகளும் பறி கொள்ளும் சட்டங்களும் பெருகி

விஸ்தரிக்கும். வோட்டுகள் பெறுவதற்கு என்ன வேண்டுமானாலும் செய்வார்கள்.

தனித்தனியாக விமரிசனம் செய்ய வேண்டியதில்லை. மூலம் நாஸ்திகம். தருமமும் தருமத்தின் மூலமாகிய ஆஸ்திகமும் சிம்மாசனம் ஏற வேண்டும். இல்லாவிடில் பாரத தேசம் பரிதாப தேசமாகும். தீபாவளி இதழில் ஆஸ்திகத்தின் சிறப்பைப் பற்றி எழுதுவது என் பாக்கியம்.

ஒரே வழி

சுதந்திரக் கட்சி, பிரஜா சோஷலிஸ்ட் கட்சி, ஜன சங்கம் ஆகியவை மூன்றும் ஒன்றாகச் சேர்ந்து ஸ்ரீ கிருபளானியை ஆதரிப்பது எதனால் என்பது நேரு அவர்களுக்குப் புரியவில்லையாம். கொள்கைகளில் மாறுபட்ட இந்தக் கட்சிகள் எவ்விதம் ஒன்று கூட முடியும் என்று அவர் வியப்பு தெரிவிக்கிறார். இதே பிரஜா சோஷலிஸ்ட் கட்சியுடனும், ஜனசங்கத்தைவிட வகுப்புணர்ச்சியில் குறைந்தது என்று கூற முடியாத முஸ்லிம் லீகுடனும் கேரளாவில் காங்கிரஸ் இதுவரை உறவு கொண்டாடி வந்ததும், இப்போது முறிவுபட்டுப் போன அவ்வுறவுக்குச் சிம்பு கட்டி வருவதும் ஏனோ பிரதமருக்கு வியப்பளிக்கவில்லை. ஆனால் மக்கள் என்னவோ இந்தக் கூட்டுகளில் வியக்க எதுவும் இருப்பதாக எண்ணவில்லை. கம்யூனிஸம் என்ற அரக்கக் கொள்கையை எதிர்ப்பதற்காகக் கேரள 'மூக்கூட்டை' ஒத்துக் கொண்ட மக்கள் காங்கிரசும் பரிபூரண கம்யூனிஸ்ட் கட்சியாகி விட்ட இன்று, அதனை எதிர்க்க மற்றக் கட்சிகள் ஒன்று சேருவதை வரவேற்கத்தான் செய்கிறார்கள். இந்த ஐக்கியம் வடக்கு பம்பாய் பார்லிமெண்டரித் தொகுதியில் மட்டும் நடைமுறைக்கு வருவது போதாது. நாடெங்கிலும் இத்தகைய ஒரு தேர்தல் ஒப்பந்தம் ஏற்பட வேண்டும் என்றே இன்று பலரும் கருதுகிறார்கள்.

எல்லாக் கட்சிகளின் இலட்சியமும் மக்களின் நல்வாழ்வுதான். அதை அடையும் மார்க்கத்தில்தான் மாறுபாடுகள். சர்க்காரே எல்லாத் துறைகளிலும் பிரவேசித்துக் கட்டுப்படுத்த வேண்டும் என்ற காங்கிரஸின் சர்வாதிபத்தியக் கொள்கையை கம்யூனிஸ்ட்டுக் கட்சி நீங்கலாக மற்ற எல்லாக் கட்சிகளும் எதிர்க்கின்றன. அந்த ஆட்சியில் பெருகியுள்ள லஞ்ச ஊழல்கள், வீண் செலவுகள், பணத் திமிர் முதலியவற்றை அவை யாவும் வெறுக்கின்றன. எனவே இந்தக் கட்சித் தலைவர்கள் யாவரும் ஓர் ஐக்கிய முன்னணி அமைத்துக் காங்கிரஸை முறியடிக்க முயல வேண்டியதே இன்றைய அவசியமும் அவசரமுமாகும். தேர்தல் நெருங்கி வந்து விட்டது. காங்கிரஸின் குரங்குப் பிடியினின்று நாட்டை விடுவிக்க இது ஒன்றே உபாயம் என்பதை எல்லாக் கட்சித் தலைவர்களும் உணர்வார்களாக!

விடுதலை பிறக்குமா?

மனித உரிமையின் மாண்புகளைப் பெரிதும் மதித்துப் போற்றும் இந்நாளில் கலப்படமற்ற காட்டுமிராண்டித்தனத்தை வெளிப்படையாகப் பின்பற்றும் நாடுகளும் இரண்டு இருக்கின்றன. இனபேதக் கொள்கையைக் கடைப்பிடிக்கும் தென் ஆப்பிரிக்காவும், காலனி ஆதிக்கத்தைக் கைக்கொண்டு வரும் போர்ச்சுகலும்தான் அவை. சென்ற வாரம் அவ்விரு நாடுகளும் அகில உலகத்தின் கண்டனத்துக்கும் ஆளாயின.

ஐ. நா. வைச் சற்றும் பொருட்படுத்தாது தனது மூடக் கொள்கைகளைப் பின்பற்றி வரும் தென் ஆப்பிரிக்காவை அமெரிக்கா நேரடியாகத் தாக்கியிருப்பது குறிப்பிட வேண்டிய விஷயம். எனினும், வெள்ளையர்கள் மட்டுமே தேர்தல் முடிவுகளை நிர்ணயிக்கும் தென் ஆப்பிரிக்காவில், இனபேதக் கொள்கையைக் கட்டிக் காத்து வரும் மகாநுபாவர் வெர்வோர்டின் கட்சியேதான் மீண்டும் வெற்றி பெற்றிருக்கிறது. அந்தப் பெருமிதத்தில், 'தென் ஆப்பிரிக்காவில் மேலும் பல தலைமுறைகளுக்கு வெள்ளையர்கள் நீடித்து வாழ முடியும் என்பதை உறுதி செய்வேன்' என்று வெர்வோர்டு கொக்கரித்திருக்கிறார். சத்தியத்துக்கு அடிபணியாதவர்களை, பலமான உலக அரசாங்கம் இல்லாத வரையில் திருத்துவதற்கு வழியே கிடையாதோ என்றுதான் ஏங்க வேண்டியிருக்கிறது.

'அந்நியத் திட்டுக்களை விடமாட்டேன்' என்று முரண்டு பிடிக்கும் போர்ச்சுகலை ஆசிய ஆப்பிரிக்க நாடுகள்

காங்கிரஸின் (துர்ப்) பலம்



பல வன்மையாகக் கண்டித்திருக்கின்றன. போர்ச்சுகலின் காலனி வெறி இந்தியாவை நேரடியாகப் பாதிக்கும் விஷயமாகும். சுதந்திர பாரத மண்ணில் புண்களாக உள்ளன கோவா, டையூ, டாமன் முதலிய திட்டுக்கள். ஐ. நா. சபையின் மூலமும், அவசியமானால் ராணுவக் கூட்டு சேர்ந்தும் போர்ச்சுகல் வசமுள்ள திட்டுக்களை விடுவிக்க வேண்டுமென அநேக ஆசிய ஆப்பிரிக்க நாடுகள் கூறியுள்ளன. எனினும் ‘தேசிய ஒருமைப்பாட்டை நிலைநாட்டுவதற்காக உள்நாட்டு யுத்தத்திலும் இறங்குவேன்’ என்று சூள் உரைத்த பிரதமர் அவர்களும், மொரார்ஜி பாய் அவர்களும் இந்த விவாதத்தின் போது அஹிம்சையின் மகத்துவத்தில் அயராத நம்பிக்கையைத் தெரிவித்திருக்கின்றார்கள். எனவே பத்திரிகைகளில் இவ்விவாதம் குறித்துப் பக்கம் பக்கமாகப் படித்த பின்னரும் இந்தத் திட்டுக்களின் விடுதலையில் முன்பிருந்த நிலைமையைவிட இன்று ஓரடியேனும் முன்னேறியிருக்கிறோமா என்பது புரிந்தபாடாக இல்லை.

உணவு மந்திரி உண்மை பேசுகிறார்!

மத்திய உணவு மந்திரி திரு எஸ். கே. பாட்டீல் அவர்களுக்கு நமது உளமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம். உண்மையைத் தயங்காமல் சொல்பவர்களை வாழ்த்தத்தானே வேண்டும்? ‘வரவிருக்கும் ஆண்டுகளில் உணவு தானியங்களின் விலை ஒரு போதும் வீழ்ச்சியடையாது; மாறாக, உயரவும் கூடும்’ என்று சந்தேகத்துக்கிடமின்றிக் கூறியுள்ள திரு பாட்டீல் அவர்களின் தீரத்தை என்னவென்று சொல்ல?

எனினும் காங்கிரஸ் சர்க்கார் உணவு தானிய விலைகளைக் குறைப்பதற்கு ஏன் நடவடிக்கை எடுக்காது என்பதற்கு அவர் கூறியுள்ள காரணத்தை ஆராய்ந்து பார்த்தால் நம் வாழ்த்துக்களை வாபஸ் பெறத்தான் தோன்றும்.

‘தானியங்களின் விலைகள் இறங்கிவிட்டால் விவசாயிகள் எப்படி மற்றப் பண்டங்களை வாங்கி வாழ்க்கை நடத்த முடியும்?’ என்று ‘சாதுரியமான’ ஒரு கேள்வியைப் போட்டிருக்கிறார் திரு

பாட்டீல் அவர்கள். இதர பொருள்களின் விலைகளைக் குறைக்கக் கூடாது என்றும், உணவுப் பண்ட விலைகளை மட்டும்தான் குறைக்க வேண்டும் என்றும் மக்கள் சொல்வது போல் பாவித்து இப்படிப் பேசியிருக்கிறார் அவர். எல்லாப் பொருள்களின் விலைகளும் இறங்குவதற்குச் சர்க்கார் முயற்சி எடுக்க வேண்டும் என்பதுதான் மக்களின் விருப்பம். இந்த விருப்பம் கைகூட வேண்டுமானால் நாசிக்கிலுள்ள சர்க்காரின் அச்சகம் ஓய்வு பெறுவதொன்றே வழி. ஆனால், தாங்கள் புதிதாக சிருஷ்டித்துள்ள எண்ணற்ற இலாக்காக்களின் ஊழியர்களுக்கு ஊதியம் அளிப்பதற்காக நோட்டுக்களை அடித்துத் தள்ளி வரும் காங்கிரஸ் சர்க்கார் பண வீக்கத்தைத் தடுக்க ஒருகாலும் முன் வராது. எனவே, மூன்றாவது திட்ட காலத்தில் இந் நாட்டில் எவ்வளவுதான் உற்பத்தி பெருகினாலும் பண்டங்களை விலை கொடுத்து வாங்கி அநுபவிக்கும் நிலையில் மக்கள் இருக்க முடியாது. இவ்வாறு உற்பத்தி பெருகும் என்று நம்புவதற்கே உண்மையில் ஆதாரம் கிடையாது. ஏட்டளவிலே உள்ள இந்த அல்நாஷர் கற்பனைக்காக மக்கள் மேலும் வரிச்சுமைகளைத் தாங்கப் போவதென்னமோ மறுக்க முடியாத உண்மை. திரு பாட்டீலின் பேச்சுக்குப் பின்னராவது மக்கள் உஷாராக வேண்டும்.

பிரதமருக்கு இது அழகா?

இடம் பொருள் ஏவல் பார்த்துச் செயலாற்ற வேண்டும் என்பார்கள். சாதாரண மக்களைவிட இவ்விஷயத்தில் அதிக அக்கறை செலுத்த வேண்டியவர் ஒரு நாட்டின் பிரதம மந்திரி என்பதைச் சொல்ல வேண்டியதில்லை. ஆனால் நமது பிரதமர் அவர்களோ எந்த இடத்தில் எதைப் பேசுகிறோம் என்ற பிரக்ஞையின்றி, கோவாப் பிரச்னை பற்றிய ஒரு கூட்டத்தில் சுதந்திரக் கட்சியை அபாண்டமான முறையில் தாக்கிப் பேசியிருக்கிறார். சுதந்திரக்கட்சி பணக்காரர்களுக்காகவே ஏற்பட்டது என்று திருவாய் மலர்ந்திருக்கிறார்.

'சுதந்திரக் கட்சி பணக்காரர்களின் கட்சி' என்பதாக ஒரு பொய் வாதத்தைக் காங்கிரஸ் ஆட்சியில் அங்கம் வகிக்கும் சில்லறைத் தேவதைகள் கூறி வந்திருப்பதை நாம் கேட்டிருக்கிறோம். இதில் நேரு அவர்களும் சேராமலிருப்பின் நன்றாக இருக்கும். வியாபார சமூகத்திடமிருந்து அதிகாரத்திலிருக்கும் மந்திரிகளும் மற்றவர்களும் காங்கிரசுக்காகத் தேர்தல் நிதி திரட்டுவது தேசமறிந்த விஷயம். காங்கிரசை விரோதித்துக் கொண்டால் தங்கள் வியாபாரம் கெட்டு விடும் என்ற பீதியில் பணக்காரர்கள் யாவரும் அந்தக் கட்சியைத் தாங்கி வருவதை நாடறியும். எதிர்க் கட்சிகளுக்கும் உதவியளிக்கலாமா என்று தயங்கியவர்களையும் ஒரு மிரட்டல் போட்டு அடக்கி விட்டார் நேரு அவர்கள். உண்மை இவ்வாறிருக்க, எதிர்க்கட்சிகளை நியாயத்துக்கு முற்றும் புறம்பான முறையில் தூஷிக்கும் இழி செயலில் நேருஜியைப் போன்றவர்கள் இறங்கியிருப்பது வருந்த வேண்டியதாகும். வழி காட்டியாக அமைய வேண்டியவர்கள் இவ்விதம் நடந்து கொண்டால் மற்றவர்களுக்குக் கேட்பானேன்?

சுதந்திர நிதி

(13—9—61 லிருந்து 28—10—61 வரை)

ஏடன் அன்பர்	9	94
மகமாய் ராமசாமி	1	00
டி. ஆர். ராமதாஸ்	5	00
வி. வி. பத்மநாபன்	100	00
ஓர் அன்பர்	10	00
லக்னௌ அன்பர்	1	00
துரையப்ப பாகவதர்	5	00
டி. மாணிக்கம்	10	00
காதல் திரை	1	00
எஸ். டி. எல். நரசிம்மன்	10	00
மதுரை அன்பர்	5	00
கே. ஆர். நாராயணன்	2	00
கே. டி. ஆழ்வார்	10	00
டாக்டர் ஸ்ரீஹரி மூலம் திருவிதாங்கூர் பிள்ளைமார்கள்	101	00
வி. பாஸ்கர அய்யர்	2	00
பம்பாய் ரயில்வே ஊழியர்	2	00
பூந் அன்பர்	1	00
திருச்சி டாக்டர் காளமேகம்	21	00
ஏ. என். சுப்பிரமணிய அய்யர்	100	00
கே. என். ராமசுப்பய்யர்	101	00
10-1-61 முதல் 12-9-61 முடிய	7966	92
ஆக ரூ.	8464	86

சுதந்திரக் கட்சிக்காகப் பண உதவி செய்கிறவர்கள் ஸ்ரீ ராஜாஜி c/o கல்கி காரியாலயம், சென்னை - 10 என்ற விலாசத்துக்கு அனுப்பலாம்.



மணமகள் : திருமதி தனலெட்சுமி
கொழும்பு கிரீன்லண்ட்ஸ் ஹோட்டல் பாகஸ்தர் எஸ். ராமசாமி ரெட்டியார் குமாரத்தி.

மணமகன் : திரு என். கிருஷ்ணன்.
கொழும்பு ஆரியபவான் ஹோட்டல் உரிமையாளர் பி. நம்மாள்வார் ரெட்டியார் குமாரன். திருநெல்வேலி ஜில்லா, பனைக்குளத்தில் 14-9-61ல் விமரிசையாக நடைபெற்ற இத்திருமணத்தில் கலந்து கொண்டு, சிறப்பித்தவர்களுக்கும் வாழ்த்துக்கள் அனுப்பியவர்களுக்கும் மணமக்கள் நன்றி தெரிவித்துக் கொள்கிறார்கள்.

ஜம்மியின் "லிவர்க்யூர்"

குழந்தைகளின் ஈரல் குலைக்கட்டி வியாதிகளுக்கு

வழக்கமான மாதாந்திர விஜயம்

எமது வாடிக்கையாளர்களின் நலனையும் சௌகரியத்தையும் முன்னிட்டு எமது டாக்டர்கள் கீழ்க்கண்ட இடங்களில் ஒவ்வொரு மாதமும் குறிப்பிட்ட தேதிகளில் விஜயம் செய்கிறார்கள். அப்பொழுது அவர்களைக் கலந்து ஆலோசிக்கலாம்.

இடம்	தேதி	நேரம்	விலாசம்
கரூர்	1	9 to 11 காலை	சென்ட்ரல் மெடிகல் ஸ்டோர்ஸ்
நாமக்கல்	1	2 to 3 மாலை	டவுன் மெடிகல் ஹால்
சேலம்	2	9 to 11 காலை 3 to 5 மாலை	கோயம்புத்தூர் லாட்ஜ் பிராஞ்சு
பவானி	3	9 to 10 காலை	எம்.எஸ்.செட்டியார் & சன்ஸ், கெமிஸ்ட்ஸ்
ஈரோடு	3	11 to 12 பகல்	நவபவன் லாட்ஜிங்
திருப்பூர்	3	3 to 5 மாலை	ஆர்.எஸ். வாசன் & கோ., கெமிஸ்ட்ஸ்
கோயம்புத்தூர்	4	9 to 11 காலை 3 to 5 மாலை	ஈஸ்வர் & கோ., கெமிஸ்ட்ஸ்
பொள்ளாச்சி	5	9 to 11 காலை	எஸ்.எஸ். மணி & கோ., கெமிஸ்ட்ஸ்
உடுமலைப்பேட்டை	5	3 to 5 மாலை	ராஜேந்திரா & கோ., மெடிகல் ஷாப்
பழனி	6	9 to 11 காலை	ஷண்முகானந்த பவன்
திண்டுக்கல்	6	3 to 5 மாலை	சி. ஆறுமுகம் பிள்ளை & சன்ஸ் ஜெனரல் மர்ச்சென்ட்ஸ்
மதுரை	7	9 to 12 பகல் 3 to 5 மாலை	உடுப்பி போர்டிங் லாட்ஜ்
	8	9 to 11 காலை	
	23	9 to 11 காலை	
விருதுநகர்	9	8 to 9 காலை	சரவணமுத்துப் பிள்ளை சத்திரம்
கோவில்பட்டி	9	10½ to 12 பகல்	தனலக்ஷ்மி மெடிகல் மார்ட், கெமிஸ்ட்ஸ்
தூத்துக்குடி	9	3 to 5 மாலை	வி. எஸ். சங்கரலிங்கம் பிள்ளை மெடிகல் ஸ்டோர்ஸ்
திருநெல்வேலி ஜங்.	10	8 to 11 காலை 3 to 5 மாலை	சந்திர விலாஸ் ஹோட்டல்
திருச்செந்தூர்	11	9 to 11 காலை	விநாயக சுப்பிரமணியம், கர்ணம்
ஸ்ரீவைகுண்டம்	11	3 to 5 மாலை	ஜி. கோமதிநாயகம் பிள்ளை, மெடிகல்ஷாப்
அம்பாசமுத்திரம்	12	9 to 11 காலை	கோமதி மெடிகல் ஸ்டோர்ஸ், கெமிஸ்ட்ஸ்
தென்காசி	12	3 to 5 மாலை	எஸ். கிருஷ்ணு & கோ., மெடிகல் ஸ்டோர்ஸ்
ராஜபாளையம்	13	9 to 11 காலை	ராஜபாளையம் சத்திரம்
ஸ்ரீவில்லிபுத்தூர்	13	12½ to 1½ மாலை	பி.கே. அசன் ராவுத்தர் சன்ஸ், கெமிஸ்ட்ஸ்
சிவகங்கை	14	9 to 11 காலை	மீனாக்ஷி & கோ., கெமிஸ்ட்ஸ்
தேவகோட்டை	14	3 to 5 மாலை	ஸ்ரீ மீனாக்ஷி ஸ்டோர்ஸ்
காரைக்குடி	15	9 to 11 காலை 3 to 5 மாலை	ஏ.வி.&சன்ஸ் டிராவலர்ஸ் ரெஸ்ட் ஹவுஸ்
புதுப்பட்டி	16	9 to 11 காலை	கலைமகள் நூல் நிலையம், கெமிஸ்ட்ஸ்
புதுக்கோட்டை	16	3 to 5 மாலை	வஸந்தா லாட்ஜ்
ராமநாதபுரம்	22	9 to 11 காலை	ராஜன் மெடிகல் ஹால், கெமிஸ்ட்ஸ்

ஜம்மி வெங்கடரமணய்யா & சன்ஸ்

திருச்சிராப்பள்ளி — கிளை : கும்பகோணம்

ஆதிசங்கரர் காட்டும் தெய்வம்

சேங்காலிபுரம் பிரம்மஸ்ரீ அனந்தராம தீக்ஷிதர்

தியான யோகம் செய்து மட்டுமே காணக் கூடிய அம்பிகையைத் தமது ஸ்தோத்திரங்களைப் படிப்பதாலேயே காணும்படி செய்திருக்கிறார் ஆதிசங்கரர். அவர் செய்துள்ள ஆனந்த லஹரியில் தேவியைக் கண் முன்பு கொண்டு வந்து நிறுத்துகிறது ஒரு சுலோகம்.

मुखे ते ताम्बूलं नयनयुगले कज्जलकला
ललाटे काश्मीरं विलसति गले मौक्तिकलता ।
स्फुरत्काञ्चीशाटी पृथुकटितटे हाटकमयी
भजामि त्वां गौरीं नगपतिकिशोरीमविरतम् ॥

''திருவாய் நிறையத் தாம்பூலம்; இரு கண்களிலும் அஞ்சனம்; நெற்றியில் காச்மீரக் குங்குமம்; கழுத்தில் ஒளிரும் முத்து மாலை; மேகலை தரித்த இடையில் பட்டாடை; பொன் போன்ற வண்ணம் - இவ்வளவும் சேர்ந்த மலையரசன் மகளாகிய கௌரியை சேவிக்கிறேன்' என்பது இதன் பொருள்.

ஆதிசங்கரர் ஸ்தோத்திரங்கள் செய்து மட்டும் அம்பிகையின் ஆராதனையைப் பரப்பவில்லை. காஞ்சி காமாக்ஷி சந்நிதியில் ஸ்ரீ சக்கரப் பிரதிஷ்டையும் செய்திருக்கிறார்.

ஆதியில் வேதமும் பரம்பொருளை ஸ்திரீ ரூபமாகக் கூறி யிருக்கிறது. அம்பாளின் அருளால்தான் ஒற்றுமையான குடும்ப வாழ்க்கை அமையும் என்று ஸ்ரீ சுகர் கூறியுள்ளார். ஆகவே, ஆசாரியர்களுக்கு வெகு காலம் முன்பிருந்தே அம்பிகை உபாசனை சிறப்பாக இருந்து வந்திருக்கிறது.

ஆனால் பின்பு இந்த உபாசனை நலிவு பெறலாயிற்று. அப்போது ஸ்ரீ ஆதிசங்கரர் தோன்றி, காஞ்சியில் ஸ்ரீ சக்கரப்பிரதிஷ்டை செய்ததன் பயனாக மறுபடியும் அம்பாள் ஆராதனை சிறப்புப் பெறலாயிற்று. அதனாலேயே நாட்டில் செழிப்பும், தெய்வ நம்பிக்கையும் தழைக்கலாயின.

पीठेष्वष्टादशसु महितं कामकोटिं श्रयेथा:

''பதினெட்டு பீடங்களுக்குள் சிறந்த "காமகோடியை அடைந்து சேவியுங்கள்'' என்ற கவி வாக்கும் "இதனாலேயே ஏற்பட்டது.

இன்றும் அம்பாளைப் பல பக்தர்கள் உபாசித்து வருவதற்குக் காரணம் ஆதிசங்கரரைப் போலவே இன்று பொலியும் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதிகளின் தவமேயாகும். அம்பிகை ஆராதனம்தான் உலகெங்கிலும் எல்லா சுபிட்சங்களையும் உண்டாக்கும். இந்தத் தீபாவளி சுதினத்தில் அம்பிகையையும், ஆசாரியர்களையும் யாவரும் பணிவார்களாக!

நன்றி: காமகோடி ப்ரதீபம்





என்ன சேதி?

சமயமறிந்து செய்த சமயப் பணி

பொருளாதார முன்னேற்றமே வாழ்க்கையின் குறிக்கோள் என்ற எண்ணத்தினால் அமைதி இழந்து வரும் மக்களுக்கு ஆறுதலளிக்கக் கூடியது நம் ஆன்மீகப் பண்பாடுதான். ஆன்மீக உணர்வை ஞானம், பக்தி, கர்மம் ஆகிய மார்க்கங்களில் ஏதேனுமொன்றால் பெறலாம். பக்தி உணர்வை அடிப்படையாகக் கொண்டு, கலைஞர்களின் கர்மயோகத்தால் உருப்பெற்று, தத்துவ விளக்கங்களாகத் திகழும் நமது திருக்கோயில்களிலோ இந்த மூன்று மார்க்கங்களும் பின்னிப் பிணைந்துள்ளன. இந்த ஆலயங்களைத் தரிசிக்கும்போது ஆண்டாண்டாக நம் இரத்தத்தில் ஊறிவந்துள்ள ஆன்மீகப் பண்பு மேலெழும்புகிறது. தமிழகத்திலுள்ள புகழ் வாய்ந்த இந்தத் தேவாலயங்களில் பலவற்றை இருந்த இடத்திலிருந்தே தரிசிக்கும் வாய்ப்பைக் கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு மேலாகக் 'கல்கி' அளித்து வந்தது. வாசகர்களுக்கு இப்படி ஒரு வாய்ப்பை அளிக்கும் பேற்றைக் கல்கிப் பத்திரிகைக்கு அளித்தவர் திரு தொ. மு. பாஸ்கரத் தொண்டைமான் அவர்கள். 'வேங்கடம் முதல் குமரிவரை' என்ற தலைப்பில் அவர் எழுதி வந்த அருமையான தல யாத்திரைக் கட்டுரைகள் இந்த இதழுடன் முடிவு பெறுகின்றன.

ஒரு திருப்பணி நிறைவு எய்திய மகிழ்ச்சி இன்று நமக்கு ஏற்படுகிறது. இக்கட்டுரைகளைப் படித்து மகிழ்ந்தவர் பலர். பாராட்டியவர்கள் பலர். அவர்களில் குறிப்பிடத் தக்கவர் இன்று நம்மிடையே நடமாடும் கோயிலாக உள்ள ஸ்ரீ காமகோடி பீடாதிபதிகளாவர். ஆசாரிய சுவாமிகள் அருள் கூர்ந்து போர்த்திய பொன்னாடையுடன்தான் இப்படத்தில் திரு தொண்டைமான் அவர்களைக் காண்கிறோம். நாளும் தருமம் வளர்த்து வரும் தருமபுரம் மகாசந்நிதானம் அவர்களும் கட்டுரை ஆசிரியரைக் கௌரவித்திருக்கிறார்கள்.



திரு தொ.மு. பாஸ்கரத் தொண்டைமான்

எண்ணிலடங்காத நம் புனிதப் பதிகளிடமிருந்தோ பாஸ்கரத் தொண்டைமான் அவர்களிடமிருந்தோ கல்கி நேயர்கள் விடைபெற விரும்ப மாட்டார்கள் என்பதை நாம் அறிவோம். எனவே தொண்டைமான் அவர்களது தல யாத்திரைக் கட்டுரைகள் இனியும் அவ்வப்போது கல்கியில் இடம்பெற்றுவரும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

அஞ்சலி செலுத்துகிறோம்

உலக சமாதானப் பரிசை ஸ்ரீ ஹாமர்ஷீல்டுக்கு ஞாபகார்த்தமாக அளிப்பதொன்றே அவரது சமாதானப் பணிக்குச் செய்யக்கூடிய சம்மானமாகும் என்று ராஜாஜி கூறியது இன்று நனவாகியிருக்கிறது. இந்த ஆண்டுக்கான சமாதான நோபல் பரிசு ஹாமர்ஷீல்டின் நினைவுக்கு அர்ப்பணமாகிறது.

சென்ற ஆண்டுக்கான சமாதான நோபல் பரிசும் ஆப்பிரிக்காவில் சாந்தி தழைக்கப் பாடுபட்ட ஒருவருக்கே அளிக்கப்படுகிறது. ஹாமர்ஷீல்டைப் போலவே அவரும் இப்பரிசை நேரில் பெற முடியாமல் போகலாம். அவர்தான் இப்போது தடை செய்யப்பட்டுள்ள தென் ஆப்பிரிக்க தேசிய காங்கிரஸின் தலைவர் லுதூலி அவர்கள். இனபேதக் கொள்கையைக் காந்திய முறையில் எதிர்த்து இன்று சிறைப்பட்டிருக்கும் அவர் இப்பரிசைப் பெற்றுவரச் சர்க்காரிடம் அநுமதி கோரியிருக்கிறார். இக்கோரிக்கையில் அவர் வெற்றி பெற்றாலும், பெறாவிட்டாலும் அவரது போராட்டத்தின் அடிப்படைக் கொள்கை வெற்றி பெற்று விட்டது என்பதற்கு இந்தப் பரிசே ஓர் அடையாளமாகும்.

* * *

சென்ற ஆண்டு அக்டோபர் 21-ந் தேதியன்று சீனப் பட்டாளங்களுடன் வடக் பகுதியில் போரிட்டுத் தங்கள் இன்னுயிரைத் தியாகம் செய்த பத்துப் போலீஸ்காரர்களின் நினைவாகப் புது தில்லியில் ஒரு நினைவுச் சிலை திறந்து வைக்கப்பட்டிருக்கிறது. நாட்டின் பல இடங்களில் போலீஸ் நூற்றாண்டு விழா நடைபெறும் இத்தருணத்தில் இந்தத் திறப்புவிழா நடைபெற்



றிருப்பதில் ஒரு பொருத்தம் இருக்கிறது. திறமைக்கும், நேர்மைக்கும் பெயர் பெற்ற நமது போலீஸ் துறையினருக்குத் தேச சேவையின் சிறப்பை இந்தச் சிலை என்றும் நினைவுறுத்தும் என நம்புகிறோம். கடமையை ஆற்றிய அந்த வீரர்களுக்கு நம் அஞ்சலி.

திரைப்பட விழா

பத்தாண்டுகளுக்குப் பின்னர் புது தில்லியில் மீண்டும் அகில உலக திரைப்பட விழா நடைபெறுகிறது. ஐ. நா. தவிர முப்பத்தெட்டு நாடுகள் இவற்றில் இடம் பெறுகின்றன. ஒரு வாரம் நடைபெறும் இந்த விழாவை ஒட்டி சென்னை, பம்பாய், கல்கத்தா முதலிய இடங்களில் திரைப்பட வாரம் கொண்டாடப் போகிறார்கள். சினிமா ரசிகர்களுக்குக் கொண்டாட்டம்தான். 'சினிமா ரசிகர்களுக்கு' என்று கூறும் போது மக்களில் 99 சத விகிதத்தினரைக் குறிப்பிட்டு விடுகிறோம். வெள்ளித்திரை அவ்வளவு வசியம் பெற்றிருக்கிறது இந்நாட்டில்.

இவ்வளவு பெரிய அளவில் விழா நடந்த போதிலும் படாதிபதிகள் அவ்வளவாக மகிழ்ச்சியுடன் காணப்படவில்லையாம். காரணம், இந்தத் துறை கோடிக் கணக்கில் வரி செலுத்தியும் சர்க்கார் பிலிம் சுருள் இறக்குமதியை வெட்டிக்கொண்டே வருவதுதான். உதகை முதலிய இடங்களில் சுதேசி பிலிம் ஆலைகள் தோன்றியபின் அவர்கள் குறை நீங்கும் என நம்பலாம்.

இந்தச் சமயத்தில் நாட்டின் பண்பாட்டில் அக்கறை கொண்ட சிலரின் குறையைப் படாதிபதிகள் கவனத்துக்குக் கொண்டு வர விரும்புகிறோம். பெரும் தொகையினர் மீது செல்வாக்கு படைத்துள்ள தங்களது படைப்புக்களால் படாதிபதிகள் மக்களின் எண்ணங்களை எவ்வளவோ மேம்படுத்த முடியும். இந்தப் பொறுப்பை அவர்கள் இன்னும் சிறந்த முறையில் ஆற்ற வேண்டுமென்பதுதான் நம் விருப்பம். தங்களிடமுள்ள ஆற்றலை நல்ல முறையில் அவர்கள் பயன்படுத்த வேண்டுமென்பதே இவ்விழாவுக்கு நாம் அளிக்கும் வாழ்த்தாகும்.

தீஞ்சுவைத் தீபாவளி மலர்

நேயர்களுக்குத் தீபாவளித் திருநாளில் மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம். எத்தனை நாளானாலும் வாடாது நறுமணம் வீசும் மலர் ஒன்று உண்டு என்பதை இவ்வருஷத்திய 'கல்கி' தீபாவளி மலரைப் பார்த்தபின் அறியலாம்.

பாதாமி சிற்பச் சித்திரமொன்று மலரின் அட்டையை அலங்கரிக்கிறது. ஆதிசேஷன் மீது அமர்ந்து கனிவுடன் நோக்கும் காக்கும் கடவுளிடம், அணுகுண்டுச் சோதனைகளும் பனிப் போருமாகிய கரு மேகங்கள் சூழ்ந்த இவ்வுலகை சர்வ நாசத்திலிருந்து உய்வித்து அனைவரது உள்ளங்களிலும் அன்பெனும் தீபம் சுடர்விட அருள வேண்டும் என்று இந்தத் தீபத் திருநாளில் பிரார்த்தித்துக் கொண்டு பக்கங்களைப் புரட்டுகிறோம்.

முகப்புச் சித்திரத்தில் திகழும் காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சாரிய சுவாமிகளின் அருட்பார்வையில் கட்டுண்டு கரம் குவிக்கிறோம். ஒலியே வடிவமாய் ஓங்குமோர் ஒப்பில் பரஞ்சோதியை நெஞ்சிலிருத்தி வெள்ளி வீணையைக் கையிலேந்தி மீட்டி நாதோபாசனையின் மகிமையை உணர்த்துவதாக அமைந்திருக்கிறது இச்சித்திரம்.

மலரில் 'வாதாபி கலை மடல்' ஒரு விசேஷ அம்சம். கலைஞர் மணியம் இரண்டு மாத காலம் பாதாமியிலேயே தங்கி யிருந்து தீட்டிய வண்ண ஓவியங்கள் பார்க்கப் பார்க்கத் தெவிட்டாத அற்புதச் சித்திரங்களாய்த் திகழ்கின்றன. சரித்திர ஆராய்ச்சியாளர் கண்டறிந்த உண்மைகளைக் கற்பனைக் கண்கொண்டு பார்த்துப் புது மெருகு கொடுக்கிறார் ஓவியக் கலைஞர் மணியம்.

இசையால் அறம் வளர்த்த பக்திமான்கள் பலர் நம் பாரத புண்ணிய பூமியில் அவதரித்துப் புனிதப்படுத்தி யிருக்கிறார்கள். இசை மணிகள் பலரது வாழ்க்கை நிகழ்ச்சிகளை ஓவியர் ராஜம் அழகுறத் தீட்டி யிருக்கிறார்.

பிள்ளைத் தமிழ்ப் பாடல்களை விளக்கும் ஓவியர் விநுவின் படங்கள் பொருத்தமாகவும் மலரின் சிறப்புக்கு மணம் கூட்டுவனவாகவும் அமைந்துள்ளன.

'காவியமும் ஓவியமும்' என்னும் தலைப்பிலே கவிஞர்கள் வாழ்வில் நிகழ்ந்த ஒரு நிகழ்ச்சி எவ்வாறு அவர்களது இலக்கிய வாழ்வுக்குத் தூண்டுகோலா யமைந்தது என்பதைச் சித்திரிக்கும் காட்சியையும் அவர்கள் இலக்கியப் படைப்பிலே தலைசிறந்த சம்பவம் ஒன்றையும் இணைத்துத் தரும் சித்திரங்களில் பிரபல ஓவியர்களான சாமி, சித்திரலேகா, சாகர், விஜயா, கல்பனா, ரமணி ஆகியோரது கைவண்ணத்தைக் காண்கிறோம்.

மூவர்ண ஹாஸ்யச் சித்திரங்களைத் தவிர சாமாவின் தரமான வேடிக்கைத் துணுக்குகளை இம்மலரில் அநேகமாகப் பக்கத்துக்குப் பக்கம் காணலாம்.

மதுரை மாநகர்ச் சிற்பங்கள் பலவும் ஓவியர் மணியத்தின் கைத்திறனால் உயிர்ச்சித்திரங்களாய் உருவாகியுள்ளன.

சித்திர விசித்திரங்களைக் கண்டு களித்து விட்டுப் படிக்கத் தொடங்கினோமானால் ராஜாஜியின் கதை ஒன்று மலரின் சிறப்புக்குச் சிகரமாய் அமைந்துள்ளது. பிரசித்திபெற்ற எழுத்தாளர்களான சோமு, அகிலன், தி. ஜானகிராமன், ஸ்ரீவேணுகோபாலன், தாமரை மணாளன், சரோஜா ராமமூர்த்தி, நா.கி. நாகராசன், ஸ்ரீஹரி, என். ராமேசன், பாஸ்கரத் தொண்டைமான், வே. கோவிந்தராஜன், சாமிநாத சர்மா, சுந்தரராமசாமி, லட்சுமி சுப்பிரமணியம், ராஜம் கிருஷ்ணன், ஏ. எஸ். சுந்தரராஜன், ஏ. எஸ். ராகவன், வை. சுப்பிரமணியன், உமாசந்திரன், கோமதி சுவாமிநாதன் போன்றோரது கதை கட்டுரைகளுடனும் ஏராளமான கவிதைகள், புகைப்படங்களுடனும் வருஷம் முழுதும் பாதுகாத்து வாசித்து மகிழக் கூடியதாய் விளங்குகிறது இம்மலர்.

ராஜாஜியின் கதையும் சாமாவின் நான்கு - வர்ணப் படங்களும் குழந்தைகளைக் குதூகலிக்கச் செய்யும்.

இவ்விதம் மேலட்டையில் வாண வேடிக்கைகளைப் பற்றிக் கனவு காணும் சிறுமி விழித்து எழுந்ததும், "பட்டாசுகளையெல்லாம் அக்காளிடமே தந்துவிடு. பரவாயில்லை; ஆனால் அலமாரியில் வைத்திருக்கிறாயே கல்கி தீபாவளி மலர், அதை மட்டும் என்னிடம் கொடுத்துவிடு!" என்று தன் தாயாரிடம் கேட்டால் அதிசயப்படுவதற்கில்லைதான்.

கேட்டீர்களா சேதி?



''இப்போது சமுதாயத்தை எதிர்நோக்கியிருக்கும் பிரச்னைகளில் காலணிப் பிரச்னை மிகப் பெரிய பிரச்னை. காலணிகளுக்கு விடுதலை அளித்தாலன்றி எந்தச் சீர்திருத்தமும் பலன் அளிக்காது!'' என்று ஓர் அரசியல் பிரமுகர் சொன்னாராம்.

கால் அணிகள்தான் தாமாகவே அறுந்து விடுதலை பெற்றுக் கொண்டு விடுகின்றனவே. போதாக்குறைக்குக் கால் அணித் திருடர்கள் வேறு இருக்கிறார்கள். கோயில்கள், கல்யாண வீடுகளுக்குப் புதுக் காலணியுடன் சென்றால் அதைத் தியாகம் செய்யத் தயாராக இருக்க வேண்டியதுதான். பழைய கால் அணிக்குப் பதிலாகப் புதிய கால் அணியை மாற்றி எடுத்துச் செல்லும் நாகரிகத் திருடர்கள் வேறு இருக்கிறார்களே! இவைதான் போகட்டும்! காலனியைக் காலணியாக மாற்றிய பத்திரிகைக்காரரை யார் என்ன செய்ய முடியும்?

ஃ ஃ ஃ ஃ



''மற்ற நாட்டு மக்களை அன்னியர்களாகவும், விரோதிகளாகவும் நினைப்பது கூடாது.''

இவ்வாறு டாக்டர் ராதாகிருஷ்ணன் சொன்னாரென்றால் அதற்காக நம் நாட்டு மக்கள் ஒருவருக்கொருவர் விரோதித்துக் கொண்டு வாழ வேண்டும் என்று அர்த்தமாகுமோ?

ஃ ஃ ஃ ஃ



திருடர்களைக் கையும் களவுமாகப் பிடிப்பதற்கான சாதனங்கள் கொண்ட கண்காட்சி ஒன்று சமீபத்தில் லண்டனில் நடந்ததாம். நாற்பதுக்கு மேற்பட்ட பிரிட்டிஷ் கம்பெனிகள் தாங்கள் தயாரித்த சாதனங்களை இந்தக் கண்காட்சியில் வைத்திருந்தனவாம்.

ஒரு பையில் இருக்கும் சாதனத்திலிருந்து இரும்புக் கைகள் வெளிவந்து திருடனின் கைகளை இறுகப் பிடித்துக் கொண்டு விடுமாம்.

இன்னொரு பையில், திருடும்போது திருடன்மீது சிவப்பு மையை வாரி அடிக்கும்படி ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறதாம்.

திருடன் ஜன்னல் கண்ணாடியை உடைத்துக் கொண்டு உள்ளே நுழைய முயன்றால் உடனே மணி ஒலிக்குமாம். இன்னொன்று: திருடன் வீட்டுக்குள் புகுந்து திருடினால் அவனைப் படம் எடுத்து விடக் கூடிய சிறு 'காமிரா'வும் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறதாம்!

அது சரிதான்: இந்தச் செய்தியைத் திருடர்கள் படிக்க முடியாதபடியல்லவா முதலில் ஏற்பாடு செய்ய வேண்டும்! 'இது திருடர்களுக்கல்ல' என்றோ, 'திருடர் அல்லாதவருக்கு மட்டும்' என்றோ இந்தச் செய்தியின் தலைப்பில் போட்டு விட்டால்........?— ஆங்கிலச் சினிமாப் படங்களில் 'வயது வந்தவர்களுக்கு மட்டும்' என்று போடுகிறார்களே அதுமாதிரி. நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?

ஃ ஃ ஃ ஃ




நெற்பயிர்கள் பாட்டுச் சத்தத்தைக் கேட்டு எப்படி வளருகின்றன என்பதற்கு பீஹாரைச் சேர்ந்த ஒரு விவசாயி பரிசோதனை நடத்தி அதில் வெற்றியும் கண்டுள்ளார். பாட்டுச் சத்தத்தைக் கேட்ட நெற் பயிர், மிகவும் செழிப்பாக வளருவதாக அவர் கூறுகிறார். பீஹார் ராஜ்ய அதிகாரிகள் இதை நேரில் பார்வையிட்டு வருகின்றனராம். ஆகவே, இனி சங்கீதக் கச்சேரிகளுக்குத் தனி அரங்கு தேவையில்லை. வயல் வரப்புக்கள் மீது உட்கார்ந்தே ரஸிகர்கள் சங்கீதத்தைக் கேட்க ஏற்பாடு செய்து விட்டால் போதும். இப்போது சங்கீத சபாக்கள் இருக்கும் இடத்தைச் சுற்றி உள்ள வீடுகளை இடித்துவிட்டு அவற்றை விளைச்சல் நிலமாகத் திருத்தியமைக்க ஒரு சட்டம் வந்தாலும் வரலாம். ஜாக்கிரதை!

"செய்தி சேகரன்"

அந்தரத்தில் இருந்து தயங்கித் தயங்கிச் சிறிது சிறிதாக இருளில் உதிரும் நெருப்புத் துண்டங்களைப் போல் எதிரே தெரிந்து கொண்டிருந்த அந்தச் சிவப்பு இரத்தினங்களையே இமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தனர் கரமஞ்சரியும் அவள் தோழியும். தந்தையின் கைப்பிடியிலுள்ள அந்த யாளி முகம் விநாடிக்கு விநாடி பெருகி விரிந்து அகலமும் நீளமுமாகிப் பூதாகாரமாக வளர்ந்து கனிந்து கொண்டு தன்னை அழுக்குவது போல் பயமாயிருந்தது கரமஞ்சரிக்கு.

'தந்தை இரகசியமாக அங்கே வந்து இருளில் ஊன்றுகோலுடனே நின்று கொண்டுதானும் வசந்தமாலையும் அதுவரை பேசிக் கொண்டிருந்தவற்றையெல்லாம் கேட்டவாறே இருக்கிறார்' — என்று உணர முற்பட்டபோது அந்த உணர்ச்சியால் தன் உடல் முழுவதும் கருந்தேள் விழுந்து ஊர்கிறாற் போலச் சிலிர்த்து நடுங்கினாள் அவள்.

தன் வார்த்தையும் தான் அதை ஒலித்த குரலும் நடுங்கிட 'வசந்தமாலை' என்று மெல்ல அழைத்தாள் கரமஞ்சரி. அந்த அழைப்புக்குப் பதில் குரல் கொடுக்காமலே பேச வேண்டாம் என்று சொல்வது போல் தன் வலக் கரத்தால் தலைவியின் பவழ மெல் லிதழ்களை இலேசாகப் பொத்தினாள் வசந்தமாலை. தோழியும் அப்போது மிகவும் பயந்து நடுங்கிக் கொண்டிருக்கிறாள் என்பதைத் தன் இதழ்களை மூடிய அவள் விரல்கள் நடுங்கிய விதத்திலிருந்து கரமஞ்சரி புரிந்து கொள்ள முடிந்தது. அண்மைக் காலத்து நிகழ்ச்சிகளால் தன் தந்தையை விடை காண முடியாத விடுகதையாக நினைத்துப் பயப்பட வேண்டிய சூழ்நிலை ஒவ்வொரு விநாடியும் அவளுக்கு ஏற்பட்டுக் கொண்டிருந்தது. யாருக்கும் அடிமையாகக் கூடாதென்று செல்வம் சேர்க்கத் தொடங்கியவர்கள், கடைசியில் அந்தச் செல்வத்துக்கு முழு அடிமையாகப் போய்விடுவதுதான் முடிவாகும் என்பதற்குத் தன் தந்தையையே நிதரிசனமான உதாரணமாகக் கண்டாள் கரமஞ்சரி. செல்வத்துக்கு அடுத்தாற் போல அவர் நகைவேழம்பருக்கும் சிறிது அடிமைப்பட்டிருப்பது போலத் தோன்றியது அவளுக்கு. செல்வத்துக்கு அடிமைப் படுவதைப் போலவே இரகசியங்களுக்கு அடிமைப் படுவதும் பயங்கரமானது தான். இரகசியங்களுக்கு அடிமைப் படுகிறவன் அதை உடையவனுக்கும் அடிமைப்பட வேண்டியதிருக்கும். ஒரே சமயத்தில் இந்த இரண்டு வகையிலும் அடிமைப் பட்டுக் கொண்டிருக்கும் ஒருவருக்குத் தான்



நா. பார்த்தசாரதி

22 - நள்ளிரவில் ஒரு நாடகம்

மகளாயிருப்பதை எண்ணியபோது அவளுக்குப் பயத்துடனே சிறிது பரிதவிப்பும் உண்டாயிற்று. செல்வத்தைக் குவிப்பதில் கவலையும் அக்கறையும் காட்டுவதற்கு அடுத்தபடியாக அதே அளவு கவலையும், அக்கறையும், நகைவேழம்பரோடு பழகுவதில் தன்னுடைய தந்தைக்கு இருக்கிறதென்பது அவளுக்குப் புரிந்தது. யாருடைய வாழ்வை வளர்த்து அதில் தானும் இரண்டறக் கலந்துவிட வேண்டுமென்று அவள் தவித்துக்கொண்டிருக்கிறாளோ அவருடைய வாழ்வையே அழித்துவிடத் தந்தை முயல்வதும் இலைமறை காய் போல் அவளுக்குப் புரிந்தது. அந்த விநாடி வரையில் தனக்குப் புரிந்திருக்கிற பயங்கரங்களை விட இனிமேல் புரிய வேண்டிய பயங்கரங்கள்தாம் அதிக

மாக இருக்கும் போலச் சுரமஞ்சரியின் மனக் குறளி அவளுக்குச் சொல்லியது. இந்தக்கொடுமைகளையெல்லாம் நினைத்த போது தான் அங்கிருந்து ஓடிப் போய்க் கடலில் விழுந்தாவது உயிரைப் போக்கிக் கொண்டு விட வேண்டும் போலத் தவிப்பு அடைந்தாள் அவள். அந்தத் தவிப்பின் விளைவு தோழி வசந்தமாலையிடம் ஒரு கேள்வியாகவும் பிறந்தது.

இப்போது தன் தந்தையே மறைவாக அங்கு வந்து நின்று ஒட்டுக் கேட்டுக் கொண்டிருக்கிறார் என்று அறிந்த போது அந்தத் தவிப்பு மேலும் முறுகி வளர்ந்தது.

சுரமஞ்சரியின் கண்கள் அந்தச் சிவப்புப் புள்ளிகளையே பார்த்துக் கொண்டிருந்தன. அவை இருளில் அசையாமல் ஓரிடத்திலேயே இருப்பதைக் கண்டு அந்த இரத்தினங்கள் பதிக்கப் பெற்ற ஊன்றுகோலை ஊன்றிக் கொண்டு அப்போது அங்கே நிற்பவர் முன்னுக்கும் நகராமல், பின்னுக்கும் நகராமல் நின்ற இடத்திலேயே நின்று கொண்டிருக்க வேண்டுமென்று அநுமானம் செய்து கொண்டாள் சுரமஞ்சரி. அவள் மனத்தில் அப்போது பலவிதமான சந்தேகங்கள் உண்டாயின. அந்தச் சந்தேகங்களில் இரண்டொன்றையாவது வசந்தமாலையின் காதருகே மெல்லக் கேட்கலாம் என்றால் தோழி அந்த நிலையில் தன்னோடு பேசுவதற்கே பயப்படுவது போலிருந்தது. அரை நாழிகைப் போதுக்குப் பின் தோழியே வலுவில் வந்து சுரமஞ்சரியின் காதருகே தன்னுடைய சந்தேகம் ஒன்றைக் கூறினாள். ''அம்மா! இதோ தெரிகிற சிவப்பு இரத்தினங்களோடு கூடிய ஊன்றுகோலைப் பிடித்துக் கொண்டு உங்கள் தந்தையார் இங்கு மறைந்து நிற்பதாக இதுவரை நீங்களும் நானும் நினைத்துக் கொண்டிருந்தது சாத்தியமில்லை. ஒரு காலைச் சாய்த்துக் கொண்டே அவரால் இவ்வளவு நேரம் அசையாமல் நிற்க முடியாது. கால் மாற்றி ஊன்றியிருந்தாரானால் அந்தச் சிறு ஒலியையும், ஊன்றுகோல் அசைவதையும், இதற்குள் நாம் கேட்டும் கண்டும் இருக்கலாம். ஊன்றுகோல் அசையாமல் தெரிவதனால் நிற்பது வேறு ஆளாக இருக்க வேண்டும்.''

தோழி சொல்வது நியாயம்தான் என்று சுரமஞ்சரிக்கும் தோன்றியது. அவள் தந்தையால் இவ்வளவு நேரமாகக் கால் மாற்றி ஊன்றிக் கொள்ளாமலோ, அசையாமலோ நிற்க முடியாது. அந்தப் பயங்கரமான விநாடிகளில் தன்னைவிட வசந்தமாலை சுய உணர்வோடு சிந்தித்திருக்கிறாள் என்பதை அவள் கூறிய நுணுக்கமான செய்தியிலிருந்து புரிந்து கொண்டாள் சுரமஞ்சரி. அங்கே தன் எதிரே இருளில் நின்று கொண்டிருப்பவர் தன்னுடைய தந்தை இல்லை என்ற அநுமானம் பெரும்பாலும் உறுதியானவுடன் அவளுக்குச் சற்றே தைரியம் வந்தது. உமிழ்நீரைக் கூட்டி விழுங்கி நாவை ஈரமாக்கிக் கொண்டு, ''யார் அங்கே நிற்பது?'' என்று இரைந்து கேட்டாள். அவள் கேட்ட சொற்கள் அந்த மாடத்தின் சுவர்களிலே எதிரொலித்து விட்டு அவளிடமே திரும்பி வந்தன. சிவப்பு இரத்தினங்கள் மின்னிய திசையிலிருந்து அந்த இரத்தினங்களின் செவ்வொளி மட்டும்தான் பளீரென்று பாய்ச்சியது போலப் பாய்ந்து வந்ததே தவிர, அவள் கேட்ட கேள்விக்குப் பதில் வரவில்லை. எதிரொலிதான் இன்னும் சுழன்று மங்கிக் கொண்டிருந்தது. 'யார் அது?' என்று இரண்டாவது கேள்வியாக வசந்தமாலை சினத்தோடு கேட்டாள். அதற்கும் எதிரொலிதான் விளைவாயிற்றே அன்றி மறுமொழி வரவில்லை. எலும்புக் குருத்துக்களில் கூடச் சுட ஈயத்தைக் காய்ச்சி ஊற்றினாற் போல இருவருடைய கைகால்களும் உதறலெடுத்து நடுங்கின. இந்திரவிழாவின் கலகலப்பில் திட்டமிட்டு இப்படி ஒரு பயங்கர நாடகம் நடத்த வேண்டும் என யார் முன் வந்திருக்க முடியும் என்று மனத்தைக் குழப்பிக் கொண்டார்கள்

நல்லிச்சேரி வரசித்தி விநாயகர் ஆலயத் திருப்பணி


நந்திதேவர் சிவபெருமானிடம் பஞ்சாக்ஷர உபதேசம் பெற்றதால், நந்திமங்கை என்ற சிறப்புப்பெயர் பெற்ற தலமாகும் தஞ்சை ஜில்லாவிலுள்ள நல்லிச்சேரி என்னும் இவ்வூர். இவ்வூர் வரசித்தி விநாயகர் ஆலயம் பழுதுபட்டுள்ளது. கோபுரத்தின் ஸ்தூபியும் சமீபத்தில் திருட்டுப் போய் விட்டது. இவ்வூர்வாசிகள் கோயிலைப் பழுது பார்த்து ஸ்ரீ வரசித்தி விநாயகருக்கு அஷ்டபந்தன கும்பாபிஷேகம் செய்ய முயற்சி எடுத்துக் கொண்டுள்ளார்கள். இக் கைங்கரியத்தில் பங்குபெற விரும்பும் நேயர்கள் **ஸ்ரீ வி. சுந்தரேசய்யர், ரஸாயனப் பேராசிரியர், மதுரைக் கல்லூரி, மதுரை** என்ற விலாசத்துக்குத் தங்களால் இயன்ற பொருளுதவியை அனுப்பி ஆனைமுகத்தானின் அருளுக்குப் பாத்திரர்களாகலாம்.

அவர்கள். நாடகம் என்று நினைத்தவுடனே நகைவேழம்பருடைய ஞாபகம் வந்தது கரமஞ்சரிக்கு. அவர்தானே இந்த மாளிகைக்கு வந்து தந்தையாருடன் பழகுவதற்கு முன் மேடைகளிலும், வந்து பழகிய பின் வாழ்க்கையிலும் அற்புதமாக நடித்துக் கொண்டு வருகிறவர். ஒருவேளை அவரே தன் தந்தையாருடைய ஊன்றுகோலை எடுத்துக் கொண்டு வந்து இருளில் நின்றபடி தங்களைப் பயமுறுத்துகிறாரோ என்றும் கரமஞ்சரிக்கு ஒரு சந்தேகம் உண்டாயிற்று. ஆனாலும் இப்படி நள்ளிரவில் பெண்கள் வாழும் பகுதியில் வந்து நிற்கிற அளவு நகைவேழம்பரும் துணிய மாட்டார் என்ற எண்ணம் பலமாக எழுந்து முன்னைய சந்தேகத்தை அடித்து விட்டது.

'ஒருவேளை வானவல்லி தந்தையாருடைய ஊன்றுகோலை எடுத்துக் கொண்டு வந்து விளையாட்டுக்காகத் தங்களைப் பயமுறுத்துகிறாளோ' என்று இறுதியாக நினைத்தாள் கரமஞ்சரி. கையிலுள்ள வளையல்கள் ஒலிக்காமல் இவ்வளவு நேரம் ஊன்றுகோலைப் பற்றிக் கொண்டிருக்க அவளாலும் முடியாதென்று தோன்றவே இயல்புக்கு மிகுதியான தைரியத்தை வற்புறுத்தி ஏற்படுத்திக் கொண்டவளாக அந்த இரத்தினங்களின் ஒளியைக் குறி வைத்து நடந்தாள். பயத்தினாலும், செயற்கையான தைரியத்தினாலும் அந்த ஊன்றுகோலை வைத்திருக்கும் கைகள் அதை இறுக்கிப் பற்றிக் கொண்டிருப்பதாகப் பாவித்துக்கொண்டு அதை இழுத்து வேகமாகப் பறித்தாள். ஒருவிதமான பிடிப்பும் இல்லாமல் செலவழித்த பலத்தை விடக் குறைவான வலிமையில் இலகுவாகவே அந்த ஊன்றுகோல் அவள் கைக்கு வந்துவிடவே கீழே இடறி விழுந்து விட இருந்தாள் அவள். நல்லவேளையாகப் பின்னால் வந்து நின்று கொண்டிருந்த வசந்தமாலை கரமஞ்சரியை அப்படி விழுந்து விடாமல் தாங்கிக்கொண்டாள். எதிராளி தனக்கு மறுதலையாக இறுக்கிப் பிடித்திருப்பதாக நினைத்து வலிய இழுத்த போது எந்த எதிராளியும் இன்றிப் பூக்கொய்வது போல ஊன்றுகோல் கைக்கு வந்து விட்டதனால் அதற்காக அவள் செலவழித்த அதிக வலிமை அவளையே பின்னால் தள்ளிவிட இருந்தது.

''இந்த ஊன்றுகோலை யாருமே பிடித்துக் கொண்டிருக்கவில்லையடீ!''—என்று கரமஞ்சரி வியந்து கூவிய அதே சமயத்தில் பெருமாளிகையின் முன்புறம் வாயிலருகே யாரோ யாரையோ பளீரென்று அறைகிற ஓசை கேட்டது.

மாடத்தின் முன் பகுதியிலிருந்து பார்த்தால் கீழே யார் யாரை அறைந்தனரென்று தெரியுமாதலால் கரமஞ்சரி, தன் கையிலிருந்த ஊன்றுகோலுடனும் தோழியுடனும் மேல் மாடத்திலிருந்தே அதைக் காண்பதற்காக முன் பக்கம் விரைந்தாள். விரைந்து போய்ப் பார்த்தவள் பெரிதும் வியப்பு அடைந்தாள்.



நள்ளிரவுக்கு மேலாகியும் அந்த அமைதியான நேரத்தில் பெருமாளிகையின் முன்புறத்தில் தன் தந்தையும், நகைவேழம்பரும் தனியாக நின்று கொண்டிருப்பதை அப்போது அவள் பார்த்தாள். இருவரில் யார் மேல் யாருக்குக் கோபம் என்று புரிந்து கொள்ள முடியவில்லை. யார் யாரை அறைந்தார்கள் என்றும் அநுமானம் செய்து கொள்ள முடியவில்லை. ஆனால் இருவரும் நின்ற நிலை நிற்கும் நேரம் ஆகியவை உறவுக்குரியதாகவும் படவில்லை. நாடகத்தில் நடிப்பவர்கள் ஒப்பனையைக் கலைத்ததும் நடித்த போது இருந்த உறவுகள் மாறி விடுகிறாற்போல் ஒரு விநாடிக்குப் பின் யாரால் யார் அப்படிப் பேயறை அறையப்பட்டார்கள் என்பதை இப்போது இருவர் முகங்களிலுமுள்ள உணர்வுகளைக் கொண்டு உய்த்துணர்வதற்கு இயலாமல் தவித்தாள் கரமஞ்சரி. வெறுப்பும் ஏளனமுமாக, அவள் தன் தோழியிடம் கூறலானாள்:—

''தோழி! இவ்வளவு பெரிய பூம்புகார் நகரத்தில் எத்தனை எத்தனையோ நாடக அரங்குகள் இருக்கின்றனவே! அவற்றில் எதிலாவது இத்தனை அற்புதமாக நடிக்கிற திறமையை நீ பார்த்திருக்க முடியுமா? ஒரு விநாடி கோபம், மற்றொரு விநாடி நட்பு, ஒரு விநாடி குரோதம்,

மற்றொரு விநாடி உறவு, என்று விநாடி நேரத்துக்குள் உணர்ச்சிகளை மாற்றிக் கொள்ளத் தொழிலில் பழக்கப்பட்ட வேழம்பர் மரபைச் சேர்ந்த நடிகர்களால் கூட முடியாதே! இங்கேயோ என் தந்தையும் நகைவேழம்பரும் ஒரே ஒரு விநாடிக்குள்ளே நூறாயிரம் உணர்ச்சிகளில் மாறி மாறித் தோய்கிறார்கள், மாறி மாறி நடிக்கிறார்கள், வாழ்கிறார்கள். செல்வத்துக்கு அடிமைப்பட்டுக் கிடக்கிறவர்களுக்கும், இரகசியங்களுக்கு அடிமைப்பட்டுக் கிடக்கிறவர்களுக்கும் தங்கள் வாழ்க்கையே ஒரு நாடகம்தான் போல் இருக்கிறதடி!'' என்று கூறிப் பெருமூச்சு விட்டாள் சுரமஞ்சரி.


23 - நல்லவர் பெற்ற நாணம்


பின்னால் துரத்திக் கொண்டு வருகிறவருடைய வலிமையை எண்ணித் தன் உயிருக்குப் பயந்து ஓடுகிற ஓட்டத்துக்கு இணை சொல்ல வேண்டுமானால் இந்த உலகத்தில் அப்படி இணை சொல்வதற்கு எதுவும் உபமானமாகக் கிடைப்பது மிகவும் அருமைதான். உயிரைப் பணயமாக வைத்து விளையாடுகிற எந்த விளையாட்டிலும் அதைவிட அதிக மதிப்புள்ளதாகப் பணயம் வைப்பதற்கு வேறு உயர்ந்த பொருள் எதுவும் இருக்க முடியாதென்பது தேற்றமான உண்மை. முரட்டுக் காபாலிகையான பைரவியின்



உயிர் அப்போது அவளுடைய குதிகால்களில் மட்டும் தான் இருந்தது. கால்கள் ஓடுவதற்குப் பயன்படுகிறபோது அந்த ஓட்டத்திற்குத் தூண்டுதலாக இருக்கிற உயிர்த் துடிப்பு மெய்யானால் அப்போது பைரவியின் உயிர் உடம்பிலிருந்து கீழே நழுவி விழுவது போல் சிறிது சிறிதாக இறங்கிக் குதிகால்களுக்குத் தாழ்ந்து அங்கு மட்டுமே பயன்பட்டு அவளை வாயு வேகத்தில் ஓடவைத்துக் கொண்டிருந்தது. இப்படி உவமை சொல்வதுகூடப் பொருந்துமோ, பொருந்தாதோ; அவள் ஓடிய வேகத்துக்கு அதுவே இணை.

அப்போது அவளைத் துரத்திக்கொண்டிருந்த நீலநாக மறவருக்கோ உயிர்க்குணமே வீரம்தான். அந்த உயிர்க் குணத்தின் முழுத் தன்மையும் ஓட்டம் என்ற ஒரே இயக்கமாகப் பொங்கினாற்போலப் பாய்ந்து பாய்ந்து துரத்திக்கொண்டிருந்தார் அவர். அந்த அரக்கியிடமிருந்து தான் தெரிந்துகொள்வதற்கு விரும்பும் இரகசியங்களைத் தெரிந்து கொள்வதற்கு முன்னால் ஓடி ஓடிக் களைத்து அவளே மாண்டு போய் விடுவாளோ என்று சந்தேகப்படத் தொடங்கி விட்டார் நீலநாக மறவர். அவர் சில இரகசியங்களைக் கேட்டு அறிந்து கொள்வதற்காகத்தான் அவளைத் துரத்தினார். அவளோ தன் உயிரைத் தேடியே தன்னை


ஸ்ரீ
ஸ்ரீநிவாஸ்
வாயில்
லான்
பிரிண்டட்
பாப்ளின்
மனதை வசீகரப்படுத்தும்
ஆடைகள்



பம்பாய் அருகிலுள்ள விக்ரோலி தமிழ்ச் சங்கத்தின் முதலாண்டு விழா அக்டோபர் 8-ந் தேதி மாலை கோத்ரெஜ் நகரில் விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. விழாவுக்குக் கோத்ரெஜ் சோப்புக் கம்பெனியின் நிர்வாக அதிகாரி திரு கே. ஆர். கோகுலம் தலைமை வகித்தார். பிரபல வடநாட்டு நடனக் கலைஞர் திரு கோபிகிருஷ்ணாவும் விழாவில் விருந்தினராகக் கலந்துகொண்டார். திரு கோபிகிருஷ்ணாவின் சகோதரர் திரு மாதவகிருஷ்ணா, குமாரி மோகினி ஆகியோர் கதக் நடனங்கள் ஆடி மகிழ்வித்தனர். திரு என். சுப்பிரமணியம் விகடக் கச்சேரி செய்தார். படத்தில் தலைமையுரை நிகழ்த்தும் திரு கோகுலம், திரு கோபிகிருஷ்ணா, சங்கத் துணைத் தலைவர் திரு எஸ்.ரங்கன் ஆகியோரையும் விழாவில் கலந்து கொண்டவர்களின் ஒரு பகுதியையும் காணலாம்.

அவர் துரத்துவதாக எண்ணிக் கொண்டு வேகமாக ஓடினாள்.

ஓடி ஓடி இறுதியில், பயந்து ஓடுகிறவளும் பயமுறுத்தி ஓட்டுகிறவரும் சக்கரவாளத்து வனம் முழுவதையும் கடந்து அதற்கப்பால் எதைக் கடந்து போகிறோம் என்ற உணர்வோ நினைப்போ இல்லாத சில இடங்களையும் கடந்து கடைசியில் கடலோரமாக வந்து சேர்ந்திருந்தார்கள். துரத்தியவர், துரத்தப்பட்டவள், இருவருக்குமே மணற்பரப்புக்கு வந்ததும் ஓட்டத்தில் வேகம், குன்றியது.

சுங்கப் பொருள் தண்டும் காவலர்களை ஏமாற்றி விட்டுக் கள்ளத்தனமாகப் பூம்புகாருக்குள் நுழைய முயலும் பிறநாட்டுப் பாய்மரக் கப்பல்களையும், வங்கம் எனப்படும் சிறு கப்பல்களையும் கண்காணித்துச் சிறைப்பிடிப்பதற்காக ஆள் நடமாட்டமற்ற அந்தக் கடற்பகுதி ஓரமாகக் காவலும், உயரமான கலங்கரை விளக்கமும் அமைந்திருந்தது. கலங்கரை விளக்கின் உச்சியிலிருந்த மாடத்தில் வேலேந்திய கையினனாக, நின்று கொண்டிருந்த காவலன் கடற்பரப்பைக் கூர்ந்து நோக்கியவாறிருந்தான். தவம் செய்கிறவனுடைய நோக்கத்தைப் போல அவனுடைய முயற்சி ஒரே திசையில் சென்று கொண்டிருந்தது. தீ பெரிதாய் எரிவதற்காகக் கலங்கரை விளக்கத்தின் உச்சியில் நெருப்பு மூட்டப் பெற்றிருக்கும் காய்ந்த கட்டைகள் படர்ந்து கொழுந்து விட்டுக் கொண்டிருந்தன.

தனக்கு முன்னால் ஓடிக் கொண்டிருந்த பைரவி கலங்கரைவிளக்கத்துப் படிகளில் தாவி ஏறுவதைப் பார்த்துத் திகைத்து நின்றார் நீலநாகமறவர். அப்படியே அவள் கழுத்தைக் குறி வைத்து ஈட்டியை வீசி அவளால் தீபத் தம்பத்தின் படிகளில் ஏறுவதற்கு முடியாமல் செய்து விடலாமா என்று தோன்றியது அவருக்கு. நினைப்பதற்கும், செயல்படுவதற்கும், நடுவே கண நேரமும் மந்தப்படுதலை அறியாத அவர் கைகள் ஈட்டியையும் ஓங்கி விட்டன. ஓங்கிய கைகள் செயல்படுவதற்கு முன்பாகவே, பின் விளைவைத் தீர்மானம் செய்த புத்தியின் நிதானம் அப்போது அவருக்குப் பயன் பட்டது. ஈட்டி பாய்ந்தவுடன் பைரவி அலறுவாள். அந்த அலறலைக் கேட்டுக் கலங்கரை விளக்கத்தின் உச்சி மாடத்தில் நிற்கிற காவலனின் கவனம் நிச்சயமாகத் தன் பக்கம் திரும்பும். அப்படி அவன் திரும்பினால் தான் குற்றவாளியாக மாறி அந்தக் காவலனுக்கு முன்னால் நிற்க நேரும். அந்தக் காவலன் தன்னுடைய படைக்கலச்சாலையில் பயிற்சி பெற்று வெளியேறிய வீரவேளிர்களில் ஒருவனாகத்தான் இருக்க முடியும் என்பதில் சந்தேகமற்ற திட நம்பிக்கையும் அவருக்கு இருந்தது. தம்மால் கற்

பிக்கப்பட்ட மாணவனுக்கு முன் தாமே குற்றவாளியாகி நிற்கும் நிலையைப்போல இழிவானது வேறு எதுவும் இருக்க முடியாது. பேராண்மையாளராகிய, நீலநாகமறவர் அப்போது தாம் இருந்த நிலையை இந்தக் கோணத்தில் திருப்பி எண்ணிப் பார்த்த கணத்திலேயே வெட்க மடைந்தார். வல்லவராகிய அந்த நல்லவருக்கும் சிறிது நாணம் விளைந்தது. இலக்குத் தவறாமல் ஈட்டியை எறிந்து படியேறி ஓடும் பைரவியை அவர் வீழ்த்தியபின் கலங்கரை விளக்கத்தின் உச்சியில் நிற்கும் காவலன் ஓடி வந்து அவரைப் பிடித்துக் கொண்டாலும், அவர் இன்னாரெனக் கண்டு தெரிந்து கொண்டதும் அவருடைய பாதங்களில் வீழ்ந்து வணங்கி அவரிடம் மன்னிப்பும் பெற்றுக் கொண்டு பயபக்தியோடு கைகட்டி வாய் பொத்தித் தலை தாழ்ந்து நிற்பானானாலும் அதைச் செய்யவும் அவனுக்கு ஒரு சந்தர்ப்பம் அளிப்பானேன் என்று தயங்கி நாணினார் அவர். ஓடி வந்த வேகத்துக்குப் பொருத்தமில்லாமல் அந்த வேகம் நடுவிலேயே தயங்கி முறிந்து நின்ற நீலநாகர் பைரவியைத் துரத்திக் கொண்டு கலங்கரை விளக்கத்துப் படிகளில் ஏறாமல் வந்த வழியே மெல்லத் திரும்பி நடந்தார். ஈட்டியால் எறியாமல் அவளைப் பின்தொடர்ந்து படியேறிப் பிடித்து விடலாம் என்றாலோ, அவள் அவருக்கு அகப்படாமல் கலங்கரை விளக்கத்துப் படிகளிலிருந்தே கடலில் குதித்து விடவும் கூடும். அவள் கடலில் குதித்தாலும் அந்த ஓசையால் காவலனுடைய கவனம் கவரப்பட்டு அவன் கீழே நிற்கிற அவரைப் பார்க்கும்படி தான் நேரும். தன்னுடைய படைக்கலச் சாலையில் தான் ஒழுக்கமும், வீரமும் கற்பித்து உருவாக்கிய இளைஞன் ஒருவனே தன்னை எதிரே நிறுத்திக் கொண்டு, 'நம் மதிப்பிற்குரிய ஆசிரியர்பிரான் இந்த அகாலத்தில் இப்படி யாரோ ஒரு பெண்ணைத் துரத்திக் கொண்டு இங்கே வந்தது ஏன்?' என்று தன்னைப் பற்றி அவன் நினைப்பதும் மானக் குறைவு என்று அந்த ஞான வீரருக்கு அப்போது தோன்றியது. அப்படி அந்த மாணவன் தன்னைப் பற்றி நினைக்க நேர்ந்து விட்டாலோ, அல்லது தன் முகத்தை அருகில் வந்து காணுமுன் வாய் திறந்து சொல்லவே நேர்ந்து விட்டாலோ, அதற்குப் பின் தான் உயிர் வாழ்வது மானமில்லை என்று எண்ணினார் அவர். 'தன் நிலையில் தாழாமை; தாழும்படி நேர்ந்து விட்டால் அப்புறம் உயிர் வாழாமை'— என்றுதான் நீலநாகர் தன் மனத்தில் மானத்தைப் பற்றி உறுதியானதொரு இலக்கணம் வகுத்துக் கொண்டிருந்தார். மானம் அழிந்து சிதறும்படியான சூழ்நிலையை அப்போது அங்கே விளையாட்டுக்காகவும் கூட உருவாக்கிப் பார்க்க விரும்பவில்லை அவர். இடமோ காவலும், கண்காணிப்பும் ஏற்படுத்திக் கொண்டு சுங்கம் தண்டுகிறவர்கள் பாதுகாக்கும் இடம்; நேரமோ நடு இரவு. தன்னால் துரத்தப்படுகிறவளோ பெண். காவலுக்கு நிற்கிறவனோ தன் மாணவன். இவை எல்லாவற்றையும் நிரச் சிந்தித்துப் பார்த்த பின் பைரவியைத் துன்புறுத்தி இரகசியங்களைத் தெரிந்து கொள்ள முயல்வதைவிட அப்போது, தன்மானத்தைக் காத்துக் கொண்டு திரும்புவது புத்திசாலித்தனமான காரியமாகத் தோன்றியது அவருக்கு. மறைவிற் போய் நின்று, பைரவி கலங்கரை விளக்கப்படிகளில் உச்சிவரை ஏறுவதைப் பார்த்துக் கொண்டே அமைதியாகப் படைக்கலச் சாலைக்குத் திரும்பி விட்டார் அவர். திட்டமும் ஒழுங்கும் நிறைந்த கட்டுப்பாடான வாழ்க்கைக்கு இப்படிப்பட்ட சந்தர்ப்பங்களின் குறுக்கீடு நிலையான கெடுதல் என்பதை நீலநாகமறவர் நன்றாக உணர்ந்தார். நல்ல பசி நேரத்தில் கிடைக்கிற சத்துள்ள உணவைப் போல இந்த உணர்வு ஏற்ற சமயத்திலே தம்முடைய மனத்துக்குக் கிடைத்ததற்காகத் தெய்வத்துக்கு அவர் நன்றியும் கூறினார். (தொடரும்)

என்ன சொல்வது ?





Arvind
QUALITY FABRICS
வெள்ளை பாப்ளின்
கோல்ட் டிரிங்க்
கலர் பாப்ளின்
புட்டா
SANFORIZED
REGISTERED TRADE MARK
அரவிந்த் மில்ஸ் லிட்.
ஆமதாபாத்-2
REGISTERED USER OF THE TRADE MARK 'SANFORIZED'

உங்களுடைய

அழகு

மங்குகிறதா?



உங்களின் விலை மதிக்கமுடியாத அழகை எவ்விதத்திலும் காப்பாற்ற நீங்கள் விரும்புகிறீர்கள். ஆனால் உங்கள் கூந்தல் நரைக்கத் தொடங்கியவுடன் அழகும் குன்றிவிடுகிறது. அழகை இழந்தபின் எல்லாவற்றையும் இழந்தது போல்தான். இல்லை, இந்நிலை உங்களுக்கு ஏற்படக்கூடாது. ...உங்கள் கூந்தல் தன் செழுமையை ஒருக்காலும் இழக்கக்கூடாது. அதுவும், சிறந்த நறுமணம் கமழும் கூந்தலைக் கருமையாக்கும் தைலமான "லோமா" எளிதில் கிடைக்கும்போது "லோமா" சாதாரணமான கூந்தலைக் கருமையாக்கும் தைலமல்ல. அது கூந்தல் அலங்காரத்திற்கு சிறந்த தைலமாகும். லோமாவில் சேர்க்கப்பட்டிருக்கும், வளத்துடன் போஷாக்கு அளிக்கும் பொருள்கள், உங்கள் கூந்தலை மிருதுவாகவும், அழகாகவும், அடர்த்தியாகவும், வளரச்செய்கிறது. லோமாவை உபயோகிப்பதால் உங்கள் அழகு ஒருபோதும் மங்காது... உண்மையிலேயே அழகு வளருகிறது.



லோமா

அதன் தரத்திற்காக
உலகெங்கிலும்
விரும்பப்படுகிறது.

பூரண ஏஜெண்டும் ஏற்றுமதியாளர்களும்:
எம். எம். கம்பாத்வாலா
அகமதாபாத்-1 (இந்தியா)

ஏஜெண்டுகள்:
ஸி. நரோத்தம் & கம்பெனி
பம்பாய்—2.


HM-TAM

சென்னை ஏஜண்டுகள்: ஜே. பாலையா & கம்பெனி, 260, எஸ்பிளனேட், மதராஸ்-1
இலங்கை ஏஜண்டுகள்: சிருன் கதீர் & கோ., 41, 43, இரண்டாம் குறுக்குத் தெரு, கொழும்பு-11



மறையும் பணம்

மோனிகா



"கங்கா ஸ்நானம் ஆயிற்று? புத்தாடை அணிந்து குதூகலமாக இருக்கும் உங்களுக்கு இப்போது ஒரு வித்தை செய்து காட்டப் போகிறேன். இதோ இந்த மேஜைமீதுள்ள அட்டையில் (A) என்னென்ன பொருள்கள் இருக்கின்றன, பார்த்தீர்களா? ஒரு புது நயாபைசா நாணயம் (1), ஒரு கண்ணாடி தம்ளர் (2), கோமாளிக் குல்லாய் போல ஒரு புனலைக் கவிழ்த்தது போன்று ஒரு மூடி (3). இப்போது இந்த நயா பைசாவை உங்கள் கண் முன்னால் மறைந்து போகும்படி செய்கிறேன், பாருங்கள். ஞூ. மந்திரக் காளி! ஜக்கம்மா, பொம்மக்கா, மலையாள பகவதி!" என்று கண்களை மூடி மந்திரங்களை ஜபித்துத் தன் கையிலுள்ள மந்திரக்கோலால் மூன்று முறை அந்தப் பொருள்களைச் சுற்றி வட்டம் விரித்தான் கிட்டு. பிறகு கோமாளிக் குல்லாய் மூடியைக் கண்ணாடித் தம்ளரின் மீது கவிழ்த்து மூடி, அதை அப்படியே எடுத்து நயா பைசா நாணயத்தின் மீது வைத்தான். பிறகு மறுபடியும் மந்திர உச்சாடனம் செய்து கண்ணாடித் தம்ளர் மீதிருந்த கோமாளி மூடியை மட்டும் எடுத்தான். என்ன ஆச்சரியம்! தம்ளரின் அடியில் நயா பைசா நாணயத்தைக் காண வில்லை. மாயமாக மறைந்து போயிருந்தது!

வியப்பினால் எல்லாரும் ஸ்தம்பித்து உட்கார்ந்திருக்கும்போதே கிட்டு, "மறைந்த நயாபைசாவை மறுபடியும் வரவழைக்கட்டுமா?" என்று கேட்டான்.

"எங்கே வரவழைத்துக் காட்டு, பார்க்கலாம்!" என்றார்கள் எல்லாரும் தாங்க முடியாத வியப்புடன்.

கிட்டு மந்திரங்களைச் சொல்லிக் கோமாளிக் குல்லாய் மூடியைக் கண்ணாடித் தம்ளர் மீது கவிழ்த்து, தம்ளரோடு அப்படியே அலாக்காகத் தூக்கிப் பக்கத்தில் வைத்துக் கோமாளிக் குல்லாய் மூடியையும் தனியாக எடுத்து அதருகே வைத்தான். இப்போது நயா பைசா நாணயம் அது இருந்த இடத்தில் திடீரென்று எங்கிருந்தோ வந்து உட்கார்ந்துகொண்டிருந்தது. கிட்டுவின் நண்பர்கள் கைதட்டி ஆரவாரித்துத் தங்கள் வியப்பை வெளிப்படுத்தினார்கள். கிட்டு பெரிய மந்திரவாதியைப் போல் மந்திரக்கோலை உயர்த்தி இடுப்பை வளைத்து 'ஸ்டைலா'க எல்லோருக்கும் வணங்கினான்.

கிட்டு நயா பைசாவை மறைய வைத்தது மந்திரத்தினால் அல்ல; மதி நுட்பத்தினால் தான். அந்த ரகசியத்தை உங்களுக்கு மட்டும் சொல்லித் தருகிறேன். நீங்களும் கிட்டுவைப் போல் உங்கள் நண்பர்களைப் பிரமிக்க வைக்கலாம்.

ரகசியம்: மேஜை மீதுள்ள அட்டையின் மீது வெண்மையான காகிதத்தைச் சுருக்கமில்லாமல் ஒட்டிக் கொள்ள வேண்டும். அதே போன்ற வெள்ளைக் காகிதத்தைக் கண்ணாடித் தம்ளர் வாயின் அளவுக்கு வெட்டி வாயை மூடிக் காகிதம் இருப்பது தெரியாதபடி ஒட்டிக்கொள்ள வேண்டும். தம்ளரின் வாயில் காகிதம் அளவாகப் பொருந்த ஒட்ட வேண்டுமானால் தம்ளரின் வாய்ப் பக்கத்தைத் தரையில் தேய்த்தால் அதன் வளைந்த உதடு தட்டையாகும். காகிதமும் நன்றாகப் படிந்து ஒட்டிக் கொள்ளும். காகிதம் காய்ந்த பிறகு தம்ளர் வாயின் வெளிப்புறத்தில் ஏதாவது காகிதம் மிகுதியாகத் தெரிந்தால் கத்திரிக்கோலால் ஒட்ட வெட்டிவிட வேண்டும். இதுதான் இரகசியம். கோமாளிக் குல்லாய் மூடியைத் தம்ளர் மீது கவிழ்த்து, இரண்டையும் தூக்கி நயாபைசா மீது வைத்ததும் தம்ளர் வாயை மூடி ஒட்டப்பட்டுள்ள காகிதம் பைசாவை மறைத்துக் கொள்ளும். பைசா எங்கும் போகவில்லை. அட்டை மீது ஒட்டப்பட்ட காகிதத்துக்கும் தம்ளர் வாயை மூடி ஒட்டப்பட்டுள்ள காகிதத்துக்கும் இடையில் தான் அது இருக்கும். அட்டைக் காகிதமும் தம்ளர் வாயை மூடியுள்ள காகிதமும் ஒரே மாதிரியாக இருப்பதால் வித்தியாசம் தெரியாமல் பைசா மறைந்தது போலத் தோன்றும். தனியாகத் தம்ளரை மட்டும் தூக்கினால் அதனடியில் பைசா இருப்பதையும் தம்ளரின் வாய் காகிதத்தால் ஒட்டி மூடப்பட்டிருப்பதையும் காணலாம். ஆனால் மந்திரவாதியாகப் பாராட்டுப் பெற வேண்டுமானால் தனியாகத் தம்ளரைத் தூக்கவே கூடாது. கோமாளிக் குல்லாய் மூடியைக் கவிழ்த்துத்தான் தம்ளரைத் தூக்க வேண்டும். இதுதான் இரகசியம்.

நீங்கள் செய்து பாருங்கள். லாகவமாகச் செய்யும் முறையில்தான் இதன் சிறப்பு இருக்கிறது.



வட்டமேஜை

சுரக்கிப் பிழியும் திட்டம்

நாட்டின் அபிவிருத்தி என்ற காரணம் காட்டி அவனியில் உள்ள நாடுகளிடம் பல்லாயிரம் கோடி கடன் பெற்று வந்து நாட்டில் கோலாகல விழா நடத்தி வருகின்றனர், நாட்டைப் பரிபாலிப்பவர்கள். போதாக் குறைக்கு இவர்களது விழாக் கோலத்தின் விளம்பரத் திட்டத்துக்கு இந்நாட்டில் அவல நிலையில் வாழும் பாமர மக்களையும் சும்மாவிடவில்லை. இதுவரை எத்தனையோ வரிகளை அடுக்கிக் கசக்கிப் பிழிந்து விட்டனர். இந்நிலையில் காய்ந்த மக்கள் மீது மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் என்று பெயர் பெற்றுள்ள தேர்தல் விளம்பரத் திட்டத்துக்கு ராஜ்ய காங்கிரஸ் கனவான்களின் ஆட்சியில் முப்பத்தைந்து கோடி ரூபாய் வரி விதிக்க வழி வகைகள் வகுத்து வருகிறார்கள். நம்மை இனி வாழ விடமாட்டார்கள் போல் தெரிகிறது. மக்களை எலும்புக் கூடாகச் செய்யும் வரை ஓய மாட்டார்கள். இவர்கள் வகுக்கும் திட்டங்களில் இவர்களும் இவர்களைச் சேர்ந்தவர்களும் பெருவாழ்வு வாழலாமே ஒழிய நாட்டு மக்கள் வாழ்வதற்காகத் திட்டம் செய்துள்ளதாகத் தெரியவில்லை.

வாணியம்பாடி
24—10—61

வி. என். தத்தப்பன்

கல்வி இலாகா கவனிக்குமா?

அண்மையச் சிறிது காலமாக நமது சென்னை அரசாங்கத்தில் ஆசிரியர்களின் நிலை, நிலையற்றதாகிக் கொண்டு வருகிறது. விலைவாசிகளின் உயர்வை அரசாங்கத்தால் கட்டுப்படுத்த இயலவில்லை என்று அரசாளும் மந்திரிகளே கூறி வரும் இந்நாளில் ஏழை ஆசிரியர்கள் பெற்று வரும் ஊதியத்தைக் கட்டுப்படுத்த அரசாங்கம் முன் வந்திருப்பது நூதனம் அல்லவா? அதிலும் சம்பளக் கமிஷன் அறிக்கையின்படி யாவரும் ஒரு சிறிதாவது பயன் அடைவர் என்று கூறிவிட்டு, குறிப்பிட்ட பிரிவைச் சேர்ந்த ஆசிரியர்களுக்குச் சம்பளத்தைக் குறைத்தால் நூதனம் அல்லவா?

சென்னை அரசினர் 1958-ம் வருடம் ஆசிரியர்களின் சம்பள விகிதத்தை உயர்த்திய பொழுது ஒரு சர்ச்சை எழுந்தது. செகண்டரி கிரேடுகளுக்கு உரிய சம்பள விகிதம் ஆரம்பப் பாடசாலைகளில் ஆரம்ப வகுப்பில் வேலை பார்த்து வரும் செகண்டரி கிரேடு பயிற்சி பெற்ற ஆசிரியர்களுக்கு உண்டா என்பதே அந்தச் சர்ச்சை. நமது காருண்ய சர்க்கார் அந்தச் சமயம் ஆரம்பப் பள்ளிகளில் வேலை பார்த்து வந்த செகண்டரி கிரேடு ஆசிரியர்களுக்கும் இதர செகண்டரி கிரேடு ஆசிரியர்களைப் போலவே சம்பளமும், சலுகைகளும் வழங்கியது.

இந்நிலையில் சென்னை அரசாங்கம் தனது 25-9-61 தேதியிட்ட 2318 அறிக்கை மூலம் இந்தச் சலுகையை ரத்து செய்து விட்டது. இதன் பயனாகப் பல செகண்டரி கிரேடு ஆசிரியர்கள் குறைந்த தொகையாகிய ஹையர்கிரேடு சம்பளமே வாங்கும்படியான நிலை ஏற்பட்டுள்ளது. சர்க்காராலேயே வித்தியாசப்படுத்தப்பட்ட இரு கிரேடு ஆசிரியர்களுக்கும் ஒரே சம்பள விகிதத்தைக் கொடுப்பது என்பது நியாயம் மிக்க எவருக்கும் நேர்மையாகப் படாது. ஆகவே, இக் குறையைப் போக்கி, எல்லா செகண்டரி கிரேடு ஆசிரியர்களும் ஒரே சம்பளத்தைப் பெறும்படி அரசாங்கம் செய்யுமா?

20—10—61

பாதிக்கப்பட்ட ஓர் ஆசிரியர்

> இன்று இந்தியாவிலுள்ள ஆளும் கட்சி வர்த்தகம், உற்பத்தித் தொழில் இவற்றில் ஈடுபட்டுள்ள எவரையும் நினைத்த மாத்திரத்தில் அழித்து விடக் கூடிய பலம் பெற்றிருக்கிறது. இத்தகைய அதிகாரம் அமெரிக்காவிலோ, இங்கிலாந்திலோ உள்ள வல்லரசுகளுக்குக் கிடையாது. சோஷலிசக் கொள்கையானது பாமரமக்கள் மனத்தில் என்றோ ஒரு நாள் சுபிட்சம் உண்டாகப் போகிறது என்ற மயக்கத்தை ஊட்டி ஏமாற்றி வருகிறது. அரசாங்கம் நடத்தும் பாரபட்சங்களையும், கொடுமைகளையும் மூடி மறைக்கும் போர்வையாகவும் இக்கொள்கை இருக்கிறது.
>
> — ராஜாஜி

மீண்டும் பி. ஸி. ஜி.

சேலம் ஜில்லாவில் 1957-58-ல் பி.ஸி.ஜி. ஊசி போட்ட பொழுது விளைந்த தீங்குகளைக் கண்டு வருந்தியவர்கள் மூன்று வருடங்களாக மக்களுக்கு பி. ஸி. ஜி. குத்தாமலிருப்பது கண்டு சந்தோஷப் பட்டோம். ஆனால், உதகையில் நடைபெற்ற 14-வது உலக சுகாதார மகாநாட்டில் கவர்னர் ஸ்ரீ மேதி அவர்கள் பி. ஸி. ஜி. போடும் திட்டத்தை அமுலாக்குவதைப் பற்றிப் பேசியதாக 21-9-61-ந் தேதி 'தினமணி'யிலும், நாகபுரி ஆஸ்பத்திரியில் அப்போது பிறந்த 408 குழந்தைகளுக்கு பி. ஸி. ஜி. குத்தியதாக 8-10-61 'தினமணி'யிலும் செய்தி வெளியாகியிருப்பது நம்மைத் திடுக்கிட வைக்கிறது.

டாக்டர்கள் ஆதாரங்களுடனும் பல புள்ளி விவரங்களுடனும் பி. ஸி. ஜி.யின் தீமைகளை எடுத்துரைக்கப்பட்ட பின்னரும், சர்க்கார் ஜனங்களைத் தீமைக்குள்ளாக்குவது வருந்தத் தக்கதாகும்.

சேலம் ஜில்லா ஓமலூர் தாலூக்காவில் இன்று (16-10-61) தோப்பூரில் பி. ஸி. ஜி. போட்டு வருகிறார்கள்.

தோப்பூர்
16-10-61

டி. வி. ராஜகோபாலன்


நவம்பர் 7
முதல்
சென்னை
வெலிங்டன்
பிராட்வே
ராக்ஸி
நூர்ஜஹான்
மற்றும்
தென்னாடெங்கும்
கனகா
பிலிம்ஸ்
பாக்கிய
லக்ஷ்மி
நாராயணன்
கம்பெனி
தயாரிப்பு
பாடல்கள்
கவிஞர்
கண்ணதாசன்
சங்கீதம்
விஸ்வநாதன்
ராமமூர்த்தி
கதை, வசனம், டைரக்ஷன்
K.V. சீனிவாசன்

வழித்துணை

தான்

தில்லித் தமிழர் நெஞ்சில் கண்டதும் தேன் மொழியும் சென்னை செல்லும் கிராண்ட் டிரங்க் எக்ஸ்பிரஸ் நான் போய் வருகிறேன் என்று விடைபெறுவது போல மும்முறை ஊதியது.

ரங்கரத்தினத்துக்கு மற்ற எந்த வண்டியின் குரலையும்விடச் சென்னை நோக்கி நிற்கும் கிராண்டு டிரங்கின் குரல் மிக இனிதாக இருப்பது போல் பட்டது. இதைக் கவனித்து அனுபவிக்காத அவசரப் பிரயாணிகள் தாம் தம் மக்கள் மழலைதான் இனிது என்று நினைப்பார்கள் என்பது அந்தப் பிரம்மசாரியின் அபிப்பிராயம். சொல்லப் போனால் கிராண்டு டிரங்க் எக்ஸ்பிரஸ் விடும் புகை கூட அழகாக இருந்தது அவனுக்கு.

என்ஜினிலிருந்து எட்டிப் பார்த்துக் கொண்டிருந்த டிரைவர் கார்டு பச்சை காட்டி விட்டதும் தன் கரி வதனத்தை உள்ளிழுத்துக் கொண்டதும் ரங்கரத்தினமும் பிளாட்பாரத்திலிருந்து வண்டிக்குள் புகுந்து கொண்டான்.

வண்டியின் பதிவுப் பட்டியலில் வண்டியில் இருந்த நான்கு முதல் வகுப்பு சயனாசனங்களும் பதிவாகியிருந்தும் இரண்டு ஆசனங்கள் காலியாக இருந்தன. ஒன்றில் வெண்ணுடை தரித்த ஒருவர் வீற்றிருந்தார்.

அவசரம் அவசரமாக வந்த ரயில்வே சிப்பந்தியின் பின்னால் அவசரம் அவசரமாக ஒரு நடு வயதினர் வந்தார். "இதுதான் உங்கள் வண்டி" என்று காட்டி விட்டு ரயில்வே சிப்பந்தி போய் விட்டார்.

"அம்மா, ரேணு, ஏறு. வண்டி நகரப் போகிறது" என்று அந்த நடு வயதினர் தம் பெண்ணின் கையைப் பற்றி வண்டியில் ஏற்றிவிட்டார்.

போர்ட்டர் ஒரு சிறு பெட்டியையும் சோத்து மூட்டையையும் உள்ளே கொண்டு வந்து வைத்து விட்டு இறங்கினான்.

வண்டி நகரத் தொடங்கியது.

"இந்தப் பெண்ணை என் நண்பர் ஒருவர் இன்று கூட அழைத்துப் போவதாக இருந்தது. ஏதோ அசந்தர்ப்பத்தால் அவர் பிரயாணம் பதினைந்து நிமிஷங்களுக்கு முன்னால் இடரென்று நின்று விட்டது. நாலு நாட்களில் சென்னையில் இவளைப் பெண் பார்க்க ஏற்பாடு ஆகியிருக்கிறது. அதனால் நண்பர் வருவார் என்று காத்திருந்தவன் ஒரு டாக்ஸியைப் பிடித்துக் கொண்டு ஓடி வந்தேன். தயவு செய்து அவளைக் கவனித்துக் கொள்ளுங்கள். சென்னையில் அவளுடைய மாமா வந்து அழைத்துப் போய் விடுவார்" என்று சொல்லியபடி வண்டியோடு நகர்ந்து ஓடிக் கொண்டே பிளாட்பாரம் முடியும் மட்டும் வந்தார்.

வந்த பெண்ணை இதுவரை சரியாகக் கவனிக்காத ரங்கரத்தினம், புலன்களை உள்ளுக்கிழுத்து ஆத்மாவைத் தம் ஆத்மாவாலேயே ஞானிகள் பார்த்துக் கொள்வது போல, தலையை உள்ளுக்கிழுத்து இலேசாக ரேணுகாவைக் கவனித்து விட்டு, திருஷ்டியை அவளை விட்டு விலக்கிக்கொண்டான்.

பெட்டி, உணவுப் பை, படுக்கை கூஜா இவைகளைப் பங்கிடாக வைத்து விட்டு ரேணுகா கையில் ஒரு கதைப் பத்திரிகையை வைத்துக்கொண்டு வெளியில் ஓடும் காட்சிகளில் சற்றுக் கவனம் செலுத்துவதும் கதையைப் படிப்பதுமாக இருந்தாள்.

ஆக்ராவைத் தாண்டியதும் வண்டியில் இருந்த மூன்றாம் ஆள் வெளியில் விற்ற பூரி உருளைக் கிழங்கை வாங்கி வயிற்றில் அடக்கி விட்டுத் துயில் போந்தார்.

ரங்கரத்தினமும், ரேணுகாவும் அவர்கள் கொண்டு வந்திருந்த சாப்பாட்டைச் சாப்பிட்டுவிட்டுத் தத்தம் கூஜாவிலிருந்த தண்ணீரைப் பருகிவிட்டுப் படுத்துக் கொண்டனர்.

போபால் ஸ்டேஷன் காலையில் வந்தது. வண்டியில் உள்ள மூவரும் ஆளுக்கு ஒரு டிரே (தட்டு) காப்பிக்கு உத்தரவிட்டனர். வெயிட்டர் அந்த வடக்கத்தியாருக்கு ஒரு தட்டு தனியாகவும், ரேணுகாவுக்கும் ரங்கரத்தினத்துக்கும் ஓர் இரட்டைத் தட்டாகவும் கொண்டு வைத்து விட்டுப் போனதை ரேணுகா பல் தேய்த்துக் கொண்டிருந்ததால் கவனிக்கவில்லை; ரங்கரத்தினம் க்ஷவரம்செய்து கொண்டிருந்ததால் கவனிக்கவில்லை. வண்டி போபாலை விட்டு நகர்ந்த பிறகுதான் இருவரும் இரட்டைத் தட்டைக் கவனித்தனர்.

ரேணுகாவுக்கு என்ன செய்வது என்று குழப்பம் என்றால் அதைப் போல ரங்கரத்தினத்துக்கு இரட்டைப் பங்கு கலக்கம். அவள் காப்பித் தட்டை அணுகவில்லை. அவனும் தீண்டவில்லை. வேகமாக ஓடும் வண்டியில் தட்டுப் பண்டங்களும் தடதடவென்று குலுங்கின. வண்டி இன்னும் இரண்டு மணி நேரம் நிற்காது. அடிக்கடி ஒருவரையொருவர் பார்த்துக் கொள்ளாமல் ரேணுகாவும் ரங்குவும் தட்டைக் கவனித்தனர். காப்பி ஆறிப் போகிறதே என்று மனத்தில் கவலை.

ரங்கரத்தினம் துடுக்காகக் காப்பியைக் கலந்து தன்னிடம் தராமல் இருந்தது ரேணுகாவுக்குப் பிடித்திருந்தது. ரேணுகா முந்திக் கொண்டு காப்பியைத் தனக்குத் தர வேண்டிய நிமித்தம் மௌனத்தை உடைக்காதது ரங்குவுக்கும் பிடித்திருந்தது.

"ஏன் அம்மா, காப்பியைக் கலந்து அவருக்கும் கொடுத்து நீயும் குடிக்கப்படாதா? ஆறிப்போய் விடுமே" என்றார் அந்த மூன்றும் மனிதர் ஹிந்தியில்.

ரேணுகா காப்பியைக் கலந்தாள். இரண்டு கோப்பைகளிலும் வார்த்தாள். ரங்கரத்தினம் ஒரு கோப்பைக் காப்பியை எடுத்துப் பருகினான். தன் ஆசனத்தில் திரும்பி வந்து உட்கார்ந்து கொண்டு. ரேணுகாவும் காப்பி, அருந்தி விட்டு ரவிக்கைக்குள் பத்திரப்படுத்தியிருந்த பர்ஸை ரங்கு கவனிக்காத போது எடுத்துத் தனக்கான சில்லறையைத் தட்டில் வைத்துவிட்டுப் பர்ஸை மறுபடியும் பதுக்கிக் கொண்டாள். ரங்கரத்தினமும் தன் சில்லறையைத் தனியாக வைத்தான்.

மத்தியான உணவு சமயத்தில் ஹிந்திக்காரர் ரேணுகா வைத்துக் கொண்டு சாப்பிட்ட புளியஞ் சாதத்தையும் ரங்கு கொண்டு வந்திருந்த இட்டிலியையும் ஆவலுடன் கவனித்தார். அவைகளின் மணம் ஹிந்திக்காரரின் நாக்கில் நீர் ஊறச் செய்தது.

''ஆப் காயேங்கே'' என்று ரேணுகாவும், ரங்குவும் ஒரே சமயத்தில் ஹிந்திக்காரரைக் கேட்டவாறு எழுந்து, அவள் ஒரு பிடி சாதத்தையும், அவன் ஓர் இட்டிலியையும் ஹிந்திக்காரரின் ரயில்வே உணவுத் தட்டில் வைத்து விட்டு வந்து அமர்ந்தனர்.


ஹிந்திக்காரர் இரண்டையும் சுவைத்து விட்டு அவைகளின் சுவையைப் பாராட்டினார். ''நீங்கள் இருவரும் ஏன் உணவை ஒருவருக்கு ஒருவர் மாற்றிக் கொள்ளக் கூடாது? இரண்டும் வெவ்வேறு பண்டங்களாயிற்றே. இரண்டும் நன்றாக இருக்கின்றனவே'' என்றார் ஹிந்திக்காரர்.

சொந்த நிறம் எடுப்பாய் விளங்கியது. அவள் அழகி என்ற கருத்து அவனிடம் ஏற்பட்டது. அந்தக் கருத்தை அவன் ஒதுக்கி நிறுத்திவிட்டு அவள் தந்த சாதத்தைத் தட்டில் வாங்கிக் கொண்டு அவள் தட்டில் இட்டிலிகள் இரண்டை வைத்தான்.

விந்திய மலையின் மலைப்பாதையில் வண்டி ஏறியபோது மலைகள் மேகத் திரைகளால் மூடப்பட்டிருந்தன. பெருந் திவலைகளாக மேகத் திட்டுக்கள் மிதந்து மலைகளில் மோதின. மழை கொட்டு கொட்டென்று கொட்டியது. அலறிக் கொண்டு நீர்வீழ்ச்சிகள் தாவிப் பள்ளங்களில் ஓடும் நீர் நுரைக்க விழுந்தன. வண்டி நாகபுரி வந்தபோது மூன்று மணி நேரத் தவக்கம் ஏற்பட்டு விட்டிருந்தது. இருட்டு வந்து இரவின் வருகைக்குக் கட்டியம் கூறியது.

ஹிந்திக்காரர் நாகபுரியில் இறங்கிப் படுக்கையைச் சுற்றினார்.

'வழியில் உடைப்பு ஏற்பட்டு விட்டதால் கிராண்டு டிரங்கு நேரே சென்னை செல்லாது. பாதை சுற்றித்தான் போய்ச் சேரும். ஆகையால் நாகபுரியில் இறங்கித் தங்கிப் போகிறவர்கள் தங்கிப் போகலாம்' என்று பிளாட்



முதல் முதலாக இப்போது தான் ரங்குவும் ரேணுகாவும் ஒருவரையொருவர் ஒரே தடவையில் பார்த்துக் கொண்டார்கள். கூச்சத்தால் இலேசாகச் சிவந்த ரேணுகாவின் முகத்தில் அவள் மறைக்க முயன்ற புன்முறுவல் நெளிந்தோடியது. அவளுடைய நீலப் புடவைக்கும் ரவிக்கையின் மஞ்சளுக்கும் அவளுடைய

பாரத்தில் இடைவிடாது பிரகடனம் செய்து கொண்டிருந்தார்கள்.

ரேணுகாவுக்கோ, ரங்குவுக்கோ நாகபுரியில் தெரிந்த மனிதர்கள் கிடையாது. தவிர்க்க முடியாத, தப்ப முடியாத ஒரு சிக்கலில் இருவரும் பிணைந்து விட்டதை இருவரும் உணர்ந்தனர்.

சுற்றுப் பிரயாணமாகச் சென்னை சேர எவ்வளவு நாட்கள் ஆகுமோ என்று பயந்த ரங்கு நான்கு நாட்களுக்குக் காணக் கூடிய பழங்கள், ரொட்டி, வெண்ணெய் நாள் பட நீற்கக்கூடிய தின்பண்டங்கள் முதலியவைகளை இரண்டு பேர்களுக்கும் காணக்கூடிய அளவுக்கு வாங்கிச் சேமித்துக் கொண்டான்.

வண்டி புறப்பட்டது. வண்டி சுற்றிப் போகப் போவதால் வேறு ஒருவரும் நாகபுரியில் அந்த முதல் வகுப்பில் ஏறவில்லை.

வண்டியில் ரங்கரத்தினம் தான் வாங்கிய தின்பண்டங்களை இரு கூறுகளாகப் பிரித்து, ஒரு கூறை ரேணுகாவின் சீட்டில் வைத்து விட்டு மற்றதைத் தனக்குமேல் தட்டில் பரப்பி விட்டு உட்கார்ந்தான். ரேணுகா விரைவில் சென்று பர்ஸை எடுத்து ஐந்து ரூபாய் நோட்டை அவனருகில் வைத்தாள். ரங்கரத்தினம் மீதி ஒரு ரூபாய் இரண்டரை அணாவை அவளருகில் வைத்தான்.

வழியெல்லாம் வெள்ளமும் மழையுமாக இருந்ததால், வண்டி, நதிகள் வெள்ளம் எடுக்காத பிரதேசங்களைத் தேடிப் பிடித்து ஊர்ந்து செல்ல வேண்டியிருந்ததால் ஐந்தாவது நாள் காலையில்தான் சென்னைக்கு வந்து சேர்ந்தது.

இருவரும் வண்டியை விட்டு இறங்கியதும் ரேணுகா அவளுடைய உறவினர் வந்திருக்கிறாரா என்று தேடினாள். அவர் வந்திருப்பதாகத் தெரியவில்லை.

''எனக்கு மாமாவின் விலாசம் தெரியும், என்னை அங்கே கொண்டு விட்டு விடுங்கள்'' என்றாள் ரேணுகா தரையை நோக்கியபடி.

டாக்ஸி ஒன்றைப் பிடித்துக் கொண்டு இருவரும் அக்பர் சாயிபு தெருவுக்கு ஓட்டச் சொன்னார்கள். ரேணுகாவின் மாமா அவர்கள் தேடிச் சென்ற வீட்டில் இல்லை. வீட்டை இரண்டு நாட்கள் முன்னர் அவர் காலி செய்து விட்டார். வீட்டுக்காரருடன் சண்டை போட்டுக் கொண்டு காலி செய்ததால் அவர் தம் விலாசத்தைக் கூறி விட்டுப் போகவில்லை.

''உங்கள் மாமாவின் விலாசத்தைக் கண்டு பிடிக்கும் வரையில் நாம் இருவரும் ஏதாவது ஒரு ஹோட்டலில் தங்க வேண்டியதுதான்'' என்றான் ரங்கு.

''நீங்கள் உங்கள் ஊருக்குப் போகவில்லையா?'' என்று கேட்டாள் ரேணுகா.

''இரவு வண்டி ஏற வேண்டும். உங்களை ஒப்படைக்காமல் நான் ஊரைப் பார்க்கக் கம்பி நீட்டுவது அழகல்ல. ஆகையால் போய் ஓட்டல் ஒன்றில் தங்குவோம். ஏதாவது வழி பிறக்கும்'' என்றான் ரங்கு.

வேறு வழியில்லாமல் ரேணுகா ரங்கு கூறிய வழியைப் பின்பற்ற முன்வந்தாள். அவளுடைய மாமா வேலை செய்யும் காரியாலயத்தின் பெயர் அவளுக்குத் தெரியும். ஆனால் அன்று ஞாயிற்றுக் கிழமை.

இரவு இருவரும் ஓட்டல் ஒன்றில் ஓர் அறையை எடுத்துக் கொண்டு பிரயாணக் களைப்பை ஆற்றிக் கொண்டனர். மறு நாட்காலை. இட்டிலி, காப்பி அருந்தி விட்டு ரேணுகா ரங்குவோடு டாக்ஸியில் அவளுடைய மாமா வேலை செய்து வந்த காரியாலயத்துக்குச் சென்றனர். நாமசங்கீர்த்தனத்துக்குத் தாம் வந்திருப்பதை வரவேற்பின் மூலம் சொல்லியனுப்பிவிட்டு ரேணுகாவும் ரங்குவும் அவர் வருகைக்காகக் காத்திருந்தனர்.

வெள்ளைச் சரிகைத் தலைப்பாகையாடியில் தரிக்கப்பட்ட விபூதி குங்குமாலங்காரங்களுடன் பரங்கிப் பழக் கதுப்பு நிறமுள்ள முகத்தில் சந்தோஷம் இனிக்க நாமசங்கீர்த்தனம் வரவேற்பு ஹாலுக்கு வந்து சேர்ந்தார்.

''என்ன அம்மா, ரேணுகா! உன்வண்டி லேட்டுன்னும் நீ நேத்திவரை வரவில்லைன்னும் டில்லிக்குத் தந்தி அடித்திருக்கிறேனே'' என்றார்.




வயிற்று நோயா?
அவைகளைப்பற்றி நான் கேள்விப்பட்டதே இல்லை
என் அன்னை எனக்கு எப்பொழுதும்
உட்வர்ட்ஸ்
கிரைப் வாட்டரை
கொடுக்கிறாள்
GRIPE WATER
இது ஐம்பது வருடங்களாக புத்திசாலிகளான தாய்மார்களால் உபயோகிக்கப்பட்டு வருகிறது.
அங்கீகரிக்கப்பட்ட ஏஜெண்டுகள்: கோமல் மானுபாக்சரிங் கெமிஸ்ட்ஸ் (பிரைவேட்) லிமிடெட், பம்பாய், எம். ஜீ. ஷஹானி & கோ. (கல்கத்தா) பிரைவேட் லிமிடெட், கல்கத்தா, டி. டி. கிருஷ்ணமாச்சாரி & கோ. மதராஸ், எம். ஜீ. ஷஹானி & கோ., (டில்லி) பிரைவேட், லிட்., டில்லி.

''நேற்று வண்டி வந்தது. உங்கள் பழைய விலாசத்துக்குப் போனேன். வீடு மாற்றிக் கொண்டு போய் விட்டீர்களாம். விலாசம் கொடுத்து விட்டுப் போக வில்லையாம்'' என்று தொடங்கி ரேணுகா ரங்குவின் துணை கொண்டு தனியாகச் சென்னை வந்திறங்கி, நேற்று ஹோட்டலில் தங்கிவிட்டு வந்தது வரையில் சுருக்கமாகச் சொன்னாள்.

''இந்தக் காரியாலயத்தில் வரவேற்பு ஹாலில் வேலை பார்க்கும் பெண்ணின் அண்ணனைத் தான் உனக்குப் பார்த்திருக்கிறது'' என்று நாமசங்கீர்த்தனம் ரேணுகாவிடம் கூறிவிட்டு வரவேற்பினி வசந்தராவை அழைத்து அவளுக்கு ரேணுகாவை ''உன்வருங்கால மன்னி'' என்று அறிமுகம் செய்தார்.

''வண்டி சுற்றி வந்ததா?'' என்று வசந்தரா வினவினாள்.

நாமசங்கீர்த்தனம் நான்கு நாட்கள் பகலும் இரவும் ரங்குவுடைய துணை கொண்டு வண்டியில் பிரயாணம் செய்து ஹோட்டலில் தங்கி இங்கு வந்தது வரையில் சுருக்கமாக ரேணுகாவின் யாத்திரையை விளக்கினார். வசந்தராவின் உதட்டுப் பூச்சில் மேலெழுந்த வாரியாக ஒருவித புன்முறுவல் வழிந்தது.

''வசந்தரா! உங்க அப்பாவை டெலிபோனில் கூப்பிட்டு, ரேணுகா வந்து விட்டாள் என்று சொல்லி விடுகிறேன். இன்று சாயங்காலமே உங்க அண்ணா பெண் பார்க்க வந்து விடலாம்'' என்று பரபரப்புடன் நாமசங்கீர்த்தனம் வசந்தராவிடம் கூறினார்.

வசந்தரா டெலிபோனில் அவளுடைய தகப்பனாரைக் கூப்பிட்டு ரேணுகா வந்து விட்டதை அறிவித்து விட்டுப் பேசும் கருவியை நாமசங்கீர்த்தனத்திடம் கொடுத்தாள். நாமசங்கீர்த்தனம் வசந்தராவின் தகப்பனார் நரஹரியிடம் பேசி முடித்தார்.

''இன்று சௌகர்யப்படாதாம். புதன் கிழமை ஆகட்டும் என்கிறார், வசந்தரா!'' என்று நாமசங்கீர்த்தனம் வசந்தராவுக்கு அறிவித்து விட்டு, ''ரேணுகா! நீ அவரோடு இங்கேயே இரு. நான் போய் லீவு கேட்டுக் கொண்டு வருகிறேன். வீட்டுக்குப் போகலாம்'' என்று கூறி உள்ளே சென்று சில கணங்களில் திரும்பினார். வெளியே வந்து ரேணுகாவையும், ரங்குவையும் அழைத்துக் கொண்டு வீட்டுக்குக் கிளம்பினார். ரேணுகா புறப்படுகையில் வசந்தராவிடம் விடை பெற்ற போது வசந்தராவின் முகத்தில் களை குன்றியிருந்ததைக் காணத் தவறவில்லை.

நாமசங்கீர்த்தனம் ரங்காரத்தினத்தைத் தம்முடன் அவர் வீட்டுக்கு வந்து தங்கி விட்டுப் போக வற்புறுத்தி அழைத்தார். ஆனால் ரங்கு, ''நான் நேற்றே கிளம்பியிருக்கவேண்டியவன். ரேணுகாவை ஒப்படைக்க வேண்டிய நிமித்தம் தாமதிக்க வேண்டியதாயிற்று. இன்னும் சிலரைப் பார்க்க வேண்டும்'' என்று பணிவுடன் கூறி அழைப்புக்கு மறுப்புத் தெரிவித்து விட்டான். ரேணுகாவும் அவனை வருந்தி அழைக்கவில்லை. சாடையாகவும் அழைக்கவில்லை. விடை பெற்றுச் சென்ற ரங்குவுக்கு ரேணுகா வந்தனம் அளித்தாள். அவனிடமிருந்து நாமசங்கீர்த்தனம் கலியாணம் நடந்தால் பத்திரிகை அனுப்ப வேண்டிய நிமித்தம், அவனுடைய ஊர் விலாசத்தைப் பெற்றுக் கொண்டார்.

அன்று நாமசங்கீர்த்தனம் வீட்டுக்குப் போன போது அவர் மனைவி அன்று பகல் வந்திருந்த கடிதம் ஒன்றைக் கொடுத்தாள். கடிதம் நரஹரியிடமிருந்து வந்திருந்தது.

கடிதத்தின் செய்தி ரேணுகாவுக்குக் கட்டுக்கடங்காத கோபத்தையும், நாமசங்கீர்த்தனத்துக்கு வெறுப்பையும், அவருடைய மனைவிக்கு வருத்தத்தையும் உண்டாக்கியது.

''ஒருவனுடன் நான்கு இரவு தனிமையாகக் கழித்து ரயிலில் வந்தேன் என்பதற்காகவென்னை வேண்டாம் என்பவனோடு நான் வாழ்ந்து என்ன சுகத்தைக் காணப்போகிறேன், மாமா? நீங்கள் எனக்குப் பரிந்து கொண்டு போய்ச் சிபாரிசு செய்ய வேண்டாம்.''

''ரேணுகா! கோபப்படாதே! இப்படி அசட்டுச் சந்தேகம் அடைவது நம்ம ஜனங்களிடம் சகஜம். நம் நாட்டில் இப்பழக்கம் புதுசு அல்லவா? மாமா போய் விளக்கிக் கூறி ஏற்பாடு செய்து வரட்டும்'' என்றாள் ரேணுகாவின் மாமி.

''என்னை அவமானப் படுத்தியதில் எனக்கு வருத்தமில்லை. அந்தத் தங்கமான மனுஷனுக்கு என்னால் ஏற்பட்ட மாசை எண்ணியே நான் கோபப்படுகிறேன்'' என்றாள் ரேணுகா.

''வசந்தரா போய்ச் சொல்லியிருப்பாள், நீ தனியே ஒருவனுடன் வந்தது பற்றி'' என்று சமாதானம் கூறினார் நாமசங்கீர்த்தனம்.

''வசந்தரா என் வயதுள்ளவள். இந்தக் காலத்தவள். படித்து, வேலை பார்ப்பவள். தனியாக ஒருவனோடு சந்தர்ப்பக் கோளாறின் காரணமாக நான் வர வேண்டியிருந்தால் அதற்கு இப்படித் தவறாக முடிவு கட்டுவது தவறு என்று அவளுக்குத் தெரியவில்லையே! இனிமேல் அவர்களுக்குப் படிந்து நான் அந்தக் குடும்பத்தில் வாழ்க்கைப் படுவதற்கில்லை'' என்று தீர்மானமாகக் கூறினாள் ரேணுகா.

இரவு சாப்பிட்டுவிட்டு அவர்கள் உட்கார்ந்திருந்த போது மறுபடியும் பேச்சு தொடர்ந்தது.

''என்ன ரேணு, எனக்கு ஒரு யோசனை தோன்றுகிறது.''

''சொல்லுங்கள் மாமா!''

''ரங்காரத்தினம் அழகாக இருக்கிறான்.''

''அதைப் பற்றி நான் சிந்தனை செய்யவேயில்லை. ஒன்று நிச்சயம். ஆசாமி தங்கம்.''

''அவனைக் கல்யாணம் செய்து கொள்கிறாயா...?''

''அவரைக் கல்யாணம் செய்து கொள்ள வேண்டும் என்று நான் இதுவரை ஆசைப்படவில்லை. அவர் எனக்கு ஒரு வழித்துணை. அவ்வளவுதான்; எனக்கென்று பெரியவர்கள் நிச்சயித்திருக்க நானாக ஒருவரோடு உறவு கொண்டாடவோ உள்ளம் கொடுக்கவோ தயாராக இல்லை.''

''அப்படித்தான் இருக்கவேண்டும் அம்மா, சமூகம் வாழ'' என்றாள் அம்புஜம்.

''இப்போது இந்தச் சென்னை வரன் எனக்குப் பிடிக்கவில்லை'' என்றாள் ரேணுகா.

''வழித்துணையை உன் வாழ்க்கைத் துணையாக்கினாலோ?'' என்றார் நாமசங்கீர்த்தனம்.

''அவரிடம் நான் காதல் கீதம் கொண்டு விடவில்லை. காதல் கல்யாணத்தில் தான் சுகம் கிடைக்கும் என்று நம்புகிறவளும் நானில்லை.''

''நேரடியாகப் பதில் சொல்லேன்.''

''ரங்கரத்தினம் நேர்மையானவர்; என் வழித் துணைவர் என் வாழ்க்கைத் துணைவராக லாம் என்று பெரியவர்கள் நினைத்தால் நான் ஆட்சேபணை செய்யப் போவதில்லை, அவர் பெற்றோர்களும் அசட்டுத்தனமாக அவநம்பிக்கைப் படாமலிருந்தால்'' என்றாள் ரேணுகா.

''அப்படியானால் நானேக்கே ரங்கரத்தினத்தின் தகப்பனருக்கு எழுதிவிடட்டுமா?'' என்று கேட்டார் நாமசங்கீர்த்தனம் மனைவியை.

''நேரே நானே வண்டிக்குப் போவதுதான் சரி, விஷயத்தை எழுதுவதை விட நல்லது'' என்றான் அம்புஜம்.

ரயில் திருவிடைமருதூர் நிலையத்தில் நின்றதும் நாமசங்கீர்த்தனம் ரங்கரத்தினத்தின் தகப்பனர் மகாலிங்கத்தைச் சந்தித்துப் பேசினர். ரேணுகாவின் பிரயாணத்தையும் அதனால் ஏற்பட்ட விளைவையும் நாமசங்கீர்த்தனம் கூறியதை மகாலிங்கம் அனுதாபத்துடன் கேட்டார். ரேணுகாவை ரங்கரத்தினத்துக்கு மணம் செய்து கொள்ளச் சம்மதம் இருக்குமா என்றும் விசாரித்தார்.

''என்னடா ரங்கு சொல்கிறாய்? பெண்ணைக் கூட அழைத்து வந்தாயே. அழகாக இருக்கிறாளா?'' என்று மகாலிங்கம் தம் மகனைக் கேட்டார்.

''நான் அவளுடைய அழகைப் பற்றிக் கவனிக்கவில்லை; அவள் வேறு ஒருவனை மணப்பதற்கு என்று பிரயாணம் செய்பவள் ஆகையால். பெண் தங்கமானவள். அவளைக் கலியாணம் செய்து கொண்டால் தேவலை என்ற ஆசை என்னிடம் உண்டாகவில்லை என்றாலும் அவளை மணப்பவன் அதிர்ஷ்டக்காரன் என்று எண்ணியதுண்டு.''

மகாலிங்கம் மூக்கைச் சொறிந்து கொண்டு யோசனை செய்தார்.

''சரி, என் மகன் துணை கொண்டு வந்தவள் எங்கள் மனையேறி வந்து விடட்டும். முகூர்த்தம் வைக்க நான் புரோகிதருக்குச் சொல்லி அனுப்புகிறேன் இப்போதே'' என்றார் மகாலிங்கம் மகிழ்ச்சியோடு.

சிறுபதிகளான ரேணுகாவையும் ரங்கரத்தினத்தையும் கிராண்ட் டிரங்க் எக்ஸ்பிரஸ் சுமந்துகொண்டு டில்லி நோக்கிச் சென்று கொண்டிருந்தது.

வண்டியில் இவர்களுடன் பயணம் செய்த வத்திக்காரர் நாகப்பூரில் உறவினர் ஒருவரை ரயிலேற்ற வந்தார். புதுத் தம்பதிகளை ரயிலில் கண்டு பேசினர். வண்டி நகர்ந்ததும் ரேணுகாவும், ரங்கரத்தினமும் வத்திக்காரத் தம்பதிகளிடம் விடைபெற்றனர்.

''நான் சொன்னேனே, இரண்டு சிறுகள் தனியா வண்டியிலே போச்சு கம்மா போகுமா என்று. இவர்கள்தான் அது. பார்த்தியோ இல்லியோ, இப்போ இரண்டும் கலியாணம் பண்ணின்டு போகிறது'' என்றார் வத்திக்காரர் தம் மனைவியிடம்.

''உலகம் கெட்டுப் போச்சு!'' என்று வத்திக்காரி வியாக்கியானம் செய்தாள்.

இவர்கள் எல்லாம் தம்மைப் பற்றி என்ன பேசிக் கொள்வார்கள் என்பதைப் பற்றிப் பேசிக் கொண்டே தம்பதிகள் தங்கள் பிரயாணத்தை இனிது முடித்தனர்.

ரேணுகா டால்கம் பவுடர்

ஆக்டமர் சேர்க்கப்பட்டது

ஆக்டமர் சேர்க்கப்பட்ட இந்த உயர் ரக ரேணுகா டால்கம் பவுடர் சருமத்தைக் கிருமிகளினின்று காப்பாற்றுவதுடன் சரீரத்தில் ஏற்படும் துர்நாற்றத்தையும் அகற்றுகிறது.

மனதிற்கு இனிமையான நறுமணம் கொண்டது. புத்துணர்ச்சியளிக்கக் கூடியது. விசேஷமாகக் கோடைக் காலத்திற்குச் சிறந்தது. நாள் முழுவதும் உங்களைப் புதுமையுடனும் குளுமையாகவும் திகழச் செய்கிறது.

பரிபூரண அழகுடன் விளங்க ரேணுகா காம்பாக்ட் பவுடரை உபயோகியுங்கள்



கல்கத்தா கெமிகல் கம்பெனி லிமிடெட்

கல்கத்தா - 29

தென்னிந்திய ஆபீஸ்: 5/149, பிராட்வே, சென்னை - 1



• In 40 shades •

அழகூட்டும்

எல்டீ வெல்வெட்டுகள்

ELDEE VELVETS

EV/G 12

ஆப்பிள் பழம்

மதுரை—திருச்சிக்கு இடையேயுள்ள அக்கிரம நல்லூர் ரயில்வே ஸ்டேஷனை மூடிவிடுவதைப் பற்றி ரயில்வே அதிகாரம் தீவிரமாக யோசித்துக் கொண்டிருந்தது. 'போதிய வருமானமில்லாத ஸ்டேஷன்' என்று அதற்கு முடிவு கட்டி வைத்திருந்தார்கள். இரண்டு நாட்களாக மொத்தம் நான்கு டிக்கெட்டுகள் தான் விற்றிருக்கின்றன. மொத்தம் மூன்று பேர்கள் பார்சல் பாசஞ்சரிலிருந்து இறங்கி யிருக்கிறார்கள். நிலைமை இப்படியே நீடித்தால் இந்த மாதத்துக்குள் ஸ்டேஷனுக்குத் திருச்சியிலிருந்து பெரிய பூட்டு, சாவி வந்து விடும். மூடிய பிறகு தங்களை எந்தத் தண்ணீரில்லாத காட்டில் போடுவாரோ என்பதைப் பற்றி ஸ்டேஷன் மாஸ்டரும், 'சிக்னல்' க்ளார்க்கும் பேசிக் கொண்டு, காலை ஏழு பத்துக்கு வர வேண்டிய தென்காசி பார்சல் பாசஞ்சரை வரவேற்கப் பிளாட்பாரத்தில் உலாவிக் கொண்டிருந்தார்கள். சரளைக் கப்பியும் மணலும் கலந்து அமைந்திருந்த அந்தப் பிளாட்பாரத்தில் அரசங்கன்று ஒன்று தானாகவே முளைத்து ஆள் உயர மரமாகி நின்றது. அதன் அடியில் ''குடிக்கும் தண்ணீர்'' என்று எழுதப்பட்ட ஒரு பழைய தொட்டி. ஸ்டேஷனை மூடும்போது, அந்த இரும்புத் தொட்டியைத் தூர எறிய நேர்ந்தால், சிறிது வர்ணம் பூசி, அரிசி பருப்பு போட்டுக் கொள்ள 'பாயின்ட்ஸ்மான்' கேட்டிருந்தது ஸ்டேஷன் மாஸ்டருக்குப் பிடிக்க வில்லை. தாமே அதை எடுத்துக் கொள்ளலாம் என்று நினைத்திருந்தார். பாயின்ட்ஸ்மானுடன் மல்லுக்கு நிற்பது கௌரவமல்ல. 'அவுட்டர்' கையை இறக்கிவிட்டு பாயின்ட்ஸ்மான் வந்து





''கதிர்''

கொண்டிருந்தான். வரும் போதே, ''கவுண்டரைத் திறங்க; அதோ ஒரு டிக்கெட் வருது!'' என்று கூறிவிட்டுப் பக்கத்துப் பனந்தோப்பைச் சுட்டிக் காட்டினான்.

மட்டைகள் வெட்டப்படும் காலங்களில் அந்தப் பனந்தோப்பு இரவு நேரங்களில் பார்க்கப் பயங்கரமா யிருக்கும். இடிந்து விழுந்த ஆயிரக் கால் மண்டபத்துத் தூண்களைப் போல் தோப்பு இரவில் தோற்றமளிப்பதாகவும் அக்கிரமநல்லூர் என்ற பெயரும் ஸ்டேஷனின் கரிய தகரக் கொட்ட

கையும் ஸ்மசானத்தை நினைவுறுத்துவதாகவும் புதிதாக வரும் ஸ்டேஷன் மாஸ்டர்கள் சொல்லிக் கொள்வதுண்டு.

கண்ணைக் குத்தும் காலை வெய்யிலில், நீளமாக நிழல் விட்டு நிற்கும் மரங்களினிடையே தலைமை ஆசிரியர் அகிலநாயகம் பிள்ளை மார்புடன் ஒரு பெரிய கூடையை அணைத்துக் கொண்டபடி ஸ்டேஷனை நோக்கி வந்து கொண்டிருந்தார். அவருடைய கறுப்பு நிறக் கோட்டின் முன்பகுதியை அவர் அணைத்துக் கொண்டிருந்த பெரிய கூடை மறைத்துக் கொண்டிருந்தது. கூடையில் இருந்த முள்ளங்கிக் கட்டுகள் சில, மேலிட்டுத் தெரிந்தன. முள்ளங்கி இலைகளுக்கு இடையிடையே பென்சில் கனத்தில் சில முருங்கைக்காய்களும் தெரிந்தன. கூடை அணைப்புக்களில் ஒன்றில் அவரது குடை நன்கு சுருட்டிக் கட்டப்பட்ட நிலையில் தொங்கிக் கொண்டிருந்தது. தலையின் வழுக்கை விழுந்த முன்



புறமும், நெற்றிச் சுருக்கங்களும், வெள்ளை நிறப் பிடரியும் சேர்ந்து அவருடைய முதுமைக்குச் சான்று அளித்துக் கொண்டிருந்தன. அவருடைய மூக்குக் கண்ணாடியின் அழுத்தம் கரும் பலகையில் சாக்கட்டியில் வெள்ளை எழுத்து எழுதுவதைவிட, வெண் பலகையில் கரி கொண்டு கறுப்பு எழுத்து எழுதினால் ஒழிய இனி அவரால் படிக்க முடியாதென்பதை விளக்கியது. ஆனால் இவ்வளவு முதுமைச் சின்னங்களுக்கும் நேர்மாறாயிருந்தன, அவரது நடையும் உறுதியான குரலும். தோப்பின் முகட்டுக்கு வந்ததும் அவருடைய வேக நடையைத் திடீரென்று நிறுத்திற்று, குறுக்கே ஓடிய நான்கடி அகலமுள்ள சிறு வாய்க்கால். கணுக்கால் அளவுதான் அதில் தண்ணீர் ஓடினாலும், மிதியடி நனையாமல் அதைக் கடப்பது எப்படி என்று ஒரு விநாடி அவர் திகைத்தார். கூடையையும் குடையையும் கீழே வைத்து விட்டு மிதியடிகளைக் கையில் எடுத்துக் கொள்வது சுலபம்தான். ஆனால் அந்தப் பெருங் கூடையை மறுபடியும் கையில் எடுத்துக் கொண்டு முழங்கையில் குடையையும் மாட்ட வேண்டும். பிறர் உதவியில்லாமல் இது சாத்தியமில்லை. மற்றொரு வழி; மிதியடிகளை அப்பால் வீசி விட்டுப் பிறகு காலில் மாட்டிக் கொண்டு சென்று விடலாம். இதுவும் அவ்வளவு சுலபமானதாயில்லை. கணுக்காலுடன் கொக்கியால் இணைக்கப்பட்டவை அவை. காலை உதறினால் மட்டும் அவை எட்டிப் போய் விழுந்து விடாது. கையால் அவிழ்த்து வீசி எறிய வேண்டும். எறிந்தபின் மறுபடியும் அதே நிலைமை. கூடையையும் குடையையும் மறுபடியும் இன்னொருவர் உதவியில்லாமல் மார்போடு அணைத்துக் கொள்ள முடியாது. அகிலநாயகம் பிள்ளை நீண்ட நேரம் அவ்விஷயத்தில் சிந்தனை செய்து நேரத்தைப் போக்க விரும்ப வில்லை. அவுட்டரிலே கை இறக்கியாகி விட்டது. இந்தப் பாசஞ்சரைத் தவறவிட்டால் மறுபடியும் மாலை ஐந்து மணிக்குத்தான் வண்டி என்பது அவருக்குத் தெரியும். எனவே ஒன்றிரண்டு விநாடிகளுக்குள் அவர் ஒரு முடிவுக்கு வந்து விட்டார். தம்மைத் தடுக்கி வீழ்த்தக் கூடிய குடையை முழங்கையால் அழுத்திக் கொண்டு, வாய்க்காலைத் தாண்டிக் குதித்து விடத் தீர்மானித்து விட்டார். கூடையை அணைத்தபடி நான்கு அடி அகலமுள்ள அந்த வாய்க்காலை அவர் எப்படித்தான் தாண்டினாரோ, அது அவருக்கே அதிசயமாயிருந்தது. ஆனால் அதிசயத்தின் இறுதியில் காத்திருந்த வருத்தம் மேலே அவர் நடக்க முற்பட்டபோது தெரிய வந்தது. குதித்த வேகத்தில் மிதியடி ஒன்றின் வார் கணுக்கால் அருகே இப்படி அறுந்துவிடும் என்று அவர் நினைக்க வில்லை. மதுரை சித்திரைத் திருவிழாவிலே ஏழெட்டு வருடங்களுக்கு முன் வாங்கின மிதியடி அது. இவ்வளவு காலம் விசுவாசமாக உழைத்துக் கொண்டு வந்து, அக்கிரமநல்லூர் பனந்தோப்புக்கருகே அது தம்மைக் காலை வாரிவிடுமென்று அவர் எதிர்பார்க்கவே இல்லை. அவருடைய மன உறுதி இம்மாதிரியான சங்கடமான நிலைமை தோன்றும்போதெல்லாம் எவ்வளவோ முறை உடனடி உதவி செய்திருக்கிறது. இந்தத் தடவை அதுவும், மிதியடியைப் போல் அறுந்து விட்டதோ, தெரியவில்லை. அவர் மனத்தில் வீணில் ஒரு பரபரப்பைக் கிளறி விட்டுக் காலை வெய்யில் நேரத்திலே, அவரைக் கிறுகிறுக்கச் செய்து விட்டது.

அவர் தமது அழுத்தமான மூக்குக் கண்ணாடி வழியாகக் கைகாட்டி மரத்துக்கும் அப்பால் பார்வையைத் துரத்தினார். ரயில் வண்டி நெருங்கி விட்டதற்கு அடையாளமாக அடிவானத்தில் புகைச் சுருள் எழுவதைக் கவனித்து விட்டார். காலின் கட்டை விரலால் அறுந்து விட்ட மிதியடியின் ஏதோ ஓர் உட்பகுதியை நண்டு பற்றுவது போல் இறுக்கிக் கொண்டு மேல் நோக்கி, வரப்பில் விரையத் தொடங்கினார். வரப்பு மேட்டில் ஓர் இருபது முப்பதடி தூரம்தான் அவர் அடி எடுத்து வைத்திருப்பார். அதற்குள் இன்னும் ஒரு தொல்லை, எருமைக் கூட்டம் உருவில் காத்திருந்தது. அதுவரையில் பிரார்த்தனை கீதம் பாடும்போது சபையினர் தலையைத் தொங்கவிட்டு அசையாமல் நிற்பது போல்

நின்று கொண்டிருந்த எருமைக் கூட்டம், மெள்ள முன்னேறி ஒவ்வொன்றாக நகர்ந்தது. வரப்பைத் தாண்டி ஒன்றன்பின் ஒன்றாக அவ்வளவு எருமைகளும் போகும் வரை பொறுத்திருந்தால் ரயில் வண்டியைப் பிடித்த மாதிரிதான். ஆத்திரமும் எரிச்சலும் மேலிட்டு விட்டன தலைமை ஆசிரியருக்கு. கூடையை இறுக அணைத்தபடியே, கட்டை விரலால் அறுந்த வாரை இறுக்கிக் கொண்டே ஆயிரமாயிரம் சாபங்களை அள்ளிவீசி அவற்றை அதட்டினார்! அப்படி அதட்டிக் கொண்டு முன்னால் காலைச் சுருட்டி இரண்டடி எடுத்து வைத்ததும் எருமைகளில் சில, வரிசை கலைந்து ஓடத் தலைப்பட்டன. வரப்பில் ஒரு சிறு இடைவெளி கிடைத்தது. அதன் வழியே சற்று ஒருக்களித்தாற்போல் புகுந்து செல்லும் போது, சொட்டச் சொட்டக் கருஞ் சேறு குழம்பிய தனது வாலினால் அவருடைய கறுப்புக் கோட்டுக்கும், வெள்ளை வேட்டிக்குமுள்ள நிறபேதத்தை ஒழிக்கத் தலைப்பட்டது எருமைகளில் ஒன்று. வேட்டியில் சாணம் தெளித்து மெழுகியது போன்ற ஒரு நிலைமை. மீண்டும் சில அர்ச்சனைகளை உதிர்த்தார் அகிலநாயகம். நேரமிருந்தால் ஒரு லட்சார்ச்சனையே நடத்தியிருப்பார். கையில் ஒரு பிரம்பும் இருந்தால் எல்லா எருமைகளையும் பெஞ்சு உயரத்திலிருந்த வரப்பு மேல் நிற்க வைத்து உரித்திருப்பார். நேரமில்லை; 'அடியாத மாடு படியாது' என்ற சொல்லை மெய்யாக்க அது சமயமும் அல்ல. ரயில்வே ஸ்டேஷன் தகரக் கொட்டகைத் தாழ்வாரத்திலிருந்து தமது வருகைக்காக — டிக்கெட்டைக் கொடுத்துத் தொலைத்து விட்டுக் 'கவுண்டர்' கதவை மூட - ஒருவர் காத்து நிற்பது தெரிந்தது. மேலே காலைச் சரட்டி இரண்டடி எடுத்து வைத்திருக்க மாட்டார். பின்னாலிருந்து யாரோ தமது முதுகைப் பிடித்துத் தள்ளிக் கூடையை இழுப்பது போன்ற உணர்ச்சி அவரைத் திடுக்கிட வைத்தது. திரும்பிப் பார்க்கும் போது எமனது வாகனம் ஒன்று தனது பெரிய பற்களால் கூடையிலிருந்த முள்ளங்கிக் கட்டைப் பற்றி இழுப்பது தெரிந்தது. அந்த முயற்சியில் அது வெற்றியும் கண்டு விட்டது. இந்தப் பின்புறத் தாக்குதலால் ஏற்பட்ட அதிர்ச்சி அவரது கால்களை வெடவெடக்கச் செய்தது. கூடையைப் போட்டுக்கொண்டு கீழே விழாமல் அவர் எப்படித்தான் சமாளித்தாரோ, அது ஓர் அதிசயம்தான். அநியாயமாக ஒரு கட்டு முள்ளங்கி பறி போய் விட்டது. தளதளவென்று வளர்ந்து வாசனை கமழும் வெண்சங்கு நிற முள்ளங்கிகள். அவருடைய மனைவிக்கு முள்ளங்கி என்றால் மிக மிக விருப்பம். இவருக்கு விருப்பமான முருங்கைக் காயும் முள்ளங்கியுடன் ஒன்று சேர்ந்து சாம்பார் ஆகும் போதெல்லாம் இரு உள்ளங்களும் ஒன்றெனப் பிணைந்து மகிழ்வு வீட்டிலே பொங்கும். எருமை முள்ளங்கிக் கட்டைச் சுவைத்துச் சாப்பிட்ட விவரத்தை மட்டும் வீடு திரும்பியதும் மனையாளிடம் சொல்லக் கூடாதென்று தீர்மானித்துக் கொண்டார். முள்ளங்கியென்றால் எருமைகளுக்கு மிக விருப்பம் என்று நாம் சொன்னதாக வீட்டரசி தப்பர்த்தம் செய்து கொண்டு விடலாம் அன்றோ?

''உங்களுக்காகத்தான் காத்துக் கொண்டிருக்கிறேன், கவுண்டர் கதவைச்சாத்த'' என்று ஸ்டேஷன் நுழை வாயில் இரும்புத் தூணைப் பிடித்துக் கொண்டு 'கிளீனிங் கிளார்க்' கூறிய போது அகிலநாயகம் பிள்ளை, கீழே படிக்கட்டு இல்லாத மண் சரிவில் ஏறி மேலே வந்து கொண்டிருந்தார். அக்கிரமநல்லூர் ஸ்டேஷனுக்கு ஒரு படிக்கட்டு இல்லாதது ஒரு பெருங் குறை என்பதை ஒளித்துப் பயனில்லை. ஸ்டேஷன் முகப்பிலிருந்து கீழே தரை மட்டத்துக்கு மண்ணையே சரிவாக வெட்டியிருந்தார்கள். அதுவும் குறுகலான ஒற்றையடி மண் சரிவு. ஓர் ஆள் உயரத்துக்கு அந்த மண் சரிவில் பிரயாணிகள் குடுகுடுவென்று இறங்கிப் போகும் வேகத்தில் ஏறி வருபவர்கள் எதிர்ப்பட்டால் அவர்கள் மீது மோதி, அவர்களையும் கீழே உருட்டிவிட வேண்டியதுதான். இரண்டு மூன்று தடவை முயன்றும் அகிலநாயகம்பிள்ளையால் கூடையை அணைத்தபடி கால் கட்டை விரல் இடுக்கிப் பிடிப்புடன் ஏறிவர முடியவில்லை. ஒவ்வொரு முறையும்



அவர் மேலே இரண்டடி எடுத்து வைத்தால் நான்கடி அவரைப் பின்னால் தள்ளி விட்டது சரிவு. மேலே ஏறி வரமுடியாமல் அவர் தவிப்பதைப் பார்த்த 'கிளீனிங் கிளார்க்' தமது நகைப்பை அடக்கிக் கொண்டு, ''என்ன ஸார், சர்க்கஸ் வித்தையெல்லாம் செய்யறீங்க? நான் வருகிறேன். அந்தக் கூடையைக் கொடுங்க'' என்று கீழே சென்று கூடையை வாங்கிக் கொண்டார்.

''சுத்த மோசம் சார், இந்த ஸ்டேஷன். ஒரு படிக்கட்டு கிடையாது!'' என்று முணுமுணுத்தார் ஆசிரியர்.

''அதை ஏன் கேட்கிறீங்க போங்க. ஏதுடா விஷ்ணுப்பட்டி உயர்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர் வருவாரே, அவர் ஏறி இறங்க நல்ல படிக்கட்டு கட்டி வைக்கணுமென்னு இந்த ஸ்டேஷனைக் கட்டினவங்க நினைச்சாங்களா, பாருங்க....!''—கூடையை ஒரு மேடையில் வைத்து விட்டு டிக்கெட் அறையினுள் ஓடினார் கிளீனிங்கு.

''எனக்காகவா படிக்கட்டு? எல்லாருடைய சௌகரியத்துக்காகவும்தான் சொல்றேன், சார்!'' என்று கூறிக் கொண்டு கறுப்புக் கோட்டின் உட்புறப் பையில் கையை விட்டு, எண்ணிப் பொட்டலமாக வைத்திருந்த பதினாலணா இரண்டு நயா பைசாக் காசுகளைக் கவுண்டர் ஜன்னலுக்குள் நீட்டினார்.

''உம்....ம்... பிடிங்க டிக்கெட்டை.....'' என்றார் ரிலீவிங்கு. அதைத் தொடர்ந்து கவுண்டர் கதவு மூடிக் கொண்டது, 'டக்' கென்ற சத்தத்துடன். ரிலீவிங்கு அப்படித் தமக்கு ஓர் அலட்சியமான பதிலைக் கூறுவாரென்று அகிலநாயகம் பிள்ளை எதிர்பார்க்கவில்லை. அவர் முகத்தில் ஓரளவு கோபத்தின் அறிகுறி தென்பட்டது. கூடையை மீண்டும் ஒழுங்கு செய்து கொண்டார். மிதியடிகளைக் கழற்றி ஒரு தாளில் சுற்றிக் கூடையின் ஓர் ஓரத்தில் வைத்தார். குடையை ஞாபகமாகக் கையில் தொங்க விட்டுக் கொண்டு கூடையை மீண்டும் மார்போடு தழுவிக் கொண்டு பிளாட்பாரத்தில் நின்று கொண்டிருந்த ரிலீவிங்கை நெருங்கி, ''ஒரு நல்ல படிக்கட்டுப் போட்டால் எனக்கு மட்டும்தானா உபயோகப் படப் போகிறது? எல்லாருக்கும்தானே உதவப் போகிறது? நீங்கள் எல்லாம் ஏன் இதை மேலதிகாரிக்கு எழுதக் கூடாது?'' என்று ஒரு கேள்வியைப் போட்டார்.

''சரியாய்ப் போச்சு போங்க சார். பொது ஜனங்கள் நீங்களெல்லாம் எழுதினால் நடக்குமா? ரயில்வே சிப்பந்திகள் நாங்களே எழுதினால் எப்படி இருக்கும்?'' என்றார் ரிலீவிங்கு.

''அதுக்கென்ன நான் எழுதறேன். கட்டாயம் எழுதறேன். இந்தப் பகுதி மராமத்து இஞ்சினீயர் யாரு இப்போ? முன்னே முனிசாமி நாயக்கர்னு ஒருத்தர் இருந்தார். இப்போது யார்?'' என்று தீவிரமாகவே கேட்கத் தொடங்கினார் அகிலநாயகம்.

''இப்போது யார் இஞ்சினீயர்னு கேட்கிறீங்களா? ரங்காச்சாரிதான் இந்த வட்டார ரயில்வே மராமத்து இஞ்சினீயர்.''

தலைமை ஆசிரியர் முகத்தில் பளிச்சென்று ஓர் ஒளி வீசியது.

''ரங்காச்சாரியாரா? ஒலவக்கோட் செக்ஷனிலே இருந்தாரே.....!''

''அவரே தான்!''

''அப்போ ரொம்ப நல்லதாய்ப் போச்சு. அந்த ரங்காச்சாரி என்னுடைய ஸ்டூடண்டு தான். இந்தப் பக்கம் அவன் வந்தால் நான் கேட்டேன்னு சொல்லுங்க. அது ஒண்ணே போதும். அடடே! அப்படியா சமாசாரம். ரங்காச்சாரின்னு தெரியாமல் போச்சே. சரி, சரி. நான் கட்டாயம் எழுதறேன். நேரில் பார்த்தால் என்னடா, அடாபுடான்னுகூடக் கேட்பேன். அவ்வளவு உரிமை உண்டு எனக்கு. படிக்கிற காலத்திலே அவ்வளவு சூட்டிகையா... எல்லா வகுப்பிலேயும் முதலாவது. பள்ளிக்கு அவனாலேயே ஒரு நல்ல பெயர். பாவம், சிறு வயசிலே தாயார் இறந்து போய், தகப்பனார் கஷ்டப்பட்டுப் படிக்க வைச்சாரு. அப்பவே நீ பெரிய மனுசனா ஆவேன்னு சொல்லி மதுரை காலேஜுக்கு வழி அனுப்பி வைத்தேன். அந்த ரங்காச்சாரிதானா.....?'' அகிலநாயகத்தின் வார்த்தைகளில் பெருமிதமும், ஒரு புதிய நம்பிக்கையும் நிறைந்திருந்தன.

''அவரேதான். கட்டாயம் நீங்க எழுதிடுங்க, அவருக்கு'' என்று ரிலீவிங் கூறிய போது குறுக்கே சென்ற ஸ்டேஷன்மாஸ்டர், ''என்னவாம்?'' என்று வினவினார். அவருடன் நடந்து கொண்டே ரிலீவிங், ''பாவம்! இந்த ஸ்டேஷனுக்குப் படிக்கட்டுப் போடணும். அதற்கு எஸ். ஈ.க்கு எழுதறேங்கிறாரு. இவர்கிட்டே படிச்சவராம் எஸ்.ஈ.'' என்றார்.

''இன்னிக்குக் காலே வரும்படி வாத்தியார் கொடுத்த பதினாலணா இரண்டு நயா பைசா தான் என்கிறதைச் சொன்னியோ'' என்று ஸ்டேஷன் மாஸ்டர் நகைத்துக் கொண்டே கேட்டார்.

''அதை யெல்லாம் அவருகிட்டே ஏன் சொல்லணும்? ஸ்டேஷன் நிலைத்திருப்பதே அந்தரத்தில் இருக்கிற சங்கதியை அவரிடம் சொல்லி ரங்காச்சாரி மூலம் சாதிக்கப் போகிற காரியத்துக்கு இடையே கலக்கத்தை உண்டாக்குவானேன்!'' — இஞ்சினைப் பார்த்த ரிலீவிங் மறுபடியும் தமது அறைக்குள்ளே வேகமாகச் சென்றார்.

பள்ளி வாத்தியார்களுக்கே உரிய படித்த பாசம் எவ்வளவு சக்தி மிகுந்தது; தாய்க்கும் மகவுக்குமுள்ள சக்தி வாய்ந்தது என்ற எண்ணத்துடன் உள்ளே நுழைந்த ரிலீவிங், எஸ். ஈ. ரங்காச்சாரியைப் பற்றிப் பெருமை கொள்ளும் ஆசிரியரின் அப்பாவித்தனத்தைக் கருதி ஒருகணம் மலைக்காமல் இல்லை.


பார்சல் பாசஞ்சர் வந்து நின்றபோது, அகிலநாயகம்பிள்ளை பிளாட்பாரத்துக் கோடியில் தயாராக நின்றுகொண்டிருந்தார், கூடை அணைப்புடன். சாதாரணமாகக் கடைசிப் பெட்டிகளில் அதிகக் கூட்டம் இராது என்பது அவர் அனுபவத்தில் கண்ட உண்மை. ஆனால் அன்று வழக்கத்துக்குமாறாக மூன்றும் வகுப்புப் பெட்டிகள் எல்லாவற்றிலும் ஏகக் கூட்டம். அன்று இரவு பழனியில் பத்தாம் திருநாள். அதை முன்னிட்டே அவ்வளவு கூட்டம். கூட்டத்துக்குக் காரணம் எதுவாயிருந்தால் என்ன? அதைப் பற்றி அவர் கவலை கொள்ளவில்லை. ஒவ்வொரு மூன்றும் வகுப்புப் பெட்டியின் கதவருகே நின்றவர்கள் அவரை ஏறவிடவில்லை. ''இங்கேதான் நகரவே இடமில்லையே, எப்படி வழி விடுகிறது? பக்கத்து வண்டியிலே ஏறுங்க....'' — எங்கும் இதே பாடமாகத்தான் இருந்தது.

ரயில் வண்டியில் மூன்றும் வகுப்பில் பிரயாணம் செய்கிறவர்கள் அநேகமாக எங்கு சென்றாலும் இந்த ஒரே பாடத்தைத்தான் கேட்கிறார்கள். ''ஏறாதே! இந்த வண்டியில் இடமில்லை. அடுத்த வண்டியில் ஏறு. அங்கே இடமிருக்கு.'' இந்தச் சொற்றொடர், ஒரே பாடம் எந்தப் பள்ளிக்கூடத்திலேதான் இவ்வளவு கணக்காக ஒரே மாதிரி படிக்கிறார்களோ, எந்த வாத்தியார்களிடம் சொல்லிக் கொள்கிறார்களோ? இவ்வளவு கருத்துடன் மற்றப் பள்ளிப் பாடங்களையும் நம்ம ஜனங்கள் கற்றுக் கொண்டால் நாடு எவ்வளவோ முன்னேறுமே என்று அகிலநாயகம்பிள்ளை முணுமுணுத்துக் கொண்டே இங்குமங்கும் ஓடினார். இதற்குள் வண்டி நகர ஆரம்பித்து விட்டது. அவரால் அதற்கும் மேலே கூடையை அணைத்

நன்றாக வாரிவிடப்பட்ட ஆரோக்கியமான கூந்தல்



எப்பொழுதுமே
கண்ணைக்
கவரும்!



கால்கேட் ஹேர் டானிக்கில் லெனோலின் என்ற இயற்கையான கூந்தல் எண்ணெய்களை ஒத்த எண்ணெய் மிகச்சிறந்த முறையில் சேர்க்கப்பட்டிருக்கிறது. பிரதி தினமும் கால்கேட் ஹேர் டானிக்கை உங்கள் தலையில் தடவி 3 நிமிடங்களுக்கு வழக்கமாகத் தேய்த்தால் உங்கள் கூந்தல் ஆரோக்கியமாகவும், அடர்த்தியாகவும் வளருவதுடன் நாள் முழுவதும் நேர்த்தியாகப் படிந்திருக்கவும் உதவுகிறது!

லெனோலின் கலந்த **கால்கேட்**
ஹேர் டானிக் உபயோகியுங்கள்!

CHT. 6. 5

'மக்கள' ஆடவர்கள் விரும்புவது!

தீபாவளி மகத்தான விற்பனை!

தீபாவளிக்கு வேண்டிய ஜவுளிகள் வாங்கியாச்சோ?

உங்களுக்கென்றே

பட்டு & நூல் சேலைகள், பாவாடைகள், வேஷ்டிகள் சோளி பீஸ்கள் முதலியன ஏராளமாக ஸ்டாக் செய்துள்ளோம்

நம்பிக்கை, நாணயம், நியாய விலை — இவைகளே எங்கள் கொள்கை

எங்கள் அசல் கொள்ளேகாலம் பட்டுச் சேலைகள் தனிச் சிறப்பு வாய்ந்தவை. உங்கள் தேவைக்கு இன்றே விஜயம் செய்யுங்கள்

P. B. லக்ஷ்மண ஸா & பிரதர்ஸ்

(ஏர் - கண்டிஷண்ட்)

பட்டு ஜவுளி உற்பத்தியாளர்கள் & வியாபாரிகள்

109, ஐயா முதலித் தெரு, சிந்தாதிரிப்பேட்டை, சென்னை - 2

போன்: 86966

5-11-61 ஞாயிறு அன்றும் விற்பனை உண்டு

தயாரிப்பு பிராஞ்சு: 15, மேட்டுத் தெரு, காஞ்சிபுரம்

பம்பாயிலும் சென்னை விலைக்கே கிடைக்குமிடம்:

P. B. லக்ஷ்மண ஸா & பிரதர்ஸ்

பட்டு ஜவுளி வியாபாரம்

(உடுப்பி போர்டிங் ஹோட்டல் அடியில்)

307, லக்கம்ஸி நாப்பு ரோடு, மாதுங்கா (C. Ry.) பம்பாய் - 19

துக் கொண்டு இங்குமங்கும் ஓட முடியவில்லை. சட்டத்துக்கு மாறான காரியம்தான். இருந்தாலும் வேறு வழியில்லை. கதவு திறந்திருந்த ஒரு முதல் வகுப்புப் பெட்டியில் கூடையைத் தள்ளி விட்டு, உள்ளே தொத்திக் கொண்டார். மெள்ள மெள்ள வண்டியின் வேகம் அதிகரித்தது. அவரது மனப் பதற்றமும் மெள்ள மெள்ளத் தணிந்தது. பெட்டியினுள் ஒரு சீட்டு முழுதும் காலியாகவே இருந்தும் விசிறி கேட்பாரற்றுச் சுற்றிக் கொண்டிருந்தது. மற்றொரு சீட்டில் நன்கு உடை தரித்த ஒருவர் காலை நீட்டிப் படுத்துக் கொண்டிருந்தார். அவருடைய தலைப் பக்கமாகவே அகில நாயகம்பிள்ளை நின்று கொண்டிருந்ததால் படுத்திருந்தவர் முகம் தெரிய வில்லை. ஒரு முழு 'சீட்டு'ம் காலியாகவே இருக்கும்போது ஏன் அதில் உட்காரக் கூடாது? இப்படி ஒரு கேள்வி அவர் மனத்தில் தோன்றியது. 'கூடாது கூடாது, சட்டத்துக்கு விரோதம். மூன்றும் வகுப்பு டிக்கட்டுடன் முதல் வகுப்பில் ஏறியதே தவறு. ஏறியபின் ஒரு சீட்டில் உட்கார்ந்து கொள்வது மற்றும் ஒரு தவறு' என்று உள் நினைவு ஒன்று அந்தக் கேள்விக்குப் பதில் அளித்தது.

கையிலிருந்த குடையை ஒரு பக்கமாகச் சாய்த்து வைத்து விட்டு, கூடையின் அடியில் இருந்த வறுத்த நிலக்கடலையில் கொஞ்சம் துழாவினார் அகிலநாயகம். சாய்த்து வைத்திருந்த குடை கீழே விழுந்தது. வண்டியில் யாரோ ஒருவர் சாமான்களை வைப்பதும் பிறகு ஏறிக் கொள்வதும் தெரிந்துதான் சீட்டில் படுத்திருந்தார் அந்த மனிதர். படுத்திருப்பதிலுள்ள சுகத்தைக் கலைத்துக் கொள்ள அவர் விரும்பவில்லை என்று தெரிந்தது. ஆனால் குடை விழுந்த சத்தம், அவருடைய கவனத்தை—படுத்திருந்த நிலையிலுள்ள சுகத்தைப் போக்காமலில்லை. சற்று எழுந்து பின்புறமாகத் திரும்பிப் பார்த்தார்..ஆசிரியரும் தமது அழுத்தமான கண்ணாடி வழியாக அவரை நோட்டம் விடாமலில்லை. நாகரிக மனிதனின் கண்கள் சிவந்திருந்தன. இரவு தூக்கம் இல்லாதிருந்தாலும் அப்படி நேரும். கண்களிலே ரயில் கரி விழுந்தாலும் அப்படி நேரும். அகில நாயகம்பிள்ளை கையில் எடுத்த கடலையைச் சொடுக்காமல் அவரைச் சற்று நிதானமாகக் கவனித்தார். சில சமயங்களில் முதல் வகுப்பில் பிரயாணம் செய்பவர்கள் தப்பித் தவறி ஏறி விடும் கீழ் வகுப்புப் பிரயாணிகளிடம் மரியாதைக் குறைவாக நடந்து கொண்டு தமது சுயமரியாதையையும் போக்கிக் கொள்வது உண்டு. அந்த மாதிரி ஏதாவது சச்சரவு செய்யக் கூடிய மனிதனாக இருந்து, புயலுக்கு முன்னேற்பாடாகத்தான் கண்கள் சிவக்கத் தம்மை அவன் உற்றுப் பார்க்கிறானோ என்று, உள்ளூற ஓர் உதறல் அவருக்கு ஏற்படாமலில்லை. முகத்தை வேறு பக்கமாகத் திருப்பிக் கொண்டு விட்டார். எனினும் அவன் விடவில்லை. காலிலே மடித்துப் போட்டிருந்த படுக்கை விரிப்பைத் தள்ளிக் கொண்டு துள்ளிக் குதித்து எழுந்தான். பொம்மைகள் அச்சிட்ட புஷ் ஷர்ட்டும், உள்ளே கையில்லாத பனியனும் கால் சட்டையுமாக அவன் எதிர்நோக்கி நிற்பதை அகிலநாயகம் தமது கண்களின் ஓரத்தால் கவனித்ததும், எதற்கும் தயாராயிருந்த அபாய அறிவிப்புச் சங்கிலி, அவரை நோக்கி, "என்னைப் பிடித்து இழு! இழு!" என்று கூறுவது போலிருந்தது. ஏனெனில், அவர் எதிர்பார்த்த அபாயம் அத்தகையது. நாகரிகமாகத் தோன்றிய மனிதன் திடீரென்று அநாகரிகமாக—காட்டுமிராண்டியாக மாறித் தம்மைக் குண்டுக் கட்டாகத் தூக்கிக் கதவுக்கு வெளியே எறிவதும், தமது தலையில் பலத்த அடிபட்டு, கால்கள் ரயில் சக்கரங்களுக்கு இடையில் அரைபட்டு...அப்பப்பா....! அந்த! மனிதன் பார்த்த விதம் — அப்படித்தான் இருந்தது. இருவருக்கும் இடையே எட்டடி தூரம் இருந்தால்தான் என்ன? இது போதாதா, ஒருவன் ஓடி வந்து முட்டித் தள்ள? மின்னல் வேகத்தில் இவ்வளவு அதிர்ச்சிகளும் ஓடி மறைந்தன, அடுத்தபடியாக அவன் வெளிக்காட்டிய 'ஒரு சிரிப்பினால். எட்டி நின்ற அவன் வாயிலிருந்து புறப்பட்டது ஒரு கேள்வி. "தெரியவில்லையா, ஐயா, என்னை?"



"என்ன....?" கண்ணாடியை வெடுக்கென்று எடுத்து விட்டு அவனை ஒரு முழுப் பார்வை பார்த்தார். சற்று முன் தோன்றிய விபரீத எண்ணங்கள் யாவும் ஒன்று பாக்கி யில்லாமல் அவர் மனத்திலிருந்து சொல்லாமல் கொள்ளாமல் கம்பி நீட்டின.

"ஆமாம், சார்! நான்......"

"பரமசிவம்!..."

"ஆமாம். நீங்கள் நிற்கும் போது நான் காலை நீட்டிக் கொண்டு படுத்திருந்தேனே என்று மிக வருந்துகிறேன்....!" சட்டென்று படுக்கையை ஒதுக்கி உட்காரும்படி கையைக் காட்டினான்.

"ஆச்சரியம்! ஆச்சரியம்! பரமசிவம்!" வாயாரக் கூப்பிட்டு அடிநாள் நினைவுக்குத் தம்மைத் திருப்பிக் கொண்டு சென்றார்.

"உங்களைச் சந்தித்தது மிகவும் அதிர்ஷ்டம் என்றுதான் சொல்ல வேண்டும்."

"அது சரி! என்னப்பா, இப்படி அடையாளம் தெரியாமல் என்பாட்டுக்கு நின்று கொண்டிருந்து விட்டேனே. சரி, எங்கே இருக்கிறே, என்ன பண்ணுகிறே?"

''வடக்கே இருக்கிறேன்: பம்பாயிலும், நாக்பூரிலும் எக்ஸ்போர்ட்—இம்போர்ட் பிஸினஸ்......''

''வர்த்தகம்னு சொல்லு! உனக்கு என்ன கிடைக்கிறது?''

''மாசம் இரண்டாயிரத்துக்குக் குறையவே குறையாது!''

''அதுதான் வேணும்..மிகவும் சந்தோஷம். இப்படி யெல்லாம் கேள்விப்பட்டால் எனக்கு எத்தனை சந்தோஷமாயிருக்கிறது, தெரியுமா? இன்றைக்குக் காலையில் நம்ம ரங்காச்சாரி, அதுதான் முன்னே புட்பால் டிமுக்குக்கூடக் காப்டனாயிருந்து மெட்ராஸுக் கெல்லாம் போய் வந்தானே......''

''அவன்தானே சார், பி. கே. ரங்காச்சாரி.....''

''அவன்தானப்பா. இப்போது அவன் ரயில்வேயிலே செக்ஷன் இஞ்சினியராயிருக்கிறன். கிராமத்துக்குப் போய் வரும்போது அக்கிரமநல்லூர் ஸ்டேஷனிலே கேள்விப்பட்டேன். அது ஒரு பெரிய சந்தோஷமான சமாசாரம்னு நினைச்சேன். இப்போ உன்னைப் பார்த்து விட்டேன். சரி, சரி....பரமசிவம், இப்போ எங்கே போகிறே? ஊருக்கு என்னோடு வந்து தங்கி விட்டு ஸ்கூல் எப்படி வளர்ந்திருக்கிறதென்பதைப் பார்த்துவிட்டுப் போ. எது வரையில் நீ போக வேண்டும்?''

''சார்! எனக்கே நிச்சயமில்லே. மதுரையில் இறங்கி விட்டுப் பிறகு திருவனந்தபுரம் கொச்சியெல்லாம் போக வேண்டும். திட்டப்படி நான் பிரயாணம் செய்யா விட்டால் பெருத்த நஷ்டம் ஏற்படும்.''

''அதெல்லாம் சும்மா எடக்குப் பேச்சு. ஒரு மணி நேரமாவது வந்து பார்த்து விட்டுப் போகலாம். முன்னே இருந்த ஓட்டுக் கட்டடங்களை இடித்து விட்டு நல்ல காற்றோட்டமான வகுப்பு அறைகள் கட்டியிருக்கிறது. ஸ்கூலுக்குப் பின்புறமிருந்த வாழைத் தோப்பு தெரியுமில்லேயா உனக்கு?''

''ஆமாம், ஆமாம். கோவில் சுவரையொட்டி.....?''

''அந்தத் தோப்பு கீப்பெல்லாம் இப்ப கிடையாது. அங்கேதான் இப்ப நூல் நிலைய கட்டடம்...டீச்சர்ஸ் ரூமும் அங்கேதான். திறந்தவெளியிலிருந்த பள்ளி ஸ்தாபகர் செட்டியார் சிலையைப் புதுப்பிக்க அதற்கு மேலே சின்ன மண்டபம் ஒன்றும் கட்டி விட்டதால் இனி காகம் கீகம் சிலையை ஆபாசப்படுத்துமோ என்ற பயமும் விட்டது.''

''கேட்கக் கேட்கத் திரும்பவும் பள்ளியில் சேரலாமோ என்று.....!'' பரமசிவம் அதை முடிப்பதற்குள் அகிலநாயகம்பிள்ளையின் முகம் வருத்தத்தால் ஒரு வித மாறுதலடைந்தது.

பன்னிரண்டு ஆண்டுகளுக்குக் குறைவில்லை. ஒரு நாள் உயர் நிலைப்பள்ளியின் விஷ்ணுப்பட்டி செட்டியார் சிலை முதற்கொண்டு அதிரும் படியாக அகிலநாயகம் பிள்ளை, தம் எதிரில் நின்று மன்றாடிய பரமசிவனை விழித்துப் பார்த்து, ''முடியவே முடியாது. கெட்டவுட். பள்ளிக்குள் இனி உன்னைச் சேர்க்கவே முடியாது. என் முன் நிற்காதே. பள்ளியை மூடினாலும் மூடுவேன். உன்னை இனி சேர்க்கவே மாட்டேன். அதனால் என் வேலை போனாலும் சரி'' என்று அதட்டிப் பிரார்த்தனைக் கூடத்திலிருந்தும், அதற்கப்பால் பின்தொடர்ந்து சென்று பள்ளி வாயிலிலிருந்தும் வெளியேற்றி விட்டுத்தான் தம் நாற்காலியில் அமர்ந்தார். ஆறும் படிவக் கேள்வித் தாள்களில் ஒன்றைப் பரமசிவம், கணக்காளர் அறைப் பூட்டை மறுசாவி போட்டுத் திறந்து எடுத்து வந்தபோது பள்ளிச் சேவகன் பன்னீர்செல்வம் அவனைக் கையும் மெய்யுமாகப் பிடித்துக்கொண்டான். கணக்காளர் தான் தன்னிடம் மறுசாவி கொடுத்து எடுத்துக் கொள்ளச் சொன்னதாகப் பரமசிவம் அபாண்டமாகச் சாதித்தது தான் அவருக்குப் பொறுக்கவில்லை.

''பள்ளிக்கு நீ கட்டாயம் வர வேண்டும்'' என்று அவர் கூறியபோது அவரது உடம்பிலே ஒரு நடுக்கம் ஏற்பட்டது. கண்களிலே நீர் ததும்பி இரண்டொரு துளிகள் வழிந்தோடாமல் இல்லை. பழைய சம்பவத்தை—துயரம் தரும் நினைவுகளைப் பகராது விட்ட பரமசிவத்தின் பண்பாடுதான் அவருக்கு அந்த வேதனையை அளித்தது. தம்மை ஒருவாறு சமாளித்துக் கொண்டு, ''அப்பா, பரமசிவம்! நீ எங்கிருந்தாலும் சரி, எனக்கு உன் நினைவாகத்தான் இருக்கும் இனிமேல். எப்போதாவது ஒரு முறை நம் பள்ளிக்கு வந்து என்னுடன் ஒரு நாள் இருந்து செல்ல வேண்டும். ஆமாம்! அப்போதுதான் என் மனம் நிம்மதி அடையும்'' என்றார் அகிலநாயகம்பிள்ளை.

''ஏன் ஒரு நாள்? இரண்டு நாட்கள் தங்கியிருப்பேன். என் பிரயாண அலுவல்களில் மாறுதலிருந்தால் விஷ்ணுப்பட்டிக்கு வரத் தயங்க மாட்டேன்'' என்று கூறிக் கொண்டே காலடியிலிருந்த பெட்டி யொன்றை வெளியில் எடுத்துச் சீட்டின் மீது வைத்து அதைத் திறந்தான். நவநவமான உடைகளும், பளபளப்பான சோப்புப் பெட்டியும் அதில் இருப்பதை அகிலநாயகம் பிள்ளை பார்த்து அகமகிழ்ந்தார்.

''போகட்டும், நீங்கள் எல்லாரும் நன்றாகச் சௌகரியமாக வாழ வேண்டும்'' என்று வாய் விட்டுக் கூறினார்.

திறந்த பெட்டியிலிருந்து பரமசிவம் காகிதம் ஒட்டிய தகரப் பெட்டி ஒன்றை எடுத்து அவர் முன் வைத்தான். ''இதிலிருக்கும் பிஸ்கோத்துகளை நீங்கள் சாப்பிடுங்கள்!'' என்று அன்போடு உபசரித்தான்.

''இந்நேரத்தில் நான் எதுவும் சாப்பிடுவதில்லையே, நீ மறந்து விட்டாயா?''

''நல்லது. வீட்டுக்குக் கொண்டு போய்ச் சாப்பிடுங்கள்!''

அத்துடன் அவன் நிற்கவில்லை. பிளாஸ்க் ஒன்றைத் திறந்து ஒரு கண்ணாடி தம்ளரில் தேநீரை ஊற்றி ''இந்த டீயாவது சாப்பிடுங்கள்!'' என்றான்.

''சரிதான் போ. நான் இவையெல்லாம் விட்டு எவ்வளவோ காலமாகிறது. என் உடல் நலத்துக்கு இதெல்லாம் உதவவே உதவாது.''

''பின்....அப்படியானால்....'' என்று கூறிக் கொண்டு மேல் தட்டிலிருந்த ஒரு பையிலிருந்து இரண்டு பெரிய ஆப்பிள்களை அவர் முன்னால் வைத்தான்.

''இதை வாங்கிக் கொள்கிறேன். ஆனால் இப்போது எதுவும் வேண்டியதில்லை. வீட்டுக்குப் போய்த்தான் சாப்பிட வேண்டும்.''

நீகோ

சருமத்தை வியாதிகள்
அணுகாமல் தடுப்பதோடு,
மேனி அழகையும்
அதிகரிக்கிறது.

இது உங்கள் சருமத்தை நன்கு சுத்தம் செய்து பொலிவுடனிருக்கச் செய்கிறது. நீகோ சோப்பின் சுத்தப் படுத்தும் தன்மையும், கிருமிகளைக் கொல்லும் நுரையும் உங்கள் சருமத்தை பரிசுத்தமாக்கி முகப்பரு, வேனல்கட்டி, கருப்பு வடுக்கள் போன்ற தொத்து நோய்கள் வரவொட்டாமல் தடுக்கிறது.

நீகோ சோப்பை பதினைந்து நாட்களுக் கொருமுறை தலையில் தேய்த்து ஸ்நானம் செய்தால் தலையில் பொடுகு வராமல் தடுக்கலாம். வழக்கமாக, உடம்பில் தேய்த்து குளித்து வந்தால் சருமம் சுத்தமடைவதுடன் உங்கள் மேனி எப்பொழுதும் பொலிவுடன் விளங்க சருமத்திற்கு வழவழுப்பையும் ஆரோக்கியத்தையும் அளிக்கிறது.

சரும ஆரோக்கியத்திற்கு
மிகச் சிறந்த நீகோ சோப்பை
நீங்களும், உங்கள் குடும்பத்தினரும்
தினந்தோறும் உபயோகியுங்கள்.

நீகோ கிருமிகளைக் கொல்லக்கூடிய தினசரி உபயோகத்திற்கேற்ற சிறந்த சோப்



''அப்படியே செய்யுங்களய்யா!'' என்றான் பரமசிவம்.

''இன்னொரு விஷயம் அப்பா, பரமசிவம்! அதை இப்போதே உன்னிடம் சொல்லி வைக்கிறேன். பழைய மாணவர்கள் தான் முன்னின்று காரியத்தை நடத்திக் கொடுக்க வேண்டும். மாணவர்களுக்கு இருந்து படிக்க விடுதியொன்று இல்லாதது ஒரு குறையாயிருக்கிறது. அதுவும் வெளியூர்களிலிருந்து வரும் பிள்ளைகள் விடுதியில்லையென்றால் கண்டகண்ட இடங்களில் சாப்பிடுவதும் சுற்றுவதும் கட்டுப்பாடு இல்லாமல் போய்விடும். இதற்கு ஒரு வழி செய்யணும், உன்னைப் போன்றவர்கள் முன் வந்து. வசதி உள்ள பழைய மாணவர்கள் மனம் வைத்தால் எல்லாம் நிறைவேறிவிடும். சமயம் வரும்போது உனக்கும் நான் கடிதம் எழுதுகிறேன்.......''

''அதற்கென்ன தாராளமாக எழுதுங்கள். ஏன் அவ்வளவு சிரமம். நானே ஒரு முறை வரும் போது நேரிலேயே இயன்ற உதவி...!''

''அப்படியா பரமசிவம்!'' இப்போது அவர் கண்களில் மகிழ்ச்சியால் கண்ணீர் ததும்பி வழிந்தது.

''அவசியம் வருகிறேன். வந்து செய்கிறேனய்யா!''

''ரங்காச்சாரிக்கும் நான் கடிதம் எழுதுகிறேன். அவன்தான் மராமத்து இன்ஜினியர் ஆயிற்றே! உன் கையாலேயே எஸ்டிமேட்டுப் போட்டுக் கொடுடான்னு அவனைக் கேட்கிறேன். அப்போ பரமசிவம்....!'' வெளியே எட்டிப் பார்த்தார் தலைமை ஆசிரியர் அகில நாயகம். விஷ்ணுப்பட்டிக் கோவில் கோபுரம் தெரிந்தது. கன்னத்தில் போட்டுக் கொண்டு இறங்கத் தயாரானார். குடையை நினைவாகக் கையில் எடுத்துக் கொண்டார். ஆப்பிள் பழங்கள் இரண்டையும் கூடையில் வைத்தார். ஒன்றையும் விட்டு விடவில்லையே என்று பலமுறைகள் தாம் அமர்ந்திருந்த இடத்தையும் கூடையை வைத்த இடத்தையும் பார்த்துத் திருப்தியடைந்தார். வண்டி நின்றது. பிரியாவிடை பெற்றுக் கீழே இறங்கினார். கதவருகே வந்த பரமசிவம் கூடையை எடுத்து அவர் கையில் கொடுத்தான். பழையபடி அவனை மார்புடன் அணைத்துக் கொண்டார். ஜன்னலருகே வண்டி நகரும் வரை நின்று, பழைய மாணவன் பரமசிவத்தைப் பன்முறை வாழ்த்தினார்.

வீடு திரும்பியதும் அவரது மனைவி கேட்ட முதல் கேள்வி, ''ஏது, இவ்வளவு நல்ல ஆப்பிள்?'' என்பதுதான்.

''அதை ஏன் கேட்கிறே போ. பெரிய உபசாரம் எனக்கு. ஏக அமர்க்களம். முதல் வகுப்பு வண்டியிலே பழைய மாணவன் பரமசிவம் என்னைப் பார்த்து விட்டு...பிரமாத உபசாரம்.....'' என்று தொடங்கி, எல்லாவற்றையும் ஒன்று விடாமல் சொன்னார்.

''கேட்கக் கேட்க ஆச்சரியமாகத்தான் இருக்கிறது. முதலில் வண்டியில் ஏறும்போது யாரோ என்னவோன்னு பயந்துட்டேன்னீங்களே, பகல் நேரத்திலே என்ன பயம்?''

''உனக்கென்ன புரியும், முதலில் நான் பயந்தது...!''

''அது சரி...பள்ளி விடுதிக் கட்டடத்துக்குப் பணம் நூறு ரூபாய் கொடுப்பாரா?''



சென்னை அரசாங்கத்தில் உயர் பதவிகள் வகித்து ஓய்வுபெற்ற திரு என். வி. சுகவனம் ஐ. ஏ. எஸ். அவர்களின் சஷ்டியப்த பூர்த்தி வைபவம் அக்டோபர் 4-ந் தேதி சென்னை தியாகராயநகரில் வெகு விமரிசையாக நடைபெற்றது. சென்னை நகரப் பிரமுகர்களும், நண்பர்களும், உறவினர்களும் இவ்வைபவத்துக்கு வந்து சிறப்பித்தனர்.

''நூறு? சரியாப் போச்சுது. இரண்டாயிரம் ரூபாய்க்கும் மேலே மாதம் சம்பாதிக்கிறவன்கிட்டே நூறு பத்துன்னு மதிப்புப் போட்டிட்டியே. நல்ல வேளை. அஞ்சு ரூபாய் ஒரு ரூபாய்ன்னு சொல்லாமே. நிதரென்று நம்ம வீட்டுக்கு ஒருநாள் அவன் வந்தால்கூட, அவனிடம் என்னத்தையாவது தாழ்வாகப் பேசிப்பிடாதே'' என்று முன்னெச்சரிக்கை செய்தார் அகிலநாயகம். 'ரங்காச்சாரி விஷயம் கேள்விப்பட்டாயா?' என்று ஆரம்பித்து, ''அக்கிரமநல்லூர் ஸ்டேஷனுக்கு அவன் மட்டும் படிகட்டித் தரல்லே, நம்ம பள்ளி விடுதிக்குக் கூடமாட இருந்து உதவி செய்யல்லே அவனை விடறேனு பார்....!'' என்று பரிவுடன் பலவிதச் சவால்களை வீசினார். இவ்வளவோடு அவருக்குத் திருப்தி கொள்ளவில்லை. தெருவில் போய்க் கொண்டிருந்த ஒன்றிரண்டு பள்ளி ஆசிரியர்களை அவ்வப்போது கைதட்டிக் கூப்பிட்டு, ''இன்றைக்குப் பிரமாதம், போங்க. நமக்குப் பஸ்ட் கிளாஸிலே உபசாரம்'' என்று சொல்வதும், பிறருக்குக் காட்டுவதற்காகவே மேசை மீது பார்வையாக வைத்திருந்த ஆப்பிள்களைச் சுட்டிக் காட்டுவதுமாக இருந்தார். ஏன், பள்ளித்



மதுரை வக்கீல் திரு சங்கரன் எம். எல். ஏ. அவர்களின் புதல்விகள் ஸ்யாமளாவும் ஜெயந்தியும் மதுரை நகர சபைக் கண்காட்சியிலும், நாற்றாண்டு விழாவிலும் நடனமாடி மக்களின் பாராட்டுதலைப் பெற்றனர்.


சேவகன் பன்னீர்செல்வம் மாலையில் விளக்குத் துடைக்க வந்தபோது அவனிடமும் முதல் வகுப்பு சமாசாரத்தை ஆரம்பித்து, ''ஆமாம் ஆமாம். அதே பரமசிவம்தான். நீ பழைய சங்கதி யெல்லாம் எங்கேயாவது பேசித் தொலைச்சுடாதே. வாய் தவறுதலாக... ரொம்பப் பெரிய மனுஷன் இப்போ. அவனுடைய பெருந்தன்மை ஒன்றே போதும்'' என்று கூறி அகமகிழ்ந்து போனார்.

மறுநாள் பள்ளி நேரம் நெருங்க நெருங்கத் தலைமை ஆசிரியருக்குநெஞ்சு துள்ளியது. தாம் சொல்லப் போகும் விஷயத்தைப் பள்ளிப் பிள்ளைகள் முதல் பன்னீர் செல்வம்வரை, எல்லாரும் ஆவலுடன் கேட்டு ரசிக்கப்போவதை நினைத்து அவருக்கு நிலைகொள்ள வில்லை. பன்னீர் செல்வம் இரண்டு தடவை மணி அடித்து விட்டு, மூன்றும் முறையும் அடிப்பதற்காக நின்றான். மாணவர்கள் அணி அணியாகப் பள்ளியின் வெளிமுற்றத்தில் செட்டியார் சிலை முன் கூடிவிட்டார்கள். மூன்றும் முறை பாக்கியிருந்த மணி ஓசையைப் பன்னீர் செல்வம் எழுப்பிய பின் இரைச்சல் அடங்கி ஒரு நிசப்தம். முன் வரிசையில் கணுக்கால் உயர மேடைமீது அகிலநாயகம் பிள்ளை தமது அழுத்தமான கண்ணாடி வழியாகச் சூழ நின்ற பிற ஆசிரியர்களையும், தம்மைக் கண்கொட்டாமல் பார்த்து நின்ற மாணவர்களையும் ஒரு பார்வை பார்த்தார். அவரது கோட்டுப் பையில் முண்டிக் கொண்டிருந்த ஆப்பிள் பழத்தை ஒரு முறை தொட்டுப் பார்த்துக் கொண்டபின், ''மாணவர்களே! இன்று உங்களுக்கு மிகவும் நல்லதொரு செய்தியைச் சொல்லப் போகிறேன். நேற்று நான் ரயில் வண்டியில் வரும் போது, ஒரு பிரமுகரை....ஆம்....அவருடன் முதல் வகுப்புப் பெட்டியில்தான் நானும் வந்தேன். ஒரு நிர்ப்பந்தம் ஏற்பட்டதாலேதான் முதல் வகுப்புப் பெட்டியில் ஏற வேண்டியதாயிற்று என்றும் வைத்துக் கொள்ளலாம். அப்படி வரும் போதுதான், அந்தப் பிரமுகரைச் சந்திக்கும் வாய்ப்புக் கிடைத்தது....'' அவருடைய பேச்சைக் கலைப்பது போல், எட்டி மருதாணிச் செடியருகே நின்று கொண்டிருந்த பன்னீர் செல்வம் யாரோ ஓர் ஆளுடன் பேசிக் கொண்டிருந்ததைப் பார்த்து, தம் முன் இருந்த மேசையில் கையால் தட்டி, ''பன்னீர்செல்வம், என்ன அங்கே பேச்சு?'' என்று அதட்டிக் கேட்டார். மாணவப் பிள்ளைகள் அனைவரும் பின்புறம் திரும்பிப் பார்த்தார்கள்.

பன்னீர்செல்வம் அங்கிருந்தே பதில் சொல்லாமல், ஒரு கையில் மணியையும், இன்னொரு கையில் ஒரு கடித உறையையும் எடுத்துக் கொண்டு மேசை அருகே வந்து, ''உங்களுக்கு ஒரு தந்தி வந்திருக்கிறது ஐயா!'' என்று கூறி உறையை அவர் முன் வைத்தான். சேவகன் தந்த தாள் ஒன்றில் கையெழுத்துப் போட்டு அவனை அனுப்பி விட்டு, தந்தியை மனத்துக்குள் படித்தார். அதில், ''அன்பார்ந்த தலைமை ஆசிரியர் அவர்களுக்கு. நேற்றுத் தங்களுடன் பார்சல் பாசஞ்சரில் முதல் வகுப்பில் வந்த பரமசிவம் எந்த ஸ்டேஷனில் இறங்குவதாக உங்களிடம் கூறினார் என்பதை அறிவித்தால் மிகவும் நன்றி உள்ளவர்களாக இருப்போம். நாகபுரி பாங்கு ஒன்றில் 'செக்' மோசடி செய்த குற்றத்துக்காக அவரை நாங்கள் கைது செய்ய மதுரையில் காத்திருந்த போது அவர் இடையில் எங்கேயோ தப்பி விட்டார். சிரமத்துக்கு மன்னிக்கவும்.

இப்படிக்கு,
மாவட்ட உதவி போலீஸ் அதிகாரி,
குற்றப் பிரிவு, மதுரை....''

பரபரப்புடன் தந்திக் கடிதத்தைத் தமது கோட்டுக்குள் திணித்துக் கொண்டார் அகிலநாயகம். அவருடைய உதடுகள் துடித்தன. கண்கள் கோபத்தால் சிவந்தன. ''எல்லாரும் ஒழுங்காக அவரவர்கள் வகுப்புக்குப் போங்கள்'' என்று உத்தரவிட்டார். முதல் வகுப்பில் நடந்த சந்திப்பு பற்றிய நல்ல செய்தி முழுவதையும் கேட்க அவர்கள் தயங்கினார்கள். ''போங்கள், வகுப்புக்களுக்கு!'' என்று மீண்டும் ஓர் அதட்டல் போட்ட பின்னர்தான் அவர்கள் கலைய ஆரம்பித்தார்கள். ஆசிரியர்களும் மெள்ளமெள்ள நகர்ந்தார்கள். ''ஏதோ முதல் வகுப்பில் போகும் போது பிரமுகர் என்றீர்களே, அது என்ன சார்?''—கையில் டிபன்பாக்ஸுடன் முற்றத்தில் கடைசியாக நின்று கொண்டிருந்த மாணவன் ஒருவன் அவரைப் பின்தொடர்ந்துகொண்டே கேட்டான். அப்போது மருதாணிச் செடி ஓரமாகக் கடுகடுப்புடன் நடந்து சென்று கொண்டிருந்தார் அகிலநாயகம். ''நீங்கள் அதை யெல்லாம் கேட்காமல் இருப்பதே நல்லது...'' என்று சொல்லி விட்டு மேலே நடந்தார். 'முதல் வகுப்புப் பெட்டியில் தவறுதலாக ஏறியதால்தானே இந்த அபக்கியாதி நமக்கு வந்து சேர்ந்தது' என்று அவர் உள்ளம் எண்ணிச் சாம்பியது. கோட்டில் முண்டிக் கொண்டிருந்த ஆப்பிள் பழத்தை எடுத்துத் தோட்டக் கிணற்றுக்கு அப்பால் வீசி எறிந்தார். ''நான் செய்தது தவறோ என்று நினைத்தேன். தவறல்ல. தவறல்ல. பள்ளியிலிருந்து அவனை வெளியேற்றியது ஒருகாலும் தவறல்ல!'' என்று சொல்லி விட்டுச் செட்டியார் சிலை மண்டபப் படியில் அமர்ந்து கொண்டார். சிலை உருவத்திலிருந்த ஸ்தாபகரும் மௌனமாக அதை ஆமோதித்தார்.



டினோபாலைப் பற்றி உங்கள் தயாரிடம் கட்டாயம் சொல்லுங்கள்!

<u>எல்லோரும்</u> டினோபாலை உபயோகிக்கிறார்கள்

உங்கள் மகளின் வெள்ளை ஆடைகள் வெள்ளை வெளேரென்று தோற்றமளிக்கவேண்டுமென்று நீங்கள் விரும்புகிறீர்களா? சில சமயங்களில் சலவை செய்யப்பட்ட ஆடைகள்கூட மங்கலாகவும், பழுப்பு நிறத்துடனும் தோற்றமளிக்கின்றன.

காட்டன் மற்றும் ரேயான் வெள்ளைத் துணிகளை துவைத்தால் மட்டும் போதாது. அவைகளை துவைத்த பிறகு டினோபாலில் நனைத்து தூய வெண்மையாக்குங்கள். ஆம் டினோபால் அவ்வளவு சக்திவாய்ந்தது. மேலும் அது மிகவும் சிக்கனமானது. இன்றே டினோபால் வாங்குங்கள்.



வெள்ளைத் துணிகளை மிக வெண்மையாக்க ஒரு சிறிதளவு **டினோபால்** போதுமானது.

தயாரிப்பாளர்கள்:
சுஹ்ரித் கெய்கி லிமிடெட், [illegible], பரோடா.

பூர்ண விநியோகஸ்தர்கள்:
சுஹ்ரித் கெய்கி ட்ரேடிங் லி., த. பெ. 965, பம்பாய்-1

TAM — SISTA 5-SG 140 A

வாழும் வர்ணனைகள்

9. பி. எஸ். ராமையா

கைராசி

'தொட்டதெல்லாம் தங்கமாகும்' என்கிறார்களே, அந்த ஜாதி பரமசிவம் பிள்ளை. வாழ்க்கையின் மேடு பள்ளங்கள் யாவும் அவருக்குப் பொன் விளையும் பூமி என்றால் பொய்யல்ல. அவர் மன்னிக்கமுடியாத தவறுகள் செய்த இடங்களில் கூட அவருடைய குற்றம் பாவிக்கப்படாமல் அவர் தப்பித்துக் கொள்கிறார். நாங்கள் இருவரும் போன பத்து வருஷங்களாக நண்பர்கள். இருவர் குடும்பத்தினரும் ரொம்ப அந்நியோந்நியமாக அளவளாவிக் குலவுகிறோம். அதனால் எனக்கு அவருடைய வாழ்க்கையைப்பற்றி ரொம்ப அந்தரங்கமாக அறியச் சந்தர்ப்பங்கள் கிடைத்தன. முதன் முதலாக அவருடன் எனக்கு அறிமுகம் ஏற்பட்டு நான் அவரது அதிர்ஷ்ட ஜன்மத்தைப் பற்றி அறிந்த நிமிஷம் முதல் அவரிடம் எனக்கு அசைக்க முடியாத ஒரு மதிப்பு ஏற்பட்டு விட்டது. அவருக்கு வாய்த்த மனைவிதானென்ன! எல்லாம் வரப்பிரசாதமாகக் கிடைத்தவர்கள் போல..... சாதாரணமாக என்னைப் போல் வாழ்க்கையின் கசப்புக்களை அதிகமாக அனுபவித்துள்ள ஒருவனிடம் அவரது கலப்பற்ற சந்தோஷ சம்சாரம் பொறாமையைத்தான் எழுப்பும். ஆனால் நான் ஆதி முதல் இன்று வரை அவரிடம் கொஞ்சம் கூடப் பொறாமைப்பட்டது கிடையாது.

உணர்ச்சி பேதங்கள்

நம்முடைய மனத்தில் உள்ளே இருக்கும் ஏதோ ஓர் உக்கிராண அறையில் நம்முடைய வாழ்க்கையில் நடக்கும் சிறு சிறு சம்பவங்கள் எல்லாம் பதிவு செய்து வைக்கப்படுகின்றன. மேல் மேலே இடைவிடாது ஏற்படும் வாழ்க்கை ஓட்டத்தில் அடியில் பதிவாகியுள்ள சில சம்பவங்கள் பிரக்ஞையிலிருந்து மறைந்து விடுகின்றன. ஆனால் அவற்றின் அனுபவத்தால் நம்முடைய மனோபாவத்தின் போக்கு பக்குவப்பட்டு ஒரு குறிப்பிட்ட திசையில் வளர்ச்சியடைந்து வருகிறது. ஒருவனுடைய குண பாவத்தின் உருவ அமைப்பு இந்தச் சம்பவங்களினால் ஏற்படும் ஒரு மொத்தம்தான். கொஞ்சம் கூர்ந்து கவனித்தால் ஒரு மனிதனுடைய மனப்பான்மையில் அவன் வாழ்க்கை அனுபவங்களின் சாயை இருப்பதைக் கண்டு பிடிப்பது சிரமமாக இராது. பின்னால் தற்செயலாக ஒரு சிறு சம்பவத்தின், காலத்தின் விரல் நுனி பட்டு உள்ளே சேமிக்கப்பட்டிருக்கும் நினைவுகளை மூடியிருக்கும் திரை விலகி விடுகிறது. உடனே ஆச்சரியகரமான வேகத்துடன் அந்தச் சம்பவங்கள் எல்லாம் பிரக்ஞையில் வந்து விழுகின்றன. ரொம்பத் தெளிவுடன் நாம் மறுபடியும் ஒரு தடவை அந்தச் சம்பவங்களில் ஈடுபட்டு நடித்து அவற்றின் உணர்ச்சி பேதங்களை அனுபவிக்கிறோம்.



காரியதரிசி

சட்டை குட்டையாக உருட்டிவிட்டது போன்ற உருவம். அதற்கேற்றாற் போல் தடித்தடியாக அடர்த்தியான தலை மயிர். அதை ஓர் அங்குல அளவுக்கு மேல் நாட்டுக் கிராப்பும், கீழ் நாட்டுக் குடுமியுமற்ற வகையில் வெட்டிவிட்டிருப்பார். ஆப்பிரிக்கா தேசத்து யானைப் புல் மாதிரி வளர்ந்து நிமிர்ந்து நிற்கும். அவருடைய முகத்திலும், கண்களிலும், காணும் உற்சாகத்துக்கும் சுறுசுறுப்புக்கும் அந்தத் தலை முடியின் உறுதியைக் காட்டும் தோற்றம் உதவி செய்வதாக இருக்கும். ஒரு கதர் வேஷ்டியைப் பஞ்சகச்சமாகக் கட்டி மேலே ஒரு கதர் ஜிப்பா அணிந்திருப்பார். தலையில் ஒரு கதர்க் குல்லாய். ஆனால் ஒரு நாளில் இருபத்து மூன்று மணி நேரமும் குல்லாய் அவர் கையிலேயேதான் இருக்கும். அதோடு சிறிய தோல் பெட்டியும் கையை அலங்கரித்துக் கொண்டிருக்கும். ஸ்ரீமான் குண்டப்பா பெங்களூர் லீலாவதி அநாதாசிர

மத்தின் காரியதரிசி. யாரோ லீலாவதி என்ற சீமாட்டி அளித்த நன்கொடையால் ஸ்தாபிக்கப்பட்டது அந்த ஆசிரமம். அல்லது ஒருசீமான் பணம்கொடுத்து அந்தப் பெயரை வைக்கச் சொன்னார். எப்படியோ பதினைந்து வருஷங்களாகப் பெங்களூரில் அந்தப் பெயருடன் ஓர் அநாதை ஆசிரமம் நடந்து வருகிறது. ஆரம்ப முதல் இன்று வரை ஸ்ரீமான் குண்டப்பாதான் அதன் காரியதரிசி.

காலட்சேபம்

உமாமகேச்வர பாகவதருக்குப் பூர்விகமாகக் கொஞ்சம் ஆஸ்தியிருந்தது. அதுவும் தவிர அவர் ஹரிகதா காலட்சேபம் செய்வதில் தென்னாடெங்கும் புகழ் பெற்றிருந்தார். அவருடைய காலட்சேபத்துக்கு நல்ல கிராக்கியும் இருந்தது. ஆகையால் அவருக்குச் சுமாரான வரும்படியும் கிடைத்துக்கொண்டு தான் இருந்தது. ஆனாலும் உமாமகேச்வர பாகவதர் என்ற ஹோதாவில் பார்க்காமல் மூன்று பெண்களின் தந்தையான ஒரு தென்னிந்தியர் என்ற ஹோதாவில் பார்த்தால் அவர் ஓர் ஏழைதான்.

தியாகேசர் தரிசனம்

சுந்தரர் மெதுவாக — ரொம்ப ரொம்ப மெதுவாகக் கண்ணிமைகளை உயர்த்தினார். தம்மைச் சூழ்ந்திருந்த அடியார்க் கூட்டம், பக்தர் குழாம், மக்கள் மந்தை, தம்மைத் தனியே விட்டுப் பிரிந்து சென்றதையும் அவர் உணரவில்லை. அவருடைய திறந்த கண்கள் நேர் எதிரே சர விளக்குகளின் பக்கவாட்டு ஒளியில் மங்கலாகத் தெரிந்த தூணைத்தான் கண்டன. நிதானமாக ஓர் ஏக்கப் பெருமூச்சுக்கு அபிநயம் பிடிப்பது போல முகத்தை இடப்புறம் திருப்பினார். கண்ணீர்த் திரையினூடே எதிரில் குறும்புப் புன்னகையுடன் காட்சியளிக்கும் தியாகேசனின் திவ்ய ரூபம் தரிசனம் அளித்தது. அந்த முகத்தில் பரவியிருந்த இளநகையில் கலந்து தெரிந்த பரிகாசமும் அவரது நெஞ்சில் மிக மிகக் கொடிய ஒரு வேதனையை எழுப்பியது. அவரது நெஞ்சம் நெருப்பில் விழுந்த ஒரு புழுப் போலத் துடித்தது. ஒரு விநாடி கண்ணை மூடினார். நெஞ்சிலே, கற்பனையின் அடி ஊற்றிலே ஏதோ சலனம் கண்ட உணர்ச்சி. அதை அழுத்தி வருத்தும் துன்பத்தின் ஓட்டம் குரலாக ஒலிக்க முயலுகிறது. முகத்தில் அந்த வேதனையின் — கவிதை பிறக்குமுன் கவிஞனின் உள்ளக் கொந்தளிப்பை எடுத்துக் காட்டும் துடி துடிப்பின் சாயை படர்ந்தது.

திருமூலர் தவமொழி

ராஜாஜி - சோமு

30

ஈசுவரானுபவத்திலே உள்ளம் தோய்ந்து, அந்தத் தெய்வப் பரவசத்திலிருந்து எழுந்த பாடல்களே திருமந்திரப் பாடல்கள். சாதாரண மன மகிழ்ச்சி வேறு; அறிவுக்கு அப்பாற்பட்ட பேரின்பம் வேறு. திருமூலர் இந்தப் பேரின்ப நிலையில் தமது பாடல்களைப் பாடியிருக்கிறார்.

இறைவன் எங்குமாகி நிற்கிறான். மனித உள்ளத்துக்குள்ளும் நிற்கிறான். வெளியேயும் நிற்கிறான். இதைப் பாடுகிறார் முனிவர்.

உள்ளத்தும் உள்ளன்
புறத்துள்ளன் என்பவர்க்கு
உள்ளத்தும் உள்ளன்
புறத்துள்ளன் எம்இறை

மனித உள்ளத்துக்குள்ளும், இதற்கு வெளியேயும் இருக்கிறான் என்று உணர்ந்து இறைஞ்சுகிறவர்களுக்கு, இறைவன் அவ்வண்ணமே உள்ளத்தின் உணர்விலும் உள்ளத்திற்கு வெளியேயுள்ள பொருள்களிலும் தோற்றம் தருகிறான்.

உள்ளத்தும் இல்லை
புறத்தில்லை என்பவர்க்கு
உள்ளத்தும் இல்லை
புறத்தில்லை தானே!

இறைவன் உள்ளத்திலும் இல்லை, வெளியேயும் இல்லை என்று சொல்பவர்களைப் பற்றி நாம் கூற என்ன உண்டு? அவர்களுக்கு இறைவன் மனித உள்ளத்திலும் இல்லை, வெளியேயும் இல்லை. அந்த இன்பம் அவர்களுக்குக் கொடுத்து வைக்கவில்லை.

உள்ளத்தும் உள்ளன்
புறத்துள்ளன் என்பவர்க்கு
உள்ளத்தும் உள்ளன்
புறத்துள்ளன் எம்இறை;
உள்ளத்தும் இல்லை
புறத்தில்லை என்பவர்க்கு
உள்ளத்தும் இல்லை
புறத்தில்லை தானே!

உளன் என்பவர்க்கு அவன் அருள்கிறான். இலன் என்பவர்கள் அவன் அருளை அடையாமல் வீணே நஷ்டப்படுகிறார்கள். 'உள்ளத்துக்குள்ளும் மற்ற எல்லாப் பொருள்களிலும் இறைவன் பரந்து நிற்கிறான்; இவைகளுக்கு அப்பாற்பட்டு வெளியேயும் நிற்கிறான்' என்பது உபநிஷத்து. அதையே முனிவரும் பாடுகிறார். உள்ளத்தில் உள்ளான் என்பவர்கள் இறைவனைத் தியானிக்கிறார்கள். புறத்திலும் இறைவன் எங்கும் பரவி நிற்கிறான் என்று உணர்ந்தவர்கள் அவனைப் பல்வேறு முறைகளில் வழிபடுகிறார்கள். தியான மார்க்கத்தில் உள்ளவர்களையும் மூர்த்தி வழிபாடு செய்கிறவர்களையும், இருவகைப் பக்தர்களையும், சேர்த்துப் பாடுகிறார் முனிவர்.

தெய்வப் பேரின்பம் என்பது உள்ளத்தின் உணர்வில், தானே கண்டு அனுபவிக்க வேண்டிய ஓர் அனுபவம். இந்த அனுபவப் பொருளைப் பற்றி இப்படி அப்படி என்று பேசுகிற வெறும் இலக்கண ஆராய்ச்சியினால் பயனில்லை. அது உள்ளம் தோய்ந்து அனுபவிக்க வேண்டிய ஆனந்தம். இந்த ஆனந்த அனுபவத்தைப் பெறுவதற்கு ஏற்பட்டுள்ள வழிகளும், வாழ்க்கை முறைகளுமே சமயங்கள். இவற்றைப்பற்றிக் கூறுகிறார் முனிவர்.

சைவம், பாசுபதம், மாவிரதம், காளாமுகம், வாமம், வைரவம் என்று வகுக்கப்பட்ட பழைமையான ஆறு

சமயங்கள் உண்டு. இந்த ஆறு சமயங்களும் இறைவனை அடைவதற்கு என்றே ஞானியர்களால் வகுக்கப்பட்ட ஆறுவிதமான அனுபவ மார்க்கங்கள். இந்தக் காலத்தில் இருப்பது போலவே திருமூலர் காலத்திலும் சமயவாதிகளிடையே பேதங்களும் வாதங்களும் ஏற்பட்டன. இந்தச் சமயங்களின் இலட்சியமாகிய பரம்பொருளை மறந்துவிட்டு, இந்தச் சமயங்களுக்குள் உயர்வு தாழ்வு சொல்லிச் சச்சரவிடுவது தவறு என்பதைப் பாடுகிறார் மூனிவர்.

ஒன்றது பேரூர்
  வழிஆறு அதற்குள
என்றது போல
  இருமுச் சமயமும்

[இரு மூச்சமயமும்—இரு மூன்று, ஆறு சமயங்களும்]

போய்ச் சேர வேண்டிய பெரிய ஊர் ஒன்று. அந்த நகரத்துக்கு ஆறு பாதைகள் உள்ளன. அது போலத்தான் ஆறு சமயங்களும் என்கிறார் திருமூலர்.



சேர வேண்டிய ஊரை மறந்துவிட்டு வழிகளைப் பற்றிச் சச்சரவு வேண்டாம் என்று பொருள்படப் பாடினார். இலட்சியத்தை மறந்துவிட்டு வீணாகச் சச்சரவிடுவதை வன்மையாகக் கண்டித்து மேலும் பாடுகிறார்.

நன்றிது தீதிது
  என்றுரை யாளர்கள்
குன்று குரைத்தெழு
  நாயைஒத் தார்களே

இப்படி வழிகளைப் பற்றித் தாழ்வு உயர்வு என்று சச்சரவிடும் சமயிகளை, உதயமலையிலிருந்து எழுகிற சந்திரனைக் கண்டு குலைக்கும் நாய்க்குச் சமமாக்கிக் கூறுகிறார் மூனிவர். பரம்பொருளை மலையாகவும், வாதங்களை ஞானமற்ற நாயின் குரைப்பாகவும் வைத்துப் பாடினார்.

ஒன்றது பேரூர்
  வழிஆறு அதற்குள
என்றது போல
  இருமுச் சமயமும்
நன்றிது தீதிது
  என்றுரை யாளர்கள்
குன்று குரைத்தெழு
  நாயைஒத் தார்களே!

பல வகையாகப் பெயர்களிட்டு அந்தப் பெயர்க் குழப்பத்தில் மயங்கி நிற்கும் மடமையைப் பற்றி மேலும் பாடுகிறார் மூனிவர்.

இத்தவம் அத்தவம்
  என்றிரு பேரிடும்
பித்தரைக் காணில்
  நகும்எங்கள் பேர்நந்தி

[இரு பேரிடும்—ஒன்றினின்று ஒன்றை வேறாகப் பிரித்து அவற்றிற்குப் பெயர்கள் இட்டு வருகிற. பித்தரை—அறிவற்றவர்களை. காணில்—கண்டு. நகும்—சிரிப்பான். பேர்நந்தி—பெருமானாகிய நந்தி.]

தவத்திற்கு வேறு வேறாகப் பெயர்கள் கற்பித்துக் கொண்டு மயங்கும் பித்தர்களைக் கண்டு எம்பெருமான் சிரிப்பான் என்கிறார்.

எத்தவம் ஆகிலென்
  எங்குப் பிறக்கிலென்
ஒத்துணர் வார்க்குஒல்லை
  ஊர்புக லாமே!

[ஆகிலென்—ஆனால் என்ன? ஒத்துணர்தல்—இறைவனோடு பொருந்தி உணர்வு தோய்ந்து நிற்றல். ஒல்லை—சீக்கிரம்.]

எவ்வகையான தவமானால் என்ன, எந்த மார்க்கத்தைக் கடைப்பிடித்தால் என்ன, எந்த ஜாதியில் அல்லது சமயத்தில் பிறப்பு எடுத்திருந்தால் என்ன? தெய்வ உணர்விலே உள்ளம் ஒன்றித்து நிற்பவர்களுக்குச் சீக்கிரமே முக்தி சித்திக்கும். ஊர் புகுதல்—இறைவன் அடி சேர்தல்.

இத்தவம் அத்தவம்
  என்றிரு பேரிடும்
பித்தரைக் காணில்
  நகும்எங்கள் பேர்நந்தி
எத்தவம் ஆகிலென்
  எங்குப் பிறக்கிலென்
ஒத்துணர் வார்க்கு,ஒல்லை
  ஊர்புக லாமே!

சமய பேதங்கள் அனைத்தும் ஒருருக்குப் போகும் வழிகள் பல இருப்பது போல் என்று, முற்றறிவு அடைந்த எல்லா ஞானிகளும் வற்புறுத்துகிறார்கள். யாதேனும் ஒரு வழியைப் பிடித்துச் செல்லும்போது வழியில் மற்றப் பாதைகளைப் பற்றி ஒருவன் மனம் செலுத்தலாகாது. எந்த வழியைப் பிடித்தோமோ அந்த வழியில் சிரத்தையோடு செல்ல வேண்டும். அதில் வைத்த நம்பிக்கை குறையலாகாது. இந்த உண்மையை உணர்ந்தோமானால், அவரவர் தத்தம் சமயத்தை உயர்த்திச் சொல்வதன் காரணத்தை அறிவோம். அறிந்து அதைக் குற்றமாகக் கருத மாட்டோம். பல முறைகளைப் போலவே பல்வேறு இஷ்ட தேவதைகளும். வழிபடுகிறவன் தன் தெய்வத்தை உயர்த்திச் சொல்வதனால் பிற தெய்வங்களைக் குறைத்ததாகாது. இதுவே பாரத நாட்டுச் சமயங்களின் சிறப்பான லக்ஷணம். ஒரு மார்க்கத்தில் ஈடுபட்டிருக்கிறவன் பிற மார்க்கத்தில் ஈடுபட்டிருக்கிறவனைக் குற்றத்தைச் சகித்துக் கொள்வதுபோல் சகித்துக் கொண்டால் மட்டும் போதாது. அவனுக்கு அதுவே சிறந்த வழி என்பதை உணர்ந்து நம் வழியில் நாம் செல்ல வேண்டும். இதுதான் நம் பெரியோர்களின் உபதேசம்.

கதைக்கு ஒரு

கனிச் சுரங்கம்

கி. ராஜேந்திரன்

(சென்ற வாரத் தொடர்ச்சி)

கொள்ளிவாய்ப் பிசாசுகள் அல்ல அவை! தொழிலாளர்கள் சிலர் தங்கள் தலைப்பாகையில் அணிந்திருந்த பாட்டரி மின் விளக்குகள்!

வேலை மும்முரமாக நடைபெறும் பகுதிக்கு வந்து விட்டோம் என்பதை உணர்ந்தேன்.

''ஆகட்டும், ஆகட்டும்!'' என்று தொழிலாளர்களை வேலை மீது ஏவி விட்டார் ஸ்ரீ பிரதான். அவ்வளவுதான், ஒரே சமயத்தில் எங்கள் எதிரே ஐந்தாறு இயந்திரங்கள் செயல் புரிய ஆரம்பித்தன. அகரப் பற்களைச் சங்கிலியாகக் கோத்து வைத்திருந்த ஓர் இயந்திரம் இயங்கியது. சைக்கிள் சங்கிலி சுற்றி வருவது போலத்தான் இந்தச் சங்கிலியும் சுழன்றது. அதில் பதிந்திருந்த ராட்சதக் கோரைப்பற்கள் கடகடவென்ற ஒலியுடன் சுழன்று வந்து நிலக்கரிப் பாறையைக் கவ்விக் கடித்துத் துண்டாக்கி உமிழ்ந்தன.

இன்னொரு பக்கத்தில் வெடி மருந்தின் உதவியால் துண்டு துண்டாக்கப்பட்ட நிலக்கரி குவியலாகக் கிடந்தது. பிரம்மாண்டமான ஒரு நட்டுவாக்களி இயந்திரம் அதனை நோக்கி ஊர்ந்து நகர்ந்தது. முன்புறமிருந்த இரு பெரிய கரங்களை விரித்து மடக்கி நிலக்கரித் துண்டங்களைப் பேராசையுடன் அள்ளிச் சேகரித்து வாயினுள்ளே தள்ளி விழுங்கியவாறே மெல்ல முன்னேறியது. வயிறு நிரம்பியதும் 'ஷட்டில்' எனப்படும் அந்த நட்டுவாக்களி யந்திரம் பின்னுக்கு நகர்ந்தது. அத்தனை நிலக்கரியையும் ஒரு வாகனில் கக்கியது. மீண்டும் பழையபடியே கரியைக் கவளமாக்கி உண்ணப் போய் விட்டது!

கரியைச் சுமந்து கொண்டு தண்டவாளங்களின்மீது நகர்ந்தது வாகன். நாங்களும் அதன் பின்னோடு போனோம். சற்றுத் தூரம் சென்றதும் ஒரு ஷெட்டுக்குள்ளே போய் நின்று விட்டது வாகன்.

சரி, வண்டியை ஷெட்டில் நிறுத்தி விட்டார்கள், கதை முடிந்தது என்று நினைக்கையிலேயே திடுதிப்பென்று அந்த வாகன் ஒரு பல்டி அடித்தது. 'அட, ராமா! யார் அதன் சக்கரத்தை வாரி விட்டார்கள்!' என்று யோசித்தேன்.

''ஐயையோ! வண்டியிலிருந்த அத்தனை நிலக்கரியும் கொட்டியிருக்குமே'' என்று துக்கப்பட்டேன்.

''கொட்டுவதற்காகத் தானே இங்கே கொண்டு வந்தோம்'' என்றார் ஸ்ரீ பிரதான்.

பிறகுதான் அந்த ஷெட்டு, வாகனைத் தலைகீழாகக் கவிழ்ப்பதற்கென்றே ஏற்பட்ட ஓர் இயந்திரம் என்பது புலனாயிற்று.

''ஷெட்டுக்குக் கீழே நிலக்கரியைச் சேமித்து வைத்திருக்கிறீர்களா என்ன?''

''இல்லை, இல்லை! ஷெட்டு போலத் தோன்றும் இந்த இயந்திரத்துக்கு அடியில் அகலமான 'பெல்டு' ஒன்று உருளைகள்மீது நகர்ந்து கொண்டேயிருக்கிறது. அந்த பெல்டு மீது இந்த நிலக்கரி விழும். நிலக்கரியை ஏந்திக் கொண்டு 'கன்வேயர் பெல்டு' பூமியின் மேல் மட்டத்துக்குச் செல்லும்.''

''அப்புறம்?''

''உயரே சென்றதும் அவை ரகவாரியாகப் பிரிக்கப்படுகின்றன.''

''தரத்திலா?''

''இல்லை, அளவில். தரம் வேறுபடாது ஒரே மாதிரியாகத்தான் இருக்கும்.''

''ஒரே மாதிரி யென்றால்? உயர்தரமாகவா?''

''இந்தியாவில் வெட்டி எடுக்கப்படும் நிலக்கரிகளுள் சிங்கரேணி நிலக்கரிதான் சாலச்சிறந்தது என்று நான் சொல்லத் தயாராக இல்லை. என்றாலும், உயர்தரமான நிலக்கரிதான்.''

''சரி, நீங்கள் குறிப்பிட்டபடி கரியை ரகவாரியாகப் பிரிக்க ஏராளமான ஆட்கள் தேவைப்படுவார்களே?''

''அவசியமில்லை; அதற்கும் மாபெரும் இயந்திரங்கள் உள்ளன. பிரிக்கப்பட்ட பிறகு பெல்டுகளில் பிரயாணம் செய்யும் நிலக்கரி ரயில்வே ஸைடிங்குகளுக்கு அருகில் சென்று நேரடியாக ரயில் வாகன்களில் விழுகின்றன!''

''அப்படியானால் சுரங்கத்தினுள்ளே நிலக்கரியை வெட்டி எடுக்கத் தொடங்கும் முதல் கட்டத்திலிருந்து ரயில் வாகன்களில் ஏற்றி நாட்டின் பல்வேறு பகுதிகளுக்கும் அனுப்பி வைக்கும் இறுதிக் கட்டம் வரையில் மனிதக் கரங்கள் நிலக்கரியைத் தீண்டுவதே கிடையாது, என்கிறீர்களா?''

நிலக்கரி ரகவாரியாகப் பிரிக்கப்படுவது இங்கேதான் .... காடு நாடாகிறது







''ஆமாம்; அதையேதான் சொல்கிறேன், இந்தச் சுரங்கத்தைப் பொறுத்த வரையில். இப்படி இயந்திர மயமாக்கப்படாமல் மனித முயற்சியில் முன்னேற்றம் காணும் இந்தக் கம்பெனியைச் சேர்ந்த வேறு பல சுரங்கங்களும் உண்டு.''

''இப்படி எல்லாவற்றையும் இயந்திர மயமாக்கிக் கொண்டே போனால் மக்களுக்கு வேலை வாய்ப்புக் குறைகிறதே! நம் நாட்டின் மிகப் பெரிய பிரச்னையல்லவா அது?''

''உண்மைதான்; உற்பத்தி பெருக இயந்திரங்களை உபயோகிக்கத்தான் வேண்டும். இயந்திரங்களைப் பயன்படுத்தினால் வேலை வாய்ப்பு குறையத்தான் செய்யும். கூழுக்கும் ஆசை; மீசைக்கும் ஆசை என்றால் என்ன பண்ணுவது? நிஜத்தைச் சொல்ல வேண்டுமானால் ஆட் குறைப்புச் செய்ய முடியாத காரணத்தால் நாங்கள் விரும்பிய அளவுக்கு இது போன்று சுரங்கங்களையெல்லாம் இயந்திர மயமாக்க இயலவில்லை. ஏற்கனவே





இரும்புத் தொப்பி அணிந்து சுரங்கத்தினுள் இறங்கத் தயாராயிருக்கிறார் ராஜன்பாபு....ஆகாய மார்க்கமாக மணல் வந்துகொண்டிருக்கிறது....குழந்தைகள் கூடிக் குதூகலிக்கக் கண் கவர் பூங்கா.

பழைய சுரங்கங்களை நிலக்கரி தீர்ந்து போகவே மூடி விட்டபடியால் தேவைக்கு அதிகமாகச் சுமார் ஐயாயிரம் தொழிலாளர்கள் எங்களிடம் வேலையில் இருக்கிறார்கள்.''

''தர்மசங்கடமான நிலைதான். இயந்திர மயமாக்குவதால் அப்படி எவ்வளவு உற்பத்தி அதிகமாகிறது?''

''1950-ல் இப்போதுள்ள மானேஜ்மெண்டார் பொறுப்பேற்றுக் கொண்டபோது ஒரு ஷிப்டில் 0.25 டன் நிலக்கரிதான் உற்பத்தியாயிற்று. உலகில் மற்ற நாடுகளுடன் ஒப்பிடும் போது இது மிகவும் குறைவு. ரொம்பவும் பிரயாசைப்பட்டு இதனை 0.75 டன் ஆக உயர்த்தினார்கள். ஆனால் இயந்திரங்களை உபயோகித்தோமானால் சராசரியாக ஷிப்டு ஒன்றுக்கு மூன்று டன்கள் வரை உற்பத்தி செய்ய முடிகிறது. சில சாதகமான சூழ்நிலைகளில் ஷிப்டுக்குப் பத்து டன்கள் கூட உற்பத்தி செய்திருக்கிறோம். அத்துடன் இயந்திரங்களைப் பயன்படுத்துவதால் உற்பத்திச் செலவு குறைகிறது.''

சுரங்கத்தினுள் புகும்போது அந்தப் புது அனுபவம் தலையைச் சுற்றச் செய்ததென்றால் திரும்பிச் செல்லுகையில் நான் கேள்விப்பட்ட புள்ளி விவரங்கள் தலையைச் சுற்ற வைத்தன!

நாங்கள் பார்வையிட்ட சுரங்கத்தின் அதிகபட்ச நீளம் அரை மைலுக்கும் அதிகம். அதிகபட்ச அகலம் கால் மைலுக்கும் மேற்பட்டது! இத்தனைக்கும் இது ஒரு சிறிய சுரங்கம்தான்! நிலக்கரியை வெட்டி எடுக்கப் பூமி மட்டத்திலிருந்து ஆயிரம் முதல் இரண்டாயிரம் அடி ஆழம் வரை கீழே இறங்கிப் போக வேண்டும்!

சிங்கரேணி நிலக்கரிக் கம்பெனியார் எண்ணூறு சதுர மைல் பரப்பளவுள்ள பூமியில் சுரங்கங்கள் வெட்ட அனுமதி பெற்றிருக்கிறார்கள். இவற்றில் கிட்டத்தட்ட 344 சதுர மைல் பரப்பளவுள்ள பூமியில் இது போன்ற ஏராளமான சுரங்கங்கள் வெட்டி அபிவிருத்தி கண்டிருக்கிறார்கள். நடைபெறுகிற ஆண்டில் முப்பது லட்சம் டன் நிலக்கரியை உற்பத்தி செய்வார்கள். மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இது மேலும் அதிகமாகும்.

''என்றைக்காவது ஒரு நாள் எல்லா நிலக்கரியும் தீர்ந்து போய் விட்டால் நீங்கள் என்ன செய்வீர்கள்?''

"இன்னும் நூற்றுக்கணக்கான வருஷங்களுக்கு அதைப் பற்றிய கவலே எங்களுக்குக் கிடையாது. இந்தப் பிரதேசத்தில் அத்தனே நிலக்கரி இருக்கிறது!" என்று பதில் பிறந்தது. இப்படிப் பேசிக் கொண்டே விருந்தினர் விடுதியை அடைந்தோம். டெபுடி ஜெனரல் மானேஜர் ஸ்ரீ கர்வாண்டே அவர்களும் ஸ்ரீ பிரதான் அவர்களும் போட்டி போட்டுக் கொண்டு அன்பு காட்டி உபசரித்தார்கள். உணவருந்தும் போது, தங்கள் ஜெனரல் மானேஜர் ஸ்ரீ நர்குண்ட்கரிடம் அவர்கள் கொண்டிருந்த பெருமதிப்பும் அப்போது வெளியாயிற்று. அவர் பொறுப்பேற்றுக் கொண்ட பிறகுதான் பற்பல விதங்களிலும் அபிவிருத்திகள் ஏற்பட்டுள்ளன என்று அறிந்து கொண்டோம்.

அலேந்த சிரமமும் அளவுக்கு அதிகமாக உண்ட களேப்பும் ஒன்று சேர அசதி தாங்காமல் அயர்ந்து தூங்கி விட்டேன் நான்.

"ஸார்! ஸார்!" என்று யாரோ உலுக்கி எழுப்பினுர்கள். கண் விழித்தேன்.

"எழுந்திருங்கள் ஸார்! ஆஸ்பத்திரிக்குப் போக வேண்டும்" என்றார் சோமராஜு.

சவுக்கடி பட்டது போல் எழுந்து உட்கார்ந்தேன். "சே, சே! அதற்கெல்லாம் ஒன்றும் அவசியமில்லே ஸார்!" என்றேன்.

"அதெல்லாம் முடியாது! கண்டிப்பாக உங்களை ஆஸ்பத்திரிக்கு அழைத்துச் சென்று காட்டத்தான் போகிறேன்."

"ஸார், ஸார்! இந்த ஒரு தடவை மட்டும் என்னை விட்டு விடுங்களேன், ப்ளீஸ்!"

"நோ, நோ! நடக்கவே நடக்காது!"

"அட, ராமா! இனிமேல் நிறையச் சாப்பிட வில்லே ஸார்! அளவாகச் சாப்பிடுகிறேன். நிஜமாகச் சொல்கிறேன். மத்தியானம் தின்றதெல்லாம் நன்முக ஜீரணமாகி விட்டது!"

சோமராஜு சிரித்தார். "இந்தக் கம்பெனியைச் சேர்ந்த ஆஸ்பத்திரியைப் பார்வையிடாமல் நீங்கள் சென்னே திரும்ப அனுமதிக்கவே மாட்டோம். தொழிலாளர்கள் உழைப்பதை மட்டும் நீங்கள் நேரில் கண்டால் போதுமா? அவர்களுக்கு நாங்கள் செய்து தரும் வசதிகளே அறிந்துகொள்ள வேண்டாமா?"

"ஓஹோஹோ!" என்று நிம்மதியாக நீட்டி முழக்கியபடியே எழுந்து நெட்டி முறித்தேன். "அப்படியானுல் சரி, கிளம்புங்கள்!"

ஆஸ்பத்திரியின் மருத்துவ அதிகாரி டாக்டர் குரே எங்களுக்கு அறிமுகமானுர். "என்ன சுரங்கங்களே யெல்லாம் சுற்றிப் பார்த்தீர்களா? உங்கள் அபிப்பிராயம் என்ன?" என்று கேட்டார்.

"கம்பெனி ரொம்ப ஜோராக நடக்கிறது!"


"அதைத் தெரிந்து கொள்ளச் சுரங்கத்திநுள்ளே இறங்க வேண்டுமாக்கும்! உங்கள் பின்னேடு வரும் கம்பெனி உத்தியோகஸ்தர்களின் தொந்தியைப் பார்த்தால் போதாதோ?" என்றார் டாக்டர் குரே.

சில வருஷங்களுக்கு முன்பு வரை சுரங்கத் தொழிலாளர்கள் பயங்கரமான விபத்துக்களுக்கு ஆளானதுண்டு. இப்போதெல்லாம் விபத்துக்கள் ரொம்பவும் குறைந்து விட்டனவாம். சகல வசதிகளுடன் கூடிய அந்த ஆஸ்பத்திரியில் காலியாகவே கிடந்த பல கட்டில்கள் இதனே உறுதிப்படுத்தின. விடைபெற்றுக் கொண்டு கிளம்பினேம். தொழிலாளர்களுக்காகக் கட்டித் தரப்பட்ட வீடுகள்; குழந்தைகளுக்கான பூங்காக்கள்; மாதர் நல விடுதிகள்; ஆடவர் பொழுது போக்கும் கிளப்புகள் ஆகியவற்றை யெல்லாம் கண்டு களித்தோம்.

மறு நாள் காலேயில் நாங்கள் சென்றடைந்த இடம் வனந்திரமான ஒரு பிரதேசம். அங்கே மரங்கள் வெட்டிச் சாய்க்கப்பட்டன. பாறைகள் பிளந்து தகர்க்கப்பட்டன. நிலத்தைச் சமனப்படுத்திப் பாதைகள் அமைத்தனுடன் வீடுகளும் எழுப்பிக் கொண்டிருந்தனர். காடு நாடாவதைக் கண் முன்னே கண்டோம்.

ஒரு சுரங்கத்திலுள்ள எல்லா நிலக்கரியையும் வெட்டி எடுத்தாகிவிட்டது. அதை மூடி விடுவதைத் தவிர வேறு வழியில்லே. அப்போது என்ன ஆகும்? நூற்றுக்கணக்கானேருக்கு வேலேயே இல்லாமல் போகும். உற்பத்தியும் கணிசமாகக் குறையும். மேற்கொண்டு என்ன செய்வது? புதிதாகச் சுரங்கம் தோண்ட வேண்டும். சும்மாயிருப்போருக்கு வேலே வாய்ப்புத் தந்து உற்பத்தியையும் பெருக்க வேண்டும். புதிய சுரங்கம் காட்டினூடே எங்கோ தொலேவில் அமைகிறது. தாங்கள் குடியிருக்கும் இடத்திலிருந்து தினந்தோறும் பல மைல்கள் பிரயாணம் செய்து தொழிலாளர்கள் வேலேக்கு வரமுடியுமா? வண்டிச் சத்தம் ஏராளமாக ஆகுமே? ஆகவே புதிய சுரங்கத்தைச் சுற்றிலும் காட்டை அழித்துத் தொழிலாளர்களுக்குப் புதிய வீடுகள் எழுப்ப வேண்டும். குடும்பத்துடன் அவற்றில் வந்து தங்கி விட்டால் பிறகு அவர்களின் குழந்தைகளுக்கு அருகிலேயே பள்ளிகள் வேண்டும். மின்சாரம், தண்ணீர் வசதி, சாலேகள், மாதர் நல விடுதிகள், கிளப்புகள் ஆகியனவும் தேவை. பிரும்மப் பிரயத்தனம்தான்!

இப்படியே புதிது புதிதாகத் தொழிலாளர் காலனிகள் உருவாகிக் கொண்டே போகின்றன. அவர்கள் காலி செய்த பழைய வீடுகளே விற்று விடுவார்கள்.



நட்டுவாக்களி யந்திரம்...

சுற்று வட்டாரத்தில் புதிதாக இயங்கத் தொடங்கியிருந்த சுரங்கத்தின் மானேஜர் ஸ்ரீ ஸ்ரீனிவாசன் ஒரு கீற்றுக் கொட்டகையைத் தாற்காலிக் காரியாலயமாக்கிக் கொண்டு, உற்சாகமாகப் பணியாற்றி வந்தார். அவர் மேஜை மீது கிடந்த ஒரு காகிதத்தில் கட்டம் கட்டமாகக் கோலம் போட்டிருந்தது.

"என்ன ஸார், இது?" என்று வினவினேன்.

"அதுவா? ஒரு டப்பாவின் மூடியைத் திறப்பது போல நிலக்கரிச் சுரங்கத்தின் மேலே இருக்கும் நிலப் பகுதியைத் தட்டித் திறந்து விடுகிறோம் என்று வைத்துக் கொள்ளுங்கள். அப்போது மேலேயிருந்தவாறே அல்லதுபறந்த

வாறே கீழே குனிந்து சுரங்கத்தைப் பார்த்தால் அது அளிக்கும் காட்சி இதுதான்.''

''ஓ! பிளானா?''

''ஆமாம், பிளானேதான்! இதோ சதுரமான கட்டங்கள் உள்ளன அல்லவா? அவையெல்லாம் நிலக்கரித் தூண்கள். ஒவ்வொரு தூணைச் சுற்றியும் நாலாபுறமும் பாதைகள் அமைந்திருக்கின்றன.''

''அடே! நேற்று பாய் அவர்கள் குறிப்பிட்ட மின்சார விசிறிகூட இதோ காண்பிக்கப்பட்டிருக்கிறதே!''

''கரெக்ட்! முதலில் இந்தப் பாதைகளையெல்லாம் உண்டாக்குவோம். பிறகு சுரங்கத்தின் இறுதிக் கோடியிலிருந்து தூண்களைத் தகர்த்து நிலக்கரியை உயர அனுப்பிக்கொண்டே சிறிது சிறிதாக முன் வாசலை நோக்கிப் பின்வாங்கி வருவோம்.''



பத்து யானைகளை அடைக்கக் கூடிய பள்ளங்கள்...

''சரிதான்! நிலக்கரித் தூண்களை ஒவ்வொன்றாகத் தகர்த்துக் கொண்டே வந்தால், அவை இருந்த பகுதிகள் வெற்றிடமாகி விடுமே. அப்போது மேலே உள்ள கூரை கீழே தாங்குதல் இல்லாமல் அமுங்கி விழுந்து விடாதா? பூமியின் மேல் மட்டத்தில் பெரிய பள்ளமாகவல்லவோ ஆகிவிடும்?''

''அப்படி நேராதிருக்கவும் ஏற்பாடுகள் செய்திருக்கிறோம். வாருங்கள், காட்டுகிறேன்'' என்று ஸ்ரீ ஸ்ரீனிவாசன் எங்களை அழைத்துப் போனார்.

பிரம்மாண்டமான கங்காளம் ஒன்றை விளிம்பு வரை பூமியிலே புதைத்து வைத்தது போன்ற அமைப்புக் கொண்ட ஓர் இடத்துக்குப் போய்ச் சேர்ந்தோம். வட்ட வடிவமான அதன் சுவர் பலமாக அமைக்கப்பட்டிருந்தது. எல்லையில் நின்று எட்டிப் பார்த்தால் தலை சுற்றவைக்கும் கிடுகிடு பாதாளம். அடிவாரத்திலே ஒரு கதவு.

''இதிலே ஆற்று மணலைக் கொண்டு வந்து நிரப்புவோம். பிறகு அதோ கீழே தெரிகிறதே, அந்தக் கதவைச் சுரங்கத்தினுள்ளே இருந்தபடி திறந்தால் மணல் சுரங்கத்தினுள் விழும். அங்கே குழாய்கள் வழியே விரைந்து பாயும் தண்ணீர் இந்த மணலையும் அடித்துச் செல்லும். தண்ணீருடன் கலந்து நீங்கள் குறிப்பிட்ட வெற்றிடங்களுக்கு மணல் போய்ச் சேர்ந்து அடைந்து கொள்ளும். வடித்து விடும் தண்ணீரை விசைப் பம்புகளின் உதவியால் வெளியேற்றி விடுவோம்.''

''அதெல்லாம் சரிதான். பத்து யானைகளை அடைத்து வைக்கக்கூடிய இந்தப் பெரிய பள்ளத்தை மணலால் நிரப்புவதென்பது இலேசான காரியமா? யானையைக் கட்டித் தீனி போடுவது போலத்தானே; அல்லது அதைவிடக் கடினமோ?''

ஸ்ரீனிவாசன் மெல்லச் சிரித்துக்கொண்டே, ''கொஞ்சம் அண்ணாந்து பார்த்தால் மணல் தானாகவே ஆகாய மார்க்கமாக வருவதைக் காண்பீர்கள்!'' என்றார்.

''என்ன! என்ன!'' என்று வியப்புடன் கேட்டவாறே கழுத்தை இலேசாக ஒடித்தேன். ஸ்ரீனிவாசன் கூறியது போல் மணல் உண்மையாகவே ஆகாய மார்க்கமாகத்தான் வந்து கொண்டிருந்தது.

தென்னை மர உயரத்தில் இழுத்துக் கட்டப்பட்டிருந்தன இரு இரும்புக் கயிறுகள். ஆதியும் அந்தமுமில்லாமல் தந்திக் கம்பி போல் நீண்டிருந்த அந்தக் கேபிள்களுள் ஒன்றிலிருந்து பெரிய பாத்திரம் ஒன்று கீழே தொங்கியவாறே ஒய்யாரமாகச் சக்கரங்கள் உருள ஓடி வந்தது. மணலைத் தாங்கி வந்த அந்தப் பாத்திரம் அதனைக் கொட்ட வேண்டிய பள்ளத்தை அடைந்ததும் சொல்லி வைத்தாற் போல் குட்டிக்கரணம் போட்டது. பாரம் நீங்கப் பெற்று நிமிர்ந்து நேராகப் போய் விட்டது. இப்படி ஒன்றன் பின் ஒன்றாக முடிவில்லாமல் பாத்திரங்கள் மணலை ஏந்தி வருவதும் சுமையைக் கொட்டித் தீர்த்து விட்டுச் செல்வதுமாய் இருந்தன. 'எவ்வளவு பெரியபள்ளமானால் என்ன? பார்த்து விடுகிறோம் ஒரு கை' என்று கூறிக் கொண்டே அவை நகருவதாய்ப்பட்டது எனக்கு! எங்கோ வெகு தூரத்தில் இருக்கும் ஆற்றிலிருந்து மணலை வாரிக் கொண்டு வருகின்றனவாம் அந்தப் பாத்திரங்கள். வெள்ளமானாலும், வறட்சியானாலும் மணலைக் கொணர்ந்தே தீருமாம்.

ஆகாயத் தண்டவாளங்களையும் அவற்றில் ஓடும் பெரிய 'பக்கெட்டு'களையும் பார்த்துக் கழுத்து வலி எடுக்கவே முகத்தைத் தாழ்த்தினேன்.

''ஒரு விஷயம், ஸார்!'' என்றேன்.

''என்ன சொல்லுங்கள்!''

''சுரங்கங்களிலுள்ள நிலக்கரியை யெல்லாம் எடுத்த பிறகு ஜனசஞ்சாரமற்று இருளடைந்து கிடக்கும் அந்தப் பயனற்ற குகையினுள்ளே அக்கிரமங்கள் பல நடக்குமாமே! நிஜம்தானா? நான் சில நாவல்களில் படித்திருக்கிறேன்!'' என்றேன்.

''அதெல்லாம் அந்தக் காலம்'' என்றார் ஸ்ரீனிவாசன். ''சுரங்கத்தின் ஆயுள் தீர்ந்ததும் வாயில்களையெல்லாம் அடைத்து 'ஸீல்' வைக்க வேண்டும் என்பது சட்டம் ஸார்! தெரிந்து கொள்ளுங்கள்; 'ஸீல்' வைக்க வேண்டும்!''

மிகவும் நீண்டு விட்ட இந்தக் கட்டுரைக்கும் 'முற்றும்' என்று ஸீல் வைப்பதற்கு முன்னால் ஒரே ஒரு விஷயம்.

இந்த இரண்டு நாட்களுக்குள் குறைந்தது இருபது முறையாவது தம் டயரியைப் பிரித்துக் குறிப்புகள் எழுதிக் கொண்டிருப்பார் ஸ்ரீ அகிலன்.

ரயிலில் சென்னை திரும்பிக் கொண்டிருக்கையில் அவரைக் கேட்டேன்: ''புதுவெள்ளத்துக்கு நல்ல சூழ்நிலை அகப்பட்டதோ இல்லையோ?''

''இந்தக் கரிச்சுரங்கம் என் கதையைப் பொறுத்த வரையில் ஒரு கனிச்சுரங்கம் ஸார்!'' என்று பதில் கிடைத்தது.

கதைக் கனியைச் சுவைக்கப் போகும் நாம் அதிர்ஷ்டசாலிகள்!

(முற்றும்)

புதுவெள்ளம்



அத்தியாயம் இருபத்தேழு

சிரித்தவன் குடும்பம்

துணிவோடு கடற்கரையில் வியாபாரம் செய்ய வந்த முருகையனுக்கு, அங்கு ஓர் அரை மணிநேரம் அலைந்து திரிந்த பிறகுதான், வியாபாரத்துக்கு வெறும் துணிவு மட்டிலும் போதாது என்பது புலப்பட்டது. பழக்கமில்லாத ஒரு வேலையில் இறங்கி விட்டு, பிறகு அதைப் பற்றிச் சிந்திக்கலானான்.

நாலா புறங்களிலுமிருந்தும், ''வேர்க் கடலை, பட்டாணி, சுண்டல்!'' என்ற குரல்களும், ''மிளகு வடை, முறுக்கு, சுண்டல்!'' என்ற குரல்களும் அலை மோதிக் கொண்டிருந்தன. பழக்கப் பட்ட விற்பனையாளர்கள் பம்பரம்போல் சுழன்று கொண்டிருந்தார்கள். முருகையனுக்கோ தொண்டைக்குள்ளிருந்து வார்த்தைகள் வெளி வரவே யில்லை! யார் யார் வாங்க மாட்டார்களோ, அவர்களிடம் சென்று மெல்லக் கேட்டான். யார் யார் வாங்குகிறவர்களோ அவர்களை விட்டு விட்டான்.

ஒரு மணி நேரம் சென்றது. ஓரணாவுக்குக்கூட விற்பனையில்லை. வீட்டிலிருந்து கொண்டு வந்த சாமான்கள் அப்படியே இருந்தன. ஒரு புறமாய் ஒதுங்கிச் சென்று சோர்வுடன் மணலில் உட்கார்ந்தான் முருகையன். மற்றவர்கள் சுறுசுறுப்போடு சுற்றித் திரிந்து கூவும் போது தன்னால் மட்டிலும் ஏன் அது முடியவில்லை?

முதல் நாள் மாலையில் சாந்தா பேசிய பேச்சுக்களை நினைத்துக் கொண்டான். அன்றைக்கு முழுதும் அவளும் மீனாட்சியும் சேர்ந்து கொண்டு தனக்காகப் பலகாரங்கள் செய்து கொடுத்ததை நினைத்துக் கொண்டான்.

'அவர்கள் யாரோ, நான் யாரோ? எதற்காக அவர்கள் இவ்வளவு உற்சாகத்துடன், பொருள்களைச் செய்து கொடுக்க வேண்டும்? கொண்டு போய் விற்றுக் கொண்டு வருவேன் என்ற நம்பிக்கையில் தானே செய்திருக்கிறார்கள்?'

'எதற்காக வெட்கப்பட வேண்டும்?- விற்பதற்கா? விற்காமல் திரும்பிப் போய் அவர்கள் முன்பு தலைகுனிந்து கொண்டு நிற்பதற்கா?'

பரந்து கிடந்த கடற்கரையான நாடக மேடையில், குவிந்து கிடந்த மனிதர்களுக்கு மத்தியில், மற்ற வியாபாரிகளைப் போலவே தானும் மாறிக் கொண்டு நடிக்கத் தொடங்கிவிட்டான் முருகையன். கடச் கடப் பண்டங்கள் இருப்பதாகக் கடச்கடச் சொற்கள் அவனிடமிருந்து வந்தன.

கூட்டத்துக்கு மத்தியிலிருந்த ஒரு குடும்பத்தார் முதலில் சிறிது அவனிடம் வாங்கினார்கள். சற்று நேரம் கழித்து, அவன் வேறொரு இடத்துக்குச் சென்றவுடன், அந்தக் குடும்பத்துக் குழந்தை ஓடி வந்து அவனை அழைத்துச் சென்றது. மீண்டும் அதிகமாக வாங்கினார்கள் 'அவர்கள். சுற்றி யிருந்தவர்





அகிலன்

களும் அவனைச் சூழ்ந்து கொண்டு காசுகளை நீட்டினார்கள். அவன் கொடுத்துச் சென்ற பொருள்கள் நன்றாக இருந்தனவாம்.

நல்ல பொருள்களாக இருந்தால் அவற்றுக்கு வரவேற்பும் உண்டு என்பதைக் கண்டு கொண்டான் முருகையன். அடுத்த ஒரு மணி நேரத்துக்குள் அவனுடைய தகரம் வெற்றுத் தகரமாகி விட்டது. சட்டைப் பையில் சில்லறைகள் குலுங்கின.

இந்தச் சமயத்தில், ''மாமா! ஒரு முறுக்கு!'' என்று சொல்லிக் காசை நீட்டினாள் ஒரு குழந்தை. திரும்பிப் பார்த்தான் முருகையன். சுந்தரத்தின் குழந்தைகளும் மற்றக் குழந்தைகளும் ஓடி வந்து அவனைச் சூழ்ந்து கொண்டார்கள். எல்லோரும் சொல்லி வைத்தாற்போல் காசுகளை நீட்டினார்கள். அவர்களுடைய கண்களில் குறும்புத் தனம் கூத்தாடியது.

அவர்களுக்குப் பின்னால் சுந்தரம், மீனாட்சி, சாந்தா மூவரும் வந்து கொண்டிருந்தார்கள்.

''முருகையா! உன் சரக்குகளை வாங்குவதற்கு ஆள் திரட்டிக் கொண்டு வந்திருக்கிறேன்'' என்று சிரித்துக் கொண்டே கூறினான் சுந்தரம். ''கொண்டுவந்ததெல்லாம் பத்திரமாய் இருக்கிறதா! - எங்கே ஆளுக்கொன்றாய் எடுத்துக் கொடு! மொத்தமாய் நாங்களே வாங்கிக் கொள்ளுகிறோம்.''

பையிலிருந்த சில்லறைகளை யெல்லாம் அள்ளிச் சுந்தரத்தின் கையில் கொடுத்தான் முருகையன். தகரத்தைத் திறந்து காட்டினான்.

''மயக்கம் வருகிறது முருகையா, மயக்கம் வருகிறது!'' என்று சொல்லிக் கொண்டே மணலில் உட்கார்ந்தான் சுந்தரம்.

''பார்த்தியா, அப்பா! மாமாவை மண்டுன்னு சொன்னியே; வித்திட்டாங்க பார்த்தியா? நீதான் மண்டு!''

''இதுதானப்பா நல்ல தொழில். விற்றாலும் லாபம்; விற்கா விட்டாலும் லாபம். நாமே சாப்பிட்டு விடலாம்!'' என்றான் சுந்தரம். அவனிடமிருந்த பணத்தை வாங்கி எண்ணினாள் சாந்தா. ஏழு ரூபாய்களுக்கு மேலிருந்தன.

''மூன்று ரூபாய் லாபம்!'' என்றாள்.

''மூன்று பேர் உழைத்திருக்கிறோம். தயாரிப்பு உங்களுடையது; விற்பனை மட்டும்தான் என்னுடையது'' என்றான் முருகையன். ''நீங்கள் செய்து கொடுத்தது நன்றாக இருந்ததென்று சொன்னார்கள். அதனால்தான் சீக்கிரம் தீர்ந்து போய்விட்டது.''

பெண்கள் இருவருக்கும் இது பெருமையாக இருந்தது. எல்லாவற்றுக்கும் சாந்தாவின் உதவிதான் காரணமென்று கூறினாள் மீனாட்சி. சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்து விட்டு எல்லோரும் வீட்டுக்குத் திரும்பினார்கள்.

அன்றைக்கு இரவில் மீனாட்சியும் சுந்தரமும் தனித்துப் பேசிக் கொண்டிருந்த போது, ''நீங்க செய்யறது எனக்குப் பிடிக்கவே இல்லை!'' என்று ஆரம்பித்தாள் மீனாட்சி. ''உங்க சிநேகிதரோ படித்தவர்; பணக்கார வீட்டுப் பிள்ளை; அவரைப் போய் இந்த வேலை செய்யச் சொல்லலாமா?'' என்று கேட்டாள்.

''பணக்காரர்களும் படித்தவர்களும இந்த மாதிரி வேலைகளைச் செய்வது அவமானமென்று நினைப்பதால்தான் நம் நாட்டுக்கே பெரிய அவமானத்தைத் தேடித் தந்திருக்கிறார்கள். செல்வம் கொழிக்கிற மேல் நாடுகளிலெல்லாம் மனிதன் உழைக்காமல் உல்லாசமாக வாழ்வதைத்தான் அவமானமாக நினைக்கிறான். உடல் உழைப்பு உத்தமமானது, மீனாட்சி. நாளைக்கே எனக்கு இந்த வேலை போய் விட்டாலும், நானும் அவனோடு கடற்கரைக்கு வியாபாரம் பண்ணப் புறப்படுவேன்.''

''எனக்கென்னமோ......'' என்று மறுபடியும் இழுத்தாள் அவள்.

''இதோ பார்! என்னால் முடிந்த வரையில் அவனுக்கு வேலை தேடிப் பார்த்து விட்டேன். அவனுக்கோ நம்முடைய குடும்பத்துக்குப் பாரமாக இருப்பதாக ஓர் எண்ணம். அவனுடைய மனத் திருப்திக்காக அவன் இதை யாவது செய்யட்டுமே?''



மீனாட்சிக்கு, சுந்தரத்தின் பேச்சு நியாயமென்று தோன்றியது. சுந்தரமோ அவளிடம் நீண்டதொரு சொற்பொழிவே நடத்தி விட்டான். படித்து விட்டு வந்து வேலையில்லாமல் திண்டாடும் லட்சக் கணக்கான இளைஞர்களுக்கும், படிக்காமல் வளர்ந்து விட்ட பாமரர்களுக்கும் வேலைகள் கிடைப்பதற்கு வாய்ப்புக்கள் இல்லாத நாடு மிகவும் மோசமான நாடென்றான்.

''முருகையன் படித்து விட்டுத் தன்னுடைய கிராமத்துக்குச் சென்று உழவுத் தொழில் வளர்க்க நினைத்திருக்கிறான். படித்தவனுடைய சிந்தனைத் திருப்பம் இது. ஆனால், நடந்தது என்ன? பண்பு கெட்டவன் அவனுடைய நிலங்களைப் பிடுங்கிக் கொண்டு விட்டான். பணத்தின்மீது மனிதனுக்குள்ள ஆசையும் பணத்துக்குள்ள சக்தியும் நாளுக்கு நாள் பயங்கரமான முறையில் வளர்ந்து கொண்டே போகின்றன, மீனாட்சி!''

''அதெல்லாம் சரி, நம்ப வீட்டோட நிலைமை இப்படியே இருந்தால் எப்படி நாம் குழந்தை குட்டிகளை வளர்த்து ஆளாக்கப் போகிறோம்?'' என்று கவலையோடு கேட்டாள் மீனாட்சி. அவள் கவலை அவளுக்கு. ஒரு குழந்தை இரவெல்லாம் இருமியது; மற்றொரு குழந்தை அடிக்கடி ஜுரத்தால் படுத்துக் கொண்டது; அவர்களுக்கோ வீட்டு வேலைகள் செய்வதற்கே உடலில் தெம்பில்லை.

அன்போடு தன் மனைவி மீனாட்சியின் அன்பு சுரக்கும் முகத்தையே கனிவோடு உற்றுப் பார்த்தான் சுந்தரம். அவளை அவன் மணந்து கொண்ட பிறகு முதல் இரண்டு வருடங்கள் மறக்க முடியாத வருடங்கள். குழந்தைகள் ஒன்றன் பின்னொன்றாய்ப் பிறந்ததும் பொறுப்புக்களும் வளர்ந்தன. அந்த அளவுக்குப் பொருளாதாரம் வளரவில்லை. குழந்தைகளை நன்றாக வளர்க்கும் அளவுக்கு வசதிகளும் வளர்ந்திருந்தால், அவன் சிறிது கூடக் கவலைப்பட்டிருக்க மாட்டான்.



''நீ ஒருத்தி எனக்கு இருப்பதால் தான் நான் எப்போதும் சிரித்துக் கொண்டே இருக்கிறேன், மீனு!'' என்றான் அவன்.

''ஆமாம், சிரிச்சுச் சிரிச்சுத்தான் என்னை ஏமாத்திக்கிட்டே வர்ரீங்க!'' என்று சொல்லி விட்டு, வெட்கத்தோடு தன் முகத்தை மூடிக் கொண்டாள் அவள். ''உங்க சிரிப்பிலே மயங்கின தாலேதான் இப்ப அஞ்சாவது பிறக்கப் போகுது!''

சுந்தரத்துக்கு ஒரே சமயத்தில் எல்லையற்ற பேரானந்தமும், தாங்க முடியாத துயரமும் ஒன்றாக ஏற்பட்டன. மலர் மாலையைப் போல் துவண்டு கிடந்த மீனாட்சியைப் பரிவோடு பார்த்து நீண்ட பெருமூச்சு விட்டான் அவன்.

''என்ன செய்வது மீனாட்சி? என்னுடைய துன்பத்தைத் துடைப்பதற்கு நீ; உன்னுடைய துன்பத்தைத் துடைப்பதற்கு நான்! ஒருவரிடம் ஒருவர் தஞ்சம் புகுந்துதான் ஆறுதல் பெற வேண்டியிருக்கிறது. பின்னால் வரப் போகிற பொறுப்புக்களை நாம் இருவருமே மறந்து விடுகிறோம். — இனி மேல் பார், இந்தக் குழந்தைகளை யெல்லாம் நன்றாக வளர்ப்பதற்கென்றே நான் வாழ முடிவு செய்துவிட்டேன்!''

''இந்தப் புத்திசாலித்தனம் உங்களுக்கு எப்போதும் இருக்குமா?''

''கட்டாயம் இருக்கும்!'' என்றான் சுந்தரம். ''நம் குடும்பத்தைப் பற்றி நான் நன்றாக யோசிக்கத் தொடங்கி விட்டேன், மீனாட்சி. நம்முடைய குழந்தைகளுக்கும் நமக்கும் அடிக்கடி வியாதி வருகிறதே, எதனால் தெரியுமா? உண்மையான வியாதி பற்றாக்குறை வியாதிதான். குழந்தைகள் படிக்கும் பாடப் புத்தகங்களில்தான் சத்துள்ள உணவுப் பொருள்கள் வருகின்றன. 'வைட்டமின்' என்கிறார்கள், 'பால்' என்கிறார்கள், 'பழம்' என்கிறார்கள், எல்லாம் எங்கே கிடைக்கின்றன? என்ன விலையில் கிடைக்கின்றன? இனிமேல் சத்துள்ள உணவுப் பொருள் நாட்டில் எல்லோருக்கும் மலிவாய்க் கிடைக்கும் வரையில், அதைப் பற்றிப் பாடப் புத்தகங்களில் எழுதித் தொலைக்காமல் இருப்பதாவது நல்லது!''

''கவலைப்படாதீங்க, கடவுள் இருக்கிறார்!'' என்று அவனுடைய கரத்தைப் பற்றினாள் மீனாட்சி. ''எப்படியோ நம்முடைய வயிற்றைக் கட்டி, வாயைக் கட்டி அவர்களைக் காப்பாற்றுவோம்.''

''முடியாது, மீனாட்சி! இனிமேல் இப்படியே வெகு நாட்கள் காலத்தை ஓட்ட முடியாது!'' என்றான் சுந்தரம். ''நான் வேறே ஒரு வேலைக்கு முயற்சி செய்து கொண்டிருக்கிறேன். எப்படியும் அந்த வேலை கிடைக்கும். அது கிடைத்தால் நாம் இந்த ஊரை விட்டே புறப்பட வேண்டியிருக்கும். இதை விட அதிகச் சம்பளமுள்ள வேலை அது.''

''அப்படிப் போனால், நீங்கள் இப்போது பார்க்கிற வேலைக்கு உங்க சிநேகிதரைச் சிபாரிசுசெய்யமுடியுமா?''

அவளுடைய அறியாமையை நினைத்துச் சிரித்தான் சுந்தரம். ''நான் பார்ப்பது சர்க்கார் வேலை. சிறைக்குப் போனவனுக்கு இந்த வேலை கிடைக்காது.''

''பாவம்! நாமும் போய் விட்டால் அவர் பாடுதான் இன்னும் சிரமமாயிருக்கும்.''

''நாளைக்கே எனக்கு அந்த வேலை கிடைக்கப் போகிறதா என்ன? கிடைத்தால் கிடைத்த பிறகு பார்த்துக் கொள்வோம்.''

அன்றைக்கு இரவு அவர்கள் இருவருக்கும் எப்படிக் கழிந்ததென்றே தெரியவில்லை. அன்பு நிறைந்த இரு உள்ளங்கள் எங்கே ஒன்று கூடுகின்றனவோ, அங்கே இன்ப உலகம் தானாக உருவாகி விடுகிறது. மறு நாள் பொழுது தான் தனது பொறுப்புக்களான கதிரொளியைச் 'சுள்'ளென்று வீசிக் கொண்டு புலர்ந்தது.

அத்தியாயம் இருபத்தெட்டு

மழை பெய்தது

பெரியதொரு புறாக் கூண்டான சுந்தரத்தின் வீட்டில், அவனுடைய வெளிப்புறத்து அறையையும் சேர்த்து ஒன்பது அறைகள் இருந்தன. வீட்டுக்குள் குடியிருந்த நான்கு குடித்தனக்காரர்களுக்கும் இரண்டு அறைகள் வீதம் ஒதுக்கியிருந்தார்கள். சுந்தரம் தன்னுடைய அலுவல் அறையிலிருந்து குடும்ப சாம்ராஜ்யத்தின் எல்லையை அடைய மூன்று குடித்தனக்காரர்களைக் கடந்து செல்ல வேண்டும். மாடியில் குடியிருந்தவர்களுக்குத் தனியே வெளிப் பக்கம் மாடிப் படிகள் இருந்தன.

முதல் அறையில் குடியிருந்தவர் சுந்தரத்தைப் போலவே ஏதோ ஓர் அலுவலகத்தில் கணக்கு வேலை பார்த்தவர்.

அலுவலகத்தில் மட்டும் அவர் கணக்கு வேலை பார்த்தாரே தவிர, தம் சொந்தக் கணக்கு அவருக்குத் தெரியாது. ஒரே ஒரு ஆண் குழந்தை அவருக்கு.

முதல் தேதி கையில் சம்பளம் வாங்கியவுடன் அவர் முகம் மலர்ந்திருக்கும். மனைவியையும் பிள்ளையையும் அழைத்துக் கொண்டு உல்லாசமாக வெளியில் கிளம்பி விடுவார். இருபதாம் தேதிக்கு மேல், மனைவியிடமும் பையனிடமும் அந்தக் குடும்பத்தின் தலைவர் எரிந்து விழுவதைக் காணலாம். அடிக்கடி அவர் மட்டிலும் தனியாக நண்பர்களிடம் கடன் கேட்கச் சென்று விடுவார். 'டவுன் பஸ்'ஸில் செல்வதற்குச் சில்லறைக்கடன் சுந்தரம் கொடுக்க வேண்டியதிருக்கும். எப்படியோ அவர்களும் குடும்பம் நடத்திக் கொண்டுதானிருந்தார்கள்.

அந்த வீட்டுக்காரப் பெண்ணிடம் சாந்தா பல முறை சீரும் செட்டுமாக வாழ வேண்டியதைப் பற்றி யோசனைகள் சொல்லி விட்டாள். யோசனைகளோடு கடனும் கொடுத்துப் பார்த்தாள். கொடுத்த கடன் திரும்பி வருவதாக இல்லை. இப்போது சாந்தாவிடம் அந்தப் பெண்ணுக்குக் கோபம்; பேச்சு வார்த்தை கிடையாது.

இரண்டாவது வீட்டில் யாரோ ஒரு பெண்ணும் அவள் தகப்பனும் வாழ்ந்தார்கள். அவள் அவ்வப்போது நாடகங்களில் நடித்தாள். திரைப்படங்களுக்குச் சில்லறை வேடங்களில் நடிப்பதற்குச் சென்று வந்தாள். பெரும்பாலும் 'தானுண்டு தன் வேலையுண்டு' என்றிருந்தாள் அந்தப் பெண். மற்றவர்கள் அவளோடு அதிகமாய்ப் பேசுவதும் இல்லை; அவளும் மற்றவர்களோடு நெருங்கிப் பழகுவதும் இல்லை.

அடுத்த வீடுதான் சாந்தாவினுடையது; அவள், அவள் தாயார், தங்கை மூவரும் குடியிருந்தார்கள். தங்கை பெண்கள் பள்ளிக்கூடம் ஒன்றில் படித்துக் கொண்டிருந்தாள். பள்ளிக்கூட நேரம் போக மற்ற வேளைகளில் மாடி வீட்டுக் குழந்தைகள் கீழே வந்து சுந்தரத்தின் குழந்தைகளோடு விளையாடிக் கொண்டிருந்தார்கள்.

முருகையன் தன்னுடைய தகப்பனுக்கு எழுதிய கடிதத்தில் கடற்கரை வியாபாரத்தைப் பற்றிக் குறிப்பிடவில்லை. சித்திராவின் வீட்டார் வெளியூர் சென்று விட்டதால், சுந்தரத்தின் உதவியால் ஒரு வேலை தேடிக் கொண்டு அவன் வீட்டில் தங்கியிருப்பதாக எழுதியிருந்தான். சிவப்பிரகாசத்திடமிருந்து வந்த பதிலில் அவர் சுந்தரத்துக்கும் அவன் வீட்டாருக்கும் நன்றி சொல்லி ஆசி கூறியிருந்தார்.

ஒரு நாள் மாலை முருகையன் கடற்கரைக்குச் சென்றவுடன் திடீரென்று மழை பிடித்துக் கொண்டதால், கூடியிருந்த கூட்டம் கலையத் தொடங்கியது. ஐந்து நிமிடங்களுக்குள் அங்கு யாருமே இல்லை. விழுந்தடித்துக் கொண்டு வந்த வழியே எல்லாரும் திரும்பிச் சென்றார்கள். முருகையனும் நனைந்து கொண்டே வந்து எதிரிலிருந்த மாநிலக் கல்லூரியின் கட்டடத்துக்குள் நுழைந்தான். மழை நின்று விட்டாலும் மறுபடியும் கடற்கரைக்குக் கூட்டம் வரப் போவதில்லை. கொண்டு வந்த தின்பண்டங்கள் அப்படியே இருந்தன.

அப்போதுதான் முதன் முதலாக அந்தத் தொழிலிலுள்ள தொல்லை தெரிந்தது முருகையனுக்கு. ஒரு நாள் மழை பெய்யும்போதே இப்படியிருந்தால் மழை காலத்திலும் குளிர்காலத்திலும் அங்கு மனிதர்கள் எப்படி வருவார்கள்? எதற்காக வருவார்கள்?

'ஞாயிற்றுக்கிழமைகளில் அதிகமான வியாபாரம், மற்ற நாட்களில் சுமாரான வியாபாரம், மழை நாட்களில் ஒன்றுமே கிடையாது!' என்று நினைத்துக் கொண்டான் அவன்.

மழைக்காக ஒதுங்கியிருந்த கூட்டத்தில் ஒருவன் மட்டிலும் முருகையனையே உற்றுக் கவனித்தான். பிறகு அருகில் நெருங்கி வந்தான். முருகையனும் அவனை நன்றாக ஏறிட்டுப் பார்த்தான்.

''சாமி, நீங்களா?''

''யாரது, முனியாண்டியா?''

''ஆமா, சாமி!''

முனியாண்டியின் கண்களில் மகிழ்ச்சி துள்ளியது. காணக் கிடைக்காத ஒரு பிரமுகரைக் கண்டு விட்டதைப் போல் சிறிது நேரம் வாயடைத்து நின்று கொண்டிருந்தான். பிறகு கேள்விமேல் கேள்வியாக அடுக்கத் தொடங்கினான். அது வரையில் முருகையனுக்கு அருகிலிருந்த தகர டப்பாவை அவன் கவனிக்கவில்லை.

முருகையனுக்கு அந்தக் கூட்டத்தின் மத்தியில் பதில் சொல்வதற்குத் தயக்கமாக இருந்தது. சற்று விலகிச் சென்று தான் சென்னைக்கு வந்த காரணத்தை விளக்கினான். எந்த நிலங்களில் வேலை செய்வதற்கு அவனைக் குடும்பத்தோடு தன் கிராமத்துக்கு அழைத்தானோ, அதே நிலங்கள் இப்போது தன்னிடம் இல்லை என்பதையும் தெரிவித்தான். அப்போதைய தொழிலையும் கூறினான்.

முனியாண்டி முருகையன் கூறியதில் ஒன்றைக்கூட நம்பவில்லை.

''சாமி! போலீசுக்குத் தலைமறைவா இருக்கிறதுக்கு இந்த வேஷம் போட்டுக் கிட்டிருக்கீங்களா சாமி? இனிமே எதுக் குச் சாமி அவுங்களுக்குப் பயப்படணும்? சீக்கிரத்திலே நமக்குச் சுயராஜ்யம் வரப் போகுதாமே? பிறகு இவுங்க என்ன செய்வாங்க?''

முருகையன் சிரித்தான். அடிக்கடி கடற்கரையில் நடந்த பொதுக் கூட்டங் களில் அப்போது அந்தப் பேச்சுத்தான் அதிகமாக அடிபட்டது. நெடுநாட்கள் சிறையிலிருந்தவர்களும், நாட்டுக்காகத் தங்கள் சொத்து சுகங்களை இழந்தவர் களும், வாழ்வையே விடுதலைக்காக அர்ப் பணித்தவர்களுமான பலர் அனல் தெறிக்க அங்கே கூட்டம் கூடிப் பேசுவ துண்டு. முருகையனைப் போலவே முனி யாண்டியும் கூட்டத்தில் நின்று கேட் டிருக்கிறான் போலும்.

''உண்மையைச் சொல்லுங்க, சாமி! நான் வெளியிலே சொல்ல மாட்டேன்'' என்று ரகசியமாய்க் கேட்டான் முனி யாண்டி.

முருகையன் கூறிய உண்மைகள் அவன் செவிகளில் ஏறவே இல்லை. ஏதோ ஒரு காரணமாகத்தான் அவன் இப்படி வந்திருக்கிறான் என்று அவன் நம்பினான்.

''சரி, சாமி! நீங்க சொல்லாட்டிப் போங்க. நான் புரிஞ்சிக்கிட்டேன்'' என்று கூறிவிட்டு, அருகில் நின்ற ரிக் ஷாவைக் காட்டி, ''எங்கே போக ணும் சொல்லுங்க; நான் கொண்டு போய் விடறேன்'' என்றான்.

முருகையனுக்கோ மனிதனைச் சுமந்து கொண்டு மனிதன் இழுக்கும் ரிக்ஷா வில் ஏறுவதற்குப் பிடிக்கவில்லை. அது வரையில் அவன் ஏறியதும் கிடையாது. முனியாண்டியிடம் காரணத்தைக் கூறிப் பிடிவாதமாக மறுத்தான். வீடு அரு கில் இருப்பதனால் தானே நடந்து போய்க் கொள்வதாய்க் கூறினான். முனி யாண்டி அவனை விடுவதாக இல்லை.

முருகையனைத் தூக்கிக் கொண்டு போய் ரிக்ஷாவில் உட்கார வைத்துத் தன் கைகளால் இழுத்துச் சென்றால் தான் அவன் மனம் ஆறுதலடையும் போலிருந்தது. மழை நின்றவுடன் தானாகவே முருகையனின் தகரப் பெட் டியை எடுத்து ரிக்ஷாவில் வைத்தான். முருகையனுக்கும் வேறு வழி இல்லை.

''ரிக்ஷாவிலே ஏர்றதில்லேன்னு நீங்க எல்லாருமே முடிவு செய்திட்டா, எங்க பிழைப்பு நடக்கிறது எப்படி சாமி?''

முனியாண்டியின் கேள்வி முருகை யனை உண்மையாகவே திணற வைத் தது. 'பிழைப்பு நடப்பது எப்படி?' என்ற கேள்விதான் அப்போது அவன் மனத்திலும் சுழன்று கொண்டிருந்தது.

முருகையனை ஏற்றிக் கொண்டு நடந்தான் முனியாண்டி. 'நடக்க முடி யாதவர்களையும் சிறு குழந்தைகளையும் ரிக்ஷாவில் ஏற்றிக் கொள்ளுவது நியா யம்தான். ஒருவன் கையில் காசிருக் கிறது, அவன் உடலில் சோம்பல் இருக் கிறது என்பதற்காக அவனை மற்றவன் சுமந்து செல்வது என்ன நியாயம்? மனி தனை மனிதன் அடிமைப்படுத்தி, நெடுங் காலமாகவே அவனை அடிமைத்தனத்தில் பழக்கப்படுத்தியும் வைத்து விட்டான்' என்று நினைத்தான் முருகையன்.

சுந்தரத்தின் வீட்டுக்குச் செல்லும் வழியில்தான் முனியாண்டியின் தெரு வும் இருந்தது. மழை பெய்திருந்த சமயமாதலால், அந்தத் தெருவைப் பார்த்தவுடனேயே தலையைச் சுற்றியது முருகையனுக்கு. அழகு நிறைந்த சென்னை நகரத்தில் இப்படியும் பல தெருக்கள் இருக்கின்றன போலும்!

சுந்தரத்தின் வீட்டுக்கு முன்னால் ரிக்ஷா வந்து நின்றது. சில்லறையை எடுப்பதற்காகப் பைக்குள் கையை விட் டான் முருகையன். ''சாமி! சாமி! வேண்டாம்!'' என்று கையெடுத்துக் கும்பிட்டான் முனியாண்டி. ''நீங்க என் ரிக்ஷாவிலே வர்றதுக்கு நான் கொடுத்து வைச்சிருக்கணும், சாமி!''

தகரப் பெட்டியைத் திறந்து, கை நிறையக் கடலைப் பொட்டலங்களையும் சுண்டல் பொட்டலங்களையும் அள்ளி ரிக்ஷாவில் போட்டு விட்டு, ''கொண்டு போய் உன் குழந்தைகளுக்குக் கொடு'' என்றான் முருகையன். பிறகு வேக மாக வீட்டுக்குள் நுழைந்தான்.

அங்கே அவனுக்கு மற்றொரு அதி சயம் காத்திருந்தது. வீட்டுக்குள் ளிருந்து வெளியில் வந்து கொண்டிருந்த நடிகன் குருசாமி அவனை அப்படியே கட்டிக் கொண்டான்.

''ஏது திடீர்னு மழை பெய்திடுச் சேன்னு பார்த்தேன். நல்லவங்க ஊருக்கு வந்தால் மழை பெய்யும்னு சொல்லுவாங்க. நீங்க எப்ப அண்ணே பட்டணத்துக்கு வந்தீங்க?''

குருசாமியைக் கண்டவுடன் மழை பெய்ததுகூட ஒரு வகையில் நல்லது தான் என்று நினைத்தான் முருகையன். இல்லாவிட்டால் அவனை அன்றைக்குச் சந்தித்திருக்க முடியாதல்லவா?

சுந்தரத்தின் வெளி அறையைத் திறந்துவிட்டு, அவனை உள்ளே அழைத்து உட்காரச்செய்தான் முருகையன். கட லைப் பொட்டலம் ஒன்றை எடுத்து மேசையில் வைத்தான். (தொடரும்)

மிகச்சிறந்தது!



வீட்டிற்கும்
—ஹோட்டலுக்கும்

ப்ரூக் பாண்ட்

ஸ்பெஷல் ஹோட்டல் ப்ளெண்ட்

டஸ்ட் தேயிலையே

* எப்பொழுதுமே உங்களுக்கென்று புதியதாக தோட்டத்திலிருந்து வருகிறது.
* மிகத் திறமையுடன் கலவை செய்திருப்பதால் இனிமை மிக்க நறுமணம் கொடுக்கிறது.
* லட்சக் கணக்கான மக்கள் அருந்தி ஆனந்தம் அடைவது.

மூன்று அளவுகளில் கிடைக்கிறது
500 கிராம், 100 கிராம்,
50 கிராம்

JWT 88 387

அன்பே ஆரமுதே

அத்தியாயம் முப்பத்தொன்று

அனந்தசாமியின் எண்ணம் சுழன்று கொண்டிருக்கும்போது அருண்குமாரே தொடர்ந்து பேசினான்:

''சாமி யோசிக்கிறீங்க. கேட்ட கேள்விக்குப் பதில் சொல்லாமல், என்னென்னவோ அளந்துக்கிட்டுப் போறானேன்னு யோசிக்கிறாப் போல இருக்கு. என் மனசிலே நேத்தி ராத்திரி காலமே நடந்த கூத்தெல்லாம் சொல்லணும்னு தான் சொன்னேன். அதுக்கு முன்னாலே ரங்கன்கிட்டே கைமேலே அடிச்சும் வாக்குக் கொடுத்திட்டேன். இனிமேலே அந்தக் குடும்பத்தோட எந்த விதமான போக்கும் வச்சுக்கமாட்டேன், அந்தத் தெருப் பக்கம், அவங்க இருக்கிற பக்கமே போக மாட்டேன்னு சொல்லிட்டேன்'' என்றான் காசிலிங்கம்.

''பேஷ்!'' — அனந்தசாமிக்கு உடலெல்லாம் பூரித்தது. உரக்க வந்த 'பேஷை'க் கேட்டுக் காசியின் முகம் புடம் போட்டாற் போலப் பொலிந்தது.

''சாமி என்னைக் கோவிச்சுக்கப் படாது. அதே நேரத்திலே ரங்கனையும் கொஞ்சம் ஜாக்கிரதை பண்ணி வைக்கணும். இந்தக் குடும்பத்திலே இந்தக் குஸுமாவைத் தவிர எனக்கு வேறு யாரையும் தெரியாது. அவங்க அப்பா, அம்மா யாரையும் தெரியாது.''

''குஸுமாவா?''

''குஸுமாதானே அதோட பேரு?''

''இல்லையே. டொக்கின்னு!''

''டொக்கியா? வீட்டிலே அப்படிக் கூப்பிடுறாங்களோ என்னவோ. இவங்கள்ளாம் நிமிஷத்துக்கு ஒரு பேரு வச்சுப்பாங்க. பள்ளிக்கூடத்துக்கு ஒரு பேரு, காலேஜுக்கு ஒரு பேரு, நாடகத்துக்கு ஒரு பேரு, சினிமாவுக்கு ஒரு பேரு. நானே ஆம்பிளைக் கட்டை வச்சிக்கிட்டிருக்கேன். பொம்பளைங்களுக்குக் கேட்பானேன்? அது கிடக்கட்டும். இந்தக் குடும்பத்திலே யாரையும் எனக்குப் பழக்கமில்லே. ஆனால் இந்தமாதிரி பல பேரோடு பழகியிருக்கேன் நான். இவங்க நல்லவங்களா இருக்கலாம். ஆனால் பொதுவா நான் அப்படிச் சொல்ல மாட்டேன். பொம்பளைங்கள்ளாம் தெய்வம் மாதிரி, ஆம்பிளைங்கதான் அவங்களைக் கெடுக்கிறாங்க. இல்லாட்டி அவங்கமாசுமறுவில்லாத வைரமா இருப்பாங்கன்னு இப்ப படிச்சவங்கள்ளாம் சொல்றாங்க. சட்டை, புடவையிலே இருக்கிறாப்போல பேச்சிலே இது ஒரு பாஷன். நான் கேக்கறேன், சாமி, எனக்காகச் சொல்ல வேணும். நெசமா யோசிச்சுச் சொல்லணும். ஆம்பிள்ளையோட, பெண்பிள்ளையும் ஒரு படைப்புத்தானே. ஆம்பிளையும் நல்லவன், பெண்பிள்ளையும் நல்லவங்க. ஆம்பிளையும் போக்கிரி; பெண்பிள்ளையும் போக்கிரி, இல்லையா?''


''சொல்லுங்கோ!''

''அதனாலே யாரையும் நம்பிட வாணும். நாம என்னமோ கரையேத்தறாப் போல நெனைச்சுக்க வாணாங்கிறேன். தில்லுமல்லு பண்றவங்க ரண்டு இனத்திலேயும் இருக்கிறாங்க. நல்லவங்களும் அப்படி நெனைச்சுக்கிட்டுப் போறதுதான் நல்லது......''

''இவர்கள் நல்லவர்கள் என்றுதான் எனக்குத் தோன்றுகிறது'' என்றார் அனந்தசாமி.

''ஐயோ, சாமி! நான் இவங்களைப் பத்திச் சொல்லலே. இவங்க நல்லவங்களாகவே இருக்கட்டும். இருந்தாலும் ரங்கன் அநாவசியமாப் பித்துப் பிடிச்சு அலைய வாணாங்கறேன். எதுக்காகச் சொல்றேன்னா, நான் ரங்கன் மூலமா இந்தக் குஸுமாவைத் தெரிஞ்சுக்கலே. முதல்லே அவருதான் அறிமுகப்படுத்தி வைச்சாரு. ஆனால் இதோட தாயாருக்கு யாரோ உறவாம், ஒரு பையன். அவன்தான் வந்து நல்லா படிச்ச பொண்ணு, சினிமாவிலே நடிக்கணும்னு ஆசைப்படுதுன்னு சொன்னான். ரங்கனுக்கு இவ்வளவு அக்கறை இருக்குன்னே எனக்குத் தெரியாது. அவரும் முன்னாலே ஒரு தடவை சொல்லியிருக்காரு. ஆனால் இவ்வளவு அக்கறைன்னு தெரியாது.''

சாயங்காலம் டொக்கி வீட்டில் பார்த்த பையன்தானோ அவன்



தி.ஜானகிராமன்

என்று நினைத்துப்பார்த்தார் அனந்தசாமி. டொக்கியைக் காப்பாற்றுவது கூடச் சிரமமாகிவிடுமோ என்று பளிச்சென்று என்னவோ ஒரு கவலை அவர் உள்ளத்தில் திரையிட்டாற் போலப் படர்ந்தது. ரங்கன் செய்திருக்கிற முடிவுதான் அவனைக் காப்பாற்ற முடியுமோ என்னவோ?

ராஜாங்கமய்யருக்காக அவர் நெஞ்சு இப்பொழுது உண்மையாகவே அழுதது. கண்களை மூடிக் கொண்டார்.

''நான் ரொம்ப நேரம் உங்களைப் போட்டுத் துளைச்சுக்கிட்டிருக்கேன்... வாங்க, மேலே போவோம். குழந்தை எப்பொழுது பார்த்தாலும் உங்கள் ஞாபகமாகத்தான் இருக்கிறான்'' என்று எழுந்தான் காசிலிங்கம்.

காசி முன்னால் போக அவனைப் பார்த்துக் கொண்டே நடந்தார் அவர். காசி பெரிய மனிதனாகத்தான் அவருக்குப் பட்டது. ஏதோ ஒரு வகையில் பெரிய மனிதனாக இருப்பதால்தான் அவனை இப்படித் தலையில் தூக்கிக் கொண்டு எல்லாரும் கூத்தாடுகிறார்கள் என்று தோன்றியது.


உள்ளே போனதும், ''சிவபாக்கியம், யாரு வந்திருக்காங்க, பாரு'' என்று கூப்பிட்டான் காசி. அந்தக் குரலில் இருந்த பசையும் பரிவும் அவருக்கு இன்னும் நெஞ்சில் ஒத்தடம் கொடுப்பது போல் இருந்தன.

''சாமி வந்திருக்காங்கடா, தம்பி. எப்ப வருவாங்க, வருவாங்கன்னு கேட்டுக்கிட்டே இருந்தியே'' என்று பையனிடம் நெருங்கினான் காசிலிங்கம்.

''சாமி, நீங்க இன்னிக்கும் பல்லாங்குளி வெள்ளாடிட்டுப் போகணும். அப்பாவையும் சேத்துக்கலாம். ஏம்மா, மூணு பேரு வெள்ளாடலாமில்லே பல்லாங்குளி?'' என்று கத்தினான் பையன்.

''ஆடலாமே!'' என்று உரக்கச் சொன்னார் அனந்தசாமி. குழந்தையின் குரலைக் கேட்டதும் மனசிலிருந்த தும்பு தூசியெல்லாம் ஏதோ அருவி வந்து அடித்துக் கொண்டாற் போலிருந்தது அவருக்கு. அர்த்தமே இல்லாத அவருடைய இயல்பான புன்சிரிப்பு மீண்டும் அவர் உதட்டில் அமர்ந்தது.

அருண்குமாரின் வீட்டை விட்டு வெளியே வந்ததும், மந்தைவெளிக்குப் போய், டொக்கியைப் பார்த்து அந்த முக்கியமான தகவலைப் பற்றித் தெரிந்து



கொள்ள வேண்டும் என்றிருந்தது அவருக்கு. ரங்கன் அவளைக் கலியாணம் செய்து கொள்ளப் போவதாக முடிவு செய்து விட்ட செய்தியைக் கேட்டதிலிருந்து ஏதோ ஒரு விவரிக்க முடியாத துன்பம் அவரைத் தொந்தரவு செய்து கொண்டிருந்தது. அதை அச்சம் என்றோ, கோபம் என்றோ, அருவருப்பு என்றோ சொல்ல முடியவில்லை. பச்சைக் கண்டைக்காயை அல்லது ஆரஞ்சுத் தோலைக் கடித்து விட்ட நாக்கில் ஊறும் நெடி போல் ஒரு வேதனை. உடனே போய் அந்த யோசனையைத் தகர்த்துவிட வேண்டும். அல்லது ரங்கன் டொக்கியிடம் இதைப் பற்றிப் பேசியிருக்கிறானா என்றாவது தெரிந்து கொள்ள வேண்டும். அப்பொழுதுதான் நெஞ்சைக் காறும் தொல்லை நீங்கும் போல் இருந்தது. அவர் நடந்தார்.

ஆனால் அவர்கள் வீட்டில் இல்லை. டொக்கியை அழைத்துக் கொண்டு ஏதோ சங்கீதக் கச்சேரிக்குப் போயிருந்தாராம் ராஜாங்கம். வரப் பத்து மணி ஆகுமாம்.

'சரி, மறுநாள் காலை வரலாம்' என்று கபாலி குளத்தங்கரையண்டை வந்தார் அவர். உடம்பு ஏதோ குளிர்வது போலிருந்தது. நடப்பதுகூடச் சிரமமாக இருந்தது. நடக்கும் போது எதிர்ப்படும் சிறு காற்றுக்கூட மேலே தோலைக் குத்திற்று. பஸ்ஸில் ஏறிக் காற்றுப் படாமல் உள்ளே தள்ளி உட்கார்ந்தார்.

வீட்டுக்குப் போனபோது பசியில்லை. முதுகு, தோள் பட்டை, காலெல்லாம் கண்டு கண்டாக வலித்தன. மண்ணெண்ணெய் அடுப்பு மீது தண்ணீரை வைத்துப் பொங்கப் பொங்கக் காய்ச்சினார். நாக்கைப் பொரித்து விடும் அந்தச் சூடு இதமாக நெஞ்சை நனைத்தது. இவ்வளவு தாகம் ஏன்? இவ்வளவு சூடு ஏன் வேண்டியிருக்கிறது? நாடியைப் பிடித்துப் பார்த்தபோது படபட வென்று துடித்துக் கொண்டிருந்தது. தலை கனத்தது. தர்மாஸ் குப்பியில் இரவுக்கு வேண்டிய வெந்நீரையும் போட்டுக் கொண்டு மாடிக்குப் போய்ப் படுத்தார். வெடவெடவென்று நடுங்கியது. இழுத்துப் போர்த்திக் கொண்டார். கண்ணைத் திறக்க முடியவில்லை. ஜிவு ஜிவு என்று எரிந்தது. நல்ல ஜூரம். அவர் வைத்தியத்துக்குத் தர்மாமீட்டர் தேவைப்படுவதில்லை. இருந்தாலும் அதுவும் இருக்கட்டும் என்று வைத்தியலட்சணமாக ஒன்றை வைத்திருந்தார். அதை நாக்கடியில் வைத்துப் பார்க்கையில் நூற்றிரண்டுக்கு மேல் ரசக் கோடு தாண்டியிருந்தது.

அஜீரணம், ருசிக்காக உண்பது — இவையெல்லாம் கண்டறியாதவர் அவர். நடக்கவும் உயிர் வாழவும் தேவையான கவளங்களுக்கு மேல் அவருக்கு வேண்டியிருப்பது மில்லை. தலையணைக்குப் பஞ்சடைப்பது போல் தின்கிறவர்களுக்குத்தான் உடம்பை உலுக்கிக் கழுவிப் போடுவதற்காக, காய்ச்சல் வருவதுண்டு. எனக்கு எதற்கு? என் வேலையைக் கெடுக்கவா?

அரைத் தூக்கமும் கால் தூக்கமும் விழிப்புமாக மாறி மாறி வந்து கொண்டிருந்த அந்தக் குழப்பத்தில், 'சரிதான் சும்மா பிதற்றாதே, பெரிய வேலை பாழ் போகிறது! நீ இல்லாம இந்த உலகமே முடிஞ்சு போயிடும்னு நெனைச்சியா? பேசாமல் கிட!' என்று எத்தனையோ குரல்களுக்கு நடுவில் ஒரு குரல் வெடிப்பாகக் கத்துவது போலிருந்தது. சிரித்துக் கொண்டார் அவர்.

இரவு சரியாகத் தூங்கவில்லை அவர். யார் யாரோ பேசுவது போல் இருந்தது. நிமிஷத்துக்கு ஒரு சொப்பனமாக என்னென்னமோ தோன்றித் தோன்றி மறைந்தது. கூடாத எண்ணங்கள் கூடுவதும், காணாத காட்சிகள் காண்பதுமாக, மூடிய கண்களுக்குள் இருண்டு சுழலும் புருவ வட்டத்துள், ஒரு பிரபஞ்சமே இயங்கிக் கொண்டிருந்தது. கஷாயம் போட்டுக் கையில் வைத்துக் கொண்டு அம்மா அவரை எழுப்புவதற்காக நிற்பது போல் இருந்தது. நல்ல, இனிமையான, வாய்க்கு ரோசகமான கஷாயம் அது. ஆனால் கைக்கு வரவில்லை. அம்மா அப்படியே நின்று கொண்டுதான் இருக்கிறாள். ஊருக்கெல்லாம் மருந்து வைத்திருக்கிறானே, அதையே எடுத்துச் சாப்பிடட்டுமே என்று யாரோ வெடிப்பாக அதட்டுகிறார்கள். அவருடைய தங்கை குரல்தான். விழித்துப் பார்த்தார் அவர். பெட்ரூம் விளக்கு இருளில் பல்லியின் விழி போல் விழித்துக் கொண்டிருந்தது. அம்மாவும் இல்லை. கஷாயமும் இல்லை. கோவிலுக்குப்போயிருக்கிறாளா, அம்மா! நினைவு பிரிந்த பொழுதுதான் அம்மா இந்த வீட்டில் இல்லை, இந்த உலகத்தில் இல்லை, அவள் போய்க் கிட்டத்தட்ட ஒரு மாதம் ஆகப் போகிறது என்ற விழிப்பு அதிர்ச்சியும் துன்பமுமாக வந்து நெஞ்சில் விழுந்தது. இன்றைக்கு என்ன தேதி? ஏப்ரல் மே எனத் தப்புக் கணக்கில் குழம்பிற்று மூளை. வெகு நேரம் கழித்துத்தான் ஜூலை மாதம் நடக்கிற உணர்வு வந்தது.

காலையில் அவர் வெகு நேரம் எழுந்து வராததைக் கண்ட மங்களப் பாட்டி


தீபாவளி வெளியீடு!
பிளாசா
பாரத்
மஹாலட்சுமி
மற்றும்
தென்னாடெங்கும்
தேவர் பிலிம்ஸ்
தாய்சொல்லைத்
தட்டாதே
டைரக்ஷன் M.A.திருமுகம்
கதை-வசனம்: ஆரூர் தாஸ்
பாடல்கள்: கவிஞர் கண்ணதாசன்
சங்கீதம்: K.V.மஹாதேவன்
கேமரா C.V.மூர்த்தி
ஆர்ட் C.ராகவன்
ஸ்டூடியோ
விஜயா & வாஹினி
தயாரிப்பு
சாண்டோ M.M.A.சின்னப்பாதேவர்
Elegant

மாடி ஏறி வந்தாள். ஜுரம் என்று தெரிந்ததும் அவளுக்கு ஒன்றும் புரியவில்லை. இந்த மாதிரி அவர் படுத்துப் பார்த்ததில்லை அவள்.

''ராத்திரி ஒண்ணும் சாப்பிடலே போலிருக்கே?'' என்று விசாரித்தாள்.

''சாப்பிட்டேன், பாட்டி! பெரிய மருந்தாகச் சாப்பிட்டேன்.''

''என்ன சாப்பிட்டீர்?''

''பட்டினிதானே பெரிய மருந்து, அதையே சாப்பிட்டு விட்டேன்.''

''நன்னாயிருக்கு'' என்று கீழே சென்றாள். கஞ்சி வைத்து எடுத்து வந்தாள். ''இப்படிப் பகவானே பார்த்து ஓய்வு கொடுத்தாலொழிய நீர் வெறுமனே இருப்பீரோ? நான்தான் கேக்கறேன்... அம்மா இல்லாத்துதானய்யா உம்மை இப்படிப் படுக்கப் போட்டுடுத்து. அவள் இருந்திருந்தால் இப்படி ராத்திரி வெந்நீரைச் சாப்பிட்டுப் படுக்க விட்டு விடுவாளோ! இந்தக் கஞ்சியைச் சாப்பிடும் சொல்றேன், முன்னாலே. அன்னிக்குச் சொன்னீரே, ஞாபகம் இருக்கா? இனிமேல் போய்ட்டுவரேன்னு உன்கிட்டே தான் சொல்லிக்கப் போறேன்னு... உம்ம வார்த்தை வீண் போகுமோ! ரிஷிவாக்கு இது! அதான் இப்ப நான் அம்மா ஆயிட்டேன். கஞ்சியைக் கொண்டு வந்திருக்கேன். இன்னும் ஒரு வாரம் நான் அப்படித்தான் இருக்கப் போகிறேன்'' என்றாள்.

அனந்தசாமி சிரித்தார்.

''புரியறதோ, நான் சொல்றது? நீர் அலைஞ்சு மாயறது போதும். இன்னும் ஒரு வாரத்துக்கு இந்தண்டை அந்தண்டை அசையப்படாது. வீட்டோடு கிடவும். வெய்யில் வீணாகப் போனாலும் பரவாயில்லே.''

மங்களப் பாட்டி சொன்னபடியேதான் ஆகி விட்டது. ஒரு நாள், மூன்று நாட்கள் அடித்தும் ஜுரம் நிற்கவில்லை. ஆறாம் நாள் காலையில்தான் காய்ச்சல் குறைந்தது.



சென்ற அக்டோபர் மாதம் எட்டாம் தேதி ரூர்க்கி தென் இந்தியக் கலாசாரக் குழுவின் ஆதரவில் குமாரி நளினியின் பரதநாட்டியம் வெகு விமரிசையாக நடைபெற்றது. பஞ்சாபைச் சேர்ந்த இவர், டில்லி 'நாட்டிய சுதா'வில் திரு என். வி. வெங்கட்ராமனிடம் முறையாகப் பரதநாட்டியம் பயின்று தேறியவர்.

ஆனால் முதல் நாள் கூட அவருக்கு வைத்தியத்துக்கு ஓய்வில்லை. வந்தவர்களுக்கு மருந்து கொடுத்துக் கொண்டுதான் இருந்தார். எழுந்திருக்க முடியாமல் பையை எடுத்துத் தரச் சொல்லிப் பொட்டலங்களை எடுத்துக் கொடுத்தார். 'நச் நச்' என்ற கேள்விகளுக்குப் பதில் சொல்வது வேறு.

நாலாம் நாள் காலையில் எட்டு மணியிருக்கும். ராஜாங்கமய்யரும் டொக்கியும் வந்து நின்றார்கள். கண்ணில் ஜுரம் பளபளக்க, முகத்தில் ரோமம் படரப் படுத்திருந்தவரைக் கண்டு ராஜாங்கம் பதறிப்போய் விட்டார்.

''ஜுரமா, மாமா?'' என்று அருகே வந்து உட்கார்ந்தாள் டொக்கி.

''ஆமாம்மா!''

''தெரியவேயில்லையே! சொல்லியனுப்பப்படாதா, மாமா?''

''யார்கிட்ட குழந்தே, சொல்லியனுப்பறது?''

''அவர் வந்தாலும் சொல்லியனுப்பலாம். வல்லே போலிருக்கு.''

''யாரு?..... ஓ....'' என்று புரிந்து கொண்டார். சாதாரணமாக ரங்கனின் பெயரைச் சொல்லுகிறவள் 'அவர்' என்றதும் வந்த புன்சிரிப்பைக்கூடச் சட்டென்று அடக்கிக் கொண்டார் அவர். ''ரங்கன் வரலையே. வந்திருந்தால் சொல்லியனுப்புவேன். அங்கே அவர் வந்தாரோ.....?''

''நேத்திக்குக்கூட வந்திருந்தார். நீங்க வரலையேன்னு கேட்டேன். 'நானும் ரெண்டு மூணு நாளாச்சு. பார்க்கலை'ன்னு சொன்னார். சரி, நாம்தான் வெறுமே வெறுமே போயிண்டிருக்கிறோமே, இவர்கள்தான் வந்து பார்க்கட்டுமேன்னு நீங்க வரலே போலிருக்குன்னு நினைச்சுட்டேன்'' என்றாள் டொக்கி.

அனந்தசாமிக்குப் புன்னகை வந்துவிட்டது. ''எப்படிச் சிரிக்காமல் சொல்றாய் இதை?'' என்று கேட்டார்.

''நிஜமாத்தான், மாமா சொல்றேன். எங்களுக்குத்தான் விலாசம் தெரியும். காரியம் இருந்தால் தவிர ஒருத்தரைப் பார்க்கிறதில்லேன்னு இருக்கிறாப்போல ஆயிடுத்து இப்ப.''

''இப்ப ஏதோ காரியமாகத்தான் வந்திருக்கே. இல்லேயா?''

''ஆமாம், மாமா! வந்தப்புறம்தான் ஜுரம்னு தெரியறது. இப்ப எப்படியிருக்கு, மாமா!'' என்று நெற்றியைத் தொட்டுப் பார்த்தாள் டொக்கி. ''இன்னும் ஜுரம் இருக்காப் போலிருக்கே!''

மங்களப் பாட்டி அப்பொழுதுதான் டீ போட்டுக் கொண்டு வந்தாள். யாரோ வந்திருப்பதைக் கண்டு ஒரு ஜேசர் கூடவே கொண்டு வந்து எல்லாருக்கும் பகிர்ந்து வைத்தாள்.

''எங்கம்மா காலமாகி ஒரு மாசம் ஆகப் போகிறது. போகிற போது மங்களப் பாட்டிகிட்டே, 'இனிமேல் நீதான் அவனுக்கு அம்மா'ன்னு சொல்லிட்டுப் போனா......''

''அதான் பேத்திக்கும் சேர்த்து டீ கொண்டு வந்திருக்காப்போலிருக்கிறது....''

''ஆமாண்டி குழந்தே... நீ எங்கே இருக்கே?...'' என்று தொடங்கி அவள் படிப்பு, ஜாகை எல்லாம் பற்றி விசாரிக்க ஆரம்பித்து விட்டாள் மங்களப் பாட்டி. பாட்டி இங்கிதம் தெரிந்தவள். அனந்தசாமியைப் பார்க்கவருபவர்களைக் கேள்விகள் கேட்டுத் துளைக்கமாட்டாள். ஆனால் டொக்கி உரிமையோடு சொல்லிக் கொண்டதும் அவளுக்கு மனம் கனிந்து விட்டது. அவளுடைய அழகையும், பளிரென்ற நிறத்தையும் தெளிவையும் பார்த்துக் கொண்டே கண்ணெடுக்காமல் நின்றாள். கேள்விகள் கேட்கத் தொடங்கி விட்டாள். அதிகமாகவும் கேட்கவில்லை. ஏதோ ஊரும் பேரும் தெரிந்தது போதும் என்று நிறுத்திக் கொண்டாள்.

''உங்க தகப்பனாரா?... என்ன பண்ணிண்டிருக்கார்?'' என்று ஒரே ஒரு கேள்விக்கு மட்டும் பதில் பெற்று, பாத்திரங்களை எடுத்துக் கொண்டு கீழே போனாள். 'என்ன ஜுரம், ஏன் வந்தது எப்படி வந்தது? தண்ணீரில் குளித்து வாயு கொண்டு விட்டதா? பீச்சில் அதிக நேரம் உட்கார்ந்து உடம்பில் ஜாட்யம் கண்டுவிட்டதா? மூன்று, நாலு நாட்கள் விடாமல் அடித்தால் என்ன ஜுரம்? என்ன சாப்பிடுகிறீர்?' என்று ஒன்று விடாமல் கேட்டாள் டொக்கி.

''வியாதிக் கெல்லாம் பேர் கிடையாது என் வைத்தியத்திலே. எங்களுக்கு எல்லா வியாதியும் ஒன்றுதான். பகவான் எப்படிப் பண்ணினானோ, அம்மாதிரி இல்லாதது வியாதி. அவன் எப்படி இருக்கணும் மனுஷ உடம்பு என்று நினைத்திருக்கிறானோ, அந்தமாதிரி இல்லே என்றால் வியாதி வந்து விட்டது என்று அர்த்தம். அதுக்கெல்லாம் பேர் கிடையாது. மாறியிருக்கிறதை மறுபடியும் பழையமாதிரி செய்ய வேண்டியதுதான். மனசு, உடம்பு ரெண்டையும் பழைய நிலைக்குக் கொண்டு வந்து விட்டால் வியாதி இல்லேயென்று அர்த்தம்!''

''வியாதிக்குப் பேர் கிடையாதா?... மனசு, உடம்பு என்கிறீர்களே! உங்கள் மனசுக்கு என்ன மாமா? அதுக்கு எப்படி வியாதி வரும்? அது ஏமாறறதுக்கு இடம் கொடுக்குமா? விஷமம் பண்ணுகிறதுக்குத் துணியுமா?'' என்று வியந்தாள் டொக்கி.

''நாம் என்னத்தைக் கண்டோம்?''

ராஜாங்கமய்யர் எப்பொழுதாவது இந்த சம்பாஷணையில் கலந்து கொண்டார். அவர் முன்னாலேயே கையமர்த்தி, ''நீங்கள் இரையாதீர்கள். என்னோடு பேச முடியாது. அதுக்கு உங்களுக்குத் திராணி இல்லே இப்ப'' என்று சிரித்துக் கொண்டே சொல்லி விட்டார். ''நீங்க ரெண்டு பேரும் பேசிண்டிருங்கோ. முடிஞ்சவரை கேட்டுக்கறேன்'' என்று சிறிது நேரம் உட்கார்ந்து விட்டு எழுந்து அலமாரியிலுள்ள புத்தகங்களைப் புரட்டத் தொடங்கினார் அவர்.

''ஏதோ காரியமாக வந்தேன் என்று சொன்னாய் இல்லேயா?'' என்று கேட்டார் அனந்தசாமி.

''ஆமாம், மாமா!'' என்று தலையைக் குனிந்து நகத்தை விரலால் தேய்த்துக் கொண்டிருந்தாள் டொக்கி.

''அப்பா என்று ஊருக்குப் போகிறார்?''

''நேற்றுப் புறப்படுவதாக இருந்தது. முந்தாநாள் ராத்திரி நான் சொன்னேன், அப்புறம் போகலாமென்று. நேற்று ஒரு வாரம் லீவை நீடிக்கச் சொல்லித் தந்தியடித்துக் கடுதாசும் போட்டார்.''

''ஏன்? அம்மாவுக்கு உடம்பு சரியாயில்லேயா?''

''அம்மாதான் எழுந்து நடமாட ஆரம்பித்து விட்டாளே. கொஞ்சம் பலஹீனமாக இருக்கிறது. அவ்வளவுதான். உட்கார்ந்தபடியே சமைக்கக் கூட ஆரம்பித்து விட்டாள். வீட்டில் யாருக்கும் உடம்பு ஒன்றுமில்லே.''

''அப்புறம்?''

''ஒன்றுமில்லே....'' என்று மென்று விழுங்கினாள் டொக்கி. (தொடரும்)




காட்டு ரோஜா

சங்கரராம்

பிற்பகல் சுமார் மூன்று மணி இருக்கும். பூஞ்சோலை ஓடையைக் கடந்து தங்களுடைய சோளக் காட்டுக்குப் போய்க் கொண்டிருந்தாள். நாற்புறமும் குன்றுகளும், மலைகளும் தான். கம்பு, சோளம், எள்ளு முதலியவை விதைக்கப்பட்ட மேட்டாங்காடுகளில் ஆங்காங்கே பெரும் பாறைகளும் உயர்ந்து நின்றன. பூஞ்சோலை எப்பொழுதும் 'விசுக் விசுக்' என்று நடப்பவள். வயது பதினேழு அல்லவா? ஆனால் இன்று அவளுடைய நடையில் ஒரு தளர்ச்சி தென்பட்டது. முகமும் கவலை பாய்ந்து கிடந்தது. பருத்த விழிகளில் இருந்து மின்னல் போல் ஒளி வீசியது. அவைகளில் சினமும் பயமும் ஏகாதிபத்தியத்துக்குப் போராடிக் கொண்டிருந்தன. அழகுக்கென அமைந்த இதழ்கள் அடிக்கடி துடித்தன. சிறிது கறுப்புத்தான். ஆனால் அவளுடைய அங்க அமைப்பின் அழகைச் சிலையில் உருவாக்க உண்மையான சிற்பி எவனும் ஏங்காமல் இருக்க மாட்டான்.

அவள் ஓர் எள்ளுக் காட்டிலிருந்த சிறு பாறையருகில் வந்த பொழுது, பாறைக்கு அப்புறமிருந்து ஏதோ ஓசை கேட்டது. பூஞ்சோலை திடுக்கிட்டு நின்றாள். கழுதைப் புலியின் குரலோ என்று சந்தேகம் வந்து விட்டது.

அடுத்த கணத்தில் "பயந்திட்டியா?" என்று கங்கன் சிரித்தவாறு கேட்டுக் கொண்டு ஓடி வந்தான்.



"நீயா! அம்மாடி! பயந்து போயிட்டேனே! நீயும் உன் விளையாட்டும்!" என்று சொல்லும்பொழுதே வெட்கமும் அழுகையும் அவளுக்கு வந்து விட்டன. சமாதானம் செய்ய முயன்ற கங்கனின் கைகளைப் பிடித்துத் தள்ளினாள். இரண்டொரு நிமிஷங்களுக்குப் பிறகு "புளியம்பட்டியிலிருந்து இப்போத் தான் வந்துகிட்டு இருக்கியா?" என்று கேட்டாள்.

கங்கன் 'ஆம்' என்பது போல் தலையை அசைத்தான்.

"என்னத்துக்குப் போனால் இந்த [illegible]?"

"இன்னிக்குத் தேதி [illegible] ஆகுது பூஞ்சோலை!"

"அதுக்குள்ளே பெரிய ஆபத்து வந்துட்டுது. போ... பட்டணத்துக்காரன் ஒருத்தன்—எவனோ காத்தவராயனாம்—என்னைக் கட்டிக்கிட்டுப் போக வந்திருக்கான்" என்று கூறிக் கொண்டே பூஞ்சோலை கண்ணீர் வடித்தாள்.

"என்னது! யார் அந்தப் பயல்? உதைக்கிற உதையிலே பட்டணம் போனவன் திரும்பிப் பார்க்கணும்."

"எங்க மாமன் பெண்சாதி செஞ்ச வேலை இது. அவளுக்கு அவன் சொந்தக்காரனாம். நான் நல்லா இருப்பேனாம், காட்டு ரோசாவாம்னு சொன்னாளாம்—"

"காட்டு ரோசாவுக்கு, காட்டு ராசா அல்ல வேணும். பட்டணத்துக்காரனா?"

பூஞ்சோலையின் முகத்தில் ஒரு புன்முறுவல் படர்ந்தது.

"அது இல்லே, அத்தான்! இந்தச் சடையாண்டி மாமன் ஏன் அவனைக் கண்டு அவ்வளவு மயங்குதோ, எனக்குத் தெரியலையே! மாதத்துக்கு நூறு ரூபாய் சம்பாதிக்கிறானாம். போகப் போக இருநூறுகூட வருமாம். மாதத்துக்கு ஒரு புஞ்சைக் காட்டை வாங்கிடலாமேன்னு. எல்லாம் வாயைப் பிளக்குதுங்க. எனக்கு என்னமோ பயமா இருக்குது அத்தான்!" என்று பூஞ்சோலை கண் கலங்கினாள்.

"சடையாண்டி மாமனாலே நமக்கு ஒரு தீங்கும் வராது. நீ பயப்படாதே. நம்ப ரெண்டு பேருக்கும் எப்பவோ முடிச்சுப் போட்டாச்சின்னு சொல்லியிருக்குதே."

"ஆமாம். அது சமயம் போலப் பேசும். அப்பாவுக்கு ஆசை காட்டினதே அதுதானே?"

"மூணு நாளுக்குள்ளே இவ்வளவு கூத்தா! சரி, எங்கே போய்க்கிட்டு இருக்கே?"

"எங்க சோளக் காட்டுக்குப் போறேன். ஒரு கனம் சோளத்தட்டு கொண்டு வர வேணும்."

"நானும் வரேன், வா!"

"வேண்டாம், வேண்டாம்! என்னைக் கண்டு [illegible] போல் சொல்லாதே. நேரா

சடையாண்டி மாமன் வீட்டுக்குப் போய்ச் சண்டை போடு. அப்புறம் தெரு ஓரமாய் எங்க வீட்டுத் தட்டைப் பந்தலிலே பட்டணத்துக்காரன் படுத்துக்கிட்டுக் கிடப்பான். போகிறபோக்கிலே அவனையும் பார். நானும் ஒரு நொடியிலே வந்துடறேன்.''

கங்கன் நேரை நோக்கி ஓடினான் என்றே சொல்ல வேண்டும். பன்னிரண்டு மைல்கள் நடந்து வந்த களைப்பையும் பசியையும் தீர்த்துக் கொள்ள நேராகத் தன் வீட்டுக்குப் போக உத்தேசித்திருந்தவன் பூஞ்சோலையின் வீட்டுக்கு எதிரிலிருந்த சடையாண்டி மாமன் வீட்டில் நுழைந்தான். பட்டணத்துக்காரனையும் கண்டான். 'ஆளைக் கண்டு மயங்காதே, ஊதுகாமாலே' என்று அவன் பாட்டனார் சொல்வது நினைவுக்கு வந்தது. ஆனால் அப் பழக்கமற்ற அவனுடைய உடையும், சொகுசாக வாரி விட்டிருந்த 'கிராப்பு'த் தலையும் கங்கன் மனத்தில் ஒருவிதப் பொறாமையையும் பயத்தையும் உண்டாக்கின.

சடையாண்டி மாமனுடைய வரவேற்பு அவனுடைய எரிச்சலை மேலும் அதிகரித்தது. ''வாடா, வாடா! காத்திருந்தவன் பெண்டாட்டியை நேத்து வந்தவன் கொண்டுபோகிறானே!'' அவர் வேடிக்கையாகச் சொல்லிக் காட்டினார். கங்கனுக்குக் கோபம் பீறிட்டுக் கொண்டு வந்தது. விழிகளில் தீப்பொறி பறந்தது. பேச முடியாமல் தவித்தான். அதைக் கண்டு, சடையாண்டி மாமனுக்குச் சிரிப்பு அதிகரிக்கத்தான் செய்தது.

''பைத்தியக்காரா! ஒரு பெண் என்றால், அதுவும் நல்ல பெண் என்றால் நாலு பேர் பார்க்கத்தான் வருவாங்க. பார்த்தவங்களெல்லாம் கட்டிக்கிட்டுப் போய் விடுவாங்களா? நீ இன்னும் வீட்டுக்குப் போகலியா? பல்லும் விளக்கல்லியா? நேரே இங்கே வந்தேன்னு சொல்லு! நல்ல பையன்டா, நீ. சரி, சரி, பல் விளக்கி முதல்லே பழையதைச் சாப்பிடடா. ரெண்டு எருமை தயிருக்குச் செலவு இல்லாமல் இருக்குது. ஏ, பிள்ளே! புளியம்பட்டியிலேயிருந்து கங்கன் ஒரு மூச்சிலே ஓடி வந்திருக்கான் பார். பாவம்! பசி காதை அடைக்கும். சாப்பாட்டைப் போடு'' என்று பின்புறத்திலிருந்த தன் மனைவிக்கு அவன் குரல் கொடுத்தான். கங்கனுக்குச் சிறிது சமாதானம் ஏற்பட்டது.

''வீட்டைக் கொஞ்ச நொடியிலே வைச்சுக்கிட்டு, இங்கே என் சாப்பிடணும், மாமா?''

''எனக்குத் தெரியுமடா, உங்க அம்மா ஒண்ணும் சொல்ல மாட்டாங்க.''

இதற்கு மேல் கங்கன் மறுக்க முடியாமல் கைகால்களைக் கழுவிக் கொண்டு வந்து, ''அந்தப் பட்டணத்தான் மாதம் நூறு ரூபாய் சம்பாதிக்கிறானாமே, மாமா?'' என்றான்.

''ஆமாம். யார் கண்டாங்க. அட, ஆயிரம்தான் இருக்கட்டுமே. பணம் இருந்தால் எதுவும் நடந்திடும்னு நினைக்காதே. நம்ம சேவிட்டுக் குப்பன் மகளைக் கண்காணாத சீமையிலே, துட்டுக்காகக் கொடுத்துடப் பார்த்தான். அது முடிஞ்சுதா?''

''சரி, மாப்பிள்ளைப் பையன் எப்படி மாமா?''

சடையாண்டிக்குச் சிரிப்பு வந்தது. ''நீ முந்தி சாப்பிடுடா. நானும் உன்கிட்டே உக்காந்துக்கிறேன். சாப்பிட்டுக்கிட்டே பேசலாம்'' என்று கங்கனுக்குப் போடப்பட்ட இலை அருகில் சடையாண்டி மாமனும் உட்கார்ந்து கொண்டான்.

''அடே, மெள்ளத் தின்னுடா. பூஞ்சோலைக்கு நாளைக்குத் தாலி கட்டி, நாளையன்னிக்கி அழைச்சிக்கிட்டுப் போயிட மாட்டான். அவனும் அவனைச் சேர்ந்தவங்களும் எத்தனை தடவை வரவேணுமோ, எவ்வளவு யோசனை செய்ய வேணுமோ? கண்ணாலமிங்கிறது, இன்னுக் கிரையா?''

''அவனுக்குப் பூஞ்சோலையைப் பிடிச்சிருக்குதாமா?''

''இது என்ன கேள்விடா, கங்கா? அந்தக் குட்டியை யாருக்குத்தான் பிடிக்காது? ஆனால் ஊர் அவனுக்குக் கொஞ்சங்கூடப் பிடிக்கல்லே. காட்டுக்கு நடுவிலே, நாலா பக்கத்திலேயும் புலிகளையும் கரடிகளையும் வைச்சிக்கிட்டு நாம் பயிரிட்டுப் பிழைக்கிறது அவனுக்கு ஆச்சரியமாகத்தான் இருக்குது. நாமெல்லாம் சூரப் புலின்னு அவன் நினைக்கிறான்.''




இப்பொழுது தன்னை அறியாமல் கங்கனுக்குப் புன்முறுவல் வந்தது. ''நம்ப ஊரைக் கண்டு நடுங்குறான்னு சொல்லு.''

''மெள்ளச் சொல்றியே! பூஞ்சோலையைக் கட்டிக்கிட்டுப் பட்டணம் போயிட்டால் அப்புறம் இந்தப் பக்கமே திரும்ப மாட்டானாம்.''

''எல்லாம் அவன் இஷ்டம் போலத்தானா?'' என்று கேட்டான் கங்கன்.

''அவன் அப்படித்தான் நினைச்சிக்கிட்டிருக்கான். சாயங்காலம் சாவடிக்கு வரயா?



வியக்கும் கவர்ச்சி

கைத்தறி துணிகளே

படுக்கை விரிப்புகள்
மேஜை விரிப்புகள்
திரைத் துணிகள்
கார்ப்பெட்டுகள்
மற்றும்
சோபா துணிகள்

கவர்ச்சிகரமான வர்ணங்கள்
வசீகரிக்கும் மோஸ்தர்கள்
பழமைமெபற்ற டிசைன்கள்
நீடித்துழைப்பவை – மேலும்
நீங்கள் நினைப்பதை விட
விலை குறைவானவை

அஸ்ஸாம், மணிப்பூர், வங்காளம், காஷ்மீர், உத்திரப்பிரதேசம், மஹாராஷ்டிரம் போன்ற இந்தியாவின் பல பிரதேசங்களிலும் தயாராகும் துணிகள் எல்லா ரகங்களிலும் உள்ளன

ஹாண்ட்லூம் ஹவுஸ்,
9, ரடன்பஜார், சென்னை-3.

தலைமை ஆபீஸ்: அகில இந்திய கைத்தறி துணிகள் விற்பனை கூட்டுறவு சங்கம் லிமிடெட், ஜன்மபூமி சேம்பர்ஸ், பம்பாய்-1.

FDS/HH-2 TM

அவன் பட்டணத்துக் கதையெல்லாம் பற்றிப் பிரமாதமாக அளப்பான்'' என்றான் சடையாண்டி.

''வேண்டாம், மாமா. என் வாய் சும்மா இருக்காது. ஏதாவது சொல்லி வைத்துச் சண்டையைக் கிளப்பி விடுவேன். நானும் பூஞ்சோலையும் உன்னைத்தான் நம்பிக்கிட்டிருக்கோம்'' என்று கங்கன் பணிவுடன் சொன்னான்.

''என்னாலே ஆனதைத்தானே செய்ய முடியும்? அவனுக்கு என்னமோ ஒரு விதமான கிலி பிடித்திட்டுது. ஊரைச் சுத்திப் பார்க்கணும்னு அவனுக்கு ஆசையாய் இருந்தது. நேத்து மூங்கில்பட்டி, வனக்குப்பாறை எல்லாத்தையும் காட்டினேன். அந்தப் போக்கிரிப் பயல் குப்பன் மகனும் கூட வந்திருந்தான்.''

''வேலாயுதமா?''

''அந்தப் பயல்தான். அவன் வேணுமின்னே பட்டணத்துப் பையனுக்குக் கடுக்காய் கொடுத்துக்கிட்டே வந்தான். முனிசிபு குதிரையைப் புலி கொன்னது இங்கே தான், இங்கேதான் ஒரு பையனைப் பாம்பு விழுங்கிட்டுது என்று மெய்யும் பொய்யுமா அளந்துக்கிட்டே வந்தான். பாவம், அந்தப் பையனுக்குச் சஞ்சலம் உண்டாயிட்டுது. அதுக்கு மேலே நான் வேலாயுதத்தைச் சாடையாக் கோவிச்சுக்கிட்டேன். அப்புறம் சின்னப்பன் வீட்டுக்கு வந்தோம். அவன் நாய் குட்டி போட்டிருக்குதுன்னு எனக்குத் தெரியும்.''

''நாயா அது? புலியாச்சுதே, மாமா. அதுவும் இன்னொரு ஆண் நாயுமாய் ஒரு சிறுத்தையைக் கொன்னுப் போட்டது தெரியுமில்லே?''

''தெரியுமடா, தெரியும். அதன் குட்டி ஒண்ணு வேணுமின்னு காத்தவராயன்-அதான் உன் போட்டிக்காரன் பேர் – ஆசைப்பட்டான். நாயில்லாத சமயம் பார்த்துச் சின்னப்பன் ஓர் ஆண் குட்டியைச் சாயங்காலம் கொண்டு வரேன்னு சொல்லியிருக்கான்.''

''அப்போ, அய்யா ரெண்டு மூணு நாளிலே நாய்க் குட்டியோடு கிளம்பிடுவார் போலிருக்குது'' என்றான் கங்கன்.

''ஆமாம். அவன் பெண்ணைப் பாத்தாயிட்டுது. மத்தப் பேர் பார்க்கறதும், பேசறதும் இருக்கில்லே. சரி, வீட்டுக்குப் போடா! பாவம், நீ வந்ததுகூட உன் தாயாருக்கு இன்னும் தெரியாது'' என்று சடையாண்டி மாமன் கங்கனை அனுப்பி விட்டான்.

• • •

அன்று மாலை சாவடியில் காத்தவராயன் பட்டணத்தைப் பற்றிய தகவல்களையெல்லாம் கூறிக் கொண்டிருந்த போது, சின்னப்பன் நாய்க் குட்டியைக் கொணர்ந்து அவனுக்குக் கொடுத்தான். காத்தவராயனுக்கு ஆனந்தம் பொங்கி வழிந்தது. நாய் இனத்துக்கு மனிதனையே தன் நண்பனாகக் கருதுவது, கூடப்பிறந்த தன்மையாதலால், அந்த நாய்க்குட்டி காத்தவராயன் கொஞ்சிக் குலவுவதையெல்லாம் மகிழ்ச்சியுடன் ஆமோதித்தது. ''ராத்திரியிலே, உன் கட்டிலுக்குக் கீழே படுக்க வைச்சுக்கோ'' என்று கூறினான் சடையாண்டி மாமன்.

''கீழே என்ன? கட்டில் மேலேயே வைச்சுக்கிறேன். இனிமேல் அது என்னை விட்டுப் பிரியாது'' என்றான் காத்தவராயன். ஏதோ விஷயங்களைப் பற்றிப் பேசிய பிறகு, அந்த ஊரில் ஏராளமாய் இருந்த துஷ்ட மிருகம் எதுவென்று காத்தவராயன் வினவினான்.

''கழுதைப் புலி'' என்றான் ஒருவன்.

''கழுதைப் புலியா? என்னைக் கேலி பண்றீங்களா?'' என்றான் காத்தவராயன்.

''இல்லே, தம்பி. மெய்யாலும் அப்படி ஒண்ணு இருக்குது'' என்றான் சடையாண்டி மாமன்.



''பார்த்தால் கழுதை நிறமாய் இருக்கும். வாய் கறு கறுன்னு காது வரை நீண்டிருக்கும். கடவாய்ப் பல்லுங்களோ, எலும்பையும் தவிடுபொடி ஆக்கிடும்'' என்றான் ஒருவன்.

''என்ன இருந்தாலும் அது கழுதைதான். அதன் வலிமை அதுக்கே தெரியாது. எங்கே எது செத்துக் கெடந்தாலும் பொறுக்கித் தின்னும். புலி அடிச்சுத் தின்ன மிச்சமெல்லாம் அதுக்குத்தான். வலுவிலே புலி, ஒண்டிப் பதுங்கிறதுலே நரி'' என்றான் மற்றொருவன்.

''ஆளுங்களைத் தீண்டுமா?'' என்று காத்தவராயன் விசாரித்தான்.

''அதுலே ரெண்டு சாதி இருக்குதுங்க. வண்டிக் கழுதை என்கிறதுதான் பொல்லாதது. ஒண்டி சண்டியாய்ப் போனால் ஒரு கை பார்க்கும்'' என்றான் வேலாயுதம்.

''அதுவும் ஆளைப் பார்த்துக்கும் தம்பி! இப்போ உங்க பட்டணத்துலே என்னைப் போல நாட்டுப்புறத்தான், காட்டுப்புறத்தான்களைக் கண்டால், ஜோபி அடிக்கிறவங்க ஒரு நொடியிலே தெரிஞ்சுகப்பாங்களாமே. அப்படித்தான், இந்த ஊர்க் காட்டுமிருகங்களும். நம்மோடு வாழுறவுங்க இல்லையான்னு அவையும் கண்டுக்கும். அயலானானால் கொஞ்சம் ஆட்டம் போடத்தான் செய்யும்'' என்றான் சடையாண்டி மாமன்.

அது வேனிற் காலம். எல்லா வீடுகளுக்கும் பனை ஓலைக் கூரையே இருந்த போதிலும், காற்றோட்டமில்லாததால் உட்புறமிருந்த வெப்பத்தைத் தாங்க முடியாது. ஆகவே அனைவரும் குழந்தை குட்டிகளிலிருந்து வயோதிகர்கள் வரையில், ஆளுக்கொரு கயிற்றுக் கட்டிலை, வீட்டுக்கு முன் வெட்டவெளியில் போட்டுக் கொண்டு உறங்குவார்கள். சடையாண்டி மாமனின் வீடு, பூஞ்சோலை வீட்டுக்கு எதிரில் இருந்ததால், காத்தவராயனும் சடையாண்டி மாமனும் கட்டிலில் படுத்திருந்தவாறு வெகு நேரம் வரையில் பேசி விட்டுக் கண்ணயர்ந்தனர்.

• • •

மேகமற்ற வானத்தில் சந்திரன் தன் பூரண ஆட்சியைச் செலுத்தினான். அக்கிராமம் முழுதுமே தூக்கத்தில் ஆழ்ந்து கிடந்தது.

அப்பொழுது இருந்தாற் போலிருந்து ஒரு பெரிய கூக்குரல் கிளம்பியது. மறுகணம் காத்தவராயன் திடுக்கிட்டு எழுந்து உட்கார்ந்து கொண்டான். அவன் கண்முன் சிறிது தூரத்தில் கன வேகமாய்ப் பாய்ந்தோடிக் கொண்டிருந்த பழுப்பு நிறமாயிருந்த ஒரு மிருகத்தைக் கண்டான். அதைச் சில மனிதர்கள் துரத்தினர்; நாய்களும் துரத்திக் கொண்டிருந்தன. ஆனால் சிறிது நேரத்துக்குள் இந்த அமளி அடங்கி விட்டது. ''ஒன்றுமில்லே. ஒரு கழுதைப் புலி வந்து பார்த்திட்டு ஓடுது'' என்றான் ஒருவன் அலட்சியமாக.

கால் மணி நேரத்துக்குள் ஒன்றும் நேரிடாதது போல், அவரவர்கள் கட்டில்களை இழுத்துப் போட்டுக் கொண்டு தூங்கி விட்டனர். ஆனால் காத்தவராயனுக்கு அமைதி குலைந்து விட்டது. உட்கார்ந்தவாறே இருந்தான். பிறகு சஞ்சலத்தைப் பொறுக்க முடியாமல் சடையாண்டி மாமனை எழுப்பினான்.

''மாமா! எனக்கு இங்கே தூக்கம் வர மாட்டேங்குது. உங்க வீட்டிலே சன்னல் வைச்ச அறை இருக்குதே, அதிலே படுத்துக்கிறேனே'' என்று அவன் கெஞ்சியவாறு கேட்டுக் கொண்டான்.

''அப்படியே செய், தம்பி. இதெல்லாம் எங்களுக்குத் தண்ணி பட்டபாடு. ஆனால் உனக்குப் பயமாகத்தான் இருக்கும். இதை நான் யோசிக்காமல் போனேனே'' என்று வருந்தியவாறு அவன் கட்டிலை வீட்டுக்குள் போட்டான். காத்தவராயனும் கட்டிலில் உட்கார்ந்து கொண்டு, நாய்க் குட்டியையும் அருகில் வைத்துக் கொண்டான். உள்ளே மிருகங்கள் பயம் இல்லாவிடினும், பாம்புகள் நிறைந்த அவ்வூரில் ஏதாவது ஒன்று உள்ளே பதுங்கிக் கிடக்குமோ என்ற அச்சத்தால் கையிலிருந்த 'டார்ச்' விளக்கால் அறையைச் சோதித்துப் பார்த்தான். ஒன்றுமில்லை. நிம்மதி ஏற்பட்டது. ஆனால் தூக்கம் வர மறுத்தவாறே இருந்தது.

சிறிது நேரத்துக்குப் பிறகு, கதவில்லாத சாளரத்தின் கம்பிகளைப் பிறாண்டும் ஓசை கேட்டது. பயந்து கிடந்த காத்தவராயன் டார்ச் விளக்கைப் போட்டான். பழுப்பு நிறம், பருத்த மண்டை, கருகரு வென்றிருந்த நீண்டவாய், தணல் போன்ற விழிகள். காத்தவராயன் உளறினான், அலறினான். கும்பல் கூடிவிட்டது. ஆனால் மறுபடியும் அவனைத் தேடி வந்த கழுதைப் புலி எப்பொழுதோ மாயமாய் மறைந்து விட்டது. சடையாண்டி மாமன் காத்தவராயனுக்குப் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டு தைரியப்படுத்தினான். பயமில்லை. காத்தவராயன் எப்பொழுது விடியும் என்று காத்திருந்தான். அந்த ஊரும் வேண்டாம், அந்த ஊர்ப் பெண்ணும் தேவையில்லை என்று சடையாண்டி மாமனிடம் இரகசியமாய்ச் சொல்லி விட்டான். காலையில், பூஞ்சோலையின் பெற்றோர்களிடம் விடைபெற்றுக் கொண்டு, பரிவுடன் சடையாண்டி மாமன் அமர்த்திய மாட்டு வண்டியில் ஏறிக் கொண்டு பத்து மைலுக்கு அப்பாலிருந்த ரயிலடிக்குத் தன் நாய்க்குட்டியுடன் ஓட்டம் பிடித்தான்.

அரை மணி நேரத்துக்குப் பிறகு கங்கன் சடையாண்டி மாமனிடம் வந்து, ''நம்ம ஊரைக் கண்டு அவன் பயந்துட்டான், மாமா!'' என்று மகிழ்ச்சியுடன் கூறினான்.

''போடா, பைத்தியக்காரா! ரகசியத்தைக் கேளு. ஊட்டு மறக்காத நாய்க் குட்டி கழுதைப் புலிக்கு ஒரு லட்டு போல. தொலையிலிருந்தே அது மோப்பத்தால் நாய்க் குட்டி இருக்கிற இடத்தைக் கண்டு பிடிச்சுடும். அப்புறம் குடிகாரனுட்டம்தான். குட்டியைத் தின்கணும்கிற பைத்தியத்திலே அது என்ன வேணுமின்னாலும் செய்யும். ஆனால் பயங்காளி ஆச்சதே. ஆளண்டை போகாது. மெல்ல நாய்க்குட்டியை அடிச்சுக் கிட்டுப் போகத்தான் பார்க்கும். இப்போ விளங்கிச்சா எதுக்காக நாய்க்குட்டியை எப்பவும் அவன் பக்கத்துலே வைச்சுக்கச் சொன்னேன்னு. உனக்காக இந்தப் பாவத்தைச் செய்தேன்'' என்றான் சடையாண்டி மாமன்.

கங்கன் திகைத்துப் போய் நின்றான்!

ரீடா கூந்தலைப் பாதுகாத்து



தொல்லைகளைத் துரிதமாகவும்
திறமையாகவும் நீக்குகிறது.

ரீடாவை உபயோகித்து மயிர்க்கால்களுக்
குப போஷாக்குத் தருவதால் உங்கள்
கூந்தல் நீண்டு வளர்ந்து மிருதுவாகவும்
பளபளப்பான கருமை நிறத்துடனும்
காணப்படும். இதிலுள்ள மருந்துச்சத்துக்
கள், மயிர் கொட்டுதலை நிறுத்தி,
பொடுகைபபோக்கி, நரைக்காமல் பாது
காக்கும். புட்டியிலுள்ள ரீடாவைத்
தேங்காய் எண்ணெய், கடுகு அல்லது
நல்லெண்ணெயில் கலந்து எப்போதும்
உபயோகியுங்கள். காரிருள் போன்ற
கருங்கூந்தல் அழகை நிச்சயம் நீங்கள்
பெறலாம். ரீடாவை உபயோகிப்பதுடன்
உங்கள் நண்பர்களுக்கும் சிபாரிசு
செய்யுங்கள்.



ரீடா

கவர்ச்சி தரும் கூந்தலின் ரகசியம்

ரீடா கம்பெனி, சென்னை-1. R.6 TM

உங்கள் வீட்டில் வலியின் தொல்லை இல்லாமல் செய்ய...







ஸாரிடான்

உபயோகியுங்கள்

தலைவலி, உடம்புவலி, பல்வலி, ஜுரம் போன்ற உணர்ச்சி, தேக அசௌக்கியம் முதலானவைகளால் உங்கள் குடும்பத்தினர் வருந்தினால் அவர்களுக்கு ஸாரிடான் கொடுங்கள். விரைவில் சிறிதும் அபாயமின்றி நிச்சயமாக நிவாரணமளிக்கும். அத்துடன் ஸாரிடான் தெம்பையும், புத்துணர்ச்சியையும் அளிக்கும்! பெரியவர்களுக்கு ஒரு ஸாரிடான் வில்லை ஒரு பூர்த்தியான டோஸ். குழந்தைகளுக்கு $\frac{1}{4}$ முதல் $\frac{1}{2}$ வில்லை வரை போதுமானது.





ஒரே வில்லை போதும்

ஒரு வில்லை 13 நயா பைசா

'ரோஷ்' தயாரிப்பு

ஸோல் டிஸ்டிரிப்யூட்டர்கள் : வால்டாஸ் லிமிடெட்

கன்னிக்குமரி

தொ. மு. பாஸ்கரத் தொண்டைமான்

'தவம் என்பது ஒருவனுடைய மனம் முழுதும் ஒரே நோக்கத்தில் ஈடுபட்டு வேறு எண்ணங்களுக்கு இடம் கொடுக்காமல் இருப்பதற்காகச் செய்யப்படும் முயற்சி. அந்த முயற்சியில் இந்திரிய ஆசைகளை ஒடுக்குவதற்கான பல பயிற்சிகள் அடங்கியுள்ளன. அந்தப் பயிற்சிகள் எல்லாவற்றுக்கும் சலிப்புத்தன்மையும் கலங்காத உள்ளம் உடைமையுமே அடிப்படை. இந்தச் சலிப்புத் தன்மையில் நிலைத்து நின்றால்தான் ஆன்ம சக்திகள் வளர்ந்து தவ வலிமையும் ஞானமும் உண்டாகும். அதன் பின் ஒருவன் நாடுகின்ற மெய்ப்பொருள் கிட்டும்' என்று தவத்தின் பெருமையைப் பெரியோர்கள் கூறியிருக்கிறார்கள். அன்று இமவான் மகளான உமை கைலையில் உள்ள பரமேசுவரனை நோக்கித் தவம் கிடக்கிறாள், அவனையே காதலனாக அடைய. அந்தத் தவ மகிமையால் அவனையே கணவனாகப் பெறுகிறாள். ஆனால் அவளே இந்திய நாட்டின் தெற்குக் கோடியில் குமரி முனையில் நின்று தவம் செய்கிறாள். இந்தத் தவம் மக்களையெல்லாம் உய்விக்க என்று அறிகிறபோது நாம் அன்னையின் கருணையை வியக்கிறோம். அன்னைக்கும் அத்தனுக்கும் தலம்தோறும் திருக் கல்யாணம் நடத்தி அந்தக் கல்யாணக் கோலத்தை எல்லாம் கண்டுமகிழ்ந்த தமிழன், அன்னையை ஒரு நல்ல தவக் கோலத்திலும் நிறுத்திப் பார்க்க எண்ணுகிறான். கணவன் மனைவி குழந்தை குட்டிகள் என்று ஏற்பட்டு விட்டால் அன்னைக்கு உலக மக்களைப் பற்றி, அவர்தம் குறைகளைப் பற்றியெல்லாம் கவலைப்பட நேரம் ஏது? அவள் கன்னிப் பெண்ணாக - எண்ணியதையெல்லாம்பெறும் தவம் செய்யும் தெய்வமாக - இருந்தால் வேண்டுவன எல்லாம் கொடுக்க இயலும் அல்லவா? ஆதலால் தான் அன்னை பகவதி என்றும் கன்னியாக, அழகான குமரியாக, நின்று தவம் செய்து அருள்புரிகிறாள். அவள் அப்படி தவம் செய்யும் தலமே கன்னியாகுமரி. அந்தக் குமரிமுனைக்கே செல்கிறோம் நாம் இன்று.

கன்னியாகுமரி செல்வதற்குத் திருநெல்வேலி ஜங்ஷனில் ரயிலை விட்டு இறங்கிக் கிட்டத்தட்ட ஐம்பத்திரண்டு மைல் காரிலோ அல்லது பஸ்ஸிலோ போகவேணும். காரிலே போனாலும் பஸ்ஸிலேபோனாலும் நேரே குமரிக்குச் செல்ல வழியுண்டு. இல்லாவிட்டால் நாகர் கோவில் போய் அங்கிருந்தும் செல்லலாம். ஊருக்கு வடபுறம் மேடான பிரதேசத்திலே கார் நின்று விடும். அதன்பின் சரிவாக இறங்கும் பாதை வழியாகத்தான் கன்னிக் குமரியின் கோயிலுக்குச் செல்ல வேண்டும்.

> நிலத்திரைக் கடல்ஓரத்திலே நின்று
> நித்தம் தவம்செய் குமரிஎல்லை

என்று பாரதி பாடிய பாட்டு அப்போது ஞாபகத்துக்கு வரும். தமிழ் நாட்டின், ஏன், இந்திய நாட்டின் தெற்கெல்லையே இக் குமரிமுனைதானே! ஆதலால் நேரே அக் குமரி முனைக்கே செல்லலாம். அங்கு அரபிக் கடல், வங்காளக்குடாக் கடல், இந்து மகா சமுத்திரம் மூன்றும் சேர்ந்து அலை வீசிக் கொண்டிருக்கும். சாதாரண நாளானால் அம்முனையில் நின்றே காலையில் சூரியன் கடலில் இருந்து எழுகின்ற காட்சியைக் காணலாம்; அதுபோலவே மாலையில் சூரியன் கடலில் குளிப்பதைக் கண்டு மகிழலாம்.

நீங்கள் அதிர்ஷ்டக்காரர்களாக இருந்து நீங்கள் செல்லும் தினம் பௌர்ணமியாக இருந்து விட்டாலோ சூரியாஸ்தமனத்தையும் சந்திர உதயத்தையும் ஒரே நேரத்தில் காணும் பேறுபெறலாம். இந்தக் காட்சிகளைக் காண்பதற்கென்றே கன்னியாகுமரிக்கு ஒரு நடை நடக்கலாம். ஆனால் நாமோ நமது க்ஷேத்திராடனத்தில், குமரி முனையில் இருந்து தவம் செய்யும் பகவதியம்மையைக் கண்டு தரிசிக்க வந்தவர்கள் ஆயிற்றே; ஆதலால் கோயிலை நோக்கியே நடக்கலாம். கோயிலுள் செல்லு முன் இந்த அம்மை இங்கு தவம் செய்வதைப் பற்றி நாட்டில் எழுந்திருக்கும் பல கதைகளையும் தெரிந்துகொள்ளலாம்.

ஒரு கதை: பரத கண்டத்தை ஆண்ட ஆதிப் பரத மன்னனது புதல்வர் எட்டுப்பேர்; ஆனால் குமரி என்று ஒரே புதல்வி. ஏழு அண்ணன்மாருக்கு ஒரு தங்கை வள்ளி என்றால், எட்டு அண்ணன்மாருக்கு ஒரு தங்கையாகக் குமரி பிறக்கிறாள்; வளர்கிறாள். எட்டு ஆண்



குமரிக் கன்னி

மக்களுக்கும் ஒரு பெண்மகளுக்கும் நாட்டைப் பங்கிட்டுக் கொடுக்கிறன் பரதன். குமரி யிருந்து ஆண்ட இடமே இன்றைய குமரி முனை என்கிறது ஒரு கதை.

அன்னை செய்யும் தவத்தைக் குறித்தும் ஒரு கதை: வசுதேவரையும் தேவகியையும் கம்ஸன் சிறையில் அடைத்து விடுகிறான். அவர்களுக்குப் பிறக்கும் குழந்தைகளையெல்லாம் கொன்று தீர்க்கிறான். அப்படிப் பிறக்கும் குழந்தை ஒன்றினால்தான் அவனுக்கு மரணம் என்று சோதிடர்கள் கூறி விடுவதால் ஏழு குழந்தைகளை இப்படிப் பலி கொடுத்த தேவகிக்குக் கண்ணன் பிறக்கிறான் சிறையில். வசுதேவருக்கு இந்தப்பிள்ளையைக் காப்பாற்ற வேண்டுமென்று தோன்றுகிறது. இரவோடு இரவாக யமுனையைக் கடந்து கோகுலத்தில் யசோதையிடம் கண்ணனைச் சேர்த்து விடுகிறார். அங்கு பிறந்திருந்த பெண் குழந்தையை எடுத்து வந்து தேவகியின் பக்கத்தில் கிடத்தி விடுகிறார். கம்ஸன் வந்து இந்தப் பிள்ளையை எடுத்துச் சென்று, அதனைக் கொல்ல விரைகிறான். ஆனால் அந்தத் தெய்வக் குழந்தையோ அவனை இகழ்ந்து உதைத்துத் தள்ளி விட்டு, அந்தரத்திலே மறைகிறது. இப்படி மறைந்த குழந்தையேதிருமாலின் தங்கையான எல்லாம் வல்ல சக்தி. அந்த சக்தியே பகவதி என்னும் திருநாமத்தோடு இந்தக்கடற்கரையில் கையில் இலுப்பைப் பூ மாலை தாங்கிச் சிவபெருமானை நோக்கித் தவம் செய்கிறாள். என்றும் கன்னியாக, குமரியாக நின்று தவம் செய்யும் பகவதியைத்தான் இன்று குமரி என்று வந்தித்து வணங்குகிறோம் நாம்.

இவற்றை யெல்லாம் தூக்கியடிக்கும் வேறொரு கதையும் உண்டு. பகன் மூகன் என்று இரண்டு அசுரர்கள் தேவர்களுக்கு இடுக்கண் செய்கிறார்கள். தேவர்கள் முறையிட இறைவன் தன்னுடைய சக்தியை இரு கூறாக்கி இரண்டு பெண் தெய்வங்களாக உருவாக்குகிறார். இந்தச் சக்தியில் ஒன்றே வட கோடியில் கங்கைக் கரையில்காளியாகவும், மற்றொன்று தென் கோடியில் கடற்கரையில்குமரியாகவும்நின்று நம்மைக் காக்கிறார்கள். பகனுடனும் மூகனுடனும் போர்புரிந்து வெல்கிறார்கள். தேவர்களும் இடுக்கண் தீர்கிறார்கள். புரட்டாசி மாதம் நவராத்திரி உற்சவத்தில் அம்மை, உச்சைசிரவஸ் என்னும் அமராபதியின் அசுவத்தில் அமர்ந்து போர்க்களம்செல்வதை 'அம்பு சாத்தல்' என்ற பெயரோடு விழா நடத்துகிறார்கள்.

இக்கதைகள் எல்லாம் எப்படியும்இருக்கட்டும். அன்னை பகவதி குமரி முனையில் நின்று தவம் செய்து அதனால் தவ வலிமை பெறுவது



கோயில் வாசல்

மக்களை உய்விக்கவே என்ற எண்ணத்தோடேயே கோயிலுள் நுழையலாம். கோயில் மிகவும் பெரிய கோயிலும் அல்ல; சிறிய கோயிலும் அல்ல. கடல் ஓரமாக உள்ள பெரு வெளியில் நான்கு புறமும் மதில் அமைத்துக் கோயில் கட்டியிருக்கிறார்கள். கோயிலின் பிரதான வாயில் வட பக்கம் இருக்கிறது. முதலில் ஒரு பெரிய பிராகாரம் உண்டு. அதை அடுத்தே துவஜஸ்தம்பம், பலி பீடம் முதலியன இருக்கின்றன. பகவதி அம்மை தினமும் இப் பிராகாரத்தைச் சுற்றி வருவாள். இந்தப் பிராகாரத்தை ஒட்டியே ஊஞ்சல் மண்டபமும் இருக்கிறது. இதற்குள்ளே உள்ள அடுத்த பிராகாரம்தான் உள் பிராகாரம்: அங்கே மணிமண்டபமும் சபா மண்டபமும் இருக்கின்றன. மணிமண்டபத்தை ஆறு வட்டத் தூண்கள் தாங்கி நிற்கின்றன. மண்டபத்துச் சுவரின் மேல் வரிசையில் புராணச் சிற்பங்கள் நிறைந்திருக்கின்றன. மண்டபத்தின் மேற்புறத்தில் ஓவியங்கள் காணப்படுகின்றன. இதற்கும் உள்ளே உள்ள உள் மண்டபத்தில் தான் கன்னிக்குமரி தவக் கோலத்தில் நிற்கிறாள்; கிழக்கு நோக்கி நின்ற கோலத்தில். இவளது கிரீடத்தில் பிறைச்சந்திரன் ஒளி தருகிறான். இவள் அணிந்திருக்கும் அணிகளில் வைர மூக்குத்தி மிக மிகப் பிரகாசமானது. கடலில் பிரயாணம்செய்பவர்க்குக் கலங்கரைவிளக்குப்போல் ஒளிதரும் என்று உபசாரமாகக் கூறுவதும் உண்டு. வலக்கையில் மாலை தாங்கி, இடக்கையைத் தொடையில் பொருத்தி நிற்கிற எழில் சொல்லும் திறத்தது அன்று. அம்மையைக் கண் குளிரத் தரிசித்துவிட்டுத் திரும்பும் போது நம்முடைய உள்ளம் நிறைவு பெறும்; உடல் புளகிக்கும்.

இவளது அழகை அறிந்த அந்தச் சுசீந்திரத்தில் உள்ள தாணுமாலயன், இவளை மணம் செய்து கொள்ள விரும்புகிறார். அதற்காக தேவர்களைக் கூட்டித் தம் விருப்பத்தை வெளியிடுகிறார். தேவர்கள் எல்லாம் வந்து கூடிய இடமே சுசீந்திரத்தில் கன்னியம்பலம் என்று வழங்குகிறது. தாணுமாலயன் விருப்பம் அறிந்த தேவர்கள் மனம் கலங்குகிறார்கள். கன்னிக்குமரி திருமணம் செய்து கொண்டால் அவள் தவம் பழுதாகி விடுமே. பின்னர் அசுரர்களை அழிக்க முடியாதே என்று வருந்துகின்றனர். இந்தச் சமயத்தில் நாரதர் வந்து, தேவர்களையெல்லாம் சமாதானம் செய்து தாமே திருமணத்தை முன்னின்று செய்து வைப்பதாகச் சொல்கிறார். அவர் தாணுமாலயனிடம், கல்யாணத்துக்கு இரண்டு நிபந்தனைகள் விதிக்கிறார்.

ஒன்று கண்களில்லாத் தேங்காய், காம்பில்லா மாங்காய், நரம்பில்லா வெற்றிலை, கணு இல்லாக் கரும்பு, இதழ் இல்லா புஷ்பம் இவற்றைச் சீதனப் பொருள்களாகக் கொண்டு வர வேண்டும் என்பது. இரண்டாவது, திருமண முகூர்த்தம் சூரிய உதயத்தில்; அதற்கு ஒரு நாழிகைக்கு முன்னமேயே மணமகன் மணவறைக்கு வந்துவிட வேண்டும் என்பது. மணமகனை தாணுமாலயன் இதற்கெல்லாம் அஞ்சாமல் கேட்ட பொருள்களை யெல்லாம் வண்டி வண்டியாக அனுப்பி வைக்கிறார். இடையில் உள்ள ஐந்து மைல் தூரத்தைக் கடக்க அர்த்த ராத்திரியே புறப்பட்டு விடுகிறார். நாரதர் பார்க்கிறார்; உடனே சேவல் உருவெடுத்து சூரிய உதயத்தை அறிவிக்கும் உதய ராகத்தைக் 'கொக்கரக்கோ' என்று கூவி அறிவித்து விடுகிறார். முகூர்த்த நேரம் தவறிவிட்டது. நாம் வழுக்கி விட்டோம் என்ற அவமானத்தோடேயே தாணுமாலயன் மேற்செல்லாமல் சுசீந்திரத்துக்குத் திரும்பி விடுகிறார். இப்படி இவர் திரும்பிய இடமே இன்றும் வழுக்குப் பாறை என வழங்குகிறது. சுசீந்திரத்துக்குக் கிழக்கே ஒரு மைலில் இந்த வழுக்குப் பாறை இருக்கிறது. இதில் சேவல் கோழியின் கால் தடமும், தாணுமாலயனது திருவடித் தடமும் காண்கின்றன என்பர். இப்படி பகவதி-தாணுமாலயன் திருமணம் தடைப்பட்டு விடுகிறது. அன்னை பகவதியின் தவம் தொடர்ந்து நடக்கிறது. அவளுக்கு வந்த பரிசப் பொருள்களான பொன்னும் மணியும் நெல்லும் கரும்புமே இன்று குமரிக்கரையில் பல நிற மணல்களாகவும் பல குன்றுகளாகவும் பரந்து கிடக்கின்றன என்று கூறுவார்கள்.

இன்று இங்குள்ள கடலிலே காந்திஜியின் அஸ்தியைக் கரைத்ததன் ஞாபகார்த்தமாகக் காந்தி ஸ்தூபம் ஒன்று கட்டப்பட்டிருக்கிறது.

கன்னிக்குமரியைத் தமிழ் இலக்கியங்கள் எல்லாம் பல படக்கூறும். நெடியோன்குன்றம் தமிழ்நாட்டின் வட எல்லை என்றால் தொடியோள் பௌவம் தமிழ்நாட்டின் தெற்கெல்லை என்று சிலப்பதிகாரம் கூறுகிறது. பஞ்ச நாரி தீர்த்தங்களில் கன்னியாகுமரி கன்னி தீர்த்தம் என்னும் சிறப்புப் பெற்றது. 'குரங்கு செய் கடல் குமரியம் பெருந்துறை' என்று மணிமேகலை கூறுவதால் ராமர் கட்டிய சேது இவ்வளவு தூரம் பரவி இருந்ததோ என்று எண்ண வேண்டியிருக்கிறது. வட நாட்டிலிருந்து பலர் தென்திசைக் குமரியாட வருவார் என்பதும் இலக்கியங்கள் மூலம் அறிகிறோம். ஆதியில் பாண்டியனிடமே இக் குமரித்துறை இருந்திருக்கிறது. குமரித் துறைவன் என்றே அவன் அழைக்கப் பட்டிருக்கிறான். அதன் பின்னரே சோழர் சேரர் ஆதிக்கம் இங்கு பரவி யிருக்கிறது. குமரிக்குத் தெற்கே ஒரு பெரிய நிலப்பரப்பு இருந்ததென்றும் அதுவே குமரிக் கண்டம் என்றும் சரித்திர ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர். நாம் வந்தது ஆராய்ச்சி செய்ய அல்ல. அன்னை பகவதியைக் கண்டு தரிசிக்க. தரிசிக்குமுன்பே குமரித் துறையாடி, நம் பாவச் சுமைகளைக் களைந்து விட்டு, அன்னையின் அருள் பெற்று வீடு திரும்புவோம். அது போதும் நமக்கு.

நன்றியுரை

நாம் தல யாத்திரை தொடங்கிக் கிட்டத்தட்ட இருபத்தெட்டுமாதங்கள் ஆகிவிட்டன. இந்த இருபத்தெட்டு மாதங்களில் 120 தலங்களுக்குச் சென்று அங்குள்ள கோயில், கோயிலில் உள்ள மூர்த்தி, சிற்பச் செல்வங்கள் எல்லாவற்றையும் கண்டு வந்திருக்கிறோம். வாசக நேயர்கள் சிரமமில்லாமலேயே இத்தனை தல யாத்திரைகளையும் மானசீகமாகச் செய்து முடித்திருக்கிறார்கள். வாசகர்களை இத்தனை தலங்களுக்கும் அழைத்துச் செல்ல நான் இருபது வருஷ காலமாக இந்த யாத்திரையைச் செய்திருக்கிறேன். அன்பர் பலர், அதிலும் பெண் மக்கள் பலர் இத் தலயாத்திரைக் கட்டுரைகளைக் கூர்ந்து படித்திருக்கிறார்கள். பலர் பாராட்டிக் கடிதங்கள் எழுதி உற்சாகப் படுத்தியிருக்கிறார்கள். இன்னும் வட நாட்டுத் தலங்களுக்கும் இப்படி ஒரு யாத்திரை தொடங்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். இறை அருள் கூட்டுவித்தால் அந்த யாத்திரையையுமே தொடங்குவோம் கொஞ்ச நாட்கள் கழித்து. கல்கி நேயர்களுக்கும், கல்கி ஆசிரியருக்கும் என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். எல்லாவற்றுக்கும் மேலாக இந்தப் பணி சிறப்புடன் நிறைவேற உதவிய வேங்கடவனுக்கும் கன்னிக்குமரிக்கும் என் வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.


பவுன் சூரியன் மார்க்
புகையிலை
குணமும் மணமும் கொண்டது!
M/S N. ஆறுமுகம் பிள்ளை
காரைக்குடி
BS


குறைந்த விலை
நீடித்த உழைப்பு
பிரகாசமான வெளிச்சம்
KIRON
பி. இ. ஐ. பிராடக்ட்
ON GOVT. RATE CONTRACT
DF/K 3
ஏஜண்டுகள்
தி ஓரியண்டல் மெர்க்கண்டைல் கம்பெனி லிமிடெட்
கல்கத்தா - பம்பாய்
டெல்லி - கான்பூர்
சென்னை



கடவுள்தான் பெரியவர்

நாச்சியார் கோயில் வேணுகோபால ஸ்வாமியின் ஆவணி மாத பிரம்மோற்சவத்தின் பத்தாவது நாள் வருஷா வருஷம் கோகுலாஷ்டமி தினத்தன்றுதான் வரும். அன்றைய மண்டகப்படி ராமதாஸ் நாயுடுவினுடையது. வேணுகோபாலன் அந்த ஊரில் குடிகொண்ட நாள் முதலாக ராமதாஸ் நாயுடுவின் பரம்பரை அந்த ஊரில் தோன்றிய நாள் முதலாக இருந்து வரும் பழக்கம் இது.

மண்டகப்படி அன்று நாயுடு விடியற்காலை நான்கு மணிக்கெல்லாம் எழுந்து விட்டார். இனி அவர் படுக்கப் போவதற்கு இரவு ஒரு மணியோ இரண்டு மணியோ ஆகி விடும். அதுவரை கோயில் மண்டகப்படி வேலை விழுங்கி விடும் அவருக்கு! இப்போது முதல் வேலையாக வீட்டில் எல்லோரையும் அழைத்துக்கொண்டு நாலரை மணிக்கெல்லாம் மூலவர் திருமஞ்சனத்துக்குப் போய் ஆக வேண்டும். நாயுடுவும் குடும்பத்தினரும் வரும்வரை பகவானும் பட்டர்களும் காத்துக் கொண்டிருப்பார்கள். சம்பிரதாயப்படி நாயுடுவிடம் உத்தரவு பெற்றுக் கொண்டுதான் கோயிலில் திருமஞ்சனக் காரியங்களெல்லாம் ஆரம்பிக்கப்படும். அபிஷேகப் பொருள்களெல்லாம் நேற்றிரவே கோயிலுக்குப் போய்விட்டன. இரண்டு குடம் பால் மட்டும் கொஞ்ச நேரத்துக்கு முன்புதான் வேலைக்காரன் முத்து எடுத்துக்கொண்டு சென்றான்.

பகவத் கைங்கரிய விஷயங்களில் மட்டும் ஒன்றில் ஒன்று குறையக் கூடாது நாயுடுவுக்கு. எதைச் செய்தாலும் நறுவிசாகச் செய்ய வேண்டும் என்ற மனப்பான்மை உள்ளவர் அவர். இரண்டு நாட்களுக்கு முன்னால் இன்றைய விசேஷத்துக்கான சாமான் பட்டியல் போட்டுக் கொண்டிருந்த போது ஆவணி மாசத்தில் மாம்பழமும் பலாப்பழமும் எங்கே கிடைக்கும் என்று யாரோ சோம்பேறிகள் சொன்னதை அவர் காதில் போட்டுக்கொள்ளவேயில்லை. எங்கெல்லாமோ அலைந்து ஒன்றுக்குப் பத்தாக விலை கொடுத்து வாங்கி வரச் செய்து விட்டுத்தான் மறு வேலை பார்த்தார். பழங்களைக் கண்டதும் நாயுடு பெருமிதத்தோடு, ''இதெல்லாம் இல்லாமே அப்புறம் அதுக்கு பஞ்சாமிர்தம்னு என்னய்யா பேரு? சாமி விஷயத்திலேதானு சிக்கனம் பிடிக்கணும்? 'அவனுக்கு'க் கொறை வைக்காட்டித்தான்யா 'அவனு'ம் நமக்குக் கொறை வைக்க மாட்டான்'' என்றார் சிரித்துக்கொண்டே. இந்தப் பழங்களெல்லாம் இல்லாவிட்டால் வேணுகோபாலன் குறைப் பட்டிருப்பானு மாட்டானு என்பது வேறு விஷயம். நாயுடு மட்டும் மனசு சமாதானமடைந்திருக்க மாட்டார் என்று நிச்சயமாகச் சொல்லலாம்.

''என்னப்பா இது. மணி நாலே முக்கால் ஆவுது! நின்னுக்கிட்டே இருக்கீங்க குளிக்காமே....? கோயில்லேயிருந்து ஆள் வந்திருக்கான். சர்க்கரைப் பொங்கலுக்கு வெல்லம் போடறதா, கல்கண்டு போடறதான்னு அய்யங்கார் கேட்டுக்கிட்டு வரச்சொன்னாராம். வாசலில் இழைக் கோலத்தில் கிருஷ்ணன் பாதம் போட்டுக் கொண்டிருந்த பாமா மாவுக் கிண்ணமும் கையுமாகப் புதுப் புடவை சரசரக்க வந்து தந்தையிடம் முறையிட்டாள். நாயுடுவுக்கு 'ஷாக்' அடித்தது போல் இருந்தது இந்தச் செய்தி. விழுந்தடித்துக்கொண்டு வாசலுக்கு ஓடினார். கோயில் ஆள் தெருவிலேயே நின்று கொண்டிருந்தான்.

என். மகாலிங்கம்



''என்னய்யா இது. உங்க அய்யாமாருக்கெல்லாம் புதுசு புதுசா சந்தேகம் வந்துடுது. நான் தலையெடுத்துச் செய்யறதிலே இது மூப்பத்து மூணாவது மண்டகப்படி. இதுலே ஒரு தடவை வெல்லம் போட்டுச் சர்க்கரைப் பொங்கல் செய்யச் சொன்னேன்னு விரலை மடக்க எவனுக்காவது தைரியம் இருக்காய்யா?''

வேறு எந்த விஷயத்துக்கும் நாயுடுவுக்கு இவ்வளவு கோபம் வராது.

''அதில்லீங்க. வருஷா வருஷம் சர்க்கரைப் பொங்கல் தளிகைக்கு ரெண்டு மரக்கால்தான் போடச் சொல்லுவீங்க. இந்த வருசம் நாலு மரக்கால்னுட்டீங்க. அவ்வளவுக்கும் கல்கண்டு போட்டுச் செய்தா கட்டுப்படியாகுமான்னுதான்....''

''போல் நிறுத்துய்யா...'' நாயுடு துள்ளி விழுந்தார். ''ஆமாய்யா, நாலு மரக்கால்தான்னு சொன்னேன். வீட்டிலே மக, மருமவன், பேரப்புள்ளே, தம்பி குடும்பம் எல்லாம் வந்திருக்குதேன்னு தளிகையைக் கொஞ்சம் கூடப் போடச் சொன்னேன். ஏன்.. சொல்லப்படாதா? நாலு மரக்கால்னு கல்கண்டு போட்டுச் செய்யப்படாதுன்னு எவனாவது சட்டம் கிட்டம் எழுதி வச்சிருக்கானு....? இல்லே. செய்தாத்தான் 'அவன்' இந்த மாடி வீட்டை இடிச்சிட்டுக் குடிசை வீடு கட்ட வச்சிடுவானு?.... 'அவ'ங் கொடுத்ததை 'அவனு'க்கில்லாமே வேறே யாருக்கய்யா செலவழிக்கிறது? போய்யா...போய்ச் சொல்லுய்யா. அதிசயமாகக் கேக்க வந்துட்டாங்க ஒலகத்திலே இல்லாத சந்தேகமெல்லாம்...''

படபடத்துப் பேசியதில் நாயுடுவுக்கு உடல் வியர்த்தது. அந்தச் சூட்டைத் தணிக்க வேகமாகத் திரும்பி வந்து ஸ்நான அறைக்குள் நுழைந்து தாளைப் போட்டுக் கொண்டார். வெந்நீர் கூடத்தான் நெருப்பை அணைக்கிறது. உடலைத் தழுவி விழுந்த வெந்நீர் நாயுடுவுக்கு இதமாக இருந்தது.

இனி குளித்து விட்டு அவர் கோயிலுக்கு ஓடியாக வேண்டும். அவர் வீடு இருக்கும் வடக்கு மாட வீதிக் கோடியில் நாகஸ்வர ஒலி கேட்டது. வழக்கம் போல் அவரையும் அவர் குடும்பத்தினரையும் அழைத்துப் போகக் கோயில் மரியாதை வந்து விட்டது. நாயுடு பறக்கப் பறக்க உடம்பைத் துடைத்துக் கொண்டு வெளியே வந்தார்.

''ம்...ம்..சீக்கிரம் ஆவட்டும். இன்னும் அஞ்சு நிமிஷத்திலே எல்லாரும் கிளம்பியாவணும்'' என்று தாம் பஞ்சகச்சம் கட்டிக் கொண்டிருக்கும் போதே மற்றவர்களைத் துரிதப்படுத்தினார். வேஷ்டி கட்டி முடிந்ததும் நாயுடுவின் மனைவி சுப்புலக்ஷ்மி அம்மாள் திருமண் பெட்டியைத் தயாராகக் கொணர்ந்து வைத்து விட்டுக் கேட்டாள். ''இன்னிக்குத் தளிகை முடியப் பதினொரு மணி ஆவும்மே? அது வரைக்கும் பசி தாங்குமா உங்களுக்கு? ஒருவாய் காப்பி வேணும்னுக் கலந்து கொண்டாரட்டுமா?''

''ஒனக்குத் தெரிஞ்ச எத்தினி அஷ்டமி காப்பி சாப்பிட்டுட்டு நான் கோயிலுக்குப் போயிருக்கேன்?'' நாயுடு கடுமையை அடக்கிக்கொண்டு கேட்டதால் அவர் குரல் கனத்திருந்தது. எல்லோரும் அவருடைய பக்தி சிரத்தையை வேண்டுமென்றே புரிந்து கொள்ளாததுபோல் பேசுவதாக ராமதாஸ் நாயுடுவுக்குப் பட்டது.

''இல்லே..நேரமாவுமேன்னுதான்'' என்று இழுத்தாள் சுப்புலட்சுமி.

''எத்தினி நேரம்தான் ஆகட்டுமே! அதுக்காகக் கண்டத்தைப்போட்டு வயித்தை நெரப்பிக்கிட்டுக் கோயிலுக்குப் போவதா? இன்னிக்கு எம்மா நேரமானாலும் சரி, இன்னிக்கி முதல்லே பல்லுலே படறது சாமி எச்சிலாத்தான் இருக்கணும். அதுவரைக்கும் பச்சைத் தண்ணி..ம்..மூச்சுப் பிரியக் கூடாது'' என்றார் நாயுடு. சுப்புலட்சுமி பதில் பேசாமல் திருமண் பெட்டியை வாங்கிக் கொண்டு உள்ளே சென்றாள்.

எல்லோரும் வாசலுக்கு வந்துவிட்டார்கள் நாயுடுவின் குடும்பம், தம்பி ஸ்ரீராமுலுவின் குடும்பம், மகள் பாமா, மருமகப் பிள்ளை, பேரன் இன்னும் ஏழெட்டு உறவினர்கள் உட்பட மொத்தம் பதினெட்டுப் பேர். எல்லோரையுமே இன்றைய விசேஷத்தை முன்னிட்டுக் கடிதம் போட்டு ஊரிலிருந்து வரவழைத்திருந்தார் நாயுடு. எல்லோருடைய ஏந்திய கைகளையும் வேஷ்டி, புடவை, பழம், பாக்கு, வெற்றிலை முதலிய சீர் வரிசைகள் நிரம்பிய தாம்பாளங்கள் அலங்கரித்தன. பின்னால் முத்து வீட்டின் கதவைத் தாழிட்டுப் பூட்டிக் கொண்டிருந்தான்.

''எல்லாத்தையும் ஞாபகமா எடுத்துக்கிட்டாச்சில்லே. கோயிலுக்குப் போயிட்டுத் திரும்பத் திரும்ப ஓடி வந்துக்கிட்டிருக்கக் கூடாது'' என்றார் நாயுடு முத்துவைப் பார்த்து.

''ஒண்ணும் மறக்கலீங்க'' என்றான் முத்து.

''நேத்து நீலகிரியிலேயிருந்து தேன் பார்சல் வந்துச்சே. அதை எடுத்துக்கிட்டாச்சா?'' என்று கேட்டார் மாப்பிள்ளை எத்திராஜு.

''எடுத்துக்கிட்டாச்சுங்களே. அம்மா வச்சிருக்கிற தட்டிலே தான் இருக்குது'' என்றான் முத்து. பாமா வைத்திருந்த தட்டைச் சுட்டிக் காட்டியபடியே.

''ஏண்டா கோயிலுக்கு இன்னும் அனுப்பலே அதை?'' என்று பதற்றத்தோடு கேட்டார் நாயுடு.

''சீர் வரிசையோட எடுத்துக்கிட்டுப் போவலாம்னுதான்....'' நாயுடுவின் முகத்தைப் பார்த்து விட்டு, அதற்கு மேலே பேசத் தயங்கினான் முத்து.

''போடா, ஒன் வேலையும் நீயும். ஒரு காரியத்தை ஒன்கிட்டே சொல்லி அதை நீ ஒழுங்காச் செய்தேங்கறது இதுவரை கிடையாது. பஞ்சாமிர்தத்துக்கு இல்லாத தேனு இனிமே என்னத்துக்கடா? போடா. முன்னாலே ஓடிக் கொண்டு போய்க் கொடு. பின்னாலேயே வர்றோம். ஒருத்தருக்காவது சாமி காரியம் ஆச்சேன்னு துளி சிரத்தையைக் காணுமே!'' என்று முணுமுணுத்தபடி முகத்தைச் சுளித்துக் கொண்டார்.

கத்துக்குட்டி நாகஸ்வரக்காரர் ராகத்திலே பஞ்சாமிர்தம் செய்து கொண்டிருந்தார். ஊர்வலம் மாதிரி ராமதாஸ் நாயுடுவின் குடும்பம் கோயிலை நோக்கி மெள்ள நகர்ந்தது. நாயுடு ஆறு முழச் சரிகைத் துண்டைக் கச்சத்துக்கு மேலே கட்டிக் கொண்டு, வாய் திருப்பாவை ஓத எல்லோருக்கும் பின்னாலே நடந்துவந்தார்.



''நம்ப ஆட்டிலே இன்னிக்கு என்னா சாமி விசேஷம்..வாசல்லே வாழை மரமெல்லாம் கட்டியிருக்குது?''

இந்தக் கேள்வி ஒலிக்கு நாயுடு திரும்பிப் பார்த்தார். நரிக்குறவன் ஒருவன் தனக்கே உரித்தான தோற்றத்துடன் குடும்ப சகிதமாக நின்று கொண்டிருந்தான். அவன் மனைவி வலது தோளிலிருந்து இடது கைப் பக்கம் சரிந்திருந்த ஏணையில் கிடந்தபடி வெளியே தலையை நீட்டிச் சிரித்துக் கொண்டிருந்த இரண்டு வயதுக் குழந்தையிடம் ஏதோ பேசிக் கொண் டிருந்தாள். குறவன் தோளிலும் ஒன்று. அது இரண்டு மாதங்களுக்கு முன்னால் அவள் வயிற்றில் சுமந்ததாக இருக்க வேண்டும். ஏணையில் துவண்டு கிடந்தது.

''இன்னைக்குக் கோயில்லே நம்ப மண்டகப் படி. ராவுக்குப் பின்னக்கிளை வாகனம். வாண வேடிக்கை யெல்லாம் உண்டு. வந்து பாரு'' என்றார் நாயுடு.

''சோறு உண்டா சாமி..'' என்று கேட்டான் குறவன்.

''சாமி பிரசாதம்தான் இன்னைக்கு எல்லாருக்கும் சோறு...''

''ஆட்டிலே கொண்டாந்து திம்பீங்களா? இல்லை, கோயில்லேயே துன்னுட்டு வந்துடுவீங்களா?...''

''வீட்டுக்குக் கொண்டாந்துதான் சாப்பிடுவோம்....''

''உச்சி உருமம் ஆவுமா சாமி சோறு துன்ன?''

''ம். ஆவும். எதுக்குக் கேக்கறே...!''

''எச்சி இலையெல்லாம் நம்பகிட்ட போடச் சொல்லு சாமி. நான் வாசல்லேயே குந்தியிருக்கேன்....''

''சொல்றேன்'' என்று சொன்ன நாயுடுவுக்கு இலேசாகச் சிரிப்பு வந்தது. 'சாமி எச்சிலுக்கு நாம் காத்துக்கிட்டிருக்கோம். நம்ப எச்சிலுக்கு இவன் காத்துக்கிட்டிருக்கான்' என்று எண்ணியவராக அவனோடு பேசியதில் செலவழிந்த நேரத்தை ஈடு செய்யும் நோக்குடன் கொஞ்சம் வேகமாக நடந்து முன்னால் சென்று கொண்டிருந்தவர்களுடன் சேர்ந்து கொண்டார் நாயுடு.

கோயில் வாசலில் நாயுடுவையும் குடும்பத்தினரையும், கோயில் நிர்வாக அதிகாரியும், தர்மகர்த்தாக்களும் வரவேற்றார்கள். முத்து எல்லோரிடமிருந்தும் வரிசைத் தட்டுகளை வாங்கி உள்ளே கொண்டு போய் வைத்து விட்டு வந்தான். கருடாழ்வார் சந்நிதியைக் கடந்ததும் பட்டரே எதிர்ப்பட்டு ஓடி வந்தார்.

''வரணும் வரணும். இந்தத் தடவை நாயுடு கொஞ்சம் லேட்...''

''வழக்கத்தை விட இந்த வருஷம் இட்டமெல்லாம் கொஞ்சம் அதிகமில்லே. அதனாலே நேரமும் கொஞ்சம் அதிகமாயிடுச்சு'' என்றார் நாயுடு சிரித்துக் கொண்டே.

'' திருமஞ்சனத்தை ஆரம்பிச்சுடலாமில்லியோ? மணி அஞ்சே கால் ஆறது...!'' என்று கேட்டார் கோயில் அதிகாரி.

''ஓ பேஷா...'' நாயுடுவும் குடும்பத்தினரும் கர்ப்பக்கிருஹத்தை நோக்கி முன்னேறினார்கள். அவர்களையும் இன்னும் சில முக்கியஸ்தர்களையும் மட்டும் உள்ளே விட்டு விட்டுத் திரையை இழுத்தான் கோயில் சிப்பந்தி ஒருவன்.

உள்ளே, கருத்திருமேனியில் ஒளி துலங்க நின்று கொண்டிருந்தார் வேணுகோபால ஸ்வாமி. அவர் திருமஞ்சனம் உண்மையிலேயே கண்கொள்ளாத காட்சிதான். கண் கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்த நாயுடுவுக்கு யமுனையில் 'அவர்' ஜலக்கிரீடை செய்ததெல்லாம் கண் முன் நடப்பது போல் இருந்தது. 'நமக்கென்று சொந்தமாக என்ன இருக்கிறது? அவர் படைத்ததையே தான் அவருக்குப் படைக்க வேண்டியிருக்கிறது' என்று நினைத்துக் கொண்டார் நாயுடு. பஞ்சாமிர்த அபிஷேகம் நடந்தது. பட்டர் ஜலம் பூசிய கங்காளத்திலிருந்து இரண்டு கைகள் நிறையப் பஞ்சாமிர்தத்தை அள்ளி மூல விக்கிரகத்தின் சிரஸில் அபிஷேகித்தார். அது உண்மைப் பக்தனைப் போல் இறைவனுடைய உடல் முழுவதையும் தழுவி வழிந்து அவன் பாதத்தைச் சரண் அடைந்தது. அடியில் சேர்ந்ததை ஒரு வெள்ளிக் கிண்ணத்தில் சேகரித்தார் பட்டரின் உதவியாளர் ஒருவர். புல்லரித்த அளவுக்கு நாக்கிலும் ருசி சுரந்தது நாயுடுவுக்கு. '' ஸ்வாமி ! தேன் அனுப்பிச் சேனே வந்துதா...?'' என்று பட்டரைக் கேட்டார் அவர்.

''சமயத்துக்கு வந்தது. சேர்த்துட்டேன்'' என்றார் பட்டர்.

''தம்பி, குழந்தை, மருமகப் பிள்ளை எல்லாரும் ஊரிலேயிருந்து வந்திருக்காங்க. அதனாலேதான் இட்டமெல்லாம் கொஞ்சம் கூடவே போடச் சொன்னேன்.'' நாயுடு அசட்டுச் சிரிப்பு சிரித்துக் கொண்டே இப்படிச் சொல்லி வைத்தார்.

''செய்ய வேண்டியதுதான். இது போதுமோல்லியோ?'' மூன்று மரக்கால் பிடிக்கும் அளவுள்ள வெள்ளிப் பாத்திரத்தைப் பட்டர் சாய்த்துக் காட்டினார்.

''இன்னொரு ரெண்டு கைதான் கொடுங்களேன். இதெல்லாம் ஒங்களுக்கு ஒண்ணும் பெரிய விஷயமில்லே. நீங்க பஞ்சாமிர்தத்திலேயே நீஞ்சறவா'' என்றார் நாயுடு.

நாயுடு சொன்னதைப் பட்டர் செய்தார். நாயுடுவுக்குத் திருப்தி. இந்தப் பஞ்சாமிர்தம் பல்லில் பட்டுத்தான் அவர் உபவாசம் கலைய வேண்டும். இன்னும் சில மணி நேரங்களுக்குப் பிறகு, தாம் அதைச் சாப்பிடப் போவதைப் பற்றி நினைத்தபோது குறவனைப் பற்றிய நினைவும் நாயுடுவுக்கு வந்தது. 'என் எச்சில் பட்டுத்தான் அவன் உபவாசம் கலைய வேண்டும் போலப் பேசினானே' என்று குறவன் சொன்ன வார்த்தைகளையும் அவர் நினைத்துக் கொண்டார்.

நினைவுப் போக்கில் நாயுடுவுக்கு முக்கியமான விஷயம் ஒன்று ஞாபகத்துக்கு வந்தது.

''அபிஷேகம் முடிய நேரமாகுமோ?'' என்று பட்டரைக் கேட்டார் அவர்.

''இன்னும் பன்னீர் அபிஷேகமும் சந்தன அபிஷேகமும் பாக்கி இருக்கு. பத்து நிமிஷத்துலே முடிஞ்சுடும்....''

''நடக்கட்டும். கொஞ்சம் வெளியே போய் விட்டு வந்துடறேன்...''

''செய்யுங்கோ'' என்றார் பட்டர்.

நாயுடு திரையை விலக்கிக் கொண்டு அவசரம் அவசரமாக வெளியே வந்தார். முக்கியமானவர்களுக்கு எதிரில் சாதித்துக் கொள்ள முடியாத ஒரு காரியம். பிரமுகர்களெல்லாம் கர்ப்பக்கிருஹத்துக்குள் இருக்கும் போதே செய்து விடவேண்டும். நேராக மடப்பள்ளிக்கு நடந்தார் நாயுடு. உள்ளே சமையற்காரர் தேசிகன் பாத்திரங்களைப் போட்டு உருட்டிக் கொண்டிருந்தார்.

''ஸ்வாமி! இப்படிக் கொஞ்சம் வர முடியுமா?'' என்று கூப்பிட்டார் நாயுடு.

''அடேடே நாயுடுவா....வாங்கோ.... வாங்கோ. சொல்லி யனுப்பிச்சிருந்தா நானே வந்திருப்பேனே...!'' தேசிகன் கைக் காரியத்தைப் போட்டு விட்டு ஓடி வந்தார்.

''வரச் சொல்றதுலே சில சௌகரியக் குறைவு இருக்கு. அதனாலே நானே இங்கே வந்துட்டேன்.''

தேசிகன் ஆவல் ததும்ப நின்று கொண்டிருந்தார்.

''தளிகை ஆயிட்டிருக்குதில்லே?'' என்று கேட்டார் நாயுடு.

''அரிசி களைஞ்சு போட்டிருக்கேன். இன்னும் புளிக்காய்ச்சல், வெண் பொங்கல், சர்க்கரைப் பொங்கல்....''

''வெல்லப் பொங்கல் இல்லே. கல்கண்டுப் பொங்கல். ஞாபகமிருக்கட்டும்'' என்று நாயுடு சிரித்தார்.

தேசிகனும் பதிலுக்குச் சிரித்து மழுப்பினார். ''இந்த வருஷம் தான் நிறைய வேலை வச்சுட்டேன். தளிகை முடியப் பதினொரு மணி ஆகும். ஏன், ஏதாவது அவசரமோ?''

''அதெல்லாம் ஒண்ணுமில்லே, மெதுவாக ஆகட்டும். ஒரு முக்கியமான விஷயம். இந்தத் தடவை மட்டும் ஒங்க மாமூல் பங்கை நீங்க விட்டுக் கொடுத்துடணும்.'' யாராவது தம்மைப் பார்க்கிறார்களா என்று பார்த்துக் கொண்டே இதை மெலிந்த குரலில் சொன்னார் ராமதாஸ் நாயுடு.

''அப்படி ஒரேயடியாச் சொல்லிட்டா எப்படி? ஆறு மணி நேரம் அனல்லே கிடந்து வேகறேன்....''

''அவசரப் படறேளே, முழுக்கக் கேளுங்க, ஸ்வாமி. உங்க பங்குக்கு என்ன உண்டோ, அதைப் பணமா கொடுத்திடறேன். எதுக்காகச் சொல்றேன்னு இந்த வருஷம் நம்ப வீட்டிலே விருந்தாளிங்க கொஞ்சம் அதிகம். ஸ்வாமி பிரசாதம் ஆளுக்குக் கொஞ்சமாவது கிடைக்கணுமில்லியா? வருஷத்துக்கு ஒரு தடவை விட்டுக் கொடுத்துடறதினாலே உங்களுக்கு ஒண்ணும் கொறைஞ்சு போயிடாது. நாயுடு மண்டகப்படி நடத்துவதும் வருஷத்துக்கு ஒரு முறைதான்!''

''நாயுடு சொல்லிட்டா அப்புறம் நான் சொல்ல என்ன இருக்கு..? இஷ்டம் போல் செய்யுங்கோ'' என்றார் தேசிகன் சிரித்துக் கொண்டே. அவரும் அவர் பங்கைப் பட்டை போட்டு விற்றுக் காசாக்கத்தான் செய்வார்.

''எவ்வளவு நேரமானாலும், எவ்வளவு சாமான் செலவழிஞ்சாலும் நல்லாப் பார்த்து நிதானமாச் செய்யுங்கோன்னு ஸ்வாமிக்குச் சொல்ல வேண்டியதில்லே! உங்க கையாலே எது செய்தாலும் அது அமிர்தமாகத்தான் இருக்கும். அதையும் 'அவன்' எச்சில்படுத்திக் கொடுத்தான்னு அதுலே ஒரு தனி மகத்துவம் இருக்கும்...'' 'என் எச்சிலுக்குக் கூடத்தான் விசேஷம். அதற்கும்தான் குறவன் ஒருவன் காத்துக் கொண்டிருக்கிறான்' என்று கூடவே தமக்கு மட்டும் கேட்கிறாற்போல் சொல்லிக் கொண்டார் நாயுடு.

''நாயுடுவுக்குப் பிரசாதமெல்லாம் எப்படி இருந்தா பிடிக்கும்னு எனக்கு ஒருத்தர் சொல்லணுமா?'' என்றார் தேசிகர்.

நாயுடு ''மாமூலைப் பத்தி நான் ஏதாவது தப்பாச் சொல்லியிருந்தா ஸ்வாமி மன்னிக்கணும். இந்தப் பிரசாதமெல்லாம் உங்களுக்கு ஒண்ணும் காணாத பண்டமில்லே....'' என்று குழைந்தார்.

''அதான் சரின்னுட்டேனே'' என்றார் தேசிகன் குழைந்தபடியே.

ஃ ஃ ஃ

திருமஞ்சனம் முடிந்து மூலவர் அலங்காரமும் நடந்து விட்டது. புறப்பாட்டுக்காக உத்சவரையும் வெண்ணெய்த் தாழிக்கிருஷ்ணனாக அலங்கரித்துக் கொண்டிருந்தார் பட்டர். எந்த வருஷமும் இல்லாமல் இந்தத் தடவை மூலவருக்கென்று பத்தும் பத்தும் இருபதடி நீளத்துக்குத் திண்டு ரோஜாப்பூ மாலையும் உத்ஸவருக்கு ஒரு வெள்ளிக் குடம் நிறைய வெண்ணெயும் வர ஏற்பாடு செய்திருந்தார் நாயுடு. உத்ஸவ தினங்கள் பத்து நாட்களுமே காலை மாலை இரண்டு வேளையும் புறப்பாடு உண்டு. பிரசாதம் என்று எது செய்தாலும் சமையற்காரர், பட்டர், கோவில் உத்தியோகஸ்தர், உபயதாரர் எல்லோருக்கும் விகிதாசாரம் இவ்வளவு என்று உண்டு. நாயுடுவுக்கு வெண்ணெய் என்றால் கொஞ்சம் நிறையவே பிடிக்கும். அதற்காகப் பட்டரிடம் சொல்லி அதிகமாகவே எடுத்து வைக்கச் சொல்ல வேண்டும் என்றுதான் அவர் முதலில் நினைத்தார். ததியோதனத்தில் போட்டுப் பிசைந்து கொண்டு சாப்பிட்டால் நன்றாக இருக்கும்.

இருந்தாலும் மனத்தைத் தடைசெய்த ஏதோ ஓர் உணர்வுக்கு இலக்காகி யாரையும் அனுகாமல் சும்மா இருந்து விட்டார். இப்படி வெண்ணெயில் பட்ட வேணுகோபாலனின் எச்சிலைப் புசிக்கும் ஆசையிலிருந்து தம்மைத் தடுத்துக் கொள்ள நாயுடு மிகவும் சிரமப்பட வேண்டியிருந்தது.

எட்டு மணி சுமாருக்குப் பெருமாளை எழுந்தருளப் பண்ணினார்கள். நாயுடு மற்றவர்களைக் கோயிலிலேயே இருக்கச் சொல்லி விட்டுத் தாம் மட்டும் சுவாமியோடு வீதி சுற்றினார். தெற்கு வீதியையும் மேல வீதியையும் கடந்து வடக்கு வீதியில் இருந்த அவர் வீட்டுக்கு எதிரில் பல்லக்கு நின்றபோது நாயுடு சுற்றுமுற்றும் திரும்பி யாரையோ தேடினார். அந்தக் குறவனைத்தான்! இன்றைக்கென்று அவருக்கு என்னவோ தெரியவில்லை. காலையில் அந்தக் குறவனைப் பார்த்ததிலிருந்து அவர் மனசை விட்டு அவன் அகலவே இல்லை. அதிலும் குறிப்பாக, பிரசாதப் பொருள்களைப் பார்க்கும் போதெல்லாம் ஏங்கிய கண்களும் ஏந்திய கரங்களுமாகப் பரிதாபத் தோற்றத்துடன் அந்தக் குறவன் தன்னை எதிர்பார்த்து நிற்பது நாயுடுவுக்குத் தெளிவாகத் தெரிந்தது. அருவருக்கத்தக்க அந்தத் தோற்றத்துக்கு அவர் முகம் சுளிக்கவில்லை. ஓரளவு அவர் அதைச் சகித்தார் என்றுதான் சொல்ல வேண்டும். நாயுடுவைப் பொறுத்தவரை தெய்வத்தின் ஏற்றத் தாழ்வுகள் நிறைந்த படைப்பில் தன்னிலும் வாழ்வு உள்ள அற்புதமான தத்துவம் ஒன்றைக் கண்டு களிப்பதில் உள்ள இன்ப அனுபவம் அது. என்ன தத்துவமோ...?

இப்போதும் அந்தக் குறவன் கீற்றுப் பந்தலின் நிழல் கரை படிந்த தரையில் ஒரு மூலையில்தான் உட்கார்ந்திருந்தான். அவன் மனைவி கைக் குழந்தையை எடுத்து விட்டுக் கொண்டிருந்தாள். நாயுடு அவனைப் பார்த்தபோது அவன் பதிலுக்கு ஓர் அசட்டுச் சிரிப்பு சிரித்தான். அதைக் கண்டதற்கு அறிகுறியாக நாயுடுவும் கம்பீரத்துடன் தலையை இலேசாக அசைத்தார்.

பல்லக்கு இடம் பெயர்ந்தது. அது கோயிலுக்குள் நுழைந்த போது மணி பத்தேகால். அடுத்துத் தளிகை நைவேத்தியம் தான். நாயுடுவின் தலையைக் கண்டதும் அவருக்காகவே காத்திருந்தவர் போல் பட்டர் ஓடி வந்து, ''தளிகை யெல்லாம் தயார். பத்து நிமிஷத்திலே நைவேத்தியம் ஆயிடும். முடிஞ்சதும் எடுத்துக் கொண்டு போயிடலாம். எடுத்துக் கொண்டு போறத்துக்கு யாராவது ஆள் 'அரேஞ்ச்' பண்ணியிருக்கேளா?'' என்று மெதுவாகக் கேட்டார்.

''ஆளாவது......ஆளுக்கு நான் எங்கே போறது? நம்ப தேசிகாச்சாரியையே ரெண்டு நடை கொண்டு போய் வைச்சுட்டு வரச் சொல்லுங்கோ. ஏதாவது கொடுத்துட்டாப் போறது...'' என்றார் நாயுடு.

பட்டர் போய் விட்டார். கர்ப்பக்கிருஹத்துக்குள்ளிருந்த கூட்டம் நைவேத்தியம் நடக்கப் போவதை முன்னிட்டு வெளியேறியது. தேசிகன் திரையை இழுத்து விட்டு மடப்பள்ளியிலிருந்து இரண்டு சிப்பந்திகளின் உதவியுடன் நிவேதனப் பொருள்களைக் கொண்டு வந்து வைத்தார். பத்துப் பன்னிரண்டு வகைகள், கரியேறிய அடுக்குகளில் வந்து இறங்கின. நாயுடுவும் குடும்பத்தினரோடு ஒரு பக்கமாக நின்று கவனித்துக் கொண்டிருந்தார். இடுப்பில் பழுப்பேறிய அரைத்துண்டோடு திரைக்கு வெளியே நின்று தேசிகன் மணியை அடித்தார். அதன் ஒற்றையடிச் சத்தம், 'வா வா' என்று வேணுகோபாலனைச் சாப்பிடக் கூப்பிடுவதாக நாயுடுவுக்கு ஒலித்தது. 'நீ சாப்பிட்ட பிறகு வைத்திருக்கும் மிச்சத்தைச் சாப்பிட வேண்டுமென்பதற்காகத்தான் நான் காலையிலிருந்து ஒன்றும் சாப்பிடாமல் காத்துக் கொண்டிருக்கிறேன்' என்று தமக்குள் முணுமுணுத்துக் கொண்டார் அவர்.

உள்ளே உத்தரணி கிண்ணத்தில் வேகமாக விழும் ஓசை கேட்டது. ஓங்கி ஓர் அடி அடித்த பின் மணியை ஓர் ஓரமாக வைத்து விட்டுத் திரையை இழுத்து விலக்கினார் தேசிகன். பட்டர் தூக்கிப் பிடித்திருந்த கற்பூரத் தட்டில் எரிந்த சுடரில் வேணுகோபாலனின் திருப்தியடைந்த முகம் ஒளிர்ந்தது. நாயுடு இரண்டு கைகளையும் தலைக்கு மேலே தூக்கிக் கும்பிட்டபடி மற்றவர்கள் புடைசூழ உள்ளே சென்றார். தேசிகனால் இன்னும் எடுத்துக் கொண்டு போகப் படாத பிரசாதப்பாத்திரங்களெல்லாம் பழுப்புத் துணியால் மூடப்பட்டு அங்கேயே இருந்தன. சுகாதாரத்தைப் பொறுத்தவரை சற்றுநேரத்துக்கு முன்புவரை எல்லாமே பரிசுத்தமானவைதான். ஆனால், இப்போது...? எல்லாமே எச்சில் பட்டவை. ஆனால் அந்த எச்சிலில்தான் எத்தனை விசேஷம்! நாயுடு தம் எச்சிலைக் கூட்டி விழுங்கித் தெய்வத்தைப் பார்த்துச் சிரித்தார். 'உன் எச்சிலைச் சாப்பிடக் காலையிலிருந்து நான் காத்திருக்கிறேன். என் எச்சிலை எதிர்பார்த்தும் என் வீட்டருகே ஒருவன் இருக்கிறான். எனக்கும் அவனுக்கும் என்ன வித்தியாசம்....? இரண்டுபேருமே எச்சில் பொறுக்கிகள்தானா?' 'ஆமாம்' என்று நாயுடுவுக்குள்ளிருந்து யாரோ சொன்னார்கள். 'சே சே. ஒரு குறப் பயலோடு நம்மை ஒப்பிட்டுக் கொள்வதாவது? நிச்சயமாக அவன் நமக்குச் சமமாக மாட்டான். 'நிச்சயமாக மாட்டான்' என்று மனத்தில் அடித்துச் சொல்லிக் கொண்டார் ராமதாஸ் நாயுடு.

'உன் எச்சிலுக்காக நான் காத்துக் கொண்டிருப்பதால் உனக்குப் பெருமை என்றால் என் எச்சிலுக்காகவும் ஒருவன் காத்திருக்கிறானே! எனக்கு மட்டும் பெருமை இல்லையா? உன்னை விட நான் எந்த விதத்தில் தாழ்த்தி? அல்லது என்னைவிட எந்த விதத்தில் ஓசத்தி? நானும்தான் உன்னைப் போல இன்னொருவனை எனக்காக எதிர்பார்க்க வைக்கிறேன். எல்லா விதத்திலும் நீயும் நானும் சமந்தானுக்கும்!' நாயுடுவுக்குத் தம் வாதம் நியாயமாகவே பட்டது. அந்த எண்ணம் ஊர்ஜிதமானவுடன் தாமும் பெருமையால் பத்தடி உயரத்துக்குப் பூரித்து வளர்ந்து வேணுகோபாலனுக்குப் பக்கத்தில் அவருக்குச் சமமாக ஆஜானுபாகுவாக நிற்பதாக ஒரு தோற்றம்! குனிந்து காலுக்கடியிலே ஓடும் எறும்பைத் தேடுவது போல் மனக்கண்ணால் குறவனைத் தேடினார் அவர்!

''பிரசாதத்தை யெல்லாம் வீட்டிலே கொண்டு போய் வச்சுடட்டுமா?'' காதருகில் வந்து கேட்டார் தேசிகன்.

''செய்துடுங்கோ சுவாமி. முத்து வீட்டிலே தான் இருக்கான். நாங்களும் இதோ பின்னு லேயே வர்றோம்..'' என்றார் நாயுடு. தேசிகன் போய் விட்டார்.

குடும்பத்தோடு வீடு திரும்பிக் கொண்டிருந்த நாயுடுவுக்குத் தாம் தரையில் நடப்பதாகவே நினைவில்லை. கோயிலுக்குள் வந்த போது இருந்ததை விடத் திரும்பும் போது தாம் பெரியவனாகி விட்டதாக உணர்ந்தார் அவர். அவருக்கே தெரியாமல் இத்தனை நாட்களாக அவருள் ஒளிந்து கொண்டிருந்த 'தெய்வாம்சத்தை' அவரால் இப்போது நன்றாக உணர முடிந்தது. பிற உயிர்களை யெல்லாம் தம்மிடம் எதையோ எதிர்பார்க்க வைப்பதால் கடவுள் பெரியவர் என்றால் நாயுடு கூடத்தான் பெரியவர். அவருடைய எச்சிலுக்காகவும் ஒருவன் காத்திருக்கிறானே! இதையே ஒரு கேள்வியாகத் தம்மையே கேட்டுக் கொண்ட போது நாயுடுவுக்குச் சாதகமான பதிலே அவர் மனத்திடமிருந்து கிடைத்தது. சந்தேகமில்லாமல் அவரும் கடவுளைப் போலப் பெரியவர் தானும் !

நாயுடு வீட்டுக்குள் நுழையப் படி ஏறுவதற்கு முன்னால் சற்று நின்று திரும்பிப் பார்த்தார். குறவன் இடத்திலிருந்து மரியாதையாக எழுந்து நின்றான். வயிறு வாட வாடப் பசிச் சோர்வினால் அவன் மனைவியும் குழந்தைகளும் தூங்கிக் கொண்டிருந்தார்கள். நாயுடு. 'இரு. இரு' என்று அமரிக்கையாகத் தலையை ஆட்டி விட்டு உள்ளே சென்றார்.

முன்னதாகவே வந்திருந்த முத்து கூடத்தில் வரிசையாக நுனி வாழை இலைகளைப் போட்டுத் தண்ணீர் தெளித்திருந்தான்.

''அப்போ நான் வரட்டுமா நாயுடு. உத்தரவு வாங்கிண்டு போகலாம்னுதான் காத்திண்டிருந்தேன்'' என்றார் தேசிகன்.

''அதுக்குள்ளாற போயிட்டா எப்படி...? உங்க கையாலே செய்ததை உங்க கையாலேயே போடச் சொல்லிச் சாப்பிட்டாத் தானே ருசிக்கும் சுவாமி?'' என்றார் நாயுடு.

எல்லாரும் கைகால்களைக் கழுவிக்கொண்டு வந்து உட்கார்ந்ததும் தேசிகன் பரிமாறினார். பஞ்சாமிர்தம், சர்க்கரைப் பொங்கல், புளியோதரை, ததியோதனம், வெண் பொங்கல், வெண்ணெய் இத்தியாதி!

''அற்புதம் போங்கோ சுவாமி. நம்ப பெருமாளுக்குன்னு எல்லாமே நல்லாத்தான் அமைஞ்சுடுது...'' என்றார் நாயுடு பஞ்சாமிர்தத்தைக் கைநிறைய அள்ளி உறிஞ்சிக் கொண்டே.

''இன்னும் கொஞ்சம் சாதிக்கட்டுமா?'' என்றார் தேசிகன்.

''வேண்டாம்! ஒண்ணும் தம்பர் தேன். தெகட்டிப் போச்சு. அப்பின் துண்டமா, ரெண்டே ரெண்டு மட்டும் பொறுக்கிப் போடுங்கோ, எல்லாரையும் இன்னொரு தடவை விசாரிச்சுடுங்கோ சுவாமி. எத்திராஜு இன்னொரு கரண்டி போட்டுக் கோயேன்!'' என்றார் நாயுடு.

எல்லோருமே நன்றாக ருசித்துத்தான் சாப்பிட்டார்கள். நாயுடு தம் இலையில் ஒவ்வொரு வகைப் பிரசாதம் பரிமாறப்பட்ட போதும் தேசிகனுடைய கைத்திறமையையும் வேணுகோபாலனுடைய அதிர்ஷ்டத்தையும் வாயாரப் புகழ்ந்து கொண்டே சாப்பிட்டார்.

''காலையிலேயிருந்து பட்டினி கிடந்து சாப்பிடறது பெரிசில்லே! பட்டினி கிடந்து அவன் சாப்பிட்டதைச் சாப்பிடறதுதான் பெரிசு'' என்று நாயுடு கூறியபோது அவருடைய பக்தி சிரத்தையை நன்றாக உணர்ந்தனர்.

சாப்பிட்டுக் கொண்டிருக்கும் போதே யதேச்சையாகத் திரும்பிப் பார்த்த நாயுடுவின் கண்களுக்கு வாசலில் நின்று தலையை மட்டும் உள்ளே நீட்டிப் பார்க்க முயன்ற குறவனும், குழந்தையும் தெரிந்தனர்.

''முத்து, வாசற் கதவைக் கொஞ்சம் ஒருக்களிச்சாப்பிலே சாத்தேன். ரொம்பக் காத்து அடிக்குது'' என்றார் நாயுடு.


கடைசி 'அயிட்டம்' ததியோதனம். பந்தியின் கடைசியாகச் சாப்பிட்டு எழுந்ததும் நாயுடுதான். பிசுக்குப் போகக் கையைச் சீயக்காய் போட்டுக் கழுவிக் கொண்டு கூடத்துக்கு வந்து நாயுடு தாம்பூலம் தரித்துக் கொண்டார். மணி பன்னிரண்டு!

முத்து எச்சில் இலைகளை அள்ளிக் கொண்டு போய் வீதியில் எறிந்தான். ஆவல் துள்ளக் காத்துக் கொண்டிருந்த குறவன் விழுந்தடித்துக் கொண்டு ஓடிப் போய் இலைகளைக் கொத்தாக அள்ளி மார்போடு அணைத்துக் கொண்டான். பின்னாலேயே ஓடி வந்த அவன் மனைவியும் பெரிய குழந்தையும் ஆளுக்கு இரண்டாக அவன் பிடிப்பிலிருந்து இலைகளை உருவிக் கொண்டார்கள். குறவன் நிழலில் வந்தமர்ந்து மீதி இலைகளை மடியில் போட்டுக் கொண்டு ஒவ்வொன்றாகப் பிரித்துப் பார்த்தான். என்ன அநியாயம்! ஒன்றிலாவது ஒரு பருக்கை இருக்க வேண்டுமே? எல்லா இலைகளுமே அவன் வயிறு அப்போதிருந்த மாதிரி காலியாக இருந்தன. நெய்யிலும் எண்ணெயிலுமாகச் செய்திருந்த பிரசாதங்கள் ஒரு துளிகூட இலையில் ஒட்டவில்லை. இலைக்கு மெருகு இட்டதுபோல் நெய்யும் எண்ணெயும் தான் பளபளத்தன. 'சே என்ன ஜன்மங்கடா சுத்த நாய் ஜன்மங்க. ஒரு பருக்கை விடாமே நக்கித் தின்னிருக்குதுங்க.' வெறுப்போடு இலைகளைத் தூக்கி எறிந்தான் அவன். காலையிலிருந்து கடைப்பிடித்திருந்தபொறுமைக்கு ஏற்பட்ட ஏமாற்றத்தின் விளைவுதான் அவனுடைய அந்தச் சொற்கள்.

உள்ளே நாயுடு பட்டினி கிடந்து உண்ட அலுப்பில் ஈஸிசேரில் அயர்ந்து உறங்கிக் கொண்டிருந்தார். தூங்குவதற்குச் சற்று முன்பு மனத்தில் இருந்த எண்ணத்தின்படி கனவு வருவது உண்மை என்றால், அப்போது நாயுடுதான் வேணுகோபாலனுக்குப் பக்கத்தில் சரிசமமாக நிற்பதாகப் பகற்கனவு கண்டிருக்க வேண்டும். 'மற்றவர்களை தம்மிடமிருந்து எதிர்பார்க்கச் செய்வதாலேயே நாம் பெரியவராகி விடலாம்' என்ற இலக்கணத்தின்படி நாயுடுவும் பெரியவர்தான். வேணுகோபாலனுக்குச் சமமானவர்தான்!

இல்லை, நாயுடு பெரியவர் இல்லை. கடவுள் மட்டும்தான் பெரியவர் என்று யாராவது சொன்னால், தமக்குப் படைக்கப்பட்ட பிரசாதத்தில் சிறிதளவைக் கூடப் புசிக்காமல் அனைத்தையும் கடவுள் மிச்சமாக எச்சிலாக வைத்து விடுவதைத்தான் அந்தப் பெருமைக்குக் காரணமாகச் சொல்ல வேண்டும்!

பண்டிகை நாட்கள் நெருங்குகின்றன



இதுவே ஷாலிமார் பெயிண்டினால்
அலங்கரிக்க வேண்டிய நேரம்

SHALIMAR PAINT

Calcutta • Bombay • Madras • New Delhi • Kanpur-(Agents overseas)

JWTSPH 638A

படித்துப் பாருங்கள்



அருங்கலச் செப்பு

இந்த அறநூல் ஜைன சமயத்துள் ஒரு பிரிவினராகிய சாவக நோன்புடையார் மேற்கொள்ள வேண்டிய நெறிகளை 180 குறள் வெண்பாக்களால் கூறுகிறது. ஆயினும் இதில் கூறப்படும் ஒழுக்கநெறிகள் எல்லாருக்கும் ஏற்புடையனவேயாம். அரிய இரத்தினங்கள் அடங்கிய அணிகலன்கள் இட்ட பேழை போல் நீதிகள் அடங்கிய பேழையாக இந்நூல் இருப்பதால் இதற்கு இப்பெயர் வாய்த்தது. வடமொழியில் இரத்தின கரண்டகம் என்ற பெயரிலுள்ள இந்த நூலைத் தமிழில் இயற்றிய பழம் புலவர் யாரென அறிய இயலவில்லை.

இப்போது திரு அ. குமாரன் எழுதிய ஆராய்ச்சித் தெளிவுரைக் குறிப்புக்களோடு வள்ளுவர் பண்ணையார் இந்த நூலை வெளியிட்டுள்ளார்கள். எல்லாரிடமும் இருக்க வேண்டிய நல்ல நூல்.

வெளியீடு: வள்ளுவர் பண்ணை, பிராட்வே, சென்னை—1.
விலை: ரூ. 1—50.

உலக உள்ளங்கள்

மாணவர்களுக்கும், சிந்தனையாளர்களுக்கும் பயன்படக்கூடிய நல்ல தொகுப்பு நூல். பல நாட்டு அறிஞர்களின் ஒப்புயர்வற்ற பொன்மொழிகளைக் குறள் வெண்பாக்களாகத் தமிழில் மொழிபெயர்த்து அளித்திருக்கிறார் புலவர் ஜெகவீர பாண்டியனார். பொன்மொழிகளுக்கான ஆங்கில மூலங்களும் எதிர்ப் பக்கத்தே அச்சிடப்பட்டிருப்பது போற்றத் தக்கது.

சிந்தனை வளர்ச்சிக்குப் பயன்படக் கூடிய இதுபோன்ற தொகுப்புக்களை மேலும் மேலும் புலவர்கள் தமிழுலகுக்கு அளிப்பார்கள் என்று எதிர்பார்க்கிறோம்.

ஆசிரியர்: புலவர் ஜெகவீர பாண்டியனார்; கிடைக்குமிடம்: திருவள்ளுவர் நிலையம், மேல மாசி வீதி, மதுரை. உயர் பதிப்பு விலை ரூ. 3.

வைதீக தர்ம வர்த்தனி


'உயர்ந்த விஷயங்களை வெளியிடுவதன் மூலம் அருந்தொண்டுபுரிந்துவரும் பத்திரிகை' என்று ஸ்ரீ காமகோடி பீடாதிபதிகள் பாராட்டிக் கூறியிருக்கும் சஞ்சிகை ஸ்ரீவத்ஸ சோம தேவ சர்மா அவர்களின் வைதீக தர்ம வர்த்தினி. இப் பத்திரிகையின் பதினைந்தாவது ஆண்டு மலருக்கு புதுப் பெரியவர்கள், போலகம் ஸ்ரீ ராம சாஸ்திரிகள், அக்நிஹோத்ரம் ஸ்ரீ ராமாநுஜதாதாசாரியார், ஸ்ரீ டி. எஸ். பாலகிருஷ்ண சாஸ்திரிகள் ஆகிய பெரியோர்கள் விஷய தானம் செய்திருக்கிறார்கள். இனி சௌந்தரிய லஹரி, குருவாயூரப்பன் மகிமை முதலியன தொடர் கட்டுரைகளாக வரவிருக்கின்றன. வைதிக, பௌராணிக விஷயங்களுடன் சம்ஸ்கிருத இலக்கிய வளம் குறித்தும் விரித்துக் கூறும் இந்தப் பத்திரிகைக்கு ஆஸ்திகர்கள், ரசிகர்கள் யாவரும் ஆதரவளிக்க வேண்டும்.

வைதீக தர்ம வர்த்தினி; வருட சந்தா ரூ. 5; தனிப்பிரதி 62 ந. பை; கடவாசல், வடகால் போஸ்ட், சீர்காழி வழி, தஞ்சை ஜில்லா.

முப்பது நாள் (நாடகம்)

அருணா ஒரு நவநாகரிக யுவதி. திருமணம் செய்து கொண்டால் ஆணுக்கு அடிமைப்பட வேண்டுமே என்பதற்காகக் கன்னியாகவே இருக்கத் தீர்மானிக்கிறாள். ஆனால் அவள் தகப்பனார் ஒரு விசித்திரமான உயில் எழுதி வைத்து விட்டார், கல்யாணம் செய்து கொண்ட பிறகுதான் அவளுக்குச் சொத்து கிடைக்க வேண்டும் என்று. இதற்காக அவள் தூக்குத் தண்டனை அடைந்த கைதி ஒருவனை வலுவில் தேடிப் போய்த் திருமணம் செய்து கொள்கிறாள். ஆனால் அவனுக்கு விடுதலை கிடைத்து விடுகிறது! பிறகு ஒரே குழப்பம், சிக்கல். கடைசியில் தெளிவு பிறந்து சுபம் போடப்படுகிறது.

இந்தக் கதையை ஆசிரியர் நல்ல விறுவிறுப்பான நடையில் எழுதியுள்ளார். மைனர் அருணாவின் சொத்துக்கு டிரஸ்டிகளாக நியமிக்கப்பட்டவர்களைப் பணத்தாசை கொண்டவர்களாகக் காட்டி விருப்



பது அந்த 'வர்க்கத்தின்' மீது ஆசிரியருக்குள்ள வெறுப்பை வெளியிடுவதற்கு வாய்ப்பாக இருக்கிறது! ''எந்தப் பாவத்தைச் செய்யவும் என்கிட்டே பணம் இருந்ததில்லே!''; ''பணக்காரர்களுக்குப் பகல் பொழுதையும், திருடர்களுக்காக ராத்திரி இருட்டையும் பகவான் படைக்கத்தாண்டா செய்திருக்காரு!'' என்பன போன்ற உரைகள் ஆசிரியரின் பார்வைக்கு ஓர் எடுத்துக்காட்டு!

இந்நாடகத்தின் கதாநாயகிக்கோ ஆண் வர்க்கத்திடம் ஏக வெறுப்பு. அதை அவள் வெளியிடும் விதம் திடுக்கிட வைக்கிறது. நடிக்கப்பட்டால் இந்த நாடகத்தில் பல காட்சிகள் விரசமாகவே அமையும். -மகரம்

ஆசிரியர்: எம். எஸ். கண்ணன்; வெளியீட்டாளர்கள்: மல்லிகைப் பதிப்பகம், தியாகராயநகர். சென்னை—17: விலை: ரூ. 2.00.

பெண்ணும் பொன்னும்

காதலிலும், நட்பிலும் மனமுறிவு கண்ட நெசவாளி சைலஸ் தன் பாசத்தையெல்லாம் தான் சேமித்திருந்த பொன் மீது செலுத்தத் தொடங்குகிறான். அதைப் பொன்னாசை என்பதைவிடப் பொன்னன்பு என்ற புனிதப் பெயரிலேயே அழைக்கலாம். எனவே அது களவு போன போது சைலஸின் வாழ்வே வெறிச்சிட்டுப் போய் விடுகிறது. இந்த வெற்றிடத்தைப் பூர்த்தி செய்ய வருகிறாள் அழகுச் சிறுமி ஹெப்ஸி. தலைவன் காட்பிரேக்குத் தவறான வழியில் பிறந்து, அன்னையை இழந்த சிசுதான் ஹெப்ஸி. சைலஸின் இதயத்தில் மீண்டும் மனிதாபிமானம் முளை விடுகிறது. அது செழித்து வளர்ந்து கிளைவிட்டுப் படர்ந்தபோது காட்பிரே, தன் பெண்ணை உரிமையுடன் தனக்குக் கோருகிறான் — தான் இனி வேறு குழந்தைகளுக்குத் தந்தையாக முடியாது என்பதால். சைலஸும் ஒரு மனப் போராட்டத்துக்குப் பின் தன் வளர்ப்பு மகளின் பெரு வாழ்வுக்காகத் தன் பொன்னைத் தியாகம் செய்ய முன் வருகிறான். ஆனால் ஹெப்ஸியோ அரசபோகத்தை விடப் பாசத்தையே பெரிதாக மதிக்கிறாள். ஏழை சைலஸின் மகளாகவே வாழ உறுதி கொண்டு பெற்ற தந்தையை அனுப்பி விடுகிறாள்.

'ஜார்ஜ் எலியட்' என்ற புனைபெயரில் பெண்மணி ஒருவர் எழுதிய 'சைலஸ் மார்னர்' என்ற இந்த அற்புத ஆங்கில நாவலே இப்போது தமிழில் கிடைத்திருக்கிறது. மகிழ்ச்சிக்குரிய விஷயம். மொழியில் இன்னும் லாகவம் இருந்திருந்தால் மகிழ்ச்சி நிறைவு பெற்றிருக்கும். நம் நாட்டுக்கு ஒவ்வாத கட்டங்களை நீக்கியோ, மாற்றியோ அளித்திருக்கலாம்.

தமிழாக்கம்: எஸ்.ஸி. ரிச்சர்ட்; வெளியீடு: வானதி பதிப்பகம். சென்னை-17 விலை. 1-40.

தென்னிந்திய கிராமிய நடனங்கள்

தென்னிந்தியாவில் கிராமங்களில் வயல், வரப்புகளில் வேலை செய்யும் குடியானவர்கள் இனிமையான இசையுடன்தான் வேலையைச் செய்வார்கள். கை சுறுசுறுப்புடன் தானியக் கதிர்களை அறுத்துக் குவிக்கும். வாய் மெல்லிசைப் பாடல்களைப் பாடும். அந்தப் பாட்டின் தாளத்துக்கேற்பப் பெண்கள் தலைச் சுமையுடன் களத்துமேட்டுக்குப் போவார்கள். பழங்குடி மக்கள் வாழும் நம் மலைப் பிரதேசங்களில் சில புராணக் காட்சிகளை அற்புதமாக ஆடிக் காட்டுவார்கள்.

நம்முடைய வீட்டில் நடக்கும் சுப காரியங்களில் பெண்கள் கால்களின் ஜதிகளை மாற்றிப் போட்டு அடிக்கும் கும்மிகள் இந்தப் புத்தகத்தில் அழகான பாட்டுடன் எழுதப்பட்டிருக்கின்றன. இன்னும் கோலாட்டப் பாட்டுக்களும் வெளியிடப்பட்டிருக்கின்றன. தென்னிந்தியாவில் மாரியம்மன் கோவில்களில் கரகம் ஆடுவது என்று ஒன்று இருக்கிறது. இந்த அதி அற்புதமான ஆட்டத்தைப் பார்க்கும்போது மெய் சிலிர்க்கும். அதைப்பற்றிய விவரமும் இந்தப் புத்தகத்தில் இருக்கிறது.

இதைப் போலவே பிரார்த்தனைக்கென்று எடுக்கப்படும் காவடி, விழாக் காலங்களில் ஆடப்படும் ஒயிலாட்டம் இவைகளை ஆசிரியர்கள் நன்றாக அறிந்து எழுதியிருக்கிறார்கள். இதை மொழிபெயர்த்தவர் திரு ஆர். முத்துகிருஷ்ணன். மற்றும் பொம்மலாட்டம், பொய்க்கால் குதிரை யாட்டம் பற்றிய விவரங்களும் இதில் கொடுக்கப்பட்டுள்ளன.

இப்புத்தகம் கலை அன்பர்களுக்கு இன்றியமையாததாகும். - வசுமதி ராமஸ்வாமி

ஆசிரியர்கள்: வி. வி. சடகோபன் (தமிழ்), நடராஜ் ராமகிருஷ்ணா (தெலுங்கு), குமார் வெங்கண்ணா (கன்னடம்), எஸ். கே. நாயர் (மலையாளம்); பிரசுரம்: சாம்ராஜ் பிரசுரம். சென்னை-3. விலை ரூ. 1.65.

ஸ்ரீமத் பாகவத சங்கிரகம்

மகாவிஷ்ணுவின் அவதாரக் கதைகள் மூலம் வேதாந்தத்தின் கோட்பாடுகளையும் நுட்பமான கருத்துக்களையும், கர்மயோகம், பக்தி யோகம், ஞான யோகம் ஆகியவற்றின் முறைகளையும் தர்ம ரகசியங்களையும் பாகவத புராணத்தில் வேத வியாஸர் விளக்குகிறார். மகாபாரதம் எழுதியபின் இதை அவர் எழுதியதால் மகாபாரதத்தை விடச் சில வகைகளில் இது சிறப்பு வாய்ந்ததாகக் கருதப்படும். பரிபூர்ண அவதாரமான கிருஷ்ணனுடைய லீலைகள் இங்கு விரிவாகக் கூறப்பட்டிருப்பது போல் வேறெங்கும் கூறப்படவில்லை. மகாபாரதத்தில் உள்ள பகவத் கீதையைப் போல் இங்கு கபில கீதை, உத்தவ கீதை ஆகியவை விளங்குகின்றன. இராமாயணத்தையும் பாரதத்தையும் மொழி பெயர்ப்பதைவிட பாகவதத்தை மொழிபெயர்ப்பது கடினம். காலஞ்சென்ற வேங்கடேச சர்மா இப்பணியை ஏற்று பாகவதத்தைத் தமிழில் கருக்கியளித்துள்ளார். அதை மதுரை நூல் மன்றம் வெளியிட்டுள்ளது. சம்ஸ்கிருதச் சொற்கள் சற்றுக் குறைவாகக் கையாளப்பட்டிருப்பின் இந்நூல் இன்னும் அதிகப் பயனுடையதாயிருக்கும். - அண்ணா

பிரசுரம்: மதுரை நூல் மன்றம், 221 லிங்கி செட்டித் தெரு, சென்னை — 1 விலை: ரூ. 3.00.

Printed & Published by R. Ananthana rayanan on behalf of Messrs. Bharathan Publications Private Limited, at the Kalki Press, Kilpauk, Madras-10.
Managing Editor, T. Sadasivam.


சுளுக்கா?
உடனே சிறிதளவு
அமிர்தாஞ்சனம்
தடவுங்கள்
அது விரைவில் குணமளிக்கும்
ஜலதோஷம், ஜுரம், வாயும் பிடிப்பு போன்ற உபாதைகளிலிருந்து உங்கள் குடும்பத்தை காப்பாற்றுங்கள். ஒவ்வொரு முறையும் சிறிதளவே அமிர்தாஞ்சனம் உபயோகிக்க வேண்டியிருப்பதால் ஒரு பாட்டில் நெடுநாள் வரை நீடிக்கிறது.
AMRUTANJAN
Pain Balm
அமிர்தாஞ்சனம் லிமிடெட், மதராஸ்-4
பம்பாய்-1, கல்கத்தா-1, புதுடெல்லி-1
JWT AM-1428a

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon

